முதலமைச்சரின் உரைகள்

பல்வேறு நிகழ்ச்சிகளில்

முதலமைச்சர்

ஆற்றிய உரை

11.05.2022 முதல் 28.07.2022 வரை

தொகுப்பு - 3

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரை

(11.05.2022 முதல் 28.07.2022 வரை)

தொகுப்பு - 3

சிறப்பு வெளியீடு

தமிழரசு

இலவச வெளியீடு

மே 2023

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்,
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி, சென்னை - 600 113.

பொருளடக்கம்

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
1.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் நடைபெற்ற தென் பிராந்திய ஏற்றுமதியாளர் விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை - 11.05.2022	1
2.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10ஆவது தளத்திலுள்ள கூட்ட அரங்கில் தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல அதிகார அமைப்பின் முதல் கூட்டத்திற்கு தலைமையேற்று ஆற்றிய தலைமை உரை - 12.05.2022	11
3.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கில் நடைபெற்ற சென்னைப் பல்கலைக்கழகத்தின் 164ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு ஆற்றிய விழாப் பேருரை - 16.05.2022	19
4.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டம், பையனூர், சாய் பல்கலைக்கழகக் கட்டடத்தை திறந்து வைத்து, புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, ஆற்றிய உரை - 17.05.2022.	29

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

5. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மாநில அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் (DISHA கமிட்டி) முதல் கூட்டத்தில் ஆற்றிய உரை - 18.05.2022 35

6. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கோயம்புத்தூரில், தொழிலதிபர்கள் மற்றும் தொழில் கூட்டமைப்பினருடன் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் ஆற்றிய உரை. - 19.05.2022. 43

7. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் நீலகிரி மாவட்டம், குன்னூர் மற்றும் உதகையில் பொதுமக்கள் மத்தியில் ஆற்றிய உரை - 19.05.2022 57

8. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் நீலகிரி மாவட்ட உதகையில் நடைபெற்ற "உதகை 200" துவக்க விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை- 21.05.2022 61

9. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை தொடங்கி வைத்து ஆற்றிய உரை - 23.05.2022 77

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
10.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இராணி மேரி கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநில அளவிலான முதல் "இளைஞர் திறன் திருவிழா"வை தொடங்கி வைத்து, ஆற்றிய உரை - 25.05.2022	83
11.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியின் 75ஆவது ஆண்டுவிழா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை - 25.05.2022	99
12.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, நேரு உள் விளையாட்டரங்கில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்கள் பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்த நிகழ்வில் ஆற்றிய உரை - 26.05.2022	109
13.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பள்ளிக்கரணையில். டி.ஏ.வி. கல்விக் குழுமத்தின் புதிய பள்ளியை திறந்து வைத்து ஆற்றிய உரை - 27.05.2022	117

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

14. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற இந்திய குடியரசுத் தலைவர் பதக்கங்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர் பதக்கங்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை - 27.05.2022 125

14. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழாவையொட்டி கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை - 28.05.2022 133

15. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற துறைச் செயலாளர்களுடனான இரண்டாம் நாள் ஆய்வுக் கூட்டத்தின் இறுதியில் ஆற்றிய உரை – 02.06.2022 141

16. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ், நிறம் மாறும் வண்ண விளக்குகளால் ஒளிரூட்டப்பட்ட பெருநகரச் சென்னை மாநகராட்சியின் ரிப்பன் கட்டடத்தை பொதுமக்களின் பார்வைக்காக அர்ப்பணித்து ஆற்றிய உரை - 02.06.2022 147

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
17.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, குருநானக் கல்லூரியில், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டி - பரிசளிப்பு விழாவில் ஆற்றிய உரை - 03.06.2022	151
18.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் செயல்பாடுகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை - 06.06.2022	163
19.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழ்ப் பேரவை 41ஆம் ஆண்டு இசைவிழாவில் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி ஆற்றிய உரை - 06.06.2022*	171
20.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி ஆற்றிய உரை - 08.06.2022	183

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
21.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சிவகங்கை மாவட்டம், காரையூரில் நடைபெற்ற அரசு விழாவில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளைத் திறந்துவைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி ஆற்றிய உரை - 08.06.2022	199
22.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, கொளத்தூர், எவர்வின் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற கலைஞர் 99 வேருக்கு விழாவில் நலத்திட்ட உதவிகள் வழங்கி ஆற்றிய உரை - 11.06.2022	217
23.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 'எண்ணும் எழுத்தும்' திட்டத்தை தொடங்கி வைத்து ஆற்றிய உரை - 13.06.2022	225
24.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, தரமணி, டைடல் பூங்காவில் நடைபெற்ற தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்தி மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றிய உரை - 24.06.2022	237
25.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் "நான் முதல்வன்" திட்டத்தின்கீழ் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கான உயர்கல்விக்கு வழிகாட்டும் "கல்லூரி கனவு" நிகழ்ச்சியை தொடங்கி வைத்து ஆற்றிய உரை - 25.06.2022	247

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

26. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
திருச்சியில் நடைபெற்ற ஜமால் முகமது கல்லூரி
முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு
ஆற்றிய உரை - 26.06.2022 263

27. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
'தி ஹிந்து' குழுமத்தின் சார்பில் நடைபெறும்
ஸ்போர்ட்ஸ் ஸ்டார் தென்னக விளையாட்டு
மாநாட்டில் (Sportstar - South Sports Conclave)
கலந்து கொண்டு ஆற்றிய உரை - 28.06.2022 273

29. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
வேலூரில் நடைபெற்ற அரசு விழாவில்,
முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து,
புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,
பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை
வழங்கி ஆற்றிய உரை - 29.06.2022 283

28. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
திருப்பத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில்
முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து,
புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,
பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி
ஆற்றிய உரை - 29.06.2022 301

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

30. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
இராணிப்பேட்டையில் நடைபெற்ற அரசு விழாவில்,
முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து,
புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,
பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை
வழங்கி ஆற்றிய உரை - 30.06.2022 317

31. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
கரூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில்,
முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து,
புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,
பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை
வழங்கி ஆற்றிய உரை - 02.07.2022 335

32. *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி
வாயிலாக வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப்
பேரவையான "ஃபெட்னா" அமைப்பின்
35ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு
ஆற்றிய உரை - 04.07.2022 .... *351*

33. *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
தலைமையில், சென்னையில் நடைபெற்ற
"முதலீட்டாளர்களின் முதல் முகவரி -
தமிழ்நாடு" முதலீட்டாளர்கள் மாநாட்டில்
ஆற்றிய உரை - 04.07.2022 .... *365*

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

34. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னை, மாநிலக் கல்லூரியில் நடைபெற்ற
பட்டமளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராக
கலந்துகொண்டு ஆற்றிய உரை - 05.07.2022 377

35. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்ற
அரசு விழாவில், புதிய திட்டப்பணிகளுக்கு
அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை
தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி
ஆற்றிய உரை - 09.07.2022 391

36. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி
வாயிலாக சென்னை, கலைவாணர் அரங்கத்தில்
நடைபெற்ற தமிழ்நாடு திருநாள் விழாவில்
கலந்து கொண்டு ஆற்றிய உரை - 18.07.2022 413

37. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னையில் நடைபெற்ற அமர் சேவா சங்கத்தின்
40ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு
ஆற்றிய உரை - 25.07.2022 429

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

38. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, குருநானக் கல்லூரியின் பொன்விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆற்றிய உரை - 26.07.2022 437

39. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, அசோக் நகர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் "பள்ளி மாணவர்களுக்கான மனநலம், உடல்நலம் சார்ந்த விழிப்புணர்வு" தொடக்க விழாவில் ஆற்றிய உரை - 27.07.2022 445

40. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற 44-ஆவது சர்வதேச சதுரங்கப் போட்டி தொடக்க விழாவில் ஆற்றிய உரை - 28.07.2022 453

❖ ❖ ❖

இந்தியாவின் ஏற்றுமதியில் தற்போது 27 விழுக்காடாக உள்ள தென்மண்டலம், 5 ஆண்டுக்குள் 35 விழுக்காட்டைத் தாண்டும் என நம்புகிறேன்

இந்த விழாவில் பங்கேற்றிருக்கக்கூடிய தமிழகத்தின் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே!

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களே!

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலர் திரு. வி. அருண்ராய், இ.ஆ.ப., அவர்களே!

இங்கே எனக்கு முன்னால் உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய ஃபியோ (FIEO)-வின் தலைவர் பத்மஸ்ரீ விருதாளர் டாக்டர் சக்திவேல் அவர்களே!

மண்டலத் தலைவர் திரு. இஸ்ரார் அகமது அவர்களே!

துணைத் தலைவர் திரு. கலித் கான் அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு.ஈஸ்வரன் அவர்களே!

இந்தக் கூட்டமைப்பின் நிருவாகிகளே!

விருதுபெறக் கூடிய ஏற்றுமதியாளர்களே!

தொழிலதிபர்களே!

அரசு உயர் அலுவலர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய காலை வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 22 நாட்களாக தொடர்ந்து சட்டமன்றக் கூட்டத் தொடரில் பங்கேற்று அந்தக் கூட்டத் தொடரில் பல்வேறு துறைகளின் சார்பில் மானியக் கோரிக்கை விவாதங்கள் நடைபெற்று, அதன் மூலமாக அதற்குரிய ஒப்புதலைப் பெற்று நேற்றையதினம் முடித்திருக்கிறோம். நேற்றுதான் கூட்டத்தொடர் முடிவடைந்திருக்கிறது. சட்டமன்றக் கூட்டத்தொடர் எப்போது முடியும் என்று காத்திருந்து அதற்கான தேதியை வாங்கி, இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்திருக்கக்கூடிய நம்முடைய அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கு நான் முதலில் என்னுடைய வாழ்த்துகளை, நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் அதே நேரத்தில், ஒரு முதலமைச்சர் ஒரு நாளாவது ஓய்வெடுக்கக் கூடாதா என்று நினைக்காமல், அவர் தன்னுடைய கடமையை முடிக்க வேண்டும் என்பதற்காக சுறுசுறுப்போடு தனது துறையைப் பற்றி மட்டும் கண்ணும் கருத்தோடும் இருந்து அந்தப் பணியை அவர் முடித்திருக்கிறார். அதிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ளலாம், அவர் துறையிலே எவ்வளவு கவனமாக இருக்கிறார் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது.

6ஆவது மற்றும் 7ஆவது தென் பிராந்திய சிறந்த ஏற்றுமதியாளர் விருது வழங்கும் விழா, தமிழ்நாட்டின் தலைநகராக இருக்கக்கூடிய சென்னையில் நடப்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

தமிழகம் வந்திருக்கக்கூடிய அனைவரையும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் உங்கள் அனைவரையும் வருக, வருக என நான் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவில் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்கோடு, ஒன்றிய அரசின் வர்த்தக அமைச்சகத்தால் 1965ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஃபியோ (FIEO) என்கின்ற இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பானது அங்கீகரிக்கப்பட்ட ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில்கள், பண்டங்கள், வாரியங்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையங்கள் ஆகியவற்றின் தலைமை அமைப்பாக இது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்திய அளவில் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏற்றுமதி நிறுவனங்களை உறுப்பினர்களாகக் கொண்ட இந்த அமைப்பில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏற்றுமதியாளர்கள்

தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை அறியும்போது நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

இத்தகைய பெருமைக்குரிய விழாவிற்கு என்னை அழைத்தமைக்காக, இந்த அமைப்பின் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் நான் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஏற்றுமதி மிக மிக அவசியம். தற்போது, இந்தியாவின் ஏற்றுமதியில் தென் மண்டலம் 27 விழுக்காட்டுக்கும் அதிகமாக பங்களிக்கிறது. 5 ஆண்டுகளுக்குள் இந்தப் பங்கு 35 விழுக்காட்டைத் தாண்டும் என்று நான் நம்புகிறேன். தென் மண்டலத்தில் தமிழகத்தின் பங்கு மிக மிக அதிகமானது என்பதை நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள்.

கடந்த 2020-2021ஆம் ஆண்டில், இந்தியாவின் சர்வதேச வர்த்தகத்தில் ரூ.1,93,000 கோடி ஏற்றுமதி செய்து 8.97 விழுக்காடு பங்களிப்புடன் இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த விழுக்காடு என்பது ஆண்டுதோறும் அதிகமாக வேண்டும்; தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக ஆக வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய விருப்பம், என்னுடைய இலட்சியம்.

மோட்டார் வாகனம் மற்றும் பாகங்கள்,

ஆடை மற்றும் அணிகலன்கள்,

காலணிகள்,

கொதிகலன்கள்,

இரப்பர் - உள்ளிட்ட பொருட்கள் ஏற்றுமதியில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. இது புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது.

தொழிலை மேம்படுத்துகிறது.

மாநிலத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்துகிறது.

தொழிலதிபர்களுக்குள் போட்டித் தன்மையை உருவாக்குகிறது.

தொழில்கள் இடையே செயல்திறனை அதிகரிக்கிறது.

அதனால்தான், 2030ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக, மாநிலப் பொருளாதாரம் மாற வேண்டும் என்று நான் பெரிதும் நம்புகிறேன். இந்த இலக்கை அடைய வேண்டும் என்றால் ஏற்றுமதி வர்த்தகமும் அதிகமாக வேண்டும்.

தமிழ்நாட்டின் தற்போதைய ஏற்றுமதி அளவு 26 பில்லியன் டாலர். அதிலிருந்து 2030ஆம் ஆண்டிற்குள் 100 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்த வேண்டும்.

இதனை அடைவதற்கான புதிய உத்தியை கடந்த ஆண்டு செப்டம்பர் 22ஆம் தேதி நான் வெளியிட்டேன். இதற்காக, பல்வேறு முன்னெடுப்புகளை அரசு செய்து வருகிறது. அதில் சிலவற்றை மட்டும் உங்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

- தமிழ்நாட்டில் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில், ஏற்றுமதி நிறுவனங்களுக்குத் தேவையான பொதுக் கட்டமைப்புகளை உருவாக்க ரூ.100 கோடி சிறப்பு நிதி உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

- ❖ தமிழ்நாட்டில் உள்ள திறன்மிக்க மனிதவளத்தை மேலும் மேம்படுத்தி, ஓர் அறிவுசார் பொருளாதாரத்தை உருவாக்கிட "அறிவுசார் நகரம்" (Knowledge City) ஒன்று உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

- ❖ சென்னையின் வர்த்தக வளர்ச்சிக்கு குறிப்பாக, ஏற்றுமதிக்கு உயிர்நாடியாகத் திகழக்கூடிய மதுரவாயல்-சென்னை துறைமுகம் உயர்மட்டச் சாலைத் திட்டத்தை நிறைவேற்றிட ரூ.5,570 கோடி மதிப்பீட்டில் 20.6 கிலோ மீட்டர் நீளமுள்ள இரட்டை அடுக்கு உயர்மட்டச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- ❖ சென்னை வெளிவட்ட சுற்றுச்சாலை திட்டத்திற்கு ரூ.2,250 கோடியும், சென்னை - கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டத்திற்கு ரூ.1,200 கோடியும், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு ரூ.628 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

- ❖ திறன் படைத்த மனிதவளத்தை உருவாக்கும் நோக்கத்தோடு, ரூ.2,877 கோடி செலவில் முன்னணி தொழில் நிறுவனங்களின் பங்களிப்புடன் 71 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்கள் - "தொழில் 4.0" (Industry 4.0) தரநிலையை அடைவதற்கு ஒரு சிறப்புத் திட்டமாகச் செயல்படுத்தப்படும்.

- ❖ மாநிலத்திலிருந்து ஏற்றுமதியை மேலும் மேம்படுத்த, அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில், மாநில ஏற்றுமதி மேம்பாட்டுக் குழு (State Export Promotion Committee) அமைக்கப்பட்டிருக்கிறது.

- தென் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளித்திட, தூத்துக்குடியில், ஏற்றுமதியை மையமாகக் கொண்ட "சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு" (International Furniture Park) 07.03.2022 அன்று அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

- ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித்துவம் வாய்ந்த பல பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றை உலக அளவில் சந்தைப்படுத்த, ஒவ்வொரு மாவட்டத்திலும் "மாவட்ட ஏற்றுமதி மையங்கள்" உருவாக்கப்பட்டு வருகிறது.

- குறு,சிறுமற்றும்நடுத்தரஏற்றுமதிநிறுவனங்களுக்கான கையேடு வெளியிடப்பட்டு இருக்கிறது.

இந்தக் கையேட்டின் தொடர்ச்சியாக ஒவ்வொரு துறை சார்ந்த ஏற்றுமதிக்கான வழிகாட்டி கையேடு உருவாக்கிட ஃபியோ அமைப்பு உதவ வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

- தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் புத்தொழில் வளர்ச்சிக்கு வழிகோலும் வகையில் ஈரோடு, மதுரை, திருநெல்வேலியில் புதிய மண்டல அளவிலான புத்தொழில் மையங்கள் ஏற்படுத்த டான்சிம் (TANSIM) மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- சென்னை நந்தம்பாக்கத்தில் ரூ.75 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய மாநில புத்தொழில் நிறுவன மையம் ஒன்று தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (TIDCO) மூலமாக அமைக்கப்படும்.

- ஏற்றுமதியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஏறத்தாழ 50 விழுக்காடு பங்களிக்கின்றன. இந்நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக, இத்துறைக்கான நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டை விட, 49 விழுக்காடு அதிகரிக்கப்பட்டு, ரூ.911.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் தனித்தன்மையான

- தஞ்சாவூர் ஓவியங்கள் - தட்டுகள், வீணை, கோவை கோரா காட்டன் சேலைகள், கோவில்பட்டி கடலைமிட்டாய், சேலம் பட்டு, ஈரோடு மஞ்சள், அலப்பை பச்சை ஏலக்காய், நீலகிரி தேயிலை, திருவில்லிப்புத்தூர் பால்கோவா, பழனி பஞ்சாமிர்தம், சிறுமலை மலை வாழைப்பழம் என 43 புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள் அதில் இருக்கிறது.
- கம்பம் பன்னீர் திராட்சை
- சேலம் ஜவ்வரிசி
- உடன்குடி பனங்கருப்பட்டி
- மணப்பாறை முறுக்கு
- தூத்துக்குடி மக்ரோனி
- பண்ருட்டி முந்திரி மற்றும் பலாப்பழம்
- மார்த்தாண்டம் தேன்

உள்ளிட்ட 24 பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற விண்ணப்பித்து பரிசீலனையில் இருக்கிறது.

வெளிநாடுகளிலும், இந்தப் பொருட்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது.இதன்மூலம்,நமது உற்பத்தியாளர்களும், ஏற்றுமதியின்மூலம் மேன்மை அடைந்திட முடியும். இவற்றை அதிகமாகத் தயாரிக்க வேண்டும். அதே நேரத்தில், கொஞ்சமும் தரம் குறைந்துவிடக் கூடாது.

தமிழ்நாட்டில் இப்போது இருக்கும் திறனையும் வளத்தையும் வைத்துப் பார்க்கும்போது, ஏற்றுமதியில் நாம் இன்னும் பல மடங்கு உயர முடியும். இதனை அரசும், ஃபியோ அமைப்பும் இணைந்து நிச்சயம் நிறைவேற்ற முடியும்.

ஏற்றுமதி சார்ந்த ஒன்றிய அரசின் திட்டங்கள் தமிழ்நாட்டைச் சார்ந்த நிறுவனங்களுக்கு முழுமையாக சென்றடைய ஃபியோ அமைப்பு மாநில அரசுடன் இணைந்து பங்காற்ற வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த மாவட்டத்தைச் சார்ந்த சிறந்த ஏற்றுமதிக்கான பொருள்களை ஆங்காங்கே உற்பத்தி செய்தாலும் அவற்றை ஒன்று திரட்டுவதிலும், அப்பொருள்களின் தரத்தினை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதிலும் இருக்கக்கூடிய இடர்பாடுகளைக் களையும் விதமாக, தனியார் பங்களிப்புடன் ஒரு ஏற்றுமதி கொள்முதல் அமைப்பை (Export Buying House) உருவாக்க ஃபியோ அமைப்பு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, O.D.O.P என்கின்ற ஒரு மாவட்டத்திற்கு ஒரு பொருள் என்ற ஒன்றிய அரசின் திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்திட துணைபுரிய வேண்டும்.

இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பு (FIEO) இந்த பிராந்தியத்தில் இருந்து ஏற்றுமதியை ஊக்குவிப்பதில் முக்கியப் பங்காற்றுவதுடன் மாவட்ட அளவில் மாநில

அரசுகளுடன் மிக நெருக்கமாக செயல்படுகிறது என்பதை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென் மாநிலங்களில் இருந்து தொழில் மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்துவதில் FIEO-வின் முயற்சிகளுக்கு நான் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டில் சிறப்பாக செயல்படும் ஏற்றுமதியாளர்கள் அங்கீகரிக்கப்படுவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

தங்கள் தொழில் உலகளவில் போட்டித்தன்மை வாய்ந்தது என்பதைக் காட்டக்கூடிய விதமாக, பல இடையூறுகள் உள்ள இந்த நேரத்தில், ஏற்றுமதியாளர்கள் அனைவரையும் அவர்களின் வெற்றிக்காக நான் வாழ்த்துகிறேன், நன்றி கூறி உங்கள் அனைவருக்கும் வாழ்த்துகளைச் சொல்லி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சென்னையில் நடைபெற்ற தென் பிராந்திய ஏற்றுமதியாளர் விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை - 11.05.2022

வளமான தமிழகம் அமைக்க வேளாண்மையைக் காக்க வேண்டும்



மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, பல்வேறு துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அரசு அதிகாரிகளே,

அலுவலர்களே, இந்த அமைப்பின் உழவர் பிரதிநிதிகளாக வருகை தந்திருக்கக்கூடிய உறுப்பினர்களே, வேளாண் மற்றும் கால்நடை மருத்துவ அறிவியல் விஞ்ஞானிகளே, உங்கள் எல்லோருக்கும் என்னுடைய அன்பான காலை வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழக அரசால் அமைக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல அதிகார அமைப்பின் முதல் கூட்டத்துக்கு வருகை தந்திருக்கக்கூடிய அனைவரையும் அரசின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் வரவேற்க நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தஞ்சாவூர் உள்ளிட்ட காவேரி டெல்டா என்பது இப்போது மட்டுமல்ல; நம் முன்னோர்கள் காலத்திலிருந்தே வரலாற்றுச் சிறப்பு மிகுந்த ஒரு பகுதியாக விளங்கிக் கொண்டிருக்கிறது. காவேரி டெல்டா என்பது மிகவும் செழிப்பான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் முழுப்பகுதியையும், கடலூர், புதுக்கோட்டை, அரியலூர், திருச்சி ஆகிய மாவட்டங்களில் ஒரு சில பகுதிகளையும் உள்ளடக்கியது.

காவேரி நதியின் மூலம் பாசனம் கிடைக்கப் பெறுவதால், இப்பகுதிகளில் நெல் ஒரு முக்கியமான பயிராக கிட்டத்தட்ட 14 இலட்சம் ஏக்கர் பரப்பிலே சாகுபடி செய்யப்பட்டு, மாநிலத்தின் ஒட்டுமொத்த அரிசி உற்பத்தியில் 34 விழுக்காடு அரிசி உற்பத்தியினை இந்தக் காவேரி டெல்டா பகுதி அளித்து வருகிறது.

தென்னை, கரும்பு, வாழை, மக்காச்சோளம், பயறு வகைகள், எள், பருத்தி போன்ற பயிர்களும், டெல்டா பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டு வருவதால், இந்தப் பகுதியே மிகப்பெரிய வேளாண் மண்டலமாகக் காணப்படுகிறது. இந்தப் பகுதியைச்

சார்ந்த உழவர் பெருமக்கள் மட்டுமல்லாமல், வேளாண் தொழிலாளர்களும் தங்கள் வாழ்வாதாரத்திற்கு வேளாண் தொழிலைத்தான் பெரிதும் சார்ந்திருக்கிறார்கள்.

வேளாண்மை, உணவு உற்பத்தி பகுதியாக இது இருந்தாலும், இன்னொரு பக்கத்திலே பல்வேறு நெருக்கடிகளுக்குரிய பகுதியாகவும் இது இருக்கிறது. இப்பகுதிகளில், வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சீற்றங்கள் பெரும் இடர்பாடுகளை மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்துகின்றன. கருநாடகா மாநிலத்திலிருந்து நமக்கு வரவேண்டிய காவேரி நதிநீரைப் பெறுவதற்கு அரசியல்ரீதியாகவும், சட்டரீதியாகவும் நீண்டகாலமாக நாம் தொடர்ந்து போராடி வந்து கொண்டிருக்கிறோம்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் வாழும் உழவர்கள், வேளாண் தொழிலாளர்களின் நலனுக்காக இந்த அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாகத்தான், பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் உருவாக்கப்பட்டிருக்கிறது. காவேரி டெல்டா பகுதியில் விளைநிலங்களைப் பாதுகாக்கவும், வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த தொழில்களை மேம்படுத்தவும், தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல அதிகார அமைப்பும் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கிறது.

சட்டத்தினை மட்டும் இயற்றிவிட்டு, அதனைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவர எந்தவொரு முன்னெடுப்பையும் முந்தைய அரசு எடுக்கவில்லை. முந்தைய ஆட்சி கொண்டு வந்த சட்டமாக இருந்தாலும், அது வேளாண் பெருமக்களுடைய நலனைப் பாதுகாப்பதற்கான வாய்ப்புகளை அளிக்கக்கூடிய சட்டமாக இருக்கிற

காரணத்தால், அந்தச் சட்டத்தின் கூறுகளையெல்லாம் செயல்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும் என்பதில் நம்முடைய அரசு உறுதியாக இருக்கிறது என்பதை உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வேளாண்மைக்கு நம்முடைய அரசு எந்தளவுக்கு முக்கியத்துவம் தருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் இந்தக் கூட்டம் அமைந்திருக்கிறது.

- ❖ உழவர்களிடமிருந்து கருத்துகளைப் பெற்று வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த அரசுதான் நம்முடைய கழக அரசு.
- ❖ சென்ற ஆண்டில் மேட்டூர் அணையினை குறித்த காலத்திலே, அதாவது ஜூன் 12ஆம் தேதியே திறந்து, ரூ.61 கோடி மதிப்பில் குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தினை நம்முடைய அரசு செயல்படுத்திக் காட்டியிருக்கிறது.
- ❖ மேட்டூர் அணையினைத் திறப்பதற்கு முன்பாகவே, பாசனக் கால்வாய்கள் அனைத்தையும் ரூ.65.11 கோடி செலவில் தூர்வாரும் பணிகளை முடுக்கி விட்டது நம்முடைய அரசு.
- ❖ அதன் விளைவாக, கடந்த 2021ஆம் ஆண்டின் குறுவை நெல் சாகுபடிப் பரப்பு 4,90,000 ஏக்கரைக் கடந்து, கடந்த 46 ஆண்டுகளில் இல்லாத வரலாற்றுச் சாதனையினை நாம் ஏற்படுத்தினோம். இது நம்முடைய ஓராண்டு சாதனையில், மிக முக்கியமான, பெருமைக்குரிய சாதனையாக அமைந்திருக்கிறது.

❖ தொடர்ந்து நடப்பாண்டிலும், தூர்வாரக்கூடிய பணிகள் ரூ.80 கோடி நிதி ஒதுக்கீட்டில் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

❖ இயற்கை வேளாண்மை விஞ்ஞானி நம்மாழ்வார் பெயரில் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், நெல் ஜெயராமன் அவர்களின் பெயரில் மரபுசார் நெல் இரகங்களை மீட்டெடுக்கும் திட்டம் ஆகியவற்றையும் நாம் அறிவித்திருக்கிறோம்.

❖ காவிரி டெல்டாவில் ரூ.30.50 கோடி திருவாரூரில் சேமிப்புக் கிடங்குகள், உலர் களங்கள்;

❖ காட்டுமன்னார் கோவில், பேராவூரணி பகுதிகளில் புதிய உழவர் சந்தைகள்;

❖ திருவாரூர் பகுதியில் உணவுப் பூங்கா, ரூ.14.50 கோடி மானியத்தில் வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டம்;

❖ நாகப்பட்டினம் கீழ்வேளூரில் புதிய வேளாண்மைக் கல்லூரி;

❖ கடலூர் மாவட்டத்தில் பலாவிற்கான சிறப்பு மையம்;

❖ வேளாண் விளைபொருட்கள் அதிக வரத்துள்ள திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், கடலூர் போன்ற ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு அருகில் சேமிப்புக் கிடங்குகளுடன் கூடிய விற்பனை நிலையங்கள்;

❖ தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருச்சி போன்ற மாவட்டங்களை உள்ளடக்கி, அரிசி ஆலைகள், பயறு உடைக்கும் நிலையங்கள், எண்ணெய் பிழியும் ஆலைகள், கயிறு ஆலைகள் போன்ற பல்வேறு

வேளாண் மதிப்புக் கூட்டப்பட்ட வேளாண் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகளை உருவாக்கும் வகையில், திருச்சி - நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு இடையே இருக்கக்கூடிய பகுதியை வேளாண் தொழிற்சாலைகளுக்கான பெருந்தடமாக அறிவிக்கை (Declaration of Agro-Industrial Corridor) செய்யப்பட்டது;

என பல்வேறு திட்டங்களை வேளாண் பெருமக்கள் நலன் காக்க கடந்த ஓராண்டில் அறிவித்து, அவற்றையெல்லாம் நாம் செயல்படுத்தி வருகிறோம்.

காவேரி டெல்டா பகுதிகளில் வேளாண் பணிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய எந்தவித தொழிற்சாலைகளையும் இந்த அரசு அனுமதிக்காது என்பதையும் இந்தக் கூட்டத்தின் வாயிலாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வேளாண்மைத் தொழிலை நம்பியிருக்கக்கூடிய உழவர்கள் மற்றும் வேளாண் தொழிலின் நலனைப் பாதுகாக்கவும், வேளாண் சார்ந்த தொழிற்சாலைகள் மூலம் அதிக எண்ணிக்கையில் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் இந்த அரசு முனைப்போடு செயல்படும்.

பாசன நீரைப் பொறுத்தமட்டில், கருநாடகாவிலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய நீரைப் பெறுவதற்கு இந்த அரசு சட்டரீதியான, அரசியல் ரீதியான எல்லா ஏற்பாடுகளையும் தொய்வில்லாமல் தொடர்ந்து மேற்கொள்ளும்.

❖ பண்ணைக்குட்டைகள், தடுப்பணைகள் மூலம் காவேரி டெல்டா பகுதிகளில் நீர் ஆதாரங்களை வலுப்படுத்த வேண்டும். அதற்காக அரசு மேற்கொள்ளக்கூடிய

முன்னெடுப்புகளுக்கு நீங்களெல்லாம் ஒத்துழைப்பு வழங்கி, துணை நிற்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

❖ உழவர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கக்கூடிய வகையில் அறிமுகப்படுத்தப்படும் புதிய பயிர் வகைகளையும்,புதியமாற்றுத் தொழில்நுட்பங்களையும் உடனுக்குடன் ஏற்று நடைமுறைப்படுத்தி நல்ல விளைச்சலை அடைய வேண்டும்.

❖ வேளாண் தொழிலில் வருமானம் பெருக்கப்பட வேண்டும். பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் குறுவை மற்றும் கோடைப் பருவத்தில் குறைந்த நீர்த் தேவையுள்ள மாற்றுப் பயிர் சாகுபடியினை ஊக்குவித்தல்,அறுவடைக்குப்பிந்தையமேலாண்மை, மதிப்புக் கூட்டுதல் போன்ற ஆலோசனைகளை உள்வாங்கி செயல்படுத்திட வேண்டும்.

❖ இத்தகைய பயிர்களுக்கு முக்கியத்துவம் வழங்கி, உழவர்களின் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவும் துணை நிற்க வேண்டும்.

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்பாட்டுச் சட்டத்தில் உள்ள எல்லாப் பிரிவுகளும், செயல்பாட்டிற்கு வரும் வகையில், விவசாயிகளும், விவசாயச் சங்கப் பிரதிநிதிகளும் நல்ல முறையிலே கருத்துப் பரிமாற்றங்கள் செய்து, காவேரி டெல்டா பகுதிக்கென நீண்ட காலத் திட்டம் ஒன்றை வகுக்க உங்களது உயரிய பங்களிப்பையும், கருத்துக்களையும், ஆலோசனைகளையும் இந்தக் கூட்டத்திலே வழங்கிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வளமான தமிழகம் அமைக்க வேளாண்மையைக் காக்க வேண்டும். தமிழ்நாட்டில், டெல்டா மாவட்டங்கள் வேளாண்மையின் மிக முக்கியமான அங்கம் என்கிற காரணத்தால், அதனைக் கண்ணும் கருத்துமாக காக்க வேண்டும் என்று நான் கேட்டு, என்னுடைய தலைமை உரையை நிறைவு செய்கிறேன்.

இந்தக் கூட்டத்தில் உங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சென்னை, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10ஆவது தளத்திலுள்ள கூட்ட அரங்கில் தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல அதிகார அமைப்பின் முதல் கூட்டத்திற்கு தலைமையேற்று ஆற்றிய தலைமை உரை - 12.05.2022

சென்னைப் பல்கலைக்கழகம் உயர்கல்வி நிறுவன வரிசையில் முதன்மையான இடத்திற்கு வருவதற்கு அரசு என்றும் துணை நிற்கும்

சென்னைப் பல்கலைக்கழக 164ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவிற்கு தலைமையேற்றுள்ள மாண்புமிகு தமிழக ஆளுநர், சென்னைப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் திரு. ஆர்.என்.ரவி அவர்களே!

தமிழகத்தின் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தருமான முனைவர் க.பொன்முடி அவர்களே!

விழாவிலே பங்கேற்று சிறப்பு சேர்த்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்களே!

சென்னை மாநகரத்தினுடைய மேயர் பிரியா அவர்களே!

துணை மேயர் திரு. மகேஷ் குமார் அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்களே!

திரு. மாதவரம் சுதர்சனம் அவர்களே!

திரு. எ. வெற்றி அழகன் அவர்களே!

திரு. தாயகம் கவி அவர்களே!

திரு. ஐட்ரீம் ஆர். மூர்த்தி அவர்களே!

திரு. ஜோசப் சாமுவேல் அவர்களே!

உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களே!

சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ச. கௌரி அவர்களே!

சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் இளங்கோவன் வெள்ளைச்சாமி அவர்களே!

சென்னைப் பல்கலைக்கழக தேர்வாணையர் முனைவர் க.பாண்டியன் அவர்களே!

பல்கலைக்கழகத்தினுடைய பேராசிரியர்களே! பட்டம் பெறவிருக்கக்கூடிய என்னுடைய பாசத்திற்குரிய மாணவச் செல்வங்களே!

அந்த மாணவர்களை ஈன்றெடுத்திருக்கக்கூடிய பெற்றோர் பெருமக்களே!

அரசுத்துறை அதிகாரிகளே! அலுவலர்களே!

பத்திரிகை, ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

கையில் பட்டத்துடனும் -

கண்களில் கனவுகளுடனும்-

எதிர்காலத்தை எதிர்நோக்கி இருக்கக்கூடிய மாணவ, மாணவியர் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உங்களது திறமைக்கும் - அறிவுக்கும் - ஆற்றலுக்கும் தகுந்த எதிர்கால வாழ்க்கை நிச்சயமாக அமையும் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது.

உங்கள் பெயரோடு இனி சேர இருக்கும் பட்டம் என்பது - இந்த சமூகத்தில் உங்களை அடையாளம் காட்டும் அறிவு அடையாளம். இந்த பட்டத்தோடு உங்களுடைய பட்டப்படிப்பு முடியப்போவதில்லை. அடுத்தடுத்த உயர்வுக்கு இது ஒரு அடித்தளம், அவ்வளவுதான். எந்த மனிதரின் சிந்தனைக்கும் அவரது மரணத்தில்தான் முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது. அது போலத்தான் படிப்பும் - இறுதிவரை தொடர வேண்டும்.

பட்டம் பெறும் உங்கள் அனைவர் முகத்திலும் பூரிப்பும் பெருமிதமும் தெரிகிறது. அதைவிட உங்கள் அனைவருக்கும் இன்னொரு பெரிய பெருமை இருக்கிறது.

சென்னை மாகாணத்தில் முதன்முதலில் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகமான சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறுகிறோம் என்பது உங்களுக்கெல்லாம் கூடுதலான பெருமை.

‘கற்பதன் மூலமாகத்தான் ஒருவரது உள்ளார்ந்த திறமைகள் வளர்கின்றன’ என்பதை நோக்கமாகக் கொண்டது இந்தப் பல்கலைக்கழகம்.

இங்கிருந்து படித்துப் பட்டம் பெற்றவர்கள் உலகப் புகழ் பெற்றவர்களாக வளர்ந்துள்ளார்கள் என்பதை உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட பட்டியலை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். கல்வியாளர்கள், அறிவியலாளர்கள், மேதைகள், தொழிலதிபர்கள், பேராசிரியர்கள், அரசியல் தலைவர்கள் என வளர்ந்து வந்திருக்கிறார்கள். அந்த வகையில் இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தின் பல்வேறு வளர்ச்சிக்குக் காரணமானவர்களை உருவாக்கிய இடம்தான் இந்தச் சென்னைப் பல்கலைக்கழகம். அத்தகைய திறமைசாலிகளின் வரிசையில் நீங்களும் இடம்பெற வேண்டும் என்று நான் மனதார, உளமாற வாழ்த்துகிறேன், இடம்பெறச் செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

தமிழ்நாட்டு மாணவ, மாணவியர் கல்வியில், சிந்தனையில், அறிவாற்றலில் மேன்மை பெற்றவர்களாக வளர வேண்டும் என்பது என்னுடைய ஆசை. தமிழக அரசின் மிகமிக முக்கியமான இலக்காக இது அமைந்திருக்கிறது.

அதற்காகத்தான் ‘நான் முதல்வன்’ என்ற திட்டத்தை தொடங்கி இருக்கிறோம்.

தமிழக மக்களால் முதலமைச்சர் ஆக்கப்பட்டிருக்கக்கூடிய நான் - அனைத்து மாணவச் செல்வங்களையும் முதல்வன் ஆக்க உருவாக்கிய திட்டம்தான் இந்த அற்புதமானத் திட்டம்.

அனைத்து இளைஞர்களையும் கல்வியில், ஆராய்ச்சியில், சிந்தனையில், செயலில், திறமையில்

சிறந்தவர்களாக மாற்றவே இந்தத் திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம்.

பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் அரசுக்கு வைக்கும் கோரிக்கை என்னவென்றால் -

'வேலைகள் இருக்கின்றன, ஆனால் அதற்குத் தகுதியான இளைஞர்கள் கிடைக்கவில்லை' என்று சொல்கிறார்கள்.

அப்படியானால் இளைஞர்களுக்கு அனைத்துத் தகுதிகளையும் உருவாக்க வேண்டிய கடமையானது இந்த அரசுக்கு இருக்கிறது. அந்தக் கடமையைத்தான் தமிழ்நாடு அரசு செய்து கொண்டிருக்கிறது. அதில் வெற்றி காண வேண்டும் என்று நினைக்கிறது.

மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு சார்ந்த வழிகாட்டுதல்கள், கல்வி நிறுவனங்கள், நாடு முழுவதும் உள்ள 150க்கும் மேற்பட்ட உயர்கல்விக்கான உதவித்தொகைகளின் தகவல்கள் போன்ற தகவல்களை எளிதில் பெறும் வகையில், 'நான் முதல்வன்' என்பது உருவாக்கப்பட்டிருக்கிறது.

வசதி படைத்தவர்கள் - பணம் செலுத்தி தனியார் நிறுவனங்களின் மூலமாக பயிற்சிகள் எடுத்துக் கொள்வார்கள். ஆனால் ஏழை, எளிய, விளிம்பு நிலையில் இருக்கக்கூடிய மக்களால் அது இயலாது. எனவே அந்த வாய்ப்பை அரசுதான் அனைவருக்கும் வழங்கிட வேண்டும்.

அந்தக் கடமையைப் பல்வேறு வகையில் செயல்படுத்துவதற்காகத்தான் ஏராளமான திட்டங்களை நமது அரசு தீட்டி இருக்கிறது.

வேலை கிடைக்கவில்லை என்று எந்த இளைஞரும் இருக்கக் கூடாது. தகுதியான இளைஞர்கள் வேலைக்குக் கிடைக்கவில்லை என்று நிறுவனங்களும் சொல்லக் கூடாது. அத்தகைய நிலையைத் தமிழ்நாடு அரசு உருவாக்க நினைக்கிறது. அதற்காகத்தான் பல திட்டங்களைத் தீட்டி உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

அதற்கு சென்னைப் பல்கலைக்கழகம் மட்டுமல்ல, தமிழகத்தில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களும் திட்டங்களைத் தீட்டிட வேண்டும் என்று நான் இந்த நிகழ்ச்சியின் மூலமாக கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பெண்கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டும், இடைநிற்றலைத் தவிர்க்கும் பொருட்டும், "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம்" என்ற திட்டத்தைத் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது.

கல்லூரியில் சேர்ந்து, படிப்பு முடியும் வரை, மாணவர்களுடைய வங்கிக் கணக்கில் மாதம் ரூ.1,000 செலுத்தும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. மேலும், கல்வி பயிலும் மாணவர்களுக்கு, இலவசப் பேருந்து பயணம், கல்வி உதவித்தொகை, உணவுடன் கூடிய தங்கும் விடுதிகள் இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை, நிதிப் பற்றாக்குறை இருந்தபோதிலும், மாணவர்களுடைய நலன்கருதி தொடர்ந்து வழங்கி வரும் அரசாக நம்முடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இது உங்கள் அரசு, இது மக்களுக்கான அரசு, இது மாணவர்களுக்கான அரசு என்று சொல்லிக்கொள்வதில் நான் மிகுந்த பெருமைப்படுகிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகம் பல்வேறு சிறப்பான முயற்சிகளை எடுத்து வருவதைப் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

- முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில், 2006ஆம் ஆண்டில் திராவிட இயக்க ஆராய்ச்சி மையத்திற்கான விதை சென்னைப் பல்கலைக்கழகத்தில் இடப்பட்டது. அந்த நிறுவனத்துக்கு இப்போது மீண்டும் புத்துயிர் ஊட்டப்பட்டிருக்கிறது.

- சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வேட்டினைச் சமர்ப்பிக்கும்போது, ஆய்வாளர்கள் தம் ஆய்வு தொடர்பான பத்துப் பக்கங்கள் அடங்கிய ஆய்வுச்சுருக்கத்தைத் தமிழில் சமர்ப்பிக்க வேண்டும் என்ற பல்கலைக்கழகத்தின் அறிவிப்பை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்துறை சார்ந்த ஆய்வுக்கருத்துக்கள் தமிழில் இவ்வாறு மொழியாக்கம் செய்யப்படுவது தமிழ்மொழியின் வளத்திற்கும், அதனுடைய பெருமைக்கும் பெரும் துணையாகும்.'

- அரிய புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை மின்மயம் ஆக்குவதற்காகச் சென்னைப்பல்கலைக்கழக நூலகம் மற்றும் அண்ணா நூற்றாண்டு நூலகம் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

- மும்பை ஹோமி பாபா தேசிய நிறுவனம், இத்தாலி நேபிள்ஸ் பல்கலைக்கழகம், மெல்போர்ன் பல்கலைக்கழகம், பெருங்குடி ICT அகாடமி, ஒன்றியக் கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கக்கூடிய மகாத்மா

காந்திதேசியகிராமக்கல்விநிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து பல்வேறு அறிவுசார் புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும் கையொப்பமிடப்பட்டுள்ளன என்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

❖ முதல் தலைமுறையாக உயர்கல்வி பயில வரும் ஏழை மாணவர்கள், கூலி வேலை செய்யும் பெற்றோரின் பிள்ளைகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள். கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் கைம்பெண்களின் பிள்ளைகள் இலவசமாக இளநிலைப் படிப்புகளில் சேர்ந்து பயன்பெறக்கூடிய வகையில், சென்னைப் பல்கலைக்கழகம் 2010ஆம் ஆண்டு முதல் "சென்னைப் பல்கலைக்கழக இலவசக் கல்வித் திட்டம்" என்கிற சிறப்புமிகு திட்டத்தைச் செயல்படுத்தி வருவதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

திருநங்கைகளுக்குச் சென்னைப் பல்கலைக் கழகத்திலும், சென்னைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கி கொண்டிருக்கக்கூடிய அனைத்துக் கல்லூரிகளிலும், வரும் கல்வியாண்டு முதல், இளநிலை மற்றும் முதுநிலையில் இலவசமான படிப்பு வழங்கப்படும் என்கிற திட்டம், எல்லாவற்றையும் விட எனக்கு உண்மையில் மனமார்ந்த மகிழ்வைத் தந்து கொண்டிருக்கிறது.

❖ அனைவருக்கும் சமமான சமூகநீதி என்ற தமிழ்நாடு அரசின் உயரிய திராவிட நோக்கத்தை, உயர்கல்வியில் நிறைவு செய்யும் பொருட்டு, சென்னைப் பல்கலைக்கழகக் கல்லூரிகளில், 2022-2023ஆம் கல்வியாண்டு முதல், இளநிலை பயிலும் மாணவர்களுக்குச் "சமூகநீதி" மற்றும் "திருக்குறள்

காட்டும் தொழில்நெறி” ஆகிய பாடங்கள் விருப்பப் பாடங்களாக இடம்பெற இருப்பதைப் பாராட்டி நான் மகிழ்கிறேன்.

பட்டங்களைத் தாண்டிய சமூக அறிவையும் நீங்கள் அனைவரும் பெற இது நிச்சயமாக உதவும்.

“ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்” -

என்ற வள்ளுவரின் வரிகளை மனதில் வைத்து உட்கார்ந்திருக்கக்கூடிய பெற்றோர்கள், உங்கள் பிள்ளைகளை பட்டம் பெற்றவர்களாக நீங்கள் ஆக்கிவிட்டீர்கள்.

அவர்கள் உங்களது எண்ணங்களை வருங்காலத்தில் நிச்சயமாக நிறைவேற்றுவார்கள். உண்மையில் உங்களது பிள்ளைகளுக்கு நீங்கள் தரும் உண்மையான சொத்து, இந்தக் கல்வி எனும் சொத்துதான். இதைத்தான் யாரிடமிருந்தும் யாரும் பிரிக்க முடியாது.

ஆகவேதான், பெருந்தலைவர் காமராசர் காலம், பள்ளிக் கல்வியின் பொற்காலம் என்பதைப் போல - முத்தமிழறிஞர் கலைஞரின் காலம் கல்லூரியின் பொற்காலம் என்பதைப் போல -

எனது தலைமையிலான ஆட்சியின் காலம், உயர்கல்வியின் பொற்காலம் ஆகவேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இத்தகைய நல்ல முயற்சிகளுக்கு உதவியாக இருந்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உயர்கல்வி நிறுவன வரிசையில் சென்னைப் பல்கலைக்கழகம் முதன்மையான இடத்திற்கு வருவதற்கு எனது தலைமையிலான தமிழ்நாடு அரசு என்றும் உறுதுணையாக இருக்கும்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து செயல்படும் இணை வேந்தரான மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.பொன்முடி அவர்கள், துணைவேந்தர், பதிவாளர், ஆட்சிமன்றக்குழு உறுப்பினர்கள், பேரவை உறுப்பினர்கள், கல்விக்குழு உறுப்பினர்கள், பேராசிரியப் பெருந்தகைகள், மாணவர்கள், ஆசிரியரல்லா அலுவலர்கள், பணியாளர்கள் என அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பட்டம் பெற்றுள்ள மாணவச் செல்வங்களுக்கு மீண்டும் என்னுடைய அன்பான வாழ்த்துகள்!

மேலும் மேலும் உயர்வினை அடைந்து சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும், இந்த மாநிலத்திற்கும், நாட்டிற்கும் நீங்கள் தொண்டாற்ற வேண்டும் என்று அன்போடு என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!!!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கில்
நடைபெற்ற சென்னைப் பல்கலைக்கழகத்தின் 164ஆம் ஆண்டு
பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய விழாப் பேருரை - 16.05.2022

உயர் கல்விக்கு பொற்காலத்தை அளிக்கும் அரசு

சாய் பல்கலைக்கழகத்தின் கட்டட திறப்பு விழா மற்றும் இரண்டாம் கட்டட அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்று உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய தமிழக மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. க. பொன்முடி அவர்களே!

நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. செல்வம் அவர்களே!

திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எஸ். பாலாஜி அவர்களே!

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராகுல்நாத், இ.ஆ.ப., அவர்களே!

சாய் பல்கலைக்கழகத்தின் நிறுவனர் மற்றும் வேந்தர் திரு. கே.வி. ரமணி அவர்களே! சாய் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் ஜம்ஷெட் பருச்சா அவர்களே! சாய் பல்கலைக்கழகத்தின் நிருவாகக் குழு உறுப்பினர் என்னுடைய பெருமதிப்பிற்குரிய டாக்டர் முகமது ரேலா அவர்களே! சாய் பல்கலைக்கழகத்தின் நிருவாகக் குழு உறுப்பினர்களே! இந்தப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் திரு. பிலிப்ஸ் ஸ்டேன்லி அவர்களே!

பேராசியர்களே!

மதிப்பிற்குரிய மாணவச் செல்வங்களே!

அரசு அலுவலர்களே!

பத்திரிகை, ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய சுருக்க உரையைத் தொடங்குவதற்கு முன்னால், பன்னாட்டு கல்லீரல் மாற்றுச் சிகிச்சை கழகத்தினுடைய முதல் ஆசியத் தலைவராக தேர்வாகியிருக்கக்கூடியமருத்துவர் முகமது ரேலா அவர்களை நான் பெருமிதத்தோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக என்னுடைய வாழ்த்துகளைத் அவருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தலைசிறந்த மருத்துவராகத் திகழக்கூடிய டாக்டர் ரேலா அவர்கள் தமிழ்நாட்டிற்கே பெருமை சேர்க்கக்கூடியவராகத் திகழ்வது உள்ளபடியே மகிழ்ச்சியாக இருக்கிறது.

சாய் பல்கலைக்கழகக் கட்டடத்தை திறந்து வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இங்கே எனக்கு முன்னால் நம்முடைய உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, நேற்றையதினம் சென்னை பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா. இன்று சாய் பல்கலைக்கழகத்தின் கல்விக் கட்டடத்தை துவக்கி வைத்து, - இன்னொரு கல்விக் கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழாவும் இந்த நிகழ்ச்சியில் நடந்திருக்கிறது.

தமிழ்நாட்டில், அரசின் கட்டுப்பாட்டில், அதாவது உயர் கல்வித்துறையின் கட்டுப்பாட்டில் இப்போது 13 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. இப்போது தனியார் பல்கலைக்கழகமான சாய் பல்கலைக்கழகத்தின் கல்வி கட்டடங்களைத் துவக்கி வைத்து, மாணவர்களுக்கான உயர்கல்விக்கு இன்னொரு அடிக்கல்லை நாட்டியிருக்கிறேன் என்கிற மன நிறைவு ஏற்பட்டிருக்கிறது.

இந்த அரசு உயர்கல்வியில் முதலில் இருந்தே மிகுந்த கவனத்தை செலுத்திக் கொண்டிருக்கிறது. அதனால்தான் நம்முடைய நெஞ்சில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், நுழைவுத் தேர்வை அன்றைக்கு இரத்து செய்தார்கள். இன்றைக்கு தேசிய உயர்கல்வி மாணவர் சேர்க்கையானது 27.1 விழுக்காட்டை விட அதிகமாக, அதாவது 51.4 விழுக்காடு மாணவர்கள் தமிழ்நாட்டில் உயர்கல்வி பெற்றிருக்கிறார்கள் என்றால், அந்தப் பெருமை முழுமையும் யாருக்கு சேரும் என்று கேட்டீர்கள் என்றால், நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்குத்தான் சேரும்.

பொறியியல் மற்றும் மருத்துவக் கல்விக்கான நுழைவுத் தேர்வை இரத்து செய்ததோடு மட்டுமல்லாமல், அதற்காக உச்சநீதிமன்ற அங்கீகாரத்தையும் பெற்றுத்தந்தவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

அதனால்தான் நேற்று சென்னை பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் நான் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னேன். பள்ளிக் கல்விக்கு பெருந்தலைவர் காமராசர் என்று சொன்னால் - கல்லூரிக்கல்விக்கு முத்தமிழறிஞர் கலைஞர் என்று நான் குறிப்பிட்டுச் சொன்னேன். அந்த வகையில் உயர்கல்விக்கு இந்தக் காலம் பொற்காலமாக இருக்கும் என்று நேற்றைக்கு நான் அங்கே வலியுறுத்திச் பேசியிருக்கிறேன். இப்போது அதை இங்கே நான் வலியுறுத்துகிறேன்.

இங்கு வேந்தர் அவர்கள் பேசுகிறபோது, முதலமைச்சர் வந்திருக்கிற காரணத்தால் எல்லோரும் கோரிக்கை வைப்பார்கள், நான் கோரிக்கை வைக்க மாட்டேன் அப்படியென்று சொன்னார். ஆனால், இப்போது நான் அவருக்கு, முதலமைச்சர் என்ற முறையில் ஒரு கோரிக்கை வைக்க இந்த நேரத்தை பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

உயர்கல்வியில் அகில இந்திய மாணவர் சேர்க்கை விகிதத்தைத் தாண்டி தமிழகம் முன்னணியில் நிற்பதற்கு பல காரணிகள் உண்டு. இருந்தாலும், தமிழ்நாட்டில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையும், தமிழ்நாட்டில் ஆராய்ச்சித் துறைகளில் சேரக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையும் மிக முக்கியக் காரணங்களாக அமைந்திருக்கிறது.

உலகத்திலேயே திறமையான மாணவர்கள் தமிழ்நாட்டில் இருந்துதான் கிடைக்கிறார்கள் என்கிற நிலையை உருவாக்கவே நான் ஒரு திட்டத்தை அறிவித்து, அதைச் செயல்படுத்தத் தொடங்கி இருக்கிறேன். என்னவென்று கேட்டால், "நான் முதல்வன்" என்கிற அந்தத் திட்டம். அதாவது, மாணவர்களுடைய திறமைகளை அதிகரித்து, தமிழக மாணவர்கள் சாதனைகளை நிகழ்த்தக்கூடியவர்களாக மாற வேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்பதுதான் அதனுடைய நோக்கம். அதற்கு சாய் பல்கலைக்கழகமும், அதனுடைய நிருவாகமும், இங்கு பணியாற்றும் விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் துணைநிற்க வேண்டும் என்று அரசின் சார்பில் முதலமைச்சர் என்ற முறையில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டின் உயர்கல்விக்கு சாய் பல்கலைக்கழகம் மிக முக்கியப் பங்காற்றும் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது. உயர்கல்விக்குப் பொற்காலத்தை அளிக்கும் அரசு இருக்கிறது என்ற நம்பிக்கையில்தான் நீங்கள் இந்தப் பல்கலைக்கழகத்தை துவக்கியிருக்கிறீர்கள்.

நம் இருவரின் நம்பிக்கையையும் காப்போம்! நம் மாணவர்களை உயர்கல்வியில் சிறந்த மாணவர்களாக ஆக்குவோம்! உயர்கல்விக்குப் பொற்காலத்தை உருவாக்குவோம்! என்று கூறி - புதிதாகக் கற்க வரும் மாணவர்களுக்கு எனது நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு எடுத்துச் சொல்லி, இப்படியொரு சீர்மிகு பல்கலைக்கழகத்தை நடத்திவரக்கூடிய நீங்கள், தமிழ்நாட்டின் உயர்கல்விக்கு, அந்த

உயர்கல்வி சேர்க்கைக்கு துணைநிற்க வேண்டும் என்று கேட்டு, இந்த சிறப்பான விழாவில் உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய நல்வாய்ப்பைப் பெற்றமைக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய இதயப்பூர்வமான நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
செங்கல்பட்டு மாவட்டம், பையனூர், சாய் பல்கலைக்கழகக் கட்டடத்தை திறந்து வைத்து, புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, ஆற்றிய உரை - 17.05.2022

சமூக நீதியையும், சமத்துவத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியை அனைவருக்கும் உறுதி செய்வோம்

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களே!

தலைமைச் செயலாளர் அவர்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

பல்வேறு அரசுத் துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

மாவட்ட வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் சார்பில் நடைபெறக்கூடிய மாநில அளவிலான முதல் ஆய்வுக் கூட்டம் இந்தக் கூட்டமாக அமைந்திருக்கிறது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குவதற்காக வருகை புரிந்திருக்கும் அனைவருக்கும் முதலில் என்னுடைய நன்றியை, வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நீங்கள் அனைவரும் ஒரு மாநிலத்தினுடைய வளர்ச்சிக்கு ஆலோசனை சொல்வதற்காக வந்திருக்கிறீர்கள்.

இந்த ஆட்சி அமைந்தபோது நான் குறிப்பிட்டுச் சொன்னேன், இது எனது அரசு அல்ல, நமது அரசு என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த வகையில் நம்முடைய அரசு என்ற பரந்த உள்ளத்தோடு நீங்கள் எல்லோரும் இங்கே வந்து கூடியிருக்கிறீர்கள்.

நான் முதலமைச்சர் - 33 பேர் அமைச்சர்களாக இருக்கிறார்கள். அதனால் எங்களால் மட்டுமே அனைத்தும் செயல்படுகிறது என்று நான் சொல்ல மாட்டேன், சொல்லவும் கூடாது. பலரது சிந்தனையின் கூட்டுச் சேர்க்கைதான் அரசு. அப்படிச் செயல்பட்டால்தான் அது மக்கள் அரசாக இருக்க முடியும்.

அந்த வகையில் பல்வேறு ஆலோசனைக் குழுக்களை அமைத்து அவர்களது ஆலோசனைகளைப் பெற்று செயல்பட்டு வருகிறோம். அந்த அடிப்படையில்தான் இந்தக் குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

அரசினுடைய பல்வேறு நலத்திட்டங்கள், அது ஒன்றிய அரசின் திட்டமாக இருந்தாலும் சரி, மாநில அரசினுடைய திட்டமாக இருந்தாலும், அந்தத் திட்டத்தின் பலன் கடைக்கோடி மனிதரையும் சேரும்படி செயல்பட வேண்டும். அதுதான் நம்முடைய நோக்கமாக அமைந்திருக்கிறது.

அந்த வகையில், திட்டங்களின் செயலாக்கம், நிதிப் பயன்பாடு, வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி திட்டத்தை நிறைவேற்றுதல்போன்றபல்வேறு அம்சங்களை கவனிக்கவும், கண்காணிக்கவும், திட்டங்களை ஒருங்கிணைத்து அதன் பயன்பாட்டினை உயர்த்தவும் அதற்காகத் தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்பதே நம்முடைய அரசினுடைய நோக்கமாக இருக்கிறது. எல்லோர்க்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று சொன்னால்,எல்லாத் துறைகளும் ஒன்று போல முன்னேற்றம் காண வேண்டும்.

மருத்துவம், கல்வி, இளைஞர் நலன், வேளாண் மேலாண்மை, பெருந்தொழில்கள், நடுத்தர - சிறு - குறு தொழில்கள், நெசவாளர் மற்றும் மீனவர் நலன் என சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினருக்குமான தேவைகளை அறிந்து திட்டங்களை வகுத்து மாநில அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

கோட்டையில் தீட்டப்படக்கூடிய திட்டங்கள் கடைக்கோடி மனிதரையும் சென்று சேர, சீரான ஒரு ஒருங்கிணைப்பு அவசியம் தேவை. திட்டங்கள் தீட்டுவதை விட முக்கியமானது அந்தத் திட்டங்கள், அதனுடைய பயன்கள், அதனுடைய நோக்கம் சிதையாமல் நிறைவேற்றுவதுதான்.

அதுதான் நமக்கு இருக்கக்கூடிய மிகப்பெரிய சவாலாக அமைந்திருக்கிறது. அந்தச் சவாலை எதிர்கொள்வதற்காகத்தான் இது போன்ற ஆலோசனைக் குழுக்கள் அவசியமாகிறது.

❖ ஒன்றிய அரசின் பங்களிப்புடன் 15 துறைகளின் மூலம் செயல்படுத்தப்படக்கூடிய 41 திட்டங்களை மாநில மற்றும் மாவட்ட அளவிலான திசா கண்காணிப்புக் குழு ஆய்வு செய்ய வேண்டும்.

இன்று நாம் ஆய்வுக்கு எடுத்திருக்கக்கூடிய 6 திட்டங்களின் செயல்பாடுகளைப் பற்றி உங்களுடன் நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

1. மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டம் - முதலாவது ஆகும்.

கிராமப்புற குடும்பங்களுக்கு 100 நாட்கள் வேலை வழங்குவதை உறுதி செய்து, தனிநபர் மற்றும் ஊரக உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தினுடைய நோக்கம்.

2021-2022ஆம் ஆண்டில் 80 இலட்சம் பயனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு, 34 கோடி மனித வேலை சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக நீர் மேலாண்மைப் பணிகளான தடுப்பணை கட்டுதல், பண்ணைக் குட்டை அமைத்தல் போன்றவற்றுக்காக ரூ.6,850 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும், அங்கன்வாடி கட்டடம், ஊராட்சி மன்றக் கட்டடம் போன்ற ஊரக கட்டமைப்புகள் ரூ.2,786 கோடி செலவில் உருவாக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் ரூ.9,636 கோடி செலவில் ஊரக மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டிருக்கிறது.

2. ஏழை, எளிய மகளிரைக் கொண்டு சுயஉதவிக் குழுக்களை உருவாக்கி அவர்களுக்கு நிதி உள்ளிட்ட சேவைகளை வழங்குவதன் மூலம் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, குடும்ப வருமானத்தை உயர்த்தும் உயர்ந்த நோக்கத்துடன் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படுகிறது.

2021-2022ஆம் ஆண்டில் மட்டும் புதியதாக 32ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கி அதற்காக இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 36,957 புதிய சுய உதவிக்

குழுக்களை உருவாக்கி இருக்கிறோம். ரூ.20 ஆயிரம் கோடி வங்கிக் கடன் வழங்க திட்டமிட்டு ரூ.21,392.52 கோடி வங்கிக்கடன் வழங்கப்பட்டிருக்கிறது. நடப்பாண்டில் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.25 ஆயிரம் கோடி வங்கிகளின் மூலம் கடன் வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறோம்.

திறன் பயிற்சித் திட்டங்கள் மூலமாக 21,076 இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி ரூ.48 கோடியில் வழங்கப்பட்டு, 8,374 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

வங்கிகளால் நடத்தப்படும் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலம் 15,736 பெண்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு, 13,069 மகளிர் வங்கிக் கடன் பெற்று சுயதொழில் செய்கிறார்கள்.

3. இல்லம்தோறும் குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கான அனைத்து முயற்சிகளும் இந்த அரசால் 'ஜல் ஜீவன்' இயக்கத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2021-2022ஆம் ஆண்டில் ரூ.1,156.27 கோடி மதிப்பீட்டில் 14,54,569 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கிறது.

4. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் மூலம் 'அனைவருக்கும் கல்வி' மற்றும் 'ஆசிரியர் கல்வி' ஆகிய திட்டங்கள் - ஒன்றிய, மாநில அரசு நிதியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அனைத்துப் பள்ளிகளிலும் குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்தி, சமூக மற்றும் பாலின வேறுபாடுகளைக் களைந்து, சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் பின்தங்கிய, நலிவடைந்த குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளுக்கு இலவச கல்வியினை உறுதி

செய்வதை இலக்காகக் கொண்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

2021-2022ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.2,664.47 கோடி பெறப்பட்டு, முழுவதுமாக செலவிடப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் பள்ளிக்கல்வித் துறை மூலம் மாணவர் நலனுக்காக 'நான் முதல்வன்', 'இல்லம் தேடிக் கல்வி', 'எண்ணும் எழுத்தும்', கற்றல் கற்பித்தலின் தரத்தை மேம்படுத்த மதிப்பீட்டுப் புலம் போன்ற சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

5. உழவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு, வேளாண்மையை இலாபகரமான தொழிலாக மாற்றிடும் நோக்கத்துடன் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், ஒன்றிய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

அறுவடைக்கு முந்தைய மற்றும் பிந்தைய கட்டமைப்புகளை ஏற்படுத்துவது, விவசாயிகள் கூடுதல் வருமானம் ஈட்ட மதிப்புக் கூட்டுதலுடன் கூடிய உற்பத்தித் திட்டங்களை செயல்படுத்துவது, விவசாயம் சார்ந்த புதிய முயற்சிகளை ஊக்குவிப்பது, ஒருங்கிணைந்த பண்ணையத்தின் மூலம் கூடுதல் வருமானம் ஈட்ட வழிவகுப்பது போன்றவை இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக 2021-2022ஆம் ஆண்டில், வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த துறைகளால் ரூ.153.42 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

உழவர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு "கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண்

வளர்ச்சித் திட்டத்தை" 2021-2022ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வருகிறது.

ஒவ்வொரு ஆண்டிலும் இருபது விழுக்காடு ஊராட்சிகளில் தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வருதல், நீர் வள ஆதாரங்களை பெருக்குதல் போன்ற முக்கியமான நோக்கங்களை அடைவதற்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் ஆகியவை தோட்டக்கலைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, கூட்டுறவுத் துறை போன்ற துறைகளின் ஒருங்கிணைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

6. இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறக்கூடிய வகையில் அவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்ட பிரதம மந்திரியின் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த 2021-2022ஆம் ஆண்டில் 4,634 இளைஞர்களுக்கு ரூ.49.25 கோடி செலவில் திறன் பயிற்சி அளிக்கப்பட்டு, வேலைவாய்ப்பு பெற தகுதியுடையவர்களாக உருவாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த ஆறு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து நாம் இப்போது ஆலோசனைகள் செய்ய இருக்கிறோம்.

இந்தத் திட்டங்கள் மட்டுமல்ல, எந்தத் திட்டமாக இருந்தாலும் அதனுடைய நிறை,குறைகள் குறித்து தொடர்ந்து ஆய்வு செய்ய வேண்டும். அப்படிச் செய்து வந்தாலே, அந்தத் திட்டத்தின் நோக்கம் முழுமையாக நிறைவேறி விடும்.

"கேட்காத கடனும் திரும்ப வராது -
போகாத சொந்தமும் திரும்பி வராது"
என்று கிராமத்தில் சொல்வார்கள்.

அதைப் போலத்தான் ஆய்வுக்கு உட்படுத்தாத எந்தத் திட்டமும் முறையாக செயல்படாது. இதனை துறைத் தலைவர்கள், அரசு அதிகாரிகள் மனதில் வைத்துச் செயல்பட வேண்டும். இது போன்ற ஆய்வுக் கூட்டங்களின் மூலமாக ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் நிலையான வளர்ச்சியையும், சமூகநீதியையும், சமத்துவத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியை அனைவருக்கும் உறுதி செய்வோம்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள உறுப்பினர்கள், தமிழகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் தங்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கிட வேண்டும் என்று நான் கேட்டு, என் தலைமை உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!!!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற
மாநில அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும்
கண்காணிப்புக் குழுவின் (DISHA கமிட்டி) முதல் கூட்டத்தில்
ஆற்றிய உரை - 18.05.2022

ரூ.69,375 கோடி மதிப்பிலான முதலீடுகளும், 2.25 இலட்சம் வேலைவாய்ப்பு உருவாக்கக்கூடிய 131 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது

தொழிலதிபர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கக் கூடிய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்களே!

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களே!

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில்பாலாஜி அவர்களே!

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு. பெ.சாமிநாதன் அவர்களே!

மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் மத்திய அமைச்சர் அருமை சகோதரர் திரு. ஆ. ராசா அவர்களே!

மாண்புமிகு மாநகராட்சி மேயர் திருமதி கல்பனா ஆனந்தகுமார் அவர்களே!

தொழில்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச. கிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களே!

தொழில் ஆணையர் மற்றும் இயக்குநர் தொழில் வணிகத் துறையை சார்ந்திருக்கக்கூடிய திருமதி சிஜி தாமஸ் வைத்யன், இ.ஆ.ப., அவர்களே!

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கீ.சு. சமீரன், அவர்களே!

வருகை தந்திருக்கக்கூடிய தொழிலதிபர்களே!

அரசுத்துறையை சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளே! அலுவலர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான காலை வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொன்மையான பாரம்பரியமும் தொழில் வளமும் மிகுந்த இந்தக் கோவை மாநகரில், உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்தச் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்திருக்கக்கூடிய தமிழகத்தினுடைய தொழில்துறைக்கு நான் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொழில்துறையைத் தேர்ந்தெடுத்து அதில் உணர்வுப்பூர்வமாக ஈடுபட்டு, கடும் உழைப்பையே பெரும் முதலீடாக வழங்கி, இன்று தொழிலதிபர்களாக, பல ஆயிரம் நபர்களுக்கு வேலை வழங்கி, இப்பகுதி செழிக்க சிறப்பான பங்களிப்பை வழங்கி வந்துகொண்டிருக்கும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களை, வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொழில் நிறுவனம் நடத்துவதன் மூலமாக இந்த மாநிலத்துக்கும், நாட்டுக்கும் பொருளாதாரச் சேவையை ஆற்றி வரும் உங்களது பணிகள் மேலும் சிறக்க வேண்டும் என்று என்னுடைய வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்ள நான் விரும்புகிறேன்.

இதமான தட்பவெப்பமும் - மிதமான குளிர்ச்சியும் கொண்ட நகரம் இந்தக் கோவை. இது மக்களின் பழக்க வழக்கங்களிலும் நிச்சயமாகத் தெரியும். அந்த வகையில் குணத்தால் - மனத்தால் இதமான கோவைக்கு நான் வந்திருக்கிறேன்.

தமிழகத்தில் இரண்டாவது பெரிய நகரம் என்னவென்று கேட்டீர்களென்றால் அது கோவை மாநகரம்தான். ஜவுளி, பொறியியல், ஆட்டோமொபைல் உதிரி பாகங்கள் தயாரிப்பு, மோட்டார் பம்புகள், வெட் கிரைண்டர், தங்க நகை மற்றும் ஆபரணக் கற்கள் உற்பத்தி என அனைத்துத் தொழில்களிலும் சிறந்த நகரம் இந்த கோவை நகரம்தான்.

இந்தத் தொழில்தான் என சொல்லாமல், பல்வேறு தொழில்களின் மையமாக இந்தக் கோவை இருக்கிறது. கோவை மக்கள் தொடாத துறையும் இல்லை, அவர்கள் தொட்டு துலங்காத துறையும் இல்லை என்ற பெயரை பெற்ற நகரம் இந்தக் கோவை.

- கோயம்புத்தூரில் 700க்கும் மேற்பட்ட வெட் கிரைண்டர் உற்பத்தியாளர்கள் பல்வேறு வகையான வெட்

கிரைண்டர்களைத் தயாரித்து இந்தியா முழுவதும் மட்டுமல்லாமல், வெளிநாடுகளுக்கும் பல ஆண்டுகளாக ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறீர்கள். இவற்றுக்கு "கோயம்புத்தூர் வெட் கிரைண்டர்" என புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளதே இதன் பெருமைக்கு சிறந்த சான்றாக அமைந்திருக்கிறது.

❖ தற்போது தகவல் தொழில்நுட்பத்துறையிலும் இந்த மாவட்டம் மிக வேகமாக வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது. சென்னைக்கு அடுத்தபடியாக, இந்த தமிழ்நாட்டில் இரண்டாவது பெரிய மென்பொருள் தயாரிப்பு நகரமாகவும் இந்த கோவை மாநகரம் உருபெற்றுள்ளது. இந்நகரத்தில் உள்ள டைடல் பூங்கா மற்றும் பிற திட்டமிடப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மூலம், உலக அளவில் அவுட்சோர்சிங் நகரங்களில் ஒரு முக்கிய இடத்தை இந்த நகரம் தற்போது பிடித்திருக்கிறது.

❖ நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து, இதுவரை 5 முதலீட்டாளர்கள் மாநாடுகளை நடத்தி உள்ளோம். தமிழ்நாட்டில் நடைபெற்ற நான்கு மாநாடுகளில் ஒன்று, கடந்த நவம்பர் மாதம் கோயம்புத்தூரில் நடைபெற்றது. ஏனென்றால், தமிழ்நாட்டின் தொழில் துறையினுடைய மிக முக்கிய தூண்களில் ஒன்று இந்தக் கோவை மாவட்டம் என்பதற்காகத்தான்.

❖ கோவை மாநகரத்தின் வளர்ச்சிக்கு, இந்த மேற்கு மண்டலத்தின் தொழில் முன்னேற்றத்திற்கு, கோவை விமான நிலையத்தின் விரிவாக்கம் அவசியம் தேவை. இதனை உணர்ந்து, இந்த விமான நிலையத்தை உலகத் தரத்திற்கு உயர்த்துவதற்கான பணிகளை நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தொடங்கி வைத்தார்.

இந்தப் பணிகளுக்கான திட்டம் வகுக்கப்பட்டு, நில எடுப்புப் பணிகள் 2010ஆம் ஆண்டு தொடங்கப்பட்டன. கடந்த ஆட்சிக் காலத்தின்போது பத்தாண்டு காலமாக சரியான முன்னேற்றம் இல்லாமல் தொய்வடைந்திருந்த அந்தப் பணிகளை இப்போது முடுக்கிவிட்டு, இதற்காக 1,132 கோடி ரூபாயை நாம் ஒதுக்கீடு செய்திருக்கிறோம்.

இந்தப் பணிகள் மிக விரைவில் முடிக்கப்பட இருக்கிறது. இதன்மூலமாக, சென்னைக்கு அடுத்தபடியாக, தமிழ்நாட்டின் தலைசிறந்த பன்னாட்டு விமான நிலையமாக கோவை விமான நிலையம் உயர்த்தப்படும் என்று நான் உங்களுக்கு உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தை 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்தும் இந்த அரசினுடைய இலட்சியத்தை அடைய, கோவையின் பங்களிப்பு மிக முக்கியமானதாக அமைய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வளம்மிக்க இந்த மாவட்டத்தை மேலும் வலுப்படுத்தக்கூடிய வகையில், புத்தாக்கம், தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம், வான்வெளி மற்றும் பாதுகாப்பு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு உள்ளிட்ட வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான புதிய மையமாக (New Hub for Emerging Technologies) கோயம்புத்தூர் உருவாக்கப்படும்.

இதற்காக தகுந்த ஆலோசகரை நியமித்து, விரிவான திட்டம் ஒன்று தயாரிக்கப்படும். இந்த விரிவான திட்டம், கோவைக்கான புதிய பெருந்திட்டமாக இருக்கக்கூடிய (New Master Plan) ஒருங்கிணைக்கப்படும். கோவை நகரின் கட்டமைப்புத் தேவைகளுக்கான எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யக்கூடிய வகையில், இந்தப் பகுதிக்கான புதிய பெருந்திட்டம் (Master Plan) உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள திறன்மிக்க மனிதவளத்தை மேலும் மேம்படுத்த திட்டமிட்டிருக்கிறோம்.

ஓர் அறிவுசார் பொருளாதாரத்தை உருவாக்குவது என்ற தமிழ்நாடு அரசின் தொலைநோக்குப் பார்வையை செயலாக்கும் விதமாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO), தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT), தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO) போன்ற அரசு பொதுத்துறை நிறுவனங்களுடன் இணைந்து மாநிலத்தில் இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்கள் தங்களின் வளாகங்களில் ஆராய்ச்சிப் பூங்காக்களை (Research Parks) நிறுவ ஊக்குவிக்கப்படும் என்று தெரிவித்திருந்தோம். அதன்படி, அறிவுசார் ஆராய்ச்சி பூங்கா ஒன்று பாரதியார் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, இதுவரையில், ரூ.69,375 கோடி அளவிற்கு முதலீடுகளும் 2.25 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய வகையில் 131 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொழில் துறையின் வளர்ச்சிக்கு இந்த அரசு மேற்கொண்டுவரும் சீரிய முயற்சிகளுக்கு அத்தாட்சியாக, அண்மையில், ஐக்கிய அரபு நாடுகளின் பொருளாதார அமைச்சகத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் முதலீட்டிற்கான சந்திப்பில், நமது தொழில் துறையின் வழிகாட்டி (GUIDANCE) நிறுவனம், ஆசியா-ஓசியானியா மண்டலத்தின் "சிறந்த முதலீட்டு ஊக்குவிப்பு முகமைக்கான" விருதை வென்றுள்ளது என்பதை நான் பெருமையுடன் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நமது மாநிலம் தொடர்ந்து தொழில் வளர்ச்சி பெற்று அகில இந்திய அளவில் முன்னணி மாநிலமாக திகழ வேண்டும். அதுமட்டுமல்ல, தெற்காசியாவிலேயே முதலீடுகள் மேற்கொள்வதற்கு உகந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்கிட வேண்டும் என்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

அரசு ஏற்படுத்தியுள்ள இந்த வசதி வாய்ப்புகளை தொழில் துறையினர் அனைவரும் நன்கு பயன்படுத்தி, மேன்மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என்று உங்களையெல்லாம் நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தொழில்துறையில் சிறப்பு வாய்ந்த கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்ப்பதில் குறு, சிறு நிறுவனங்களின் பங்கு மிக முக்கியமானது.

தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பெரும்பங்காற்றக்கூடிய இந்த நிறுவனங்களின் முன்னேற்றத்திற்காக இந்த அரசு தனிக்கவனம் அளித்து வருகிறது.

- குறு, சிறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் முதலீட்டு மானியத்திற்கான நிதி ஒதுக்கீடு, கடந்த ஆண்டு எப்போதும் இல்லாத அளவாக, ரூ.360 கோடி ஒதுக்கப்பட்டு, 3,545 நிறுவனங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
- புதிய தொழில் முனைவோர்களை உருவாக்குவதற்கு, திட்டமாக செயல்படுத்துவதற்கு சுய வேலை வாய்ப்புத் திட்டங்களின்கீழ் கடந்த ஆண்டு 8,568 பயனாளிகளுக்கு ரூ.1,101 கோடி வங்கிக்கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் அரசு மானியம் ரூ.285.38 கோடி ஆகும்.

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்கான இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டைவிட 49 விழுக்காடு அதிகரிக்கப்பட்டு, ரூ.911.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சொத்து பிணையில்லாக் கடன் எளிதில் பெற ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம் (TNCGS) பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டு, செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் முக்கியத் தேவையான தொழில் மனைகளை குறைந்த விலையில் வழங்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது.

- தமிழ்நாடு சிட்கோ நிர்வகித்து வரும் 122 தொழிற்பேட்டைகளில் அதிக விலை மதிப்பின் காரணமாக 371 ஏக்கர் பரப்பளவில் 1,341 தொழில்மனைகள் ஒதுக்கீடு செய்யப்படாமல் இருந்தது. இதை நிவர்த்தி செய்யும் விதமாக திருத்திய மனை மதிப்பீட்டு கொள்கையின்படி, குறிப்பிட்ட தொழிற்பேட்டைகளில் மனை மதிப்பானது 5 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை குறைக்கப்பட்டுள்ளது.

- கடந்த ஓராண்டில் மட்டும் ரூ.140.14 கோடி மதிப்பிலான 553 தொழில்மனைகள் மற்றும் 17 தொழிற்கூட அலகுகள் தொழில்முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 5 மாவட்டங்களில் புதிய தொழிற்பேட்டைகள் 81.85 ஏக்கர் மொத்தப் பரப்பில் 162 தொழில்மனைகளுடன் உருவாக்கப்பட்டுள்ளன.

❖ மேலும்,நான்கு மாவட்டங்களில் 394 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.218 கோடி மதிப்பில் 4 தொழிற்பேட்டைகள் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோயம்புத்தூர் உள்ளிட்ட மேற்கு மண்டலத்தைப் பொறுத்தமட்டில் தொழில் நிறுவனங்களின் நலனைப் பாதுகாத்திடுவதில் அரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது.

❖ கடந்த நிதியாண்டில், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த 364 குறு,சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ரூ.35.57 கோடி முதலீட்டு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

❖ சுயவேலைவாய்ப்புத் திட்டங்களின்கீழ் 367 தொழில் முனைவோர்களுக்கு ரூ.12.25 கோடி மானியத்துடன் ரூ.49 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

❖ கோயம்புத்தூர் மாவட்டம் சொலவம்பாளையம் கிராமத்தில் 42.42 ஏக்கரில் ரூ.18.13 கோடி திட்ட மதிப்பில் ரூ.9.6 கோடி அரசு மானியத்துடன் புதிய தனியார் தொழிற்பேட்டை கொசிமா (COSIEMA) மூலம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, தொழிற்பேட்டை அமைக்க விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ கடந்த ஆண்டு சென்னையில் நடைபெற்ற ஏற்றுமதி மாநாட்டில் அறிவிக்கப்பட்ட 10 ஏற்றுமதி மையங்களில் 4 மையங்கள் கோயம்புத்தூர், பொள்ளாச்சி, திருப்பூர், மற்றும் கரூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட உள்ளன.

❖ கயிறு உற்பத்தியில் தமிழ்நாடு, நாட்டிலேயே முதலிடத்தில் உள்ளது. கயிறு உற்பத்தித் தொழிலில், உழவர்கள் மற்றும் தொழில் முனைவோர்களின் வருமானத்தைப் பெருக்கிட அதிக வாய்ப்புகள் இருக்கிறது.உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளில்,

தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஜியோ டெக்ஸ்டைல்ஸ் (Geo Textiles) மற்றும் தென்னை நார் போன்ற மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை பிரபலப்படுத்தவும், மாநிலம் முழுவதும் கயிறுத் தொழில் குழுமங்களை மேம்படுத்தவும், தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் கோயம்புத்தூரில் அமைக்கப்படும். இதற்கு, முதற்கட்டமாக ரூ.5 கோடி தொடக்க மூலதனமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ❖ தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் புத்தொழில் வளர்ச்சிக்கு வழிகோலும் விதமாக மூன்று மண்டல அளவிலான புத்தொழில் மையங்கள் அமைக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. ஈரோட்டில், மண்டல புத்தொழில் மையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ❖ ஈரோட்டில் ரூ.3.5 கோடி மதிப்பில் மஞ்சள் தூள் உற்பத்தி செய்யும் குறுந்தொழில் குழுமத்திற்கான பொது வசதி மையம் அமைக்கவும்,
- ❖ ஈரோடு மாவட்டம், பவானியில் ரூ.3.5 கோடி மதிப்பில் ஜமுக்காளம் உற்பத்தி செய்யும் குறுந்தொழில் குழுமத்திற்கான பொது வசதி மையம் அமைக்கவும்,
- ❖ திருப்பூர் மாவட்டம் குண்டடம் வட்டாரத்தில் தமிழ்நாடு அரசு பங்களிப்பு ரூ.10 கோடியோடு, ரூ.16 கோடி திட்ட மதிப்பீட்டிலும், கரூர் மாவட்டம் க.பரமத்தி வட்டாரத்தில் ரூ.5 கோடி தமிழ்நாடு அரசு பங்களிப்புடன் ரூ.6.93 கோடி திட்ட மதிப்பீட்டிலும் ஒரு கயிறு குழும பொது வசதி மையம் அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.
- ❖ மேற்கு மாவட்டங்களில், இயற்கை இழைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரியமான

ஜவுளிகளின் ஏற்றுமதி அதிக அளவில் உள்ள போதிலும், உலகளவில் பல்வேறு துறைகளில் தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான தேவை மிக வேகமாகவும், சீராகவும் அதிகரித்து வருகிறது. எனவே, இவ்வாறான மதிப்புக்கூட்டு ஜவுளிகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான புதிய மேம்பாட்டு முயற்சிகளை மேற்கொள்ள நீங்கள் முன்வரவேண்டும் என்று உங்களை இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மின்னணு சாதனங்களின் பயன்பாட்டில் உலகம் முழுவதும் மூழ்கியுள்ளது. "சிப்" என்று அழைக்கப்படும் செமி-கண்டக்டர் இல்லாத மைக்ரோ எலக்ட்ரானிக் சாதனமே இல்லை என்றே சொல்லலாம்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதைச் சார்ந்த சேவைகளின் அடிப்படையிலே உலகளவில் அனைத்து செயல்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதால், செமி-கண்டக்டர்களின் தேவை முன் எப்போதையும் விட அதிகரித்துள்ளது.

உலகளவில் மிகப்பெரிய மின்னணு உற்பத்தி நிறுவனங்களும் தங்களது சிப் தேவைக்காக, சீனா, தைவான் போன்ற ஒரு சில நாடுகளை நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்த சூழலை நன்கு பயன்படுத்தி தமிழ்நாட்டில் சிப் உற்பத்திக்கான முயற்சிகளை மேற்கொண்டு, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உங்களது பங்களிப்பினை மேலும் அதிகரிக்க வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கோவையை முனையமாக வைத்து செயல்படுத்தப்பட்டு வரும் வான்வழி மற்றும் பாதுகாப்புத் தொழில்

பெருவழித்திட்டத்தில், வான்வெளி மற்றும் பாதுகாப்புத்துறை தொடர்பான உற்பத்தியையும் மேற்கொள்ள வேண்டும்.

சூலூரில் அமைக்கப்பட உள்ள தொழிற்பூங்காவிலும் தொழில் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என நான் உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

நூல் விலை உயர்வு நமது மேற்கு மாவட்டங்களில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால், பலர் தங்கள் வேலையை இழக்கக்கூடிய அபாயத்தை எதிர்நோக்கியிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். கச்சா பொருள்களின் வரலாறு காணாத உயர்வால், பலர் தொழிலை தொடர்ந்து நடத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். இதன் தீவிரத்தை உணர்ந்த நான், மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட ஒன்றிய அமைச்சர்களுக்கும் நான் ஏற்கெனவே கடிதம் எழுதியிருக்கிறேன். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி அதைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். நான் மட்டுமல்ல, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்றக் குழுவின் துணைத் தலைவர் தங்கை கனிமொழி, எம்.பி., அவர்கள் தலைமையில் மேற்கு மாவட்டங்களைச் சார்ந்திருக்கக்கூடிய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாகச் சேர்ந்து டெல்லிக்கு நேற்று சென்று ஒன்றிய அமைச்சர்கள் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களையும், திரு. பியுஷ் கோயல் அவர்களையும் நேரிலே சந்தித்து அந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். உங்கள் கவலைகளை விரைந்து தீர்ப்பதற்கான எல்லா முயற்சிகளையும் இந்த அரசு எடுத்துக்கொண்டு வருகிறது. கோவையில் வந்து நான் இறங்கியவுடன், உடனடியாக ஒன்றிய வர்த்தகத்துறை

அமைச்சர் திரு. பியுஷ் கோயல் அவர்களுடன் தொலைபேசியில் பேசினேன், உங்கள் சார்பாக அந்தக் கோரிக்கையை நான் எடுத்து வைத்திருக்கிறேன்.

அதிக முதலீடுகளை மேற்கொண்டு, தயாரிப்புகளை பலப்படுத்துங்கள், பல்வகைப்படுத்துங்கள், விரிவாக்கத்தை மேற்கொள்ளுங்கள், மதிப்புக் கூட்டுப் பொருட்களை உற்பத்தி செய்யுங்கள் என்று முதலீட்டாளர்களுக்கு நான் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறேன். இதனால், தமிழ்நாட்டின் பொருளாதாரம் பல்முனைப் பொருளாதாரமாக மாற வேண்டும் என்பதுதான் என்னுடைய இலக்கு.

வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். வர்த்தகத்தில் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கி செயல்படுங்கள். போட்டிகள் நிறைந்த இந்தக் காலத்தில் உங்கள் திறன்களை மேம்படுத்திக் கொள்ளுங்கள். அனைத்துத் தொழில் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். தொழிலில் மட்டுமல்ல, சமூகத்திலும் மாற்றம் ஏற்படுத்துவதாக உங்களது பணிகள் நிச்சயமாக இருக்க வேண்டும்.

உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் பொருளாதார வளர்ச்சி, இவை மூன்றும் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்தவை! இவை மேம்பட்டால், ஒரு மாநிலத்திற்கு ஒட்டுமொத்தமான வளர்ச்சி தானாக வந்து சேரும். இவை மூன்றையும் வலுப்படுத்துவதற்கான வழிகளை இது போன்ற சந்திப்புகளின் மூலமாகத் தான் பெற முடியும். இதுதான் இந்த சந்திப்புக்கான உண்மையான நோக்கம்.

இந்தச் சந்திப்பானது உங்கள் தொழிலை மட்டுமல்ல, இந்த மாநிலத்தை அடுத்த கட்டத்துக்கு உயர்த்துவதாக அது அமைய வேண்டும்.

எதிர்காலத்திற்கு நாம் தயாராக இருந்திட வேண்டும்.

உலகத்தரத்தில் போட்டியிட நம்மை தகுதிபடுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு நாம் தேவையான மாற்றங்களை உள்வாங்க வேண்டும்!

அத்தகைய மாற்றங்களைப் பற்றிச் சிந்திக்கத்தான், இந்தச் சந்திப்பை நமது தொழில்துறை ஏற்பாடு செய்துள்ளது.

எங்கள் அழைப்பை ஏற்று பெருமளவில் இங்கு வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகளை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களது தொழில் முயற்சிகள் அனைத்திற்கும், இந்த அரசு நிச்சயமாக உறுதுணையாக இருந்து, அனைத்து உதவிகளையும் செய்யும் என்று நான் உறுதியளிப்பது மட்டுமல்ல, உங்களது தொழில்கள் வெற்றிபெற, வளர்ச்சிபெற எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளையும் தெரிவித்து, என்னுடைய தலைமை உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
கோயம்புத்தூரில், தொழிலதிபர்கள் மற்றும்
தொழில் கூட்டமைப்பினருடன் நடைபெற்ற
கலந்துரையாடல் கூட்டத்தில் ஆற்றிய உரை - 19.05.2022

ஆட்சியில் இருந்தாலும் உங்களை சந்திப்போம், ஆட்சியில் இல்லாவிட்டாலும் உங்களை சந்திப்போம்

உங்கள் அன்போடு, ஆதரவோடு ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு காலம் நிறைவடைந்து, இரண்டாம் ஆண்டில் நம் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீங்கள் எந்த நம்பிக்கையோடு, எந்த உணர்வோடு ஆதரித்தீர்களோ, அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக இன்றைக்கு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கடந்த 10 வருடம் என்ன செய்ய முடியுமோ அதைத்தான் ஒரே வருடத்தில் கலைஞர் அவர்கள் உருவாக்கிய நம்முடைய ஆட்சியில் செய்து முடித்திருக்கிறோம். நீங்கள் நம்பி வாக்களித்த தி.மு.க. ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. உங்களுக்கு இந்த ஆட்சி பிடித்திருக்கிறதா, இல்லையா என்று சொல்லுங்கள்.

நான் தேர்தல் நேரத்தில் உங்களிடத்தில் அளித்த வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்றக்கூடிய அரசாக இந்த ஆட்சி அமைந்திருக்கிறது. குறிப்பாக மகளிருக்காக அற்புதமான திட்டங்கள் எல்லாம் நாங்கள் இந்த ஆட்சியில் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். வீடு தேடி வரக்கூடிய இல்லம் தேடிக் கல்வித் திட்டம், உங்களையெல்லாம் நாடி வரக்கூடிய மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், இப்படி பல்வேறு திட்டங்களை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். இன்றும், நாளையும் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக, நான் வந்திருக்கிறேன். ஆட்சியில் இருந்தாலும் உங்களை சந்திப்போம், ஆட்சியில் இல்லாவிட்டாலும் உங்களை சந்திப்போம். அது தான் தி.மு.க. ஆட்சி.

தேர்தல் அறிக்கையில் வாக்குறுதியில் சொன்ன உறுதி மொழிகளில் பெறும்பாலனவற்றை கடந்த ஒரே வருடத்தில் செய்து முடித்திருக்கக்கூடிய ஆட்சிதான் நமது ஆட்சி, உங்கள் ஆட்சி.

ஒரு பெரிய கொடூரமான கொரோனா என்ற தொற்றுநோய் உலகம் முழுவதும் ஆட்டிப்படைத்தது. தேர்தல் முடிந்து, வாக்கு எண்ணிக்கை நடைபெற்று முடிவுகள் வந்த போது நாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வருகிறோம். நாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வரும் நேரத்தில், கொரோனா என்ற அந்த கொடிய தொற்று நோய் எப்படியெல்லாம் மக்களை வாட்டி வதைத்தது என்று உங்களுக்குத் தெரியும். எத்தனை பேருடைய உயிரை இழந்து இருக்கிறோம், எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டார்கள், எவ்வளவு குடும்பங்கள் சீரழிந்தது என்பதெல்லாம்

உங்களுக்குத் தெரியும். அந்த நேரத்தில் தான் நாம் ஆட்சிக்கு வந்தோம்.

ஆட்சிக்கு வந்தவுடன் முதல் வேலையாக கொரோனா என்ற கொடிய நோயிலிருந்து விடுபட வேண்டும் என்று முடிவுசெய்து சபதம் எடுத்துக்கொண்டு, என்னுடைய உயிரைப் பற்றிக்கூட கவலைப்படாமல் கொரோனா நோயினால் அனுமதிக்கப்பட்டு இருக்கக்கூடிய மருத்துவமனைக்கு நேரடியாகச் சென்று, நோயாளிகளை பார்த்து ஆறுதல் சொல்லி விட்டு வந்தவன்தான் நான். கொரோனா நோய் தொற்று பரவலை எப்படி தடுத்து நிறுத்தி இருக்கிறோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

அதைத் தொடர்ந்து பெரும் மழை, வெள்ளம் வந்துவிட்டது. அதை எப்படி சமாளித்தோம் என்பதும் தெரியும். இதையெல்லாம் சமாளித்து இந்த ஒரு வருடத்தில், பத்து வருடங்கள் ஆட்சியில் இருந்தால் என்னென்ன செய்திருக்க முடியுமோ, அதைவிட அதிகமான அளவிற்கு இந்த ஒரு வருடத்தில் பல திட்டங்களை, சாதனைகளை செய்து காட்டியிருக்கிறோம்.

அதனால்தான், அதைத் தொடர்ந்து நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல், நகராட்சித் தேர்தல், பேரூராட்சித் தேர்தல், கிராம பஞ்சாயத்து தேர்தல் என எல்லா தேர்தல்களிலும் மிகப்பெரிய வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் தேடித் தந்திருக்கிறீர்கள். எனவே, அதற்கும் நன்றி சொல்ல நான் விரும்புகிறேன், கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு தந்திருக்கக்கூடிய இந்த சிறப்பான வரவேற்பிற்கு என்னுடைய இதயப்பூர்வமான நன்றியையும், வணக்கத்தையும்

தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் அளித்த இந்த அன்பான, உற்சாக வரவேற்பு என்னை மேலும் பணி செய்வதற்கு ஊக்கப்படுத்துவதாக இருக்கிறது. நான் ஆட்சிக்கு வந்து முதலமைச்சராக நீலகிரி மாவட்டத்திற்கு உங்களை சந்திக்க வந்திருக்கிறேன். ஆட்சியில் இல்லாத போது நீங்கள் அளித்த வரவேற்பும், தற்போது நீங்கள் அளித்திருக்கக்கூடிய இந்த வரவேற்பும் இன்னும் என்னை ஊக்கப்படுத்துகிறது, உற்சாகப்படுத்துகிறது. என்றைக்கும் உங்கள் அன்பிற்காக நான் கட்டுப்பட்டவன். என்றைக்கும் உங்களுடைய பாசத்திற்காக நான் கட்டுப்பட்டவன். அந்த உணர்வோடு, உங்கள் அத்தனை பேருக்கும் நான் மீண்டும் ஒரு முறை நன்றி, நன்றி, நன்றி என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
நீலகிரி மாவட்டம், குன்னூர் மற்றும் உதகையில்
பொதுமக்கள் மத்தியில் ஆற்றிய உரை - 19.05.2022

மலைகளோடு சேர்ந்து மக்களையும் இந்த அரசு நிச்சயம் காப்பாற்றும்

உதகை 200ஆவது ஆண்டு விழா, ஜான் சல்லிவன் சிலை திறப்பு விழா, முடிவுற்று இருக்கிற திட்டப்பணிகளை துவக்கி வைக்கக்கூடிய விழா, மேலும் பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டக்கூடிய விழா அதைத் தொடர்ந்து, 9,500 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய இந்த சிறப்பான மாபெரும் நிகழ்ச்சிக்கு தலைமை பொறுப்பு ஏற்றுள்ள மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அருமை நண்பர் திரு. ராமச்சந்திரன் அவர்களே!

பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையினுடைய அமைச்சர் அருமை நண்பர் திரு. மு. பெ. சாமிநாதன் அவர்களே நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் மத்திய அமைச்சர் என்னுடைய அன்பிற்குரிய அருமை சகோதரர் திரு. ராசா அவர்களே!

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த அருமை சகோதரர் திரு. கணேஷ் அவர்களே!

முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், நீலகிரி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயலாளருமான என்னுடைய இனிய நண்பர் திரு. முபாரக் அவர்களே!

மற்றும் இந்த நிகழ்ச்சியில் துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அம்ரித், இ.ஆ.ப., அவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்றக்கூடிய மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி கீர்த்தி பிரியதர்ஷினி அவர்களே!

பல்வேறு துறைகளை சார்ந்திருக்கக்கூடிய அரசு அதிகாரிகளே! அலுவலர் பெருமக்களே!

காவல் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அருமை நண்பர்களே!

ஊடகம் மற்றும் பத்திரிகைத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய சகோதரர்களே!

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும், உயிரான அன்பு உடன்பிறப்புக்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

அந்த வணக்கத்தைத் தொடர்ந்து முதலில், படுக இன மக்களுக்கு

கை முகதனெ ஒள்ளங்கே இத்தரா, நன்னி.
நம் தோடர் இன மக்களுக்கு வணக்கம்.
உள்த்திஸ்ய உப்பும் உள்த்கிஸ்பி
அடுத்து கோத்தர் இன மக்களுக்கு

கை மூதே இன் ஒளிமே இன்தில் ஒன்னிதெ

உயரமான, அழகான, பசுமையான, இயற்கையான, எழிலோடு, இப்படிச் சொல்லிக் கொண்டே இருக்கலாம். இப்படி பல்வேறு சிறப்புக்களை பெற்றிருக்கக்கூடிய இந்த உதகைக்கு நான் வந்திருக்கிறேன். இயற்கை எழில் கொஞ்சும் இந்த உதகை மாவட்டத்தில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

என் வாழ்க்கையில் எத்தனையோ முறை ஊட்டி வந்திருந்தாலும், இந்த நீலகிரி மாவட்டத்திற்கு நான் வந்திருந்தாலும், முதலமைச்சராக பொறுப்பேற்று முதன்முதலில் நடைபெறக்கூடிய அரசு நிகழ்ச்சியில் உங்கள் அனைவரையும் சந்திக்க வந்திருக்கிறேன். அப்படி வந்திருப்பதில் எனது உள்ளம் எப்படி இருக்கிறது என்று கேட்டால், ஊட்டியைப் போலவே என்னுடைய மனதும் குளிர்ச்சியாக இருக்கிறது.

தமிழகம் ஒரு பூந்தோட்டம் என்று நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வர்ணித்தார்கள். அதில் அழகான இந்த உதகை ஒரு மாவட்டமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஐக்கியநாடுகள் அமைப்பான யுனெஸ்கோ, நீலகிரியை உயிர்க்கோள் காப்பகமாக அறிவித்திருக்கிறது. அத்தகைய உயிர்க்கோள் காப்பகத்தில் இந்த அரசு விழா நடைபெறுவது உள்ளபடியே பாராட்டுக்குரியது, மகிழ்ச்சிக்குரியது. நான் மூன்று நாட்களாக இந்த மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்கக்கூடிய வாய்ப்பை பெற்றிருக்கிறேன்.

கோவையில் தொல்பொருள் கண்காட்சியையும், தமிழக அரசின் ஓராண்டு கால சாதனைகளையும் விளக்கி செய்தித்துறையின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக் கூடிய இந்த கண்காட்சியை திறந்து வைத்த நான், அதைத்

தொடர்ந்து கோவையிலே இருக்கக்கூடிய கொங்கு மண்டலத்தைச் சார்ந்திருக்கக்கூடிய தொழிலதிபர்களோடு விரிவான ஆலோசனைக் கூட்டத்தையும் நடத்தி இருக்கிறேன்.

நான் மட்டும் பேசி அவர்கள் கேட்பதாக இல்லாமல், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று அவர்களை பேச வைத்து, அவர்கள் வழங்கிய அந்த ஆலோசனைகளைப் பெற்று, இந்த அரசின் மீது அவர்கள் மிகுந்த நம்பிக்கையோடு அந்த கோரிக்கைகள் எல்லாம் எடுத்து வைத்திருக்கிறார்கள். அதன் பிறகு நீலகிரி மாவட்டத்திற்கு நான் வந்திருக்கிறேன். மாவட்டத்தினுடைய எல்லையோரத்தில் மாலை நேரத்தில் நான் வருகிற போது வழியெங்கும் நின்று மக்கள் தந்த வரவேற்பு என்னை இன்னும் நான் ஆற்ற வேண்டிய பணிகளை ஊக்கப்படுத்தி இருக்கிறது. அது தான் உண்மை. இந்த மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும், சிறப்போடு நான் எடுத்துச் சொல்லவேண்டும் என்று சொன்னால், இந்த மாவட்டத்தைச் சார்ந்திருக்கக்கூடிய நம்முடைய ராமச்சந்திரன் அவர்கள் வனத்துறையினுடைய அமைச்சராக பொறுப்பேற்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார். மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராக, இப்போது இரண்டாவது முறையாக இந்த மாவட்டத்தினுடைய அமைச்சராகவும், பொறுப்பேற்று பணியாற்றக்கூடிய அந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறார். ஆகவே, படுகர் இன மக்களினுடைய உள்ளத்தில் மட்டுமல்ல, அனைத்து சமுதாய மக்களின் உள்ளத்தில் ஒரு சிறப்பிற்குரிய இடத்தைப் பெற்றவராக விளங்கிக் கொண்டிருக்கிறார். ஆகவே, அவருக்கு உங்கள் அனைவரின் சார்பில் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் ராசா அவர்கள். அவருடைய சொந்த மாவட்டம் பெரம்பலூர். பிறந்த ஊர் பெரம்பலூராக இருந்தாலும், புகுந்த ஊர் இந்த நீலகிரி மாவட்டம். அதன் பிறகு ராசா என்று அமைந்திருக்கிறது. ஆகவே இந்த மாவட்டத்திற்கே ராஜாவாக அவர் விளங்கிக் கொண்டிருக்கிறார். அந்த வகையில் உங்கள் உள்ளத்தில் சிறப்புமிகு பெற்றவராக இருக்கிறார். தொடர்ந்து இரண்டாவது முறையாக இந்த நீலகிரி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு தலைவர் கலைஞர் அவரைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்கிறபோது சொன்னார். தகதகாய சூரியன் என்று அன்போடு ராஜா என்று அழைப்பதுண்டு. அதனால், அப்படிப்பட்டவர் இன்றைக்கு நாடாளுமன்ற உறுப்பினராக மட்டுமல்ல உங்களுடைய தேவைகளை அறிந்து, புரிந்து அத்தனை தடைகளையும் அரசுக்கு எடுத்துச் சொல்லி அது மாநில அரசாக இருந்தாலும், மத்திய அரசாக இருந்தாலும், அந்த அரசுக்கு எடுத்துச் சொல்லி, அதற்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து உங்களுக்காக அவர் தன்னை ஒப்படைத்துக் கொண்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.அவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை, பாராட்டுக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல் நம்முடைய அருமை சகோதரர் என்னுடைய இனிய நண்பர் முபாரக் அவர்கள். ஏற்கெனவே, சட்டமன்ற உறுப்பினராக இருந்து கொறாடவாக பணியாற்றி, அரசு பொறுப்பு இப்போது இல்லை என்று சொன்னாலும், அரசுக்கு நான் என்றைக்கும் துணை நிற்பேன் என்று மாவட்டக் கழக செயலாளராகப் பொறுப்பேற்று தன்னுடைய கடமையை ஆற்றிக் கொண்டிருக்கக்கூடிய அவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை, பாராட்டுக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட இந்த சிறப்புமிக்க விழாவிலே 124ஆவது மலர்க் கண்காட்சியை நேற்று காலையில் நான் துவக்கி வைத்தேன். அதற்குப் பிறகு மாலையில், முப்படைகளுக்கான இராணுவப் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்று நமது கம்பீரமான ராணுவத்தின் சிறப்பான மரியாதையைநான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன்.அதனுடைய தொடர்ச்சியாகத்தான் இந்த விழா, அரசின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டு நம்முடைய ஆட்சித் தலைவர் அவர்களும், அவருக்கு துணைநின்றுபணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய அரசு அதிகாரிகளும், அலுவலர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பொறுப்பிலே பணியாற்ற, பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய அத்தனை பிரதிநிதிகள், அவர்கள் எல்லாம் மிகச் சிறப்பான வகையில் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.ஆகவேவரவேற்பு ஆற்றியிருக்கக்கூடிய நம்முடைய ஆட்சித் தலைவருக்கும், அவரை சார்ந்திருக்கக்கூடிய அரசு அலுவலர்களுக்கும் எனது அன்பான வாழ்த்துக்களையும்,பாராட்டுகளையும்,நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய அரசு அமைந்த பிறகு இந்த ஓராண்டு காலத்தில் பல்வேறு விழாக்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நான் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை தொடர்ந்து பெற்று வருகிறேன். அதையொட்டி இந்த நீலகிரி மாவட்டத்தில் அடிக்கல் நாட்டு விழா, திறப்பு விழா, 9,500 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய அந்த நிகழ்ச்சி இங்கே மிகப் பெரிய விழாவாக, இங்கே குழுமியிருக்கக்கூடிய மக்களைப் பார்க்கிறபோது எனக்கு என்ன தோன்றுகிறது என்று கேட்டால், இது அரசு விழாவா? அல்லது ஒரு பெரிய மாநாடா? என்று சந்தேகப்படுகிற அளவிற்கு இங்கே ஒரு எழுச்சியை நான் காணுகிறேன்.

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைகிறபோதெல்லாம் நீலகிரி மாவட்டத்தின் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டங்களை, பல்வேறு சாதனைகளை நம்முடைய அரசு ஆற்றியிருக்கிறது என்பது உங்கள் அனைவருக்கும் மிகவும் நன்றாக தெரியும்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் அவர் செய்திருக்கக்கூடிய சாதனைகளில் மிகப் பெரிய சாதனை என்னவென்று கேட்டால், பேருந்துகளை தேசியமயமாக்கியது. நாட்டுடமையாக்கியது. அப்படிப்பட்ட வரலாற்றுக்குரிய இந்தத் திட்டத்தை கலைஞர் அவர்கள் எங்கே தொடங்கி வைத்தார் என்று கேட்டீர்கள் என்றால், இந்த ஊட்டியில் தான் தொடங்கி வைத்திருக்கிறார். முதலமைச்சர் ஆனவுடன் முதன்முதலாக அது இங்கு தான் தொடங்கப்பட்டிருக்கிறது.

- ❖ அதுமட்டுமல்ல, உதகை ஏரியை 1970ஆம் ஆண்டு புதுப்பொலிவோடு சீரமைத்து தந்தவரும் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான்!
- ❖ உதகையில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் மாளிகை கட்டுவதற்காகவும் நிதி ஒதுக்கீடு செய்தவரும் கலைஞர் அவர்கள் தான்!
- ❖ முதுமலை சரணாலயத்தை விரிவுபடுத்தி அதை சிறப்பு செய்யவேண்டும் என்பதற்காக ஒன்றிய அரசுக்கு விரிவான திட்ட அறிக்கை கொடுத்ததும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தான்!
- ❖ இலங்கையில் உள்நாட்டுப் போர் மூண்டபோது அங்கே இருந்து திரும்பியவர்கள் பெரும்பாலும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், அதைத்தான் அவர்கள் தொழிலாக செய்து கொண்டிருந்தவர்கள் என்ற காரணத்தால், 1970ஆம் ஆண்டு கூடலூர், பந்தலூர்,

கோத்தகிரி ஆகிய தாலுகாக்களில் அவர்களைக் குடியமர்த்தி அழகு பார்த்தவரும் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தான். அதுமட்டுமல்ல, அவர்களது வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித் தரும் வகையில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகத்தையும் தோற்றுவித்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள். அதன்படி நீலகிரி மாவட்டத்தில் தேயிலைச் சாகுபடி செய்யும் பணியை அவர்களுக்கு வழங்கினார்!

❖ உதகையில் இளம் படுகர் நலச்சங்கம் கட்டிடத்தை இலவசமாகக் கட்டித் தந்த பெருமையும் தலைவர் கலைஞருக்கு உண்டு!

❖ 2008ஆம் ஆண்டு தேயிலைத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காக முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடந்தபோது, தொழிலாளர்கள் கேட்ட தொகை ரூ.90 தான். ஆனால், அதையும் தாண்டி ரூ.102 வழங்க உத்தரவிட்டவர் நம்முடைய முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் தான்!

❖ ஊட்டியில் பெரும்பான்மையாக வாழும் படுகர் சமூகத்தில் ஒரு பிரிவாக இருக்கும் துறையர் சமூகத்தினர் தங்களைப் பிற்படுத்தப்பட்டோர் பிரிவிலிருந்து மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவுக்கு (MBC) கொண்டு வர வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அந்த கோரிக்கையும் நிறைவேற்றித் தந்தவர் தான் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் தான்!

❖ தேயிலை விலை வீழ்ச்சியடைந்த நேரத்தில், அந்த தேயிலை விவசாயிகளுக்கு மானியம் வழங்கியவரும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தான்!

❖ நீலகிரியில் பழங்குடிவாழ் மக்கள் அவர்கள் வாழக்கூடிய அனைத்துப் பகுதிகளுக்கும் “மின் இணைப்பு” மற்றும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கியவரும் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் தான்!

❖ கூடலூர் பகுதியில் சுமார் 10 ஆயிரம் வீடுகளுக்கு “மின் இணைப்பு” வழங்கியவர் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் தான்!

❖ நான் கலைஞருடைய அமைச்சரவையில் உள்ளாட்சித் துறை அமைச்சராக பொறுப்பேற்றிருந்த நேரத்தில், உள்ளாட்சியில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய அந்த கடை வியாபாரிகளுக்கு “கடை உரிமை” நீட்டிப்பு தந்து பெயர் மாற்றம் செய்து கொள்ள அனுமதி வழங்கினேன்.

❖ நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக பொறுப்பு வகித்த காலத்தில் உதகைக்கு 3ஆவது குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வந்து உதகை மக்களின் குடிநீர்த் தேவையைத் தீர்த்து வைத்ததும் உதகை மக்கள் நிச்சயமாக மறந்திடமாட்டார்கள்.

இத்தகைய சாதனை சரித்திரத்தின் தொடர்ச்சியாகத் தான் இப்போதும் நம்முடைய அரசு அமைந்த பிறகு பல்வேறு பணிகள் தொடர்ந்து செய்யப்பட்டிருக்கிறது. எப்போது இயற்கைப் பேரிடர் ஏற்பட்டாலும், தோள் கொடுப்பான் தோழன் என்பதைப் போல நீலகிரிக்கு உதவியாக உதவக்கூடிய அரசு தான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு.

2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின்போது நீலகிரி மாவட்டத்தில், பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. 50க்கும் மேற்பட்டவர்கள் அதில் உயிரிழந்தார்கள். மிக மிக

மோசமான இயற்கைப் பேரிடர் ஏற்பட்ட அந்தச் சூழலில், அப்போது மத்திய அமைச்சராக இருக்கிறார் நம்முடைய ராசா அவர்கள். உடனே தலைவர் கலைஞர் அவர்கள் அழைத்து நீ காரில் போனால், அல்லது விமானத்தைப் பிடித்துப் போனால், நேரம் ஆகும், நீ உடனடியாக ஹெலிகாப்டர் பிடித்து போய் சேர் என்று சொல்லி, களநிலவரத்தை பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய பகுதியை பார்வையிட்டு வா என்று உத்தரவிட்டார்கள்.

அப்பொழுது, துணை முதலமைச்சராக இருந்த நானும், அந்த போர்க்கால அடிப்படையில் பணிகளை முடுக்கிவிட உத்தரவிட்டேன்!

கடந்த 2019ஆம் ஆண்டு ஏற்பட்ட நீலகிரி நிலச்சரிவு மிகவும் மோசமானது. அதைக் கேள்விப்பட்டதும் இங்கு இருக்கக்கூடிய மாவட்டச் செயலாளர் முபாரக் அவர்கள் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மிகவும் பதட்டமாக பேசிக்கொண்டிருந்தார். அதனால், உடனடியாக நான் நீலகிரிக்கு வந்தேன். நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளை மறுநாளே நான் வந்து பார்த்தேன். இரண்டு நாட்கள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கெல்லாம் சென்று நேரடியாகப் பார்த்தோம்.

நிலச்சரிவு ஏற்பட்ட இடங்களைப் பார்த்த பிறகு வீட்டை இழந்தவர்களை சந்தித்து ஆறுதல் சொன்னோம். நடுவட்டம் இந்திரா நகரைச் சேர்ந்த அமுதா, சாதனா ஆகிய தாயும் மகளும் அந்த நிலச்சரிவில் இறந்து போனார்கள். அவர்கள் குடும்பத்தில் உள்ள உறவினர்களை சந்தித்து ஆறுதல் சொன்னோம்.

தொடர் கனமழை காரணமாக, நீலகிரி மாவட்டத்தில் சுமார் 350 கிலோமீட்டருக்கு சாலைகள் பழுதடைந்து இருந்தது. இதில், சுமார் 150 கிலோமீட்டர் பயணம் செய்து அப்போது நிவாரணப் பணிகளை நாங்கள் முடுக்கி விட்டோம்.

பல்வேறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டு இருந்த மக்களைச் சந்தித்தேன். நீலகிரியே நிலச்சரிவால் நிர்மூலம் ஆகியிருந்ததை அன்றைக்கு நான் நேரடியாக பார்த்தேன். ஆட்சியில் அப்போது யார் இருக்கிறார்கள் என்றால் அ.தி.மு.க. ஆட்சி. ஆட்சியாளர்கள் கூட அந்த நேரத்தில் உடனே வரவில்லை. முகாமில் தங்கி இருந்த மக்களுக்குத் திமுக சார்பில்தான் உதவிகளை செய்தோம்.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ராசாவின் தொகுதி மேம்பாட்டுநிதி,நம்முடையகழகச் சட்டமன்ற,மாநிலங்களவை உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி என்று சுமார் ஏழரைக் கோடி ரூபாயை அந்த நிவாரணப் பணிகளுக்காக உடனடியாக ஒதுக்கி பணிகளை செய்தோம் என்ற இந்த நேரத்தில் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

இதைஇப்பொழுதுநினைவூட்டக்காரணம்என்னவென்று கேட்டால்,ஆட்சியில்இருக்கிறபோதுசெய்கிறோம்.ஆட்சியில் இல்லாதநேரத்திலும்மக்களுக்குப்பணியாற்றியஒருமாபெரும் இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

இப்போது நம்முடைய கழக அரசு அமைந்த பிறகு, இந்த ஓராண்டு காலத்தில், இந்த நீலகிரி மாவட்டத்திற்கு எத்தனையோ திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கிறது. இயற்கை வளம் கொண்ட இந்த மாவட்டத்தின் வளர்ச்சிக்கும், மக்களின் மேம்பாட்டுக்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் உங்களுக்கு இந்த அரசு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

இயற்கையும், மனிதனும் இயைந்து வாழும் இந்த வனப்பகுதிகளைப் பாதுகாக்க இங்கு மட்டுமல்ல, மாநிலம் முழுவதும் இருக்கக்கூடிய வனப்பரப்பைப் பெருக்க அரசு திட்டமிட்டிருக்கிறது. அதாவது தற்போது இருக்கும்

வனப்பரப்பை 20.27 விழுக்காட்டிலிருந்து, 33 விழுக்காடாக உயர்த்த, நீண்டகால நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் நாம் தெரிவித்திருக்கிறோம்.

நமது மாநிலத்தின் வனப்பகுதிகளைப் பெருக்குவதோடு, வன விலங்கு காப்பகங்களைப் பராமரிக்கவும் அரசு கவனம் செலுத்தும். அந்த வகையில், முதுமலையில் இருக்கக்கூடிய புலிகள் காப்பகத்தில் இருக்கின்ற தெப்பக்காடு யானைகள் முகாமில், அதிநவீன யானைகள் பாதுகாப்பு மையம் மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா வளாகம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

தெப்பக்காடு யானைகள் முகாம், அது நூற்றாண்டு பழமையானது மட்டுமல்ல, ஆசியாவிலேயே முதன்முதலாக ஏற்படுத்தப்பட்ட முகாம் இது. இங்கே யானைகள் தொடர்பான மிக அதிக விவரங்கள், ஆய்வாளர்களால் சேகரிக்கப்படுகிறது. வளர்ப்பு யானைகள் தொடர்பான அறிவியல்பூர்வமான தகவல்களைப் பெறுவதற்கு இந்த மையம் ஒரு மிகச்சிறந்த இடமாக இது விளங்கிக் கொண்டு இருக்கிறது.

நமது காட்டு வளங்களை மீட்டுருவாக்கம் செய்யும் பணிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. அதற்கு அந்நிய களைத்தாவரங்களை அழித்தாக வேண்டும். இது உள்ளூர்த் தாவர இனங்களின் வளர்ச்சியை மட்டுப்படுத்துவதோடு, மாநிலத்தின் பல்லுயிர்ப் பன்மைக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது.

அந்நிய களைத் தாவரங்களை அகற்ற இந்த அரசால் ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதற்கான பணிகள் தற்போது நடைபெற்று கொண்டிருக்கிறது. இதன் மூலம் நமது வனப்பகுதிகளின் தன்மை முறையாக பராமரிக்கப்படும் என்று உறுதியளிக்கிறேன்.

நீலகிரி மாவட்டப் பகுதி உழவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, பல புதிய முயற்சிகளை மேற்கொள்ள நம்முடைய அரசு திட்டமிட்டிருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் ஸ்ட்ராபெர்ரி, வாழை எனப் பலவகையான உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பழவகைகள், கேரட், பீன்ஸ், லெட்யூஸ், வண்ண முட்டைகோஸ் போன்ற காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

மேலும், இந்த மாவட்டத்தின் கூடலூர் பகுதியில் நறுமணப்பொருட்கள், காபி, இஞ்சி, பலா மற்றும் இதுபோன்ற பல வகையான பழங்கள் மற்றும் காய்கறிகள் விளைவிக்கப்படுகிறது.

நீலகிரியில் குறிப்பிடத்தக்க வகையிலான சி.டி.சி. தேயிலை மற்றும் தொன்மை வாய்ந்த தேயிலை வகைகள் உள்நாட்டுத் தேவை மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படுகிறது.

நீலகிரி மாவட்டத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு உள்ளூர் உழவர்களுக்கு உதவும் வகையில் அவர்கள் விளைவிக்கும் பொருட்களை மதிப்புக்கூட்டி ஏற்றுமதி செய்வதற்காக, ஒரு பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி மையம் அமைக்கவும் நமது அரசு முடிவு செய்திருக்கிறது.

இந்த மையம், மாவட்டத்தில் உள்ள இலட்சக்கணக்கான உள்ளூர் உழவர்கள் உற்பத்தி செய்யும் பழவகைகள், காய்கறிகள், தேயிலை, காபி, நறுமணப் பொருட்கள், பூக்கள் மற்றும் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்ய வழிவகை செய்யும். இந்த மையத்தில் வல்லுநர்களின் வழிகாட்டுதலின்படி சிறந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உழவர்கள் இயற்கை வேளாண்மை செய்ய ஊக்குவிக்கும் வகையில் ஆங்காங்கே வள மையம் ஒன்றும் அமைக்கப்படும்.

சுற்றுலாப் பயணிகள் அதிகம் வந்து செல்லும் இந்த மாவட்டத்தில், பெரும் எண்ணிக்கையிலான மக்கள் சுற்றுலா

சார்ந்த தொழில்களில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக சொல்லவேண்டுமென்றால், சுற்றுலா வழிகாட்டிகள் (டூரிஸ்ட் கைடு), குதிரை சவாரி கூட்டிச் செல்பவர்களாக, சிறு உணவகங்களில் வேலை செய்பவர்களாக, வாடகை கார் ஓட்டுபவர்களாக, சிறு வியாபாரிகளாக எனச் சுற்றுலா சார்ந்த தொழில்களில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களை தான் இந்த அரசு முறையாக கணக்கெடுத்து, அவர்களுக்கெல்லாம் அடையாள அட்டைகள் வழங்கி தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களாகச் சேர்த்து, அந்த வாரியத்தின் அனைத்து வகையான நலத்திட்டங்களையும் பெறவழிவகை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியோடு நான் இந்த விழாவில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பகுதி மக்களின் முக்கியமான கோரிக்கைகளில் ஒன்று - 17ஏ என்று சொல்லப்படும் பிரிவு வகை நிலங்களில் வீடு கட்டி குடியிருப்பவர்களுடைய பிரச்சினைகள். நம்முடைய ராஜா அவர்கள் கூட இங்கே பேசியபோது இதைப் பற்றி குறிப்பிட்டுச் சொன்னார்கள். அது பற்றியும், TANTEA செயல்பாடுகள் பற்றியும், நம்முடைய ராஜா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், நமது ராமச்சந்திரன் அவர்கள், மாவட்டச் செயலாளர் முபாரக் அவர்கள், தொடர்ந்து இது பற்றி என்னிடத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

நான் சென்னை போனதும், இதுபற்றி அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட ஒரு கலந்தாலோசனைக் கூட்டத்தை நடத்தி நிச்சயம் இதற்கு தீர்வு காண ஒரு முடிவுகள் தர உறுதி எடுத்திருக்கிறோம்.

நீலகிரி மாவட்டத்தின் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு இந்த அரசு முதன்முறையாக, உதகமண்டலம், குந்தா, குன்னூர், கோத்தகிரி, கூடலூர்,

பந்தலூர் ஆகிய பகுதிகள் அடங்கிய நீலகிரி மண்டல திட்டப் பகுதியை (Nilgiris Plan Area) இந்த அரசு அறிவித்திருக்கிறது. இதற்கான மண்டலத் திட்டத்தை (Regional Plan) தயாரிக்கும் பணிகள் இப்பொழுது நடந்து கொண்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தைப் பாதுகாப்பது என்பது தமிழகத்தின் இயற்கையைப் பாதுகாப்பதற்கு சமம்! தமிழகத்தின் வனத்தைப் பாதுகாப்பது! தமிழகத்தின் அழகைப் போற்றுவது!

மலைகளும், மலைகள் சார்ந்த இடங்களும் கொண்ட நீலகிரியின் நிலத்தை இந்த அரசு காக்கும்!

மலைகளோடு சேர்ந்து இந்த மக்களையும் கழக அரசு நிச்சயம் காக்கும்!

அனைத்து உயிர்களையும் காக்கக்கூடிய அரசு இந்த அரசு.

பல்லுயிர் காக்கும் அரசு இந்த அரசு.

சுற்றுச் சூழலைக் காக்கும் அரசு இந்த அரசு.

வளர்ச்சி என்பது அனைத்து உயிர்களையும் உள்ளடக்கிய வளர்ச்சியாக இருக்க வேண்டும். எந்த உயிர்களையும் பாதிக்காத வளர்ச்சியாக இருக்க வேண்டும் என்று நினைக்கும் அரசு இந்த அரசு.

“வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்” என்று சொன்ன வள்ளலாரின் அறநெறியை ஆட்சி நெறியாகக் கொண்டிருக்கக்கூடிய இந்த அரசு,

“திராவிட மாடல்” என்று நான் சொல்வதற்குள் அனைத்து மானுடத் தத்துவங்களும் இதில் அடங்கியிருக்கிறது.

“சுயமரியாதைக்காரன் என்றால் அவனுக்கு இயற்கை மனிதன் என்று பொருள்” இதைச் சொன்னவர் தந்தை பெரியார்.

அத்தகைய இயற்கையை எந்நாளும் காக்கும் அரசாக நம்முடைய தமிழக அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, உங்களையெல்லாம் சந்தித்து உங்கள் அன்பை, பாசத்தை, நேரடியாகப் பெறக்கூடிய இந்த வாய்ப்பைப் பெற்றமைக்கு இந்த மூன்று நாட்கள் இந்த மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய நல்ல வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்திருக்கக்கூடிய நம்முடைய அமைச்சருக்கும், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினருக்கும், சட்டமன்ற உறுப்பினருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், அதேபோல இங்கே வந்திருக்கக்கூடிய உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கும், உங்களுக்கும், இங்கே பல்வேறு திட்டங்களை பெறுவதற்காக வந்திருக்கக்கூடிய பயனாளிகள் பெருமக்களுக்கும், மீண்டும் ஒரு முறை என்னுடைய இதயப்பூர்வமான நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்து இந்த அளவில் எனது உரையை நிறைவு செய்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
நீலகிரி மாவட்ட உதகையில் நடைபெற்ற
"உதகை 200" துவக்க விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள்
வழங்கும் விழாவில் ஆற்றிய உரை - 21.05.2022

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்திட வேண்டும்

மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களே!

காணொலி மூலமாக இந்த நிகழ்ச்சியில் தங்களை இணைத்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே! அலுவலகப் பெருமக்களே!

நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களே!

உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளே!

வேளாண் பெருங்குடி மக்களே!

வேளாண் நலத்துறை செயலாளர் அவர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய எண்ணமாக இருக்கக்கூடிய உழவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், அவர்களின் நலனைப் பாதுகாத்திடவும், இந்தியாவில் முதன்முறையாக வேளாண்மைக்கு இலவச மின்சாரம் தந்து சாதனை படைத்தார்கள்.

உழவர்களின் வருமானத்தைப் பெருக்குவதற்காக விளைபொருட்களை, பேருந்தில் இலவசமாக எடுத்துச் செல்லலாம் என்று அறிவித்தார்கள், அதை நடைமுறைப்படுத்திக் காட்டினார்கள்.

உழவர் சந்தைகளை ஏற்படுத்தித் தந்த உன்னதத் தலைவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

உழவர்களின் வாழ்வில் ஒளியேற்ற, வேளாண் கடன்களைத் தள்ளுபடி செய்ததும், அவர்களின் வாழ்வில் ஏற்றம் காண வைத்ததும் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவும் அனைத்துச் சமூக மக்களின் வளர்ச்சிக்காகவும், தன்னுடைய வாழ்நாள் எல்லாம் போராடிய தலைவர் கலைஞர் அவர்கள், அவருடைய எண்ணத்தில் வாழும் வேளாண் மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை நமது அரசு தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

உழவர்களின் நலனை எப்போதும் பாதுகாத்து வரும் நமது அரசு,உழவர்களின் நலனுக்காக வேளாண் துறையினை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை என்று பெயரை மாற்றியும்; வேளாண்மைக்கென தனி நிதிநிலை

அறிக்கையையும் தாக்கல் செய்து உழவர்களைப் பெருமைப்படுத்தியிருக்கிறது.

உழவர்களின் நலனை முன்னிலைப்படுத்தும் நம்முடைய அரசுக்கு இயற்கையும், நல்ல ஒத்துழைப்பை நல்குவதால், குறுவை சாகுபடிக்கு இந்த ஆண்டு மே 24ஆம் தேதி அதாவது நாளையதினம், மேட்டூர் அணையினை திறந்து வைக்க இருக்கிறேன், அந்தச் செய்தியையும் நான் இப்போது மகிழ்ச்சியுடன் உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

நான் தமிழ்நாடு வளர்ச்சிக்காக ஏழு அம்ச தொலைநோக்குத் திட்டங்களை வகுத்துக் கொடுத்திருக்கிறேன். இந்த ஏழு அம்ச தொலைநோக்குத் திட்டங்களில் ஒன்றான "மகசூல் பெருக்கம் -மகிழும் விவசாயி" என்பதை நடைமுறைப்படுத்தும் வகையில், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டது. ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சியையும் தன்னிறைவான கிராமத்தையும் உருவாக்குவது இந்தத் திட்டத்தினுடைய முக்கிய நோக்கமாக அமைந்திருக்கிறது.

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டமானது, தமிழ்நாட்டிலுள்ள 12,525 கிராம பஞ்சாயத்துகளில் 5 ஆண்டுகளில் அதை செயல்படுத்த இருக்கிறோம். இந்தத் திட்டமானது ஊரக வளர்ச்சித் துறையின் மாபெரும் திட்டமான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களுடன் இணைந்து செயல்படுத்தப்படுவதால், கிராம அளவில் ஒருங்கிணைப்பு நன்றாக இருக்கும் என்பது இதனுடைய சிறப்பு!

2021-2022ஆம் ஆண்டில் 1,997 கிராம பஞ்சாயத்துகளில் ரூ.227 கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்படுவதை இன்றைக்கு நான் துவக்கி வைத்திருக்கிறேன். இந்தத் திட்டத்தினுடைய முக்கிய சிறப்பம்சமே கிராம அளவில் அரசுத் துறைகளின் அனைத்து நலத்திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதுதான்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் அனைத்துச் சமூக மக்களையும் ஒருங்கிணைத்து, முன்னேற்றம் காண வேண்டுமென தன்னுடைய வாழ்நாள் முழுவதும் உழைத்த உன்னதத் தலைவர்!

அந்த அடிப்படையில்,இந்தத் திட்டமும் ஒருங்கிணைக்கும் பணியை முன்னிலைப்படுத்துவதால், தலைவர் கலைஞர் அவர்களின் பெயரை இத்திட்டத்திற்கு வைத்து இன்றைக்கு சிறப்பு சேர்த்திருக்கிறோம். அது சாலப் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக,

- ❖ கிராமத்தில் உள்ள தரிசு நிலங்களைச் சாகுபடிக்கு கொண்டுவருதல்.
- ❖ நீர்வள ஆதாரங்களைப் பெருக்கி, சூரிய சக்தி பம்ப் செட்டுகளுடன் நுண்ணீர்ப் பாசன வசதி ஏற்படுத்துதல்.
- ❖ வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டி சந்தைப்படுத்துதல்.
- ❖ ஊரக வளர்ச்சித்துறையின் மூலமாக பண்ணைக் குட்டை அமைத்தல் மற்றும் கிராம வேளாண் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்.

- ❖ கால்நடைகளின் நலன் காத்து, பால் உற்பத்தியைப் பெருக்குதல்.
- ❖ வருவாய்த்துறையின் மூலம் பட்டா மாறுதல், இ-அடங்கல், சிறு / குறு உழவர்களுக்கு சான்று வழங்குதல்.
- ❖ கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் அதிக அளவு பயிர்க்கடன்கள் வழங்குதல்.
- ❖ பாசன நீர்வழித் தடங்களை தூர்வாருதல்

உள்ளிட்ட கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்காக அனைத்துத் துறை திட்டப் பணிகளையும் ஒருங்கிணைத்து திட்டம் செயலாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"தனி மரம் தோப்பாகாது" "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்ற முதுரைகளுக்கு ஏற்ப,

தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் உள்ள உழவர்களை ஒருங்கிணைத்து, உழவர் உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்கி, தேவையான தொழில்நுட்பப் பயிற்சிகள் அளித்து, வேளாண்மை - உழவர் நலத் துறையின் பல துறைகளின் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதனால் கிராமங்களில் ஒட்டுமொத்த வளர்ச்சி பலப்படும் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையுடன் ஒருங்கிணைந்து திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளதால், கிராம அளவில் தன்னிறைவு ஏற்படும். அதனால்

நகரத்தினை நோக்கி, கிராம மக்கள் இடம்பெயர்தல் தடுக்கப்படும்.

கிராம வளர்ச்சி என்பது பெரும் மக்கள் இயக்கமாக மாற வேண்டிய இந்தக் காலகட்டத்தில், கிராமத்திலுள்ள அனைத்து உழவர்களையும், ஏதாவது ஒரு திட்டத்தின் மூலமாவது பயனடையச் செய்ய வேண்டும் என்ற முக்கிய நோக்கத்தோடு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

எனவே, அனைத்துத் துறை அலுவலர்களும் அர்ப்பணிப்போடு, சிந்தையையும் செயலினையும் ஒரே நேர்கோட்டில் செலுத்தி, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்திடக் கேட்டுக் கொண்டு, வேளாண் பெருமக்கள், அரசுக்கும், அரசு அலுவலர்களுக்கும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அன்புடன் கேட்டு, இந்த தலைமை உரையை இந்த அளவோடு நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
தலைமைச் செயலகத்தில், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை தொடங்கி வைத்து ஆற்றிய உரை - 23.05.2022

ரூ.1.94 கோடி செலவில் 388 வட்டாரங்களில் "இளைஞர் திறன் திருவிழா"

மாநில அளவிலான முதல் இளைஞர் திறன் திருவிழா நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. பெரியகருப்பன் அவர்களே!

மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கணேசன் அவர்களே!

பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா அவர்களே,

மயிலைத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அருமை நண்பர் வேலு அவர்களே!

துணை மேயர் திரு. மகேஷ்குமார் அவர்களே!

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் ஆற்றல்மிக்க திருமதி அமுதா, இ.ஆ.ப., அவர்களே!

தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைச் செயலாளர் திரு.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., அவர்களே!

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்களே!

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்களே!

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி பிரியங்கா, இ.ஆ.ப., அவர்களே!

இராணிமேரிக் கல்லூரி முதல்வர் உமா மகேஸ்வரி அவர்களே!

பேராசிரியர் பெருமக்களே! ஆசிரியர்களே!

அரசு உயர் அதிகாரிகளே! அலுவலர்களே!

இளைஞர்களே! சுயஉதவிக் குழு உறுப்பினர்களே!

எழுச்சிமிக்க இந்த இராணி மேரிக் கல்லூரியில் பயின்று கொண்டிருக்கக்கூடிய மாணவச்செல்வங்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை சார்ந்திருக்கக்கூடிய பாசமிகு நண்பர்களே!

அனைவருக்கும் எனது அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாநில அளவிலான முதல் இளைஞர் திறன் திருவிழாவும், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குகிற இணைப்பு விழாவும், இணைந்து நடைபெறக் கூடிய இந்த சிறப்பான விழாவில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் சந்தித்து, அதைத் தொடர்ந்து வாழ்த்துரை வழங்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன்.

இந்த வாய்ப்பை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கக்கூடிய துறையினுடைய அமைச்சர்கள் இருவருக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நீங்கள் இருவரும் சேர்ந்து ஒரு நிகழ்ச்சியை நடத்தும்போது, இரண்டு அமைச்சர்களுக்கும் இருக்கும் பரந்த மனப்பான்மை இதன்மூலம் தெளிவாகத் தெரிகிறது.இதே தன்மை தொடர வேண்டும். இதனையே மற்ற அமைச்சர்களும் பின்பற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறப்பான விழா, இந்த சிறப்புக்குரிய விழாவில் பாரம்பரியமும், பெருமையும் கொண்ட இராணி மேரி கல்லூரி வளாகத்தில் நடைபெறுவது என்பது மிக மிகப் பொருத்தமான ஒன்றாக அமைந்திருக்கின்றது.

உணர்ச்சிமிக்க மாணவிகள் புடைசூழ நடைபெறக் கூடிய விழாவாக இந்த விழா நடந்து கொண்டிருக்கிறது. எல்லோரும் சொன்னார்கள், இந்தக் கல்லூரியினுடைய வரலாற்றைப் பற்றி. 1915ஆம் ஆண்டு “கேப்பர் இல்லம்” என்ற பெயரில் இருந்த புகழ்பெற்ற கட்டடத்தில்தான் இராணிமேரி கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த “கேப்பர் இல்லம்” என்று சொல்கிறபோது, என்னுடைய வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒன்றாக இது அமைந்திருக்கிறது.இந்தியாவில் முதன்முதலாக மூன்று மகளிர் கல்லூரிகள் தொடங்கப்பட்டிருக்கிறது.அதிலே இதுவும் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கிறது.தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும்,முதல் மகளிர் கல்லூரி எது என்று கேட்டால் இந்த இராணி மேரி கல்லூரி தான்.

இலட்சக்கணக்கான மகளிருக்குக் கல்வி கொடுத்த இந்த நிறுவனத்தில், கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய இந்தக்

கல்லூரியில், இந்த விழா நடைபெறுவது என்பது பொருத்தமாக அமைந்திருக்கிறது. சரியான இடத்தைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். ஆக, அப்படி தேர்ந்தெடுத்து நடத்தக்கூடியதுறையின் அதிகாரிகளுக்கும், துறையினுடைய அமைச்சர்களுக்கும், நான் முதலில் முதலமைச்சர் என்கின்ற முறையில் நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த இராணிமேரி கல்லூரிக்குள் நுழைகிறபோது எனக்கு பழைய நினைவுகள் வந்தது. பேசிய அமைச்சர்கள் அதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். பழம்பெரும் பெருமை கொண்டிருக்கக்கூடிய, பெரிய வரலாற்றைப் பெற்றிருக்கக்கூடிய இந்தக் கல்லூரியை இடிப்பதற்கு முன்னாள் முதலமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள் முனைந்தார்கள். நான் இந்த நேரத்தில் அரசியல் எல்லாம் பேச விரும்பவில்லை. அது தேவையும் இல்லை. ஆனால், அன்றைக்கு அது இடிக்கக் கூடாது என்று இந்தக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மாணவிகள், பழைய மாணவிகள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு மிகப்பெரிய போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். அதைத் தொடர்ந்து, உண்ணாவிரதப் போராட்டத்தையும் நடத்தி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட போராட்டத்தை நடத்திய காரணத்தால் அன்றைக்கு இருந்த அரசு, கல்லூரிக்குள் வரும் குடிநீர் சப்ளையை அன்றைக்கு துண்டித்தது. நிறுத்தி வைத்தார்கள். இன்னும் கூட சொல்ல வேண்டுமென்றால், கழிப்பறைகளை பயன்படுத்தக்கூட தடை விதிக்கப்பட்டிருந்தது. கல்லூரியையே மூடிவிட்டு, இங்கு பணியாற்றிய பேராசிரியைகளை வேறு ஊர்களுக்கு இடமாற்றம் செய்தார்கள்.

அப்போது இங்கு படித்துக் கொண்டிருக்கக்கூடிய மாணவியர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். நான் எதிர்க்கட்சியினுடைய தலைவராக பொறுப்பில் இருக்கிறேன். அன்றைக்கு சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிறது. சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிறபோது, தலைவர் கலைஞர் இடத்திலிருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வருகிறது. சட்டமன்றம் முடித்து விட்டு வீட்டிற்கு வருகிற வழியிலே, கலைஞர் சொல்கிறார். வீட்டிற்கு வருகிற வழியில், இராணி மேரி கல்லூரியில் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாணவிகளை சந்தித்து ஆறுதல் சொல்லிவிட்டு வா, “தி.மு.க. ஆதரவு தரும்” என்ற அந்த செய்தியை சொல்லிவிட்டு வா என்று எனக்கு தகவல் அனுப்பினார். ஆதரவு தெரிவிக்க நான் வந்தேன். நான் வந்தவுடன் வாசலில் அந்த கேட்டில் இருக்கக்கூடிய காவலர்கள், போலீஸ் காவலர்கள் ரொம்ப மரியாதையுடன் கதவை திறந்து வெளியில் விட்டார்கள். ஆக, அப்படி கல்லூரிக்குள் வந்து போராட்டத்தில் ஈடுபட்டிருக்கக்கூடிய மாணவிகள் எல்லாம் நான் சந்தித்து, ஒரு இரண்டு நிமிடம் அல்லது மூன்று நிமிடம் அவர்களிடத்தில் பேசிவிட்டுத்தான் திரும்பிப் போனேன். கேட் திறந்திருந்தது. ஆனால், இங்கே தான் நீங்கள் கவனிக்க வேண்டும். நான் வருகிறபோது வாசலில் நின்று கொண்டிருந்த போலீஸ் அதிகாரிகள் கேட்டை திறந்துவிட்டார்கள், உள்ளே வந்தேன். வந்து மாணவிகளை சந்தித்துவிட்டு, ஆறுதல் சொல்லிவிட்டு, ஊக்கப்படுத்திவிட்டு, உற்சாகப்படுத்திவிட்டு வெளியில் திரும்ப வருகிறபோது. மூடியிருந்த கேட்டை மறுபடியும் திறந்துவிட்டார்கள், அப்போது தான் வெளியிலே போகிறேன். இதுதான் நடந்தது. ஆனால், இது நடந்த நேரம்

2 மணி அல்லது 3 மணி அளவில் என்று நினைக்கிறேன். ஆனால் இரவு 9 மணிக்கு என்னுடைய வீட்டிற்கு போலீஸ் வந்தது. உங்களை கைது செய்ய வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள்.என்ன காரணம் என்று கேட்டேன்? இராணி மேரி கல்லூரியில் பூட்டியிருந்த கேட் மேலே ஏறி குதித்து, நீங்கள் உள்ளே சென்று மாணவிகளை தூண்டிவிட்டு வந்திருக்கிறீர்கள். அதற்காக உங்கள் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது என்று சொல்லி என்னைக் கைது செய்தார்கள். அதையெல்லாம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கடலூர் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஒரு மாத காலம் நான் சிறையில் இருந்தேன். அதில் எனக்கு ஒரு பெரிய பெருமை. ஆகவே இந்தக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கக்கூடிய, கல்லூரியில் பேராசிரியராக இருக்கக்கூடிய, கல்லூரியினுடைய ஆசிரியர்களாக இருக்கக்கூடிய அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறதோ, அதே உரிமை எனக்கும் உண்டு என்று தலைநிமிர்ந்து உங்களிடத்தில் பேச வந்திருக்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னேன். இந்த இடத்திற்கு "கேப்பர்" என்ற பெயர். கடலூரில் என்னை கொண்டு போய் சிறையில் அடைத்து வைத்தார்களே அந்த சிறைக்கு என்ன பெயர் என்று கேட்டால் அதுவும் கேப்பர் சிறை. ஆகவே, என்னுடைய வாழ்நாளில் எத்தனையோ நிகழ்ச்சிகள், மறக்க முடியாத நிகழ்ச்சிகளாக இருந்தாலும், இந்தக் கல்லூரிக்காக போராடிய மாணவ, மாணவிகளுக்கு நான் ஊக்கப்படுத்துகின்ற நேரத்தில், நான் சிறைபிடிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு, சிறையில் இருந்து வாடினேன் என்று சொன்னால், வாடினேன் என்பது அல்ல, மகிழ்ச்சியோடு தான் இருந்தேன். அதனால், சிறையில் அடைக்கப்பட்டேன் என்று சொன்னால், இதுவும் என்னுடைய வாழ்நாளில் மறக்க முடியாத, ஒரு

சம்பவமாக இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அப்படிப்பட்ட முக்கியமான இடத்தைப் பிடித்த இடம் தான் இந்த இராணி மேரி கல்லூரி.

இத்தகைய புகழ்பெற்ற இந்த இராணிமேரி கல்லூரியில் ரூ.3.2 கோடி மதிப்பில் கலைஞர் மாளிகை கட்டப்பட்டது. கடந்த கால ஆட்சியாளர்கள் கலைஞர் என்கின்ற அந்த பெயரை நீக்கி விட்டார்கள். அதனை மீண்டும் இப்போது நாம் சூட்டி இருக்கிறோம். கட்டடங்களில் இருக்கும் பெயரை நீக்குகிற காரணத்தால் கலைஞருடைய பெயரை மக்கள் மனதில் இருந்து நீக்கிவிட முடியாது. அவர் கோடிக்கணக்கான மக்களுடைய உள்ளத்தில், உணர்வில் இன்றைக்கும் அவர் வாழ்ந்து கொண்டு இருக்கிறார். அத்தகைய பெருமைக்குரிய கலைஞர் பெயரால் மாளிகை அமைந்திருக்கும் இடம்தான் இராணிமேரி கல்லூரி ஆகும்.

இந்த விழா மிக மிக ஒரு முக்கியமான விழா ஆகும். இளைஞர் விழா. அதுவும் இளைஞர் திறன் திருவிழா ஆகும். இளைஞர் என்றால், ஏதோ மாணவர்கள் என்றுதான் பொருள் என்று நீங்கள் கருதிவிடக் கூடாது. ஏனென்று கேட்டால் நீங்களும் இருக்கிறீர்கள். மாணவியர்களும் இதில் அடக்கம் என்பது எல்லோரும் புரிந்து கொண்டாக வேண்டும். இளைஞர்கள்தான் இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். இளைஞர்களின் வளர்ச்சியைப் பொறுத்தே அந்த நாட்டினுடைய வளர்ச்சி அமைந்துள்ளது.

அந்த வகையில் மற்ற நாடுகளுடன் நாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது 18 முதல் 35 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் அதிகமாக இருக்கக்கூடிய நாடு எந்த நாடு என்று கேட்டால் நம்முடைய இந்தியாதான்.

அந்த இளைஞர்களை அனைத்து வகையிலும் திறமைசாலிகளாக உருவாக்க வேண்டும். அதாவது இளைஞர் சக்தியை உருவாக்கி வைக்க வேண்டும். அதற்கு முக்கியமாக கல்வியை நாம் தந்தாக வேண்டும். அடிப்படைக் கல்வி மட்டுமல்ல, உயர் கல்வியும் தந்தாக வேண்டும்.

அப்படி கற்ற இளைஞர்களுக்கு அவர்களது தகுதிக்கேற்ற வேலையை நாம் வழங்க வேண்டும். அப்படி வேலை பெற்றவர்கள், அதற்குரிய ஊதியத்தை அவர்கள் பெற வேண்டும். அவர்களுக்கு நிறைவான வாழ்க்கையை அமைத்துத் தருவதன் மூலமாக இந்த நாட்டுக்கு அவர்கள் தங்களது முழுத் திறமையையும் கொடுத்து உழைப்பார்கள்.

இத்தகைய உழைப்புச் சக்கரத்தைச் சரியாக உருவாக்கக்கூடிய அரசுதான் இன்றைக்கு உங்கள் அன்போடு, ஆதரவோடு நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழக அரசால் உருவாக்கப்பட்ட பெரும்பாலான திட்டங்கள் இத்தகைய உழைப்புச் சக்கரத்தை உருவாக்கும் திட்டங்களாக அமைந்திருக்கிறது.

2010ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், நமது மாநிலத்தில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கம் (Tamil Nadu Skill Development Mission) என்ற தனித்துவம் வாய்ந்த ஒரு அமைப்பை அன்றைக்கு உருவாக்கினார்.

அப்போது தேசிய அளவிலோ அல்லது பிற எந்த மாநிலத்திலோ இத்தகைய திறன் மேம்பாட்டிற்கான தனி அமைப்பு எதுவும் கிடையாது. நமது மாநிலத்தில்

முன்னோடித் திட்டமாக இத்தகைய தனி அமைப்பை ஏற்படுத்தி பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழக்கூடிய ஒரு சூழ்நிலையை அன்றைக்கு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கினார்.

இந்நிறுவனம் அனைத்து வகையான திறன் பயிற்சிகளை வழங்கும் முதன்மை அமைப்பாக அறிவிக்கப்பட்டு, மாநிலத்தில் இளைஞர்களின் தொழிற்திறன் மேம்பாட்டுக்கான சூழலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதனுடைய அடுத்தகட்ட வளர்ச்சியாகத்தான் எல்லோரும் குறிப்பிட்டதுபோல "நான் முதல்வன்" என்ற அந்தத் திட்டத்தை அறிவித்தேன். நான் மட்டும் முதல்வன் என்று சொல்லிக் கொண்டிருந்தால் போதாது, நீங்களும், ஒவ்வொருவரும் 'நான் முதல்வன், நான் முதல்வன்' என்று சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். அதற்காகத்தான் அந்த பெயரை நாம் சூட்டி இருக்கிறோம். ஒரு பக்கம் இளைஞர்களுக்கு வேலை இல்லை என்ற நிலைமை, இன்னொரு பக்கம் இருக்கும் வேலைக்கு தகுதியான இளைஞர்கள் கிடைக்கவில்லை என்ற ஒரு நிலைமை. இந்த இரண்டையும் இல்லாமல் ஆக்குவதற்காகத்தான் இன்றைக்கு நம்முடைய அரசு பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. வேலைவாய்ப்புகளை உருவாக்க ஏராளமான புதிய நிறுவனங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். வேலைக்கான ஆட்களை உருவாக்க திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்கி வருகிறோம்.

புதிய தொழில்நுட்பங்களும் வளர்ந்து வருகின்றன. அதற்கேற்ப நம்முடைய இளைஞர்களைத் தயார்படுத்திட வேண்டும் என்ற கடமை உணர்ச்சியுடன் துவங்கப்பட்ட

கனவுத் திட்டம்தான் "நான் முதல்வன்" என்கின்ற அந்தத் திட்டம்.

அதேபோல், ஒவ்வொரு இளைஞருக்கும் ஒவ்வொரு விதமான விருப்பம் இருக்கும். அந்த விருப்பங்களை வளர்த்தெடுக்கவும் இத்திட்டம் அடிப்படையாக அமைந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் தமிழகம் முழுவதும் ஐந்து இலட்சம் இளைஞர்களின் கல்வி, அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்தவும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் தனித்திறமைகள் கண்டறியப்பட்டு, அவர்களை மேம்படுத்த 'நான் முதல்வன்' என்ற அந்த மகத்தானத் திட்டத்தை கடந்த 01.03.2022 அன்று நான் துவக்கி வைத்ததை பெருமையாகக் கருதுகிறேன்.

மாணவர்கள் தங்களின் திறனை வளர்த்துக் கொண்டு அதற்கேற்ப வேலைவாய்ப்பினைப் பெற்று தங்கள் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்தத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. திறன்பெற்ற இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் மாநிலத்தின் வளர்ச்சி அதிகரிக்கும். அதனால்தான் என்னுடைய நேரடிப் பார்வையில் இந்தத்திட்டம் செயல்படுத்தப்படத் தொடங்கியிருக்கிறது.

"நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 10 இலட்சம் இளைஞர்களுக்கு கல்வி, அறிவு மற்றும் திறன் உயர்த்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஏற்ற வகையில் பாடத்திட்டங்களும் மாற்றப்பட இருக்கிறது.

நான் முதல்வன் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது, அரசுக் கல்லூரிகளில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் அதற்கேற்ற பயிற்சிகளை வழங்கிடப் பெருநிறுவனங்களோடு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு

வேலைவாய்ப்பு பெறக்கூடிய திறன் பயிற்சிகள் நடத்தப்பட இருக்கிறது.

நான் முதல்வன் திட்டத்தின்கீழ் மாறிவரும் தேவைக்கேற்ப பாடத்திட்டங்களை மேம்படுத்த சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்துறை சங்கங்களுடன் இணைந்து செயல்பட, தமிழ்நாட்டில் அதிக அளவிலான தொழில் நிறுவனங்கள் கொண்ட துறைகளில் திறன்மிகு மையங்களை உருவாக்குதல், 21ஆம் நூற்றாண்டிற்கான திறன்கள் மற்றும் தகவல் தொடர்புத் திறன்களை அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் வழங்கி நமது இளைஞர்களைத் திறன்மிக்கவர்களாக மாற்ற வேண்டும். இதுபோன்ற நடவடிக்கைகளை இன்றைக்கு நாம் மேற்கொண்டு வருகிறோம்.

நம்முடைய மாநிலத்தினுடைய இளைஞர்கள் மிகவும் திறமையானவர்கள். அவர்களுக்கு வழிகாட்டியாக இந்த அரசு நிச்சயமாக செயல்படும். இதற்குச் சான்றாக நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உலகத்திறன் போட்டிகளில் பங்குபெறும் விதமாக மாநிலத்தில் திறன்போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் வெற்றி பெற்ற 32 மாணவர்கள் ஜனவரி 2022இல் புதுடில்லியில் நடைபெற்ற இந்திய அளவிலான இறுதிப்போட்டியில் கலந்து கொண்டிருக்கின்றார்கள். பெருமையோடு சொல்கிறேன், அந்த 32 பேரில் 23 பேர் பதக்கங்களைப் பெற்றிருக்கிறார்கள். இதுபோல், அதிக பதக்கங்களை தமிழகம் வெல்வது இதுவே முதன்முறையாகும். இது இந்த அரசு திறன்மேம்பாட்டில் செலுத்திய அக்கறைக்கு ஒரு சான்றாக அமைந்திருக்கிறது.

2006-2007ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வாயிலாக இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சித் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மகளிரின் முன்னேற்றத்திற்காக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வை தான், 1989ஆம் ஆண்டு நாட்டிலேயே முதன்முதலாக தருமபுரி மாவட்டத்தில் துவங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழு என்கிற ஒரு மாபெரும் திட்டம். இது இன்றைக்கு வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. தற்போது சமூக, பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கு சுய உதவிக்குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளை உருவாக்கி, முறையான பயிற்சிகளை வழங்கி, வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களைத் தொடங்க வங்கிக் கடன் இணைப்புகளை ஏற்படுத்தி சுயஉதவிக் குழு இயக்கத்தை நம்முடைய அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

இதன் அடுத்த கட்டமாகத்தான் இன்றைய தினம் மாநில அளவிலான முதல் 'இளைஞர் திறன் திருவிழா' மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த இளைஞர் திறன் திருவிழாவானது. தமிழகத்தின் 388 வட்டாரங்களில் ரூ.1.94 கோடி செலவில் நடத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் இந்த விழாவில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிகழ்வை அன்றாடம் நடக்கும் சராசரி நிகழ்வாகக் கருதாமல், இத்திருவிழாவின் நோக்கத்தை வெற்றியடையச் செய்யவேண்டிய பொறுப்பும், கடமையும் இளைஞர்களாக இருக்கக்கூடிய உங்கள் கைகளில்தான் இருக்கிறது. கண்டிப்பாக, நிச்சயமாக, உறுதியாக நீங்கள் இதை வெற்றியடையச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்குப் பெரிய அளவில் இருக்கிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் ஊரகத் திறன் பயிற்சித் திட்டத்தின்கீழ்

2006ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை 1,60,785 இளைஞர்களுக்குத் திறன்பயிற்சித் திட்டங்கள் மூலமாகத் தொழிற்பயிற்சிகள் அளிக்கப்பட்டு, 1,17,841நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித்தரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கடந்த நிதி ஆண்டில் 79 ஆயிரம் இளைஞர்களுக்குத் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்களின் வேலைவாய்ப்பும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

இளைஞர்கள் அதிக வேலைவாய்ப்புள்ள தொழில்களைப்பற்றி அறிந்துகொள்வதோடு, திறன் மேம்பாடு குறித்த விழிப்புணர்வு மற்றும் தகவல்களும் ஒருங்கே கிடைக்கப்பெற்று, சிறந்த வேலைவாய்ப்புகளைப் பெற வழிவகை செய்யும்நேரத்தில், இந்த ஆண்டு முதல் இளைஞர் திறன் விழாக்கள் நடத்தப்படுகின்றன.

இங்கு சிறப்புற நடைபெற்று வரும் இந்த இளைஞர் திறன் திருவிழா இளைஞர்களின் வாழ்விற்கு மேலும் வளம் சேர்க்கக்கூடிய நோக்கத்தில் இருக்கிறது என்பதில் யாருக்கும் எந்த சந்தேகமும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

- ❖ ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் கடந்த நிதி ஆண்டில் புதியதாக 36,957 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- ❖ 2021-2022ஆம் நிதியாண்டில் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.21,392.50 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ 2022-2023ஆம் நிதியாண்டில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.25,000 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு

அதற்கான நடவடிக்கைகளை முனைப்போடு இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது.

இங்கு கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள பொருட்களை பொதுமக்கள் அனைவரும் வாங்கிப் பயன் பெற வேண்டும், குழுக்களின் வாழ்வாதாரத்தை வளம் பெறச் செய்யவும் உங்களையெல்லாம் நான் அன்புடன் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நமது அரசு பொறுப்பேற்றவுடன் சென்ற நிதியாண்டில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் சுமார் 79,000 இளைஞர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வேலைவாய்ப்பும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இத்தகைய பயிற்சிகள் அனைத்தும் இலவசமாகவே இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சிகள் தனியார் வெளிமுகமைகள் மூலமாகவும் அரசு நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் மூலமாகவும் வழங்கப்படுகின்றன.

எனவே, நம் இளைஞர்கள் அனைவரும் நான் முதல்வன் திட்டத்தை தவறாது பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், பல புதிய திறன்மேம்பாட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தி. தமிழ்நாட்டைத் திறன் மேம்பாட்டின் முதன்மை மாநிலமாக ஆக்கிட இந்த அரசு உறுதி கொண்டிருக்கிறது.

தமிழக இளைஞர்கள் அனைவரும் “நான் முதல்வன்” என்று நம்பிக்கையோடு வாழ்க்கையில் வெற்றிபெற என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களை இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த இளைஞர் திறன் திருவிழாவை நல்ல முறையில் பயன்படுத்தி, அதற்கேற்ற வகையில் உங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

- ❖ அரசுப் பள்ளி மாணவர்கள் உயர் கல்வி பயில 7.5 விழுக்காடு சிறப்பு உள் ஒதுக்கீடு,
- ❖ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரில் உயர் கல்வி உறுதித் திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் பயின்று உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கக்கூடிய ஒரு அற்புதமான திட்டம்,
- ❖ நம் பள்ளி நம் பெருமை,
- ❖ இல்லம் தேடிக் கல்வி,
- ❖ ஒலிம்பிக் தங்கம் தேடுதல் திட்டம்,

- போன்ற இளைஞர் நலம் நாடும் திட்டங்களை செயல்படுத்தி வருவதில் நம் திராவிட மாடல் அரசு என்றைக்கும் முன்னோடியாகத் திகழும்.

இந்த இளைஞர் திறன் திருவிழா நிகழ்ச்சியில், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனை அரங்குகளையும் நான் திறந்து வைத்திருக்கிறேன். திறன் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு, திறன் வளர்ப்பு பயிற்சி சேர்க்கைச் சான்றிதழ்களையும், தேர்வு பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணைகளையும், 608 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.25.66 கோடி மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்புகளையும் வழங்க இருப்பது எனக்கு உள்ளபடியே மட்டற்ற மகிழ்ச்சியையும், பெருமிதத்தையும், உத்வேகத்தையும் தந்து கொண்டிருக்கிறது.

‘முடியுமா நம்மால்’ என்பது ‘தோல்வி’க்கு முன்பு வரக்கூடிய தயக்கம்.

‘முடித்தே தீருவோம்’ என்பது ‘வெற்றி’க்கான தொடக்கம்’

இதை மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். இதைச் சொன்னது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

அதை மெய்ப்பிக்கக்கூடிய வகையில் அனைவருக்கும் அனைத்துச் சேவைகளும் வழங்கிட ‘திராவிட மாடல்’ அரசாக நமது அரசு உங்களுக்கு என்றைக்கும் துணை நிற்கும் என்பதை பெரிதும் மகிழ்ச்சியுடன், பெருமையுடன், பூரிப்புடன் தெரிவித்துக் கொண்டு, உங்கள் அனைவரையும் சந்திப்பதிலே நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
இராணி மேரி கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில்,
மாநில அளவிலான முதல் “இளைஞர் திறன் திருவிழா”வை
தொடங்கி வைத்து ஆற்றிய உரை - 25.05.2022

75 ஆண்டுக் கால கல்வி பெருமைகொண்டது ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அருமை நண்பர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களே,

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தம்பி திரு.தயாநிதி மாறன் அவர்களே,

ஆயிரம் விளக்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்களே,

பிரோவின்சியல் சுப்பீரியர் அருட்சகோதரி டாக்டர் ஃபிரான்சிஸ்கோ நிர்மலா அவர்களே,

ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரி டாக்டர் ரோசி ஜோசப் அவர்களே,

கல்லூரியின் துணை முதல்வர்கள்:

டாக்டர் ரிஜி மணிமேகலா அவர்களே,

டாக்டர் ஃபெல்பின் சி. கென்னடி அவர்களே,

டாக்டர் வித்யா சீனிவாசன் அவர்களே,

பேராசிரியப் பெருமக்களே,

கல்லூரியின் நிருவாகிகளே,

சிறப்பு விருந்தினர்களே,

என்னுடைய அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய ஸ்டெல்லா மாரிஸ் மாணவியர் செல்வங்களே,

உங்களை எல்லாம் ஈன்றெடுத்திருக்கக்கூடிய பெற்றோர் பெருமக்களே,

பத்திரிகைமற்றும்ஊடகத்துறையைச்சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான மாலை வணக்கத்தை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியின் 75ஆம் ஆண்டின் விழாவினை முன்னிட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடிய இந்த சிறப்புக்குரிய விழாவிலே நானும் பங்கெடுத்து உங்களிடத்திலே சில கருத்துக்களை எடுத்து வைக்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்றமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்பினை எனக்கு உருவாக்கித் தந்திருக்கக்கூடிய கல்லூரியினுடைய நிருவாகத்திற்கும், கல்லூரியினுடைய முதல்வர் அவர்களுக்கும், முக்கியமாக, உங்களுக்கும் நான் என்னுடைய நன்றியை, வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி என்பது என்னுடைய வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு கல்லூரியாக

இருந்திருக்கிறது, இருக்கிறது, இருக்கவும் போகிறது. அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், நான் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தபோது, சேத்துப்பட்டில் இருக்கக்கூடிய ஹாரிங்டன் ரோட்டில் அமைந்திருக்கக்கூடிய எம்.சி.சி. பள்ளிக்கூடம், (Madras Christian College High School) அங்குதான் என்னுடைய பள்ளிப் படிப்பை முடித்தேன். கோபாலபுரத்தில் இருக்கக் கூடிய என்னுடைய வீட்டிலிருந்து அந்தப் பள்ளிக்கு நான் போவதற்கு, கோபாலபுரத்திலிருந்து நடந்து வந்து, இந்த ஸ்டெல்லா மாரிஸ் பஸ் ஸ்டாண்டிலே தான் நின்று பேருந்தில் ஏறி, அந்தப் பேருந்தினுடைய எண்.29c, அந்தப் பேருந்தில் 15 அல்லது 20 நாட்களுக்கு முன்பு கூட நான் வழியிலே நிறுத்தி ஏறி, அந்தப் பேருந்தில் பயணம் செய்யக்கூடிய மகளிர் இலவசமாக பயணம் செய்யக்கூடிய அந்தத் திட்டத்தை நான் ஆய்வு செய்தேன். ஆக, இங்கு இருந்து ஏறி நுங்கம்பாக்கத்தில், ஹாரிங்டன் ரோடில் இறங்கி, அதற்குப் பிறகு நான் என்னுடைய பள்ளிக்கு செல்வதுண்டு. அதேபோல் அங்கிருந்து, ஸ்டெர்லிங் ரோடில் பஸ் ஏறி, இந்த ஸ்டெல்லா மாரிஸ் பஸ் ஸ்டாண்டில் இறங்கி அதற்குப் பிறகுதான் நான் வீட்டுக்குப் போவதுண்டு. ஆக, அதுதான் மறக்க முடியாத நிகழ்ச்சியாக இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கிறது.

இன்னொரு செய்தியும் நான் சொல்லியாக வேண்டும். 1971ஆம் ஆண்டு தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் வெற்றிப் பெற்றபோது, அந்தத் தேர்தலை ஒட்டி நான் பிரச்சார நாடகங்களில் நடித்தேன். ஏறக்குறைய 40 நாடகங்கள் தமிழகம் முழுவதும் நடத்தி இருக்கிறேன். ஆட்சிக்கு வந்த பிறகு 1971ஆம் ஆண்டு வெற்றி விழா நாடகத்தை சென்னையில் நான் நடத்தினேன். அதற்கு முதலமைச்சராக அன்றைக்கு இருந்த கலைஞர் அவர்களும் தலைமையேற்க வந்தார்கள், முன்னிலைப் பொறுப்பை மறைந்த மதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர்

அவர்களும் ஏற்றார்கள். அதற்காக விளம்பரம் செய்வதற்காக, இரண்டு நாட்களுக்கு முன்பு, சென்னை நகரம் முழுவதும் சுவரொட்டியைக் கொண்டு சென்று நாங்கள் ஒட்டினோம். விடிய, விடிய எல்லாப் பகுதிகளிலும் ஒட்டிவிட்டு, கடைசியாக ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் நான் உட்கார்ந்திருக்கிறேன். என்னோடு வந்த தோழர்கள் எல்லாம் வரிசையாக ஒட்டிக்கொண்டு வருகிறார்கள். கொஞ்சம் கண் அயர்ந்து விட்டேன். நான் அந்த சைக்கிள் ரிக்ஷாவில் படுத்து உறங்கி விட்டேன். விடியற்காலை 4 மணி இருக்கும். அப்போது இந்த வழியாக சென்று கொண்டிருந்தபோது, இந்த ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியினுடைய காம்பவுண்ட் சுவரில் என்னோடு வந்த தோழர் ஒருவர் சுவரொட்டி ஒட்டி விட்டார். அப்போது காவலுக்காக வெளியில் இருந்த ஒரு காவலர் இங்கே ஒட்டக்கூடாது என்று அந்த தோழரிடத்தில் வாதம் நடத்த, அதற்குப் பிறகு தேனாம்பேட்டையில் இருக்கக்கூடிய காவல் நிலையத்திற்கு புகார் கொடுத்துவிட்டார். அங்கிருந்து காவலர்கள் வந்து எங்களைக் கடுமையாகக் கண்டித்து, இன்னும் கூட சொல்லவேண்டும் என்று சொன்னால், காவல் நிலையத்தில் எங்களை அழைத்து சென்று உட்கார வைத்து, அப்போதும் நான் யார் என்று சொல்லவில்லை, சொல்லவும் விரும்பவில்லை. அப்படி நான் பயன்படுத்துபவனும் அல்ல.அதற்கு பிறகு அவர்களாகவே தெரிந்து கொண்டு எங்களை வெளியில் அனுப்பிவிட்டார்கள். எதற்காக சொல்கிறேன் என்றால், ஒரு காவலரால், நான் கண்டிக்கப்பட்டு, என்னை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று உட்கார வைத்து அனுப்பி வைத்தார்கள். இன்றைக்கு இந்த காவல் துறையையும் பொறுப்பேற்றுக் கொண்டு, முதலமைச்சராகவும் பொறுப்பேற்றுக் கொண்டு, இந்தக் கல்லூரிக்கு வந்து உங்களையெல்லாம் சந்திக்கக்கூடிய வாய்ப்பை, இந்த விழாவில் கலந்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைத்ததை நினைத்து நான் பெருமைப்படுகிறேன்.

இன்னொரு தாக்கத்தை இந்தக் கல்லூரியைப் பொறுத்தவரைக்கும் நான் சொல்ல வேண்டுமென்றால், உங்களுடைய காம்பவுண்ட் சுவரில் இப்பொழுது கலை, தமிழ் கலாச்சாரம் இதையெல்லாம் பற்றி ஓவியங்களாக தீட்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய காட்சியை நான் அடிக்கடி பார்ப்பதுண்டு. இந்த வழியாக போகிறபோதெல்லாம், இந்தக் கல்லூரியினுடைய மாணவிகள் அந்த ஓவியத்தை வரைந்து கொண்டிருக்கக்கூடிய காட்சியை நானே நேரடியாக பலமுறை பார்த்ததுண்டு. அதைப் பார்த்துத்தான் நான் பல்வேறு அரசுத் துறை அலுவலர்களோடு பேசும்போது இரயில்வே மேம்பாலங்களாக இருந்தாலும், வாகனங்கள் போகக்கூடிய மேம்பாலங்களாக இருந்தாலும், முக்கியமான இடங்களில், எப்படி ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியில் அந்தக் காம்பவுண்டில் மாணவிகள் ஓவியங்களைத் தீட்டி வைத்திருக்கிறார்களோ, அதேபோல் நீங்களும் அந்தப் பணியிலே ஈடுபடவேண்டும் என்று நான் அறிவுறுத்தியிருக்கிறேன். பல இடங்களில் அது நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த உணர்வு எனக்கு ஏற்பட்டதற்குக் காரணம் நீங்கள் தான் என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டுப்பாட்டுக்கு பெயர் போன கல்லூரி இந்த ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி. 75 ஆண்டுகளை இந்தக் கல்லூரி கடந்திருக்கிறது என்று சொன்னால், இதில் படித்திருக்கக் கூடிய பல்லாயிரக்கணக்கான மாணவியர்கள் இன்று உலகம் முழுவதும் சிறப்பாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதில் யாருக்கும் ஐயமில்லை.

எனவே, இலட்சக்கணக்கான வாழ்வில் ஒளியேற்றிய ஒரு கல்லூரிக்கு நான் வந்திருப்பது, இங்கே வரவேற்புரை ஆற்றியபோது நான் வந்திருப்பதை பெருமையாக அவர்கள் சொன்னார்கள். உங்களுக்கு பெருமையோ, இல்லையோ

எனக்கு நிச்சயம் பெருமை என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கல்லூரிக்கு இருக்கும் ஒரு முக்கியமான பெருமை என்ன என்று கேட்டால் - இந்தியா சுதந்திரம் அடைந்த 1947 ஆகஸ்ட் 15 அன்று தொடங்கப்பட்டதுதான் ஒரு மிகப்பெரிய சிறப்பாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்தியாவானது அரசியல் விடுதலை அடைந்த நாளில் - கல்வி விடுதலைக்காக - அதிலும் குறிப்பாக பெண்களின் கல்வி விடுதலைக்காக இத்தகைய கல்லூரி உருவாக்கப்பட்டுள்ளது.

உங்களது அறிக்கையிலேயே, 'கல்வியை அதிலும் குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், பொருளாதார ரீதியாகவும் சமூகரீதியாகவும் பின் தங்கிய சமூகங்களில் கல்விவிருப்பங்களைபூர்த்திசெய்வதற்காகத்தொடங்கினோம்' என்று அதிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறீர்கள். இந்தக் கல்லூரியைப் பாராட்டுவதற்கும் வாழ்த்துவதற்கும் அதைவிட வேறு காரணம் எதுவும் நிச்சயமாகத் தேவையில்லை என்பதை நான் உணருகிறேன்.

"பெண்கட்குக் கல்வி வேண்டும்
குடித்தனம் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்
மக்களைப் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்
உலகினைப் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்
கல்வியைப் பேணுதற்கே!" -

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியிருக்கிறார். அந்த வகையில் பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தன்னிகரற்ற கல்வி நிறுவனமாக ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி செயல்பட்டு வருகிறது.

கல்வி என்பது வெறும் பட்டமல்ல, அறிவும் ஆற்றலும் தன்னம்பிக்கையும் துணிச்சலும் தரக்கூடியது. இத்தகைய குணங்களையும் உருவாக்கக்கூடிய நிறுவனமாக இது செயல்பட்டு வருவதை நான் நன்றாக அறிவேன்.

கல்வியுடன் இணைந்து பல்வேறு பயிற்சிகளையும் அளித்துக் கொண்டிருக்கிறீர்கள். மாணவியரின் தனித் திறமைகள் அனைத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து வந்துகொண்டிருக்கிறீர்கள். சமூக சேவையாற்ற கற்றுத் தருகிறீர்கள். திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் இங்கு இருக்கின்றன. மேற்கத்திய இசை மற்றும் நுண்கலை வரலாற்றில் இளங்கலைப் பட்டங்களையும், சமூகப்பணி மற்றும் இந்திய இசையில் முதுகலைப் பட்டங்களையும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தொடங்கியதன் தனிச்சிறப்பு இந்தக் கல்லூரிக்கு உண்டு.

கூடுதலாக, ஆங்கிலம், பொருளாதாரம் மற்றும் நுண்கலைகளில் எம்.ஏ. பட்டப்படிப்புகளை வழங்கிய சென்னையின் முதல் மகளிர் கல்லூரி இந்தக் கல்லூரியாக விளங்கிக்கொண்டிருக்கிறது. சிவில் சர்வீசஸ் தேர்வுகளுக்கான பயிற்சி நவம்பர் 2009இல் தொடங்கப்பட்டுள்ளது. தொழில் பயிற்சி வழங்கி வருகிறீர்கள்.

இப்படி சொல்லிக்கொண்டேப் போகலாம். அந்த வகையில் அனைவருக்கும் எடுத்துக்காட்டான கல்வி நிறுவனமாக ஸ்டெல்லா மாரிஸ் திகழ்ந்து வருகிறது.

இங்கே குறிப்பிட்டுக் காட்டியதைப்போல, மயிலாப்பூரில் ஒரு சிறிய கட்டடத்தின் மாடியில் 32 மாணவியருடன் தொடங்கப்பட்ட இக்கல்லூரி, இன்றைய தினம் இந்தளவுக்கு வளர்ந்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம், உங்களுக்குள் இருக்கும் சமூக நோக்கம்தான் என்பதை நான் அழுத்தந்திருத்தமாக குறிப்பிட விரும்புகிறேன். பரந்து பட்ட சமூக நோக்கமும், சேவை மனப்பான்மையும்

இருப்பதால்தான் இத்தகைய வெற்றியை, வளர்ச்சியை உங்களால் அடைய முடிந்திருக்கிறது.

தமிழகத்தில் இப்போது அமைந்துள்ள அரசானது, கல்விக்கு, அதிலும் குறிப்பாக பெண் கல்விக்கு அதிகமான முக்கியத்துவம் அளித்து வருகிறது.

மகளிர் அனைவருக்கும் கட்டணமில்லாப் பேருந்து சேவையை வழங்கியதன் மூலமாக பெண்குலத்துக்கு மாபெரும் சேவையை இந்த அரசு உருவாக்கி இருப்பதை நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள்.

உயர்கல்வியைப் பெறுவதற்காக கல்லூரிகளில் சேரக்கூடிய அரசுப் பள்ளி மாணவ, மாணவியருக்கு ரூ.1,000 ஊக்கத்தொகை வழங்குவோம் என்று அறிவித்து அதையும் செயல்படுத்த இருக்கிறோம்.

தமிழ்நாட்டு மாணவச் செல்வங்கள், இளைஞர்கள் கல்வியில் ஆற்றலில் மேன்மை அடைய, நான் முதல்வன் என்ற திட்டத்தைத் தொடங்கி இருக்கிறோம்.

இன்று காலையில் இராணிமேரி கல்லூரியில் நடைபெற்ற விழாவில் நான் கலந்துகொண்டேன். இளைஞர்களின் திறன்மிக்க திருவிழாவாக அது நடைபெற்றது.அதே விழாவில், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தயாரித்திருக்கக்கூடிய பொருட்களின் கண்காட்சியையும் நான் திறந்து வைத்தேன்.

மகளிர் அனைவரும் தங்களது சொந்த முயற்சியால் முன்னேறி - யார் தயவையும் எதிர்பார்க்காமல் வாழ முயலவேண்டும் என்ற அந்த அடிப்படையில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டதுதான் மகளிர் சுயஉதவிக் குழுக்கள். இலட்சக்கணக்கான மகளிர் குழுக்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. கோடிக்கணக்கில் அவர்களுக்கு நிதி உதவியை நாம் வழங்கி வருகிறோம்.

உயர்கல்வியில் பொற்காலம் என்று சொல்லத்தக்க வகையில் உயர்கல்வியில் பல்வேறு முன்னெடுப்புகளை தமிழக அரசு செய்து வருகிறது. கல்வியில் - வேலைவாய்ப்பில் - தொழில் வளர்ச்சியில் - சமூக வளர்ச்சியில் முன்னேறிய மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிக்காட்ட, திராவிட மாடல் கொள்கையின்படி இன்றைய அரசு செயல்பட்டு வருகிறது என்பதை 75 ஆண்டுகால கல்விப் பெருமை கொண்ட இந்த ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி விழாவில் சொல்லிக்கொள்வதில் நான் மிகுந்த பெருமைப்படுகிறேன்.

திராவிட இயக்கம் என்பதே 'எல்லோர்க்கும் எல்லாம்' என்றதத்துவத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இயக்கம் ஆகும். அத்தகைய சமூகநீதித் தத்துவத்தை தனது கல்வி நிறுவனத்திலும் பயன்படுத்தும் இந்த நிறுவனத்தை நான் மனதாரப் பாராட்டுகிறேன். உங்களது தொண்டு நூற்றாண்டுகள் கடந்து, பல நூற்றாண்டுகளுக்குத் தேவை என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அன்புள்ள மாணவியர்கள் அனைவருக்கும் எனது அன்பான வேண்டுகோள் என்னவென்றுக் கேட்டால், இந்த கல்லூரிக் காலம் என்பது வாழ்வில் இன்னொரு முறை கிடைக்காது. எனவே, கல்லூரிக்காலக் கல்வியை முழுமையாக, முறையாக நீங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதே நேரத்தில், உங்களது தனித்திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். போட்டிகள் நிறைந்த இந்த உலகத்தில், படிப்பு - பட்டம் ஆகியவை கடந்து, தனித்திறமைகள் கொண்டவர்களால் மட்டும்தான் முன்னேற்றம் காண முடியும்.

அத்தகைய திறமைசாலிகளாக நீங்கள் வளர்ந்து, உங்கள் குடும்பத்துக்கு மட்டுமல்ல, இந்த மாநிலமும் பயனுறக்கூடிய வகையில், இந்த நாடும் பயனுறக்கூடிய வகையில் நீங்கள் பணியாற்ற வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் உரிமையோடு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

நானும் வந்ததில் இருந்து உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறேன். நானும் பள்ளியில் படிக்கிறபோது, கல்லூரியில் படிக்கிறபோது, இதுபோன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்பதுண்டு. அந்த நிகழ்ச்சிக்கு பல சிறப்பு விருந்தினர்களையெல்லாம் அழைத்து வந்து அந்த நிகழ்ச்சிகளை நடத்தியதுண்டு. ஆனால், அப்படி வரக்கூடியவர்கள் முழுமையாக பேச முடியாது. ஏதாவது சில்மிஷம் செய்து, கரவொலி எழுப்பி வந்தவர்கள் பேசமுடியாமல், பாதியிலே திருப்பி அனுப்பிய வரலாறெல்லாம் எங்களுக்கு உண்டு.

ஆனால், இன்றைக்கு அந்த நிலை இல்லை. வரும்போதே கொஞ்சம் பயந்துகொண்டுதான் வந்தேன். ஆனால், ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியில் இருக்கக்கூடிய கட்டுப்பாட்டைப் பார்க்கிறபோது உள்ளபடியே நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். தொடங்கியதில் இருந்து முடிக்கிறவரையில் இவ்வளவு பொறுமையாக என்னை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி, கரவொலி எழுப்பி எனக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தக்கூடிய வகையில், அதே நேரத்தில் ஒரு கட்டுப்பாட்டோடு இருந்து உங்கள் கண்ணியத்தை நீங்கள் காப்பாற்றியிருக்கிறீர்கள். எனவே, மேலும் பல சிறப்புக்களைப் பெற என்னுடைய அன்பான வாழ்த்துக்களை, பாராட்டுகளை, நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சென்னை, ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியின்
75ஆவது ஆண்டுவிழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு,
புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை - 25.05.2022

இந்தியாவின் வளர்ச்சியில் தமிழ்நாட்டு மக்களின் பங்களிப்பு மிகமிக முக்கியம்

தமிழ்நாட்டின் பல்வேறு திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டு விழா மற்றும் திறப்பு விழாவிற்கு வருகை புரிந்திருக்கக்கூடிய மாண்புமிகு பிரதமர் மரியாதைக்குரிய திரு. நரேந்திர மோடி அவர்களே!

மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. ஆர். என். ரவி அவர்களே! காணொலிக் காட்சியின் மூலமாக இதிலே பங்கேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் பெருமக்கள் திரு. நிதின் கட்கரி அவர்களே! திரு. ஹர்தீப்சிங் பூரி அவர்களே!

மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் திரு. ஒய்.எஸ். ஜகன்மோகன் ரெட்டி அவர்களே! மாண்புமிகு கருநாடக முதலமைச்சர் திரு.பசவராஜ் பொம்மை அவர்களே!

மாண்புமிகு ஒன்றிய இணை அமைச்சர்கள் இங்கே எனக்கு முன்னால் உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய திரு. எல். முருகன் அவர்களே!

திரு. வி.கே. சிங் அவர்களே!

தமிழகத்தின் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் உள்ளிட்ட தமிழக அமைச்சர் பெருமக்களே! நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே! அலுவலர்களே!

நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கக்கூடிய தமிழ்ப் பெருங்குடி மக்களே! அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் மக்களின் பேராதரவோடு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு - மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பங்கேற்கும் முதல் அரசு விழா இந்த விழா!

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களைத் தொடங்கிவைப்பதற்காக வருகை தந்தமைக்காக தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும், தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற அடிப்படையிலும் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நான் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று, தமிழ்நாட்டில் 5 நெடுஞ்சாலைத்துறை திட்டங்களுக்கும், ஒரு இரயில்வே திட்டத்திற்கும் அடிக்கல் நாட்டப்படவுள்ளது.

3 இரயில்வே திட்டங்களும், பைப்லைன் திட்டம் மற்றும் நகர்ப்புர வீட்டு வசதி திட்டத்தின்கீழ், 1,152 வீடுகளின் திறப்பு விழாவும் நடைபெறுகிறது. இவை அனைத்தும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மிக மிக முக்கியமான திட்டங்கள்.

தமிழ்நாடு பல்வேறு வகையிலும் இந்தியாவின் முன்னணி மாநிலமாக திகழ்ந்து வருகிறது.

கல்வி, பொருளாதாரம், மருத்துவம், வேளாண்மை, ஏற்றுமதி, திறன்மிகு மனித ஆற்றல் எனப் பல்வேறு வகையிலும் தமிழ்நாடு ஒரு சிறப்பான பங்களிப்பை இந்திய நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் அளித்து வருகிறது. இந்தியாவின் வளர்ச்சியில் தமிழ்நாட்டு மக்களின் பங்களிப்பு என்பது மிக மிக முக்கியமானதாக அமைந்திருக்கிறது. மற்ற மாநிலங்களின் வளர்ச்சியைவிட தமிழ்நாட்டின் வளர்ச்சி தனித்துவமிக்கது.

தமிழ்நாட்டின் இந்த வளர்ச்சியானது வெறும் பொருளாதாரம் சார்ந்தது மட்டுமல்ல. சமூகநீதி, பெண்கள் முன்னேற்றம், சமத்துவம் போன்ற அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சித்தான் தமிழ்நாட்டின் வளர்ச்சி!

Hon'ble Prime Minister!

Tamil Nadu is a leading State - in terms of Economic growth, Excellent rural health facilities, large number of educational institutions and highly skilled human resources.

Our State is a pioneer, not only in economic and other related factors but also in social justice, equality, women's empowerment. In brief, Tamil Nadu is a state for inclusive growth. This is what we call "THE DRAVIDIAN MODEL!"

Honourable Prime Minister...

In this Dravidian Model of governance, while taking various welfare and developmental measures, I wish to inform you, that we have largely corrected the fiscal imbalance and also re-structured the finances of the State.

நமது நாட்டின் வளர்ச்சியிலும், ஒன்றிய அரசின் நிதி ஆதாரங்களிலும் தமிழ்நாடு மிக முக்கியப் பங்களிப்பைத்

தருகிறது என்பது மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குத் தெரியும் என்று நான் உளமார நம்புகிறேன். சிலவற்றை எடுத்துரைக்க வேண்டுமென்றால், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பில், தமிழ்நாட்டின் பங்கு 9.22 விழுக்காடு!

ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் தமிழ்நாட்டின் பங்கு 6 விழுக்காடு! இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 8.4 விழுக்காடு! ஜவுளித் துறை ஏற்றுமதியில் 19.4 விழுக்காடு! கார்கள் ஏற்றுமதியில் 32.5 விழுக்காடு! தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 33 விழுக்காடு!

ஆனால் ஒன்றிய அரசின் வரி வருவாயில் தமிழ்நாட்டுக்கு பகிர்ந்தளிக்கப்படுவது 1.21 விழுக்காடு மட்டுமே.

எனவே, தமிழ்நாடு போன்ற வளர்ந்த மாநிலங்கள் நாட்டின் வளர்ச்சிக்கும், பொருளாதாரத்திற்கும் அளிக்கக்கூடிய பங்கிற்கு ஏற்ப, ஒன்றிய அரசும், திட்டங்களிலும் நிதியிலும் தனது பங்களிப்பை உயர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுதான் உண்மையான கூட்டுறவுக் கூட்டாட்சியாக அமையும்!

ஒன்றிய அரசும் மாநில அரசும் இணைந்து நிறைவேற்றும் திட்டங்களில் மாநில அரசின் பங்களிப்பும் மகத்தானது. எடுத்துக்காட்டாக, நெடுஞ்சாலைத்துறையில் நமது நாட்டிலேயே அதிக மூலதனச் செலவை மேற்கொள்ளும் மாநிலங்களுள் ஒன்றாகத் தமிழ்நாடு தொடர்ந்து விளங்கி வருகின்றது. தேசிய நெடுஞ்சாலைகளுக்காக தமிழ்நாட்டில் தற்போது ரூ.44,762 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய இந்த நிலையில், மாநில நெடுஞ்சாலைத்துறைக்கு இந்த ஆண்டில் மட்டும் தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ள தொகை 18 ஆயிரத்து 218 கோடியே 91 இலட்சம் ரூபாய். எனவே, சாலைக்

கட்டமைப்பை மேம்படுத்துவதில், உங்களோடு இணைந்து பணியாற்றுவதற்கு நாங்கள் முனைப்பாக இருக்கிறோம். மேலும் அதிக அளவிலான திட்டங்களைத் தமிழ்நாட்டில் செயல்படுத்த வேண்டும்.

இப்படி நாம் இணைந்து நிறைவேற்றும் திட்டங்கள் குறித்து, இரண்டு முக்கியக் கருத்துக்களை நான் முன்வைக்க விரும்புகிறேன். ஒன்று, இத்தகைய இணைத் திட்டங்களை ஒன்றிய அரசு தொடங்கும்போது தனது நிதிப்பங்கை அதிகமாக அளித்தாலும், காலப்போக்கில் தனது பங்கினைக் குறைத்து, மாநில அரசு செலவிட வேண்டிய நிதிப் பங்கை உயர்த்தும் நிலையைப் பார்க்கிறோம்.

இரண்டாவது, ஒன்றிய - மாநில அரசுகளின் பங்களிப்போடு, பயனாளிகளின் பங்கையும் முன்னிறுத்தி, பல திட்டங்கள் ஒன்றிய அரசால் செயல்படுத்தப்படுகிறது. இதில் அந்தத் தொகையைபயனாளிகள் செலுத்த முடியாதபோது, மக்களுடன் நேரடித் தொடர்பில் இருக்கிற மாநில அரசுகள்தான் பயனாளிகளின் பங்களிப்பையும், சேர்த்து செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது. இதனால் மாநில அரசின் நிதிச்சுமை அதிகரிக்கிறது.

எனவே, ஒன்றிய மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டங்களில் தொடக்கத்தில் குறிப்பிடப்படும் ஒன்றிய அரசின் பங்கானது, திட்டம் முடியும்வரை தொடர வேண்டும் என்றும், பயனாளிகளின் பங்களிப்போடு செயல்படுத்தப்படும் திட்டங்களில், அவர்கள் தமது பங்களிப்பை செலுத்த முடியாதபோது ஒன்றிய அரசும், மாநில அரசும் இணைந்து அதனை சமமாக ஏற்கவேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

தமிழ்நாட்டிற்கு மாண்புமிகு பிரதமர் அவர்கள் வருகை தந்திருக்கும் இந்த நேரத்தில், மேலும் சில முக்கியமான

கோரிக்கைகளைத் தமிழ்நாட்டு மக்களின் சார்பில் முன் வைக்க விரும்புகிறேன்.

- ❖ தமிழ்நாட்டின் கடலோர மீனவ சமுதாய மக்களின் முக்கியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் கச்சத்தீவினை மீட்டெடுத்து தமிழக மீனவ மக்களின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் அவர்களின் உரிமையை நிலைநாட்ட உரிய நடவடிக்கை எடுக்க இது தகுந்த தருணம் என்பதை மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நான் நினைவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.
- ❖ 15.05.2022 அன்று வரை தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய GST இழப்பீடு நிலுவைத்தொகையானது ரூ.14,006 கோடி. இத்தொகையை விரைந்து வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பல்வேறு மாநிலங்களின் வருவாயானது முழுமையாக சீரடையாமல் இருக்கக்கூடிய நிலையில், GST இழப்பீட்டுக் காலத்தை ஜூன் 2022க்குப் பின்னரும், குறைந்தது அடுத்த 2 ஆண்டுகளுக்கு நீட்டித்து தரவேண்டும் என்றும் நான் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வற்புறுத்திக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

- ❖ பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய், உலகச் செம்மொழிகளில் இன்றளவும் சீரிளமைத் திறத்துடன் உயிர்ப்போடு விளங்கும் தமிழை, இந்திக்கு இணையான அலுவல் மொழியாகவும், உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாகவும் அறிவிக்க வேண்டும்.
- ❖ இறுதியாக, மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ள தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (NEET) முறையைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து

எதிர்த்து வருகிறது. இது குறித்து சட்டம் நிறைவேற்றி, மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலோடு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதற்கான அனுமதியை, விரைந்து வழங்கிட மாண்புமிகு பிரதமர் அவர்களை இந்தத் தருணத்தில் தமிழ்நாடு மக்கள் அனைவரின் சார்பில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இக்கோரிக்கைகளில் இருக்கக்கூடிய நியாயத்தை மாண்புமிகு பிரதமர் அவர்கள் உணர்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

Honourable Prime Minister!

I have just listed out some of the important demands of Tamil Nadu. Like,

- ❖ Katchatheevu,
- ❖ NEET Bill,
- ❖ GST dues,
- ❖ Tamil as Official Language in Union Government Offices and in Madras High Court.

I appeal you to consider them favourably as early as possible.

Honourable Prime Minister!

Tamil Nadu is one of the most advanced states of our Indian Union. It will continue to serve as the engine for leading and moving the country's economy forward.

Therefore, I want you to extend your fullest co-operation and support for Tamil Nadu. I request you to allot more projects and more funds to our state in the true

spirit of co-operative federalism.

As the Chief Minister of Tamil Nadu, I once again reiterate my leader 'Father of Modern Tamil Nadu' Muthamizharignar Kalaignar's quote:

"உறவுக்குக் கை கொடுப்போம்! உரிமைக்குக் குரல் கொடுப்போம்!"

We will extend a hand of friendship at the same time, we will raise our voice for our rights.

ஒன்றிய அரசின் சார்பில், தமிழகத்தில் செயல்படுத்த முன்வந்த திட்டங்களுக்கும், வரும் காலத்தில் நிறைவேற்றக் கூடிய திட்டங்களுக்கும், நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'எல்லோர்க்கும் எல்லாம்' என்ற இலக்கை எய்திட அனைவரும் இணைந்து மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்துவோம்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
சென்னை, நேரு உள் விளையாட்டரங்கில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்த நிகழ்வில் ஆற்றிய உரை - 26.05.2022

தாய்மொழிப் பற்றும், தமிழ்நாட்டுப் பற்றும் ஒவ்வொரு மனிதனுக்கும் மிக மிக முக்கியம்

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களே!

மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே!

தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அருமை சகோதரி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர் திரு. அரவிந்த் ரமேஷ் அவர்களே!

சென்னை மாநகரத்தினுடைய துணை மேயர் திரு. மகேஷ்குமார் அவர்களே!

டி.ஏ.வி. பள்ளிக் குழுமத்தினுடைய தலைவர் திரு. வினய் பாரிக் அவர்களே!

பள்ளியினுடைய நிருவாகக் குழு உறுப்பினர்கள்

திரு. வெங்கடவரதன் அவர்களே!

திரு. ராஜீவ் செளத்ரி அவர்களே!

நிருவாக அறங்காவலர் திரு. ரவி மல்ஹோத்ரா அவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய பள்ளிக்கரணை டி.ஏ.வி. பள்ளியினுடைய தலைவர் திருமதி கனக இலட்சுமி அவர்களே!

பள்ளியினுடைய நிருவாகிகளே!

ஆசிரியர் பெருமக்களே!

பெற்றோர்களே!

பாசமிகு பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சென்னையில் கடந்த அரை நூற்றாண்டு காலமாக, கல்விச் சேவையில் ஈடுபட்டு வரும் டி.ஏ.வி. பள்ளிக் குழுமம் சார்பில், பள்ளிக்கரணையில் தொடங்கப்படும் புதிய பள்ளியினுடைய தொடக்க விழாவில் கலந்துகொண்டு, உங்கள் அனைவரையும் சந்தித்து அதே நேரத்தில், என்னுடைய வாழ்த்துகளையும் எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பினைப் பெற்றமைக்கு, இந்த வாய்ப்பினை வழங்கிய

இந்தப் பள்ளியினுடைய நிருவாகிகள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அண்மையில் கடந்த சில நாட்களாகவே, கல்லூரி, பல்வேறு பள்ளிகளினுடைய விழாக்களில் நான் கலந்துகொண்டு, அங்கு வாழ்த்தக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பை நான் தொடர்ந்து பெற்று வருகிறேன். அதன் மூலமாக, ஒரு புத்துணர்ச்சியை நான் தொடர்ந்து பெற்று வருகிறேன் என்று சொல்லத்தக்க வகையில் விழாக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

1970ஆம் ஆண்டு தொடங்கிய ஆர்ய சமாஜ் கல்விச் சங்கத்தின் சார்பில் சென்னையில் டி.ஏ.வி. பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

தற்போது, டி.ஏ.வி குழுமத்தின் சார்பில், 8 சுய பள்ளிகள், 2 அரசு உதவி பெறும் பள்ளிகள், 3 நிருவகிக்கப்படும் பள்ளிகள், 1 தொழிற்பயிற்சி மையம் ஆகியவை நடத்தப்படுகிறது.

இதில் சுமார் 30 ஆயிரம் மாணவ, மாணவியர்கள் படித்து வருகிறார்கள்.

சென்னையில் முகப்பேர், கோபாலபுரம், கில்நகர், சௌகார்பேட்டை, வியாசர்பாடி ஆகிய இடங்களைத் தொடர்ந்து, இப்போது பள்ளிக்கரணையிலும் தொடங்கப்பட்டிருக்கிறது.

கடந்த அறுபது ஆண்டு காலத்தில் இலட்சக்கணக்கான மாணவ, மாணவியரின் வாழ்வில் ஒளியேற்றிய கல்வி நிலையமாக டி.ஏ.வி. குழுமம் செயல்பட்டு வருவதற்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளை, வாழ்த்துக்களை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கோபாலபுரம் என்பது நான் பிறந்த, வளர்ந்த பகுதி. அந்தப் பகுதியில் முதல் பள்ளி 1970ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

மூன்றாவது பள்ளிக்கூடத்தை அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு முகப்பேரில் தொடங்கி வைத்தார். இப்போது பள்ளிக்கரணையில் இந்தப் பள்ளியை நான் தொடங்கி வைக்க வந்திருக்கிறேன்.

ஆனால், டி.ஏ.வி. பள்ளியில் சீட் வாங்குவது மிகவும் கடினம், எனக்கு அனுபவமே உண்டு. என்னுடைய மகள் செந்தாமரையை கோபாலபுரத்தில் இருக்கக்கூடிய டி.ஏ.வி. பள்ளியில் தான் சேர்த்தோம். அதைத் தொடர்ந்து, என்னுடைய தம்பியினுடைய மகள் பூங்குழலிக்கு பள்ளியில் சீட் கேட்டபோது கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள். அப்போது ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறோம்.

இதை எதற்காக சொல்கிறேன் என்றால், அவ்வளவு strict ஆக கல்வியைப் பொறுத்தவரைக்கும் நடைபோட்டுக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சிறப்புக்குரிய பள்ளியாக விளங்கிக் கொண்டிருக்கிறது இந்த டி.ஏ.வி. பள்ளி. அதற்குப் பிறகு எப்படியோ கஷ்டப்பட்டு சீட் வாங்கிவிட்டோம்.

ஆகவே, இந்த டி.ஏ.வி. பள்ளிக்கு வருகிறபோது, இதற்கும் எனக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது என்பதற்காகத்தான் சுட்டிக்காட்டினேனேத் தவிர, வேறு ஏதோ விமர்சித்து பேச வேண்டும், அதைக் குறை சொல்லிப் பேச வேண்டும் என்பதற்காக நான் சொல்லவில்லை, அதில் எனக்கு ஒரு மகிழ்ச்சி.

இப்போது இந்த பள்ளிக்கரணை பள்ளியை தொடங்கி வைத்திருக்கிறேன் என்று சொன்னால், அரசுப் பள்ளியாக இருந்தாலும், அரசு உதவி பெறும் பள்ளியாக இருந்தாலும், இதுபோன்ற சி.பி.எஸ்.இ. பள்ளிகளாக இருந்தாலும், கல்விக்

கண் திறக்கும் சாலைகளாக அமைந்திருப்பதால் இவை மேலும் மேலும் வளர வேண்டும். வளர்ந்து மாணவ, மாணவியருக்குக் கல்வித் திறமையை மேம்படுத்த வேண்டும் என்று நினைப்பவன் நான்.

உங்கள் டி.ஏ.வி. பள்ளிக் குழுமத்தின் குறிக்கோளாக 'இருளில் இருந்து ஒளிக்குக் கொண்டு செல்வது' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். கல்வி என்பதே இருளில் இருந்து ஒளிக்குக் கொண்டு செல்வதுதான். அதையே குறிக்கோளாக, நீங்கள் செய்திருக்கிறீர்கள்.

ஒரு மனிதனிடம் இருந்து யாராலும் பறிக்க முடியாத ஒரு சொத்து எது என்று கேட்டீர்கள் என்றால், இந்த கல்வி என்ற சொத்துதான், யாராலும் பறிக்க முடியாது. அத்தகைய சொத்தை உருவாக்கித் தரக்கூடிய கருவூலங்கள்தான் இதுபோன்ற கல்விச் சாலைகளாக அமைந்திருக்கிறது.

இணைக் கல்வி - உள்ளடக்கிய கல்வி - எனப் பல்வேறு வகையான கல்விமுறைகளைப் பின்பற்றும் நிறுவனமாக, உங்களுடைய நிறுவனத்தை வளர்த்து வருவதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

அதிலும் மிக முக்கியமாக பல்வேறு வழிகாட்டி நிகழ்வுகளை நடத்தி வருவது.

இரண்டு அரசுப் பள்ளிகளில் தகுதி வாய்ந்த கல்விக்கான உதவிகளை டி.ஏ.வி. பள்ளி சார்பில் செய்து தருவதற்காக ஒப்பந்தம் போட்டிருக்கிறீர்கள்.

திருவல்லிக்கேணி லேடி வெலிங்டன் மேனிலைப்பள்ளி, சைதாப்பேட்டை அரசு மாதிரி மேனிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளுடன் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தங்கள் பள்ளி மட்டும் வளர்ந்தால் போதும் என்று நினைக்காமல், அரசுப் பள்ளிகளுக்கும் பெருந்தன்மையுடன் உதவிக்கரம் நீட்டக்கூடிய உங்களது நோக்கத்தை நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

கோவிட் காலத்தில் ஏற்பட்டுள்ள கற்றல் இடைவெளியைக் குறைக்கக்கூடிய வகையில் முன்முயற்சிகளை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள்.

அரசின் சார்பில் இல்லம் தேடிக் கல்வி என்ற திட்டத்தை நாங்கள் அமல்படுத்தி வருகிறோம். இதன்மூலமாக இலட்சக்கணக்கான மாணவ, மாணவியரை மீண்டும் பள்ளிகளில் சேர்த்துள்ளோம். அவர்களுக்கு கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் விடுபட்ட பாடங்களைக் கற்பித்து வருகிறோம்.

தமிழக அரசு, கல்விக்கு முக்கியத்துவம் தரக்கூடிய அரசாக அமைந்திருக்கிறது. பள்ளிக் கல்வியோடு நிறுத்திவிடாமல் கல்லூரிக் கல்வியும் - அதைத் தொடர்ந்து உயர்கல்வியும் கொடுக்கும் அரசாக தமிழக அரசு திட்டமிட்டுச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தயானந்தா ஆங்கிலோ வேதிக் என்பதன் சுருக்கமாக டி.ஏ.வி. என்பது அமைந்திருக்கிறது. ஆன்மீகவாதியாக இருந்தாலும் - மதத்தில் சீர்திருத்தம் பேசியவர்தான் தயானந்தர் அவர்கள்.

உருவ வழிபாட்டை நிராகரிக்கக் கூடியவராகவும், மதத்தின் பெயரால் நடக்கக்கூடிய மோசடிகளையும் கண்டிப்பவராகவும் அவர் இருந்திருக்கிறார். மகளிருக்கு சம உரிமை, பெண்கல்வி, தீண்டாமை ஒழிப்பு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். அந்தக் காலத்தில் இருந்த குழந்தைத் திருமணத்தை கடுமையாக எதிர்த்திருக்கிறார்.

விதவை மறுமணத்தை ஆதரித்தார். அந்த வகையில் 150 ஆண்டுகளுக்கு முன்பே மிகப்பெரிய சீர்திருத்தவாதியாகவும் இருந்தவர் தான் தயானந்தர் அவர்கள்.

திரும்பத் திரும்ப தயானந்தர் வலியுறுத்தியது உண்மையைத்தான்.

"எப்பொழுதும் உண்மையைப் பேசுபவன், நல்லொழுக்கத்தின் கட்டளைகளின்படி செயல்படுபவன், மற்றவர்களை நல்லவர்களாகவும் மகிழ்ச்சியாகவும் ஆக்க முயல்பவன் நல்லவனும் ஞானம் உள்ளவனும் ஆவான்" என்று அவர் சொல்லியிருக்கிறார்.

உண்மை, ஒழுக்கம் ஆகியவற்றை தயானந்தர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

அதேபோல், மாணவ, மாணவியரும் உண்மையுடனும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் வளர வேண்டும். தனித்திறமைகளை வளர்த்துக்கொள்ளுங்கள். போட்டிகள் நிறைந்த இந்த உலகத்தில் தனித்திறமைகளும், அறிவாற்றலில் கூர்மையும், உண்மையும், நேர்மையும் உள்ளவர்களால் எளிதில் முன்னேற முடியும். அத்தகைய நோக்கத்தை வளர்ப்பதாக இதுபோன்ற கல்வி நிறுவனங்கள் செயல்பட வேண்டும்.

அதே நேரத்தில், இன்னொரு முக்கியமான வேண்டுகோளை இங்கு வைப்பது எனது கடமையாக நான் கருதுகிறேன்.

தாய்மொழிக் கல்விக்கு ஊக்கம் அளிப்பவையாக உங்களைப்போன்றகல்விநிறுவனங்கள்செயல்படவேண்டும். அதேபோல், உங்களது மிகச்சிறந்த திட்டங்களுக்கு தமிழ்ப்

பெயர்களைச் சூட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தாய்மொழிப் பற்றும், தாய்நாட்டுப் பற்றும், ஒவ்வொரு மனிதருக்கும் மிகமிக முக்கியம் என்ற வகையில் இந்த வேண்டுகோளை உங்களிடத்தில் நான் வைக்கிறேன்.

மிகப்பெரிய சீர்திருத்தவாதியின் பெயரால் அமைந்துள்ள இந்த டி.ஏ.வி. கல்வி நிறுவனமானது, மேலும் மேலும் வளர்ந்து அனைவருக்கும் கல்வி ஒளியைப் பாய்ச்சிட வேண்டும் என்று அன்போடு கேட்டு, இன்னும் பல சிறப்புகளைப் பெற்று எல்லோரும் பாராட்டக்கூடிய வகையில் அமைய வேண்டும் என்று தமிழக அரசின் சார்பிலும், தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும் அன்போடு கேட்டு, இந்த நல்ல வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன் என்பதை எடுத்துச்சொல்லி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
பள்ளிக்கரணையில். டி.ஏ.வி. கல்விக் குழுமத்தின்
புதிய பள்ளியை திறந்து வைத்து ஆற்றிய உரை - 27.05.2022

மக்களின் காவலர்களாக இருந்து மக்களைக் காக்கும் காவலர்கள்

இந்திய குடியரசுத் தலைவர் பதக்கங்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர் பதக்கங்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கக்கூடிய விழாவில் பங்கேற்றிருக்கக்கூடிய

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! நாடாளுமன்ற உறுப்பினர்களே! சட்டமன்ற உறுப்பினர்களே!

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., அவர்களே!

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய காவல் துறை இயக்குநர் முனைவர் செ. சைலேந்திர பாபு, இ.கா.ப., அவர்களே!

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் காவல் துறை இயக்குநர் திரு.சுனில் குமார் சிங், இ.கா.ப., அவர்களே! ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநர் முனைவர் ப. கந்தசாமி, இ.கா.ப., அவர்களே!

தீயணைப்புத் துறை மீட்புப் பணிகள் துறை இயக்குநர் திரு.பிராஜ் கிஷோர், இ.கா.ப., அவர்களே! இறுதியாக நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய பெருநகரச் சென்னை காவல் ஆணையர் திரு. சங்கர் ஜிவால் இ.கா.ப., அவர்களே!

காவல் துறையினுடைய இயக்குநர்களே! கூடுதல் இயக்குநர்களே! விருதுகள் பெற்றிருக்கக்கூடிய காவல் துறையினுடைய உயர் அலுவலர்களே!

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என இயங்கக்கூடிய காவல் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய என்னுடைய இனிய நண்பர்களே! அவர்களது குடும்பத்தைச் சார்ந்திருக்கக்கூடிய சகோதர, சகோதரிகளே! அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

- இந்தியக் குடியரசுத் தலைவரின் பதக்கங்கள்,
- ஒன்றிய உள்துறை அமைச்சரின் பதக்கங்கள்,
- தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் ஆகியவற்றை வழங்கும் விழாவாக மிகுந்த எழுச்சியோடு, ஏற்றத்தோடு இது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.
- காவல்துறை,
- ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை,
- தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை,
- சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை,
- ஊர்க்காவல் மற்றும் குடிமைப் பாதுகாப்புத் துறை,

- தடய அறிவியல் துறை ஆகிய துறைகளைச் சேர்ந்த காவல் வீரர்கள் இந்த விருதுகளைப் பெற்றிருக்கிறீர்கள்.
- தீரச் செயல்
- தகைசால் பணி
- மெச்சத்தக்கப் பணி
- சிறந்த நற்பணி
- பொதுச்சேவையில் சீர்மிகு பணி
- சீர்மிகு புலனாய்வு
- சீர்மிகு காவல் பயிற்சி
- சிறப்புச் செயலாக்கம்
- விரல் ரேகை அறிவியலில் சீர்மிகு பணி
- தொழில்நுட்பச் சிறப்புப் பணி
- தடய அறிவியலில் சீர்மிகு பணி ஆகியவற்றுக்கான பதக்கங்கள் வழங்கப்பட்டிருக்கின்றது.

இப்பதக்கங்களைப் பெற்றிருக்கக்கூடிய அனைத்துக் காவல் வீரர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். மேலும், பல்வேறு பதக்கங்களைப் பெற வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைக்க நான் விரும்புகிறேன்.இதுபோன்ற விருதுகளை மற்ற காவலர்களும் பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

காவலர்கள் என்றாலே வீரச் செயல் செய்பவர்கள், தீரச் செயல் செய்பவர்கள்தான். அதில் பதக்கங்கள் பெறுகிறார்கள் என்றால். அத்தகைய வீரதீரச் செயல்களில் மற்றவர்களை விட முனைப்போடு இருப்பவர்களுக்கு அவை வழங்கப்படுகிறது. இவை உங்களுக்கு

கிடைத்திருக்கக்கூடிய பெரும் அங்கீகாரம். இத்தகைய அங்கீகாரத்தை "நாமும் பெறுவோம்" என்ற உறுதியை ஒவ்வொரு காவலரும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மேலும், இதுபோன்ற பதக்கங்கள், வீரதீரச் செயல்களுக்காக மட்டுமல்ல, பண்பாட்டு பதக்கங்களாகவும் மாறவேண்டும். காவல்துறை "உங்கள் நண்பன்" என்று சொல்கிறோம். அத்தகைய நண்பர்களாக இருப்பவர்களுக்கும், நண்பர்களாக நடந்துகொள்பவர்களுக்கும் பதக்கங்கள் வழங்கப்பட வேண்டும். மக்களின் காவலர்களாக இருந்து மக்களைக் காக்கும் பணியில் சிறந்து விளங்கக் கூடிய காவலர்களைப் பாராட்ட வேண்டும்.

காவல்துறை மக்களோடு நெருக்கமானால்தான், நாட்டில் குற்றங்கள் குறையும். மக்களிடம் இருந்து காவல்துறை விலகி இருந்தால், குற்றம் பெருகும். எனவே, "காவல்துறை நம் நண்பன்" என்று சொல்லத்தக்க விதத்தில் காவலர்கள் செயல்பட வேண்டும். காவல் நிலையங்கள் பொதுமக்களின் மக்கள் தொடர்பு பாதுகாப்பு அலுவலகங்களைப் போலச் செயல்பட வேண்டும். அந்தளவுக்கு அதன் செயல்பாடு அமைய வேண்டும்.

தமிழ்நாடு அரசின் ஒரு கை நிருவாகம் என்றால் இன்னொரு கை காவல்துறை என்பதை நான் சட்டமன்றத்திலேயே நான் சொல்லி இருக்கிறேன். இதன் மூலமாக காவல்துறைக்கு இருக்கும் முக்கியத்துவத்தை நீங்கள் உணரலாம்.

காவல்துறை என்றாலே தண்டனையை வாங்கித் தரும் துறையாக மட்டும் அனைவரும் நினைக்கிறார்கள். காவல்துறை என்பது குற்றங்கள் நடக்காத வகையில் சூழ்நிலைகளை உருவாக்கித் தரும் துறையாக

மாறவேண்டும் என்பதையும் நான் தொடர்ந்து வலியுறுத்தி வந்து கொண்டிருக்கிறேன்.

குற்றங்கள் எந்தச் சூழலிலும் நடைபெறாத ஒரு காலத்தை உருவாக்குவதற்கு காவல்துறை திட்டமிட வேண்டும் என்பதுதான் காவல்துறை தலைவர் முதல் காவலர்கள் வரைக்கும் நான் வைக்கக்கூடிய கோரிக்கை.

ஒரே ஒரு காவலர் அல்லது ஒரு காவல் நிலையம் தனது கடமையைச் செய்யத் தவறும்போது, அது ஒட்டுமொத்தமாக காவல்துறைக்கே தலைக்குனிவை ஏற்படுத்துகிறது என்பதை யாரும் மறந்துவிட வேண்டாம். எந்த ஒரு காவலராக இருந்தாலும், அவரது செயல் காவல்துறையை தலைநிமிர வைக்க வேண்டுமேத் தவிர, தலைக்குனிவை ஏற்படுத்திவிடக் கூடாது. அத்தகைய எச்சரிக்கை உணர்வு, காவலர்கள் அனைவருக்கும் இருக்குமானால், குற்றச் சம்பவங்களே நடைபெறாத மாநிலமாகத் தமிழ்நாடு மாறும்.

- ❖ எந்தச் சூழலிலும் பொதுமக்களுக்கு அச்சம் தரும் சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- ❖ அரசியல் ரீதியாகவோ, மதம் மற்றும் சாதி காரணமாகவோ வன்முறைகள் உருவாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- ❖ அப்படி திட்டமிட்டு இந்த அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்படுத்த நினைப்பவர்களை இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும்.
- ❖ போதைப் பொருட்கள் நடமாட்டம் முற்றிலுமாகத் தடுக்கப்பட வேண்டும்.
- ❖ கூலிப்படையினர் முழுமையாக துடைத்தெறியப்பட வேண்டும்.

- ❖ கள்ளச்சாராயம் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டாக வேண்டும்.

இத்தகைய நோக்கங்களைக் கொண்டதாக காவல்துறை கண்டிப்புடன் நடந்தாக வேண்டும். இத்தகைய சூழலை உருவாக்கி,ஒட்டுமொத்தமான அமைதிப்பதக்கத்தைதமிழகக் காவல்துறை பெறவேண்டும் என்று நான் விரும்புகிறேன். பெறுவீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

எல்லோருக்கும் எடுத்துக்காட்டான திராவிட மாடல் ஆட்சியை தமிழகத்தில் வழங்கி வருகிறோம். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி - எல்லோர்க்கும் எல்லாம் என்ற உன்னதமான தத்துவத்தின் அடிப்படையில் திட்டங்களை தீட்டி வருகிறோம். இவை அனைத்துக்கும் அடிப்படை அமைதிதான்.அமைதியான சூழலில்தான் தொழில் வளர்ச்சியாக இருந்தாலும்-சமூக முன்னேற்றமாக இருந்தாலும் அது ஏற்படும்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு தமிழகத்தை நோக்கி புதிய புதிய தொழிற்சாலைகள் வருகின்றன என்றால், தமிழகம் அமைதிப்பூங்காவாக இருக்கிற காரணத்தால்தான். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகிறது என்றால், தமிழகத்தில் சட்டத்தின் ஆட்சி நடைபெறுவதால்தான். அத்தகைய அமைதிச் சூழலை காக்க வேண்டும். அதற்குக் குந்தகம் ஏற்படுத்தக்கூடிய சிறு சம்பவமும் நடைபெறக் கூடாது என்பதை திரும்பத் திரும்ப வலியுறுத்த நான் விரும்புகிறேன்.

மக்களைக் காக்கும் கடமை காவலர்களாகிய உங்களுக்கு இருக்கிறது. அதேபோல், காவலர்களாகிய உங்களைக் காக்கக்கூடிய கடமை அரசுக்கும் இருக்கிறது. அதை மனதில் வைத்து ஏராளமான திட்டங்களை கடந்த ஓராண்டு காலத்தில் தீட்டி இருக்கிறோம்.

- ❖ காவலர் முதல் தலைமைக் காவலர் வரை ஒரு நாள் கட்டாய வார விடுமுறை அறிவிக்கப்பட்டது.

- சிறப்பு உதவி ஆய்வாளர், உதவி ஆய்வாளர்களுக்கு இரு வாரத்துக்கு ஒரு நாள் விடுமுறை அறிவிக்கப்பட்டது.
- காவலர்களுக்கு கொரோனா கால ஊக்கத் தொகையாக ரூ.5,000 வழங்கப்பட்டது.
- காவலர்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட இடர்ப்படியானது ரூ.800லிருந்து ரூ.1,000ஆக உயர்த்தப்பட்டது.
- 2,212 காவலர்களுக்கான சிறுதண்டனை குறைக்கப்பட்டது.
- 1,132 பேருக்கு கருணை அடிப்படையிலான காவல்நிலைய வரவேற்பாளர் பணி வழங்கப்பட்டது.
- தாம்பரம், ஆவடியில் புதிய காவல் ஆணையரகங்கள் அமைக்கப்பட்டது.
- காவல்துறையில் கட்டப்படும் வீடுகளின் பரப்பளவு 750 சதுர அடியாக அதிகரிக்கப்பட்டது.
- 1.20 இலட்சம் காவல் ஆளினர்களுக்கு ரூ.10 கோடி செலவில் சென்னை அண்ணா மேலாண்மை மையத்தின் மூலமாக பயிற்சி அளிக்கப்படுகிறது.
- சென்னை காவல் சிறப்புப் பிரிவுகளில் பணிபுரிவோர்க்கு உணவுப்படி வழங்கப்படுகிறது.
- திட்டமிட்ட குற்றநுண்ணறிவுப் பிரிவு ஆளினர்களுக்கு 5 விழுக்காடு சிறப்பு ஊதியம் அளிக்கப்படுகிறது.
- தீயணைப்புத் துறை மற்றும் சிறைத் துறைப் பணியாளர்களுக்கு காவல்துறை மருத்துவமனைகளில் மருத்துவ வசதி ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.
- இவை அனைத்துக்கும் மேலாக புதிய காவல் ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆணையத்தின் அறிக்கை கிடைத்த பிறகு காவல் துறையினரது கோரிக்கைகள் அரசால் பரிசீலனை செய்யப்பட்டு, அவை படிப்படியாக நிறைவேற்றித் தரப்படும் என்ற உறுதியை இந்த நிகழ்ச்சியின் மூலமாக அறிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவை மட்டுமின்றி, இந்த நிகழ்ச்சியில் மற்றுமொரு மகிழ்ச்சியான அறிவிப்பை வெளியிடுகிறேன்.

வீரதீரச் செயல் புரிந்த காவல் அதிகாரிகள், காவலர்கள் அல்லது வீர மரணம் அடைந்தவர்களின் குடும்பங்களுக்கு தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுவரும் முதலமைச்சரின் வீரப்பதக்கங்களுக்கான ஊக்கத் தொகை மற்றும் சலுகைகள், ஒன்றிய அரசு வழங்கக்கூடிய, குடியரசுத் தலைவர் வீரப் பதக்கத்திற்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகளுக்கு இணையாக வழங்கப்படும்.

காவலர்களது நலனை அரசு கண்ணும் கருத்துமாகப் பேணிக் காப்பாற்றும். மக்களின் நலனைக் காவலர்களாகிய நீங்கள்தான் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டு, பதக்கம் பெற்றவர்கள் அனைவரையும் மீண்டும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற இந்திய குடியரசுத் தலைவர் பதக்கங்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர் பதக்கங்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை - 27.05.2022

கோடிக்கணக்கான
தமிழ் மக்களின் நெஞ்சங்களில்
என்றைக்கும் வாழ்ந்து கொண்டிருப்பவர்
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, நிறைவாக விழாப் பேருரை ஆற்றுவதற்காக வருகை தந்துள்ள மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் மதிப்பிற்கும், மரியாதைக்குரிய திரு. எம். வெங்கையா நாயுடு அவர்களே!

அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் என்னுடைய அருமை

அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களே! மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களே! பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்திருக்கக்கூடிய தலைவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே! நாடாளுமன்ற, சட்டமன்ற, முன்னாள், இந்நாள் உறுப்பினர்களே!

என்னுடைய பாசத்திற்குரிய அருமை நண்பர் சூப்பர் ஸ்டார் திரு. ரஜினிகாந்த் அவர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே! கலைத் துறை, அரசியல் துறை மற்றும் பல்வேறு துறைகளில் ஜாம்பவான்களாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய அருமை தோழர்களே! நண்பர்களே!

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புகளே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

“வாழ்விலோர் பொன்னாள்” என்று எந்நாளும் மகிழ்ந்து போற்றும் நாளாக இந்த நாள் அமைந்துள்ளது. தமிழ்நாட்டை - இந்தத் தமிழினத்தை - இந்தத் தமிழ்நிலத்தை வானுயரத்துக்கு உயர்த்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நம்முடைய நன்றியின் அடையாளமாக ‘தமிழினத் தலைவரின்’ இந்த மாபெரும் சிலை எழுப்பப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் நிலையை உயர்த்தப் பாடுபட்டவர் என்பதால்தான், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு தமிழ்நாடு முழுவதும் சிலை எழுப்பப்பட்டு வருகிறது.

இன்று எழுப்பப்பட்டு இருக்கக்கூடிய சிலைக்கு இருக்கக்கூடிய சிறப்பு என்னவென்று கேட்டால், தந்தை

பெரியாருக்கும், பேரறிஞர் அண்ணாவுக்கும் இடையில் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய சிலை அமைந்திருக்கிறது. இது மிகமிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது!

தந்தை பெரியாரின் ஈரோட்டுப் பள்ளியிலே படித்தவன், பேரறிஞரின் காஞ்சிக் கல்லூரியிலே பயின்றவன் என்று தன்னைப் பற்றிக் கலைஞர் அவர்கள் அடிக்கடி குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதற்கு ஏற்பவே பெரியாருக்கும், அண்ணாவுக்கும் இடையில் தலைவர் கலைஞருடைய சிலை அமைந்திருக்கிறது.

இன்னொரு சிறப்பு என்னவென்று கேட்டால், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால், இந்த ஓமந்தூரார் தோட்டத்தில் உருவாக்கப்பட்டதுதான் இந்த மாபெரும் கட்டடம். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்காக கட்டப்பட்ட கட்டடம் இது.

தற்போது மருத்துவமனையாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும், அது கம்பீரமாகக் கலைஞர் அவர்களின் கனவுக் கோட்டையாகவே எழுந்து நிற்கிறது. அங்குதான் அவரது சிலை எழுப்பப்பட்டிருக்கிறது. சிலையைத் திறந்து வைத்திருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சி, இந்த விழா நடக்கக்கூடிய இடம் கலைவாணர் அரங்கமானது, ஒருகாலத்தில் 'பாலர் அரங்கம்' என்று இருந்தது. அதனை மிகப்பிரம்மாண்டமாக கட்டி எழுப்பிக் கலைவாணர் அரங்கம் என்று பெயர் சூட்டியவரும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

இத்தகைய சிறப்புகள் கொண்ட விழாவுக்கு மகுடம் வைப்பதைப்போல, இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. வெங்கையா நாயுடு அவர்கள் வருகை தந்து, தலைவர் கலைஞர் அவர்களின் சிலையைத் திறந்து வைத்திருக்கிறார்கள்.

நம்முடைய நட்புக்குரிய இனிய நண்பராகத்தான் மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் எப்போதும் இருந்து வருகிறார். திரு. துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியதைப் போல, 2001ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் மிகக் கொடூரமான முறையில், அன்றைய ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்ட போது, அன்றைக்கு குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர். நாராயணன் அவர்களும், பிரதமராக இருந்த வாஜ்பாய் அவர்களும் துடிதுடித்துப் போனார்கள். அப்போது, அன்றைய ஆட்சியாளர்களைக் கடுமையாகக் கண்டித்து, கடுமையாக விமர்சித்தவர்தான் இங்கே வந்திருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு திரு. வெங்கையா நாயுடு அவர்கள். அதே நட்பை இன்று வரையில் பேணிவரக் கூடியவராக தொடர்ந்து இருக்கிறார்.

தலைவர் கலைஞர் அவர்களுடைய சிலையைத் திறந்து வைக்க யாரை அழைக்கலாம் என்று நாங்கள் சிந்தித்த நேரத்தில்,குடியரசுத் துணைத்தலைவர் அவர்களது முகம்தான் எங்களுடைய நெஞ்சில் தோன்றியது. அவரை நேரில் சந்தித்துக் கேட்ட நேரத்தில்,மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டார். மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர் திரு. வெங்கையா நாயுடு அவர்கள், மிகச்சிறந்த 'நாடாளுமன்ற ஜனநாயகவாதி' என்று பெயர் எடுத்தவர்.மாநிலங்களவையை கொந்தளிப்பான சூழலிலும் திறம்படக் கையாண்டவர்.

எனவே தான், கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில், அறுபது ஆண்டுகள் பணியாற்றியதற்கு எத்தகைய திறமை வேண்டும் என்பது மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். இன்று தலைவர் கலைஞரின் சிலையை அவர் திறப்பது மிக, மிக சாலப் பொருத்தமாக அமைந்திருக்கிறது. இந்திய நாட்டின் குடியரசுத் துணைத் தலைவர் என்ற மிக உயர்ந்த பதவியில் இருக்கும்போது,

நம்முடைய தமிழினத் தலைவரின் சிலையை திறந்து வைத்திருப்பது இன்னும் பெருமைக்குரிய நிகழ்வாக இது நடந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை மாண்புமிகு குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் அவர்கள் திறந்து வைத்தார்கள். தலைவர் கலைஞரின் சிலையை குடியரசுத் துணைத் தலைவராகிய நீங்கள் இங்கே வந்து திறந்து வைத்திருக்கிறீர்கள்.

இந்திய நாட்டின் பிரதமர்களை உருவாக்கியவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர்கள் பலரை உருவாக்கியவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்திய அளவில் நிலையான ஆட்சியை உருவாக்குவதற்கும் துணை நின்றவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டில் ஐந்து முறை முதலமைச்சராக இருந்து இந்த நவீன தமிழகத்தை உருவாக்கியவரும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அத்தகைய மாமனிதருக்குத்தான் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முதலாக 1967ஆம் ஆண்டு ஆட்சி அமைத்த நேரத்தில் கலைஞர் சொன்னார், "ஏழைக்குலத்தில் உதித்த ஒரு தமிழன் ஏறுகிறான் அரசு கட்டிலில்! இனி ஏழைக்கு வாழ்வு வந்தது" - என்று தலைப்புச் செய்தியாக 'முரசொலியில்' தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள், இரண்டு ஆண்டுகள்தான் ஆட்சியில் இருக்க இயற்கை அனுமதித்தது. அதன் பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்று, இந்த இயக்கத்தை தனது இறுதி மூச்சுவரை காப்பாற்றியவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

நம் தலைவர் கலைஞர் அவர்கள் பன்முகத் திறமைக் கொண்டவர்! எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், அந்தத் துறையில் கோலோச்சியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

இலக்கியமா? எத்தனை! எத்தனை! குறளோவியமும், தொல்காப்பியப் பூங்காவும், பொன்னர் சங்கரும் காலத்தால் அழிக்க முடியாத காப்பியங்கள்! திரையுலகமா? இன்றும் பராசக்தி, மனோகரா, பூம்புகார் வசனங்கள் நாட்டிலே ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

என்னுடைய பாசமிகு நண்பர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் வருகை தந்திருக்கிறார்கள். அவருக்கு நன்கு தெரியும், நன்கு அறிவார். திரையுலகத்துக்குள் வருபவர்கள் கலைஞரின் வசனத்தைப் பேசி அதில் தங்களது திறமையை நிரூபித்து, உள்ளே நுழைந்தவர்கள் என்பது தான் வரலாறு.

அரசியலா? ஒரு மாபெரும் அரசியல் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று ஏறக்குறைய 50 ஆண்டுகள் அதை வழி நடத்திய ஒரே தலைவர். ஆட்சியா? இன்றைக்கு நாம் காணக்கூடிய நவீனத் தமிழ்நாடு என்பது தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்கான தொலைநோக்குப் பார்வை அவருக்கு இருந்தது. அதற்கான உள்ளார்ந்த அக்கறை அவருக்கு இருந்தது. ஏனென்றால், தமிழ்நாட்டில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடியலாக அவர் விளங்கினார். அத்தகைய மக்களின் உயர்வுக்காக எழுதினார். அவர்களுக்காகப் பேசினார். அவர்களுக்காகப் போராட்டம் நடத்தினார். அவர்களுக்காகச் சிறையில் இருந்தார். ஆட்சி - அதிகாரம் கிடைத்ததும், அவர்களுக்காகத் திட்டங்களைத் தீட்டினார். அந்தத் திட்டங்களால் உருவானதுதான் இந்தத் தமிழ்நாடு.

அதனால்தான் அவரை "Father of Modern Tamil Nadu" - "நவீனத் தமிழ்நாட்டின் தந்தை" என்று இன்றைக்கும் புகழ்ந்து

கொண்டிருக்கிறோம். அவர் உருவாக்கிய கல்லூரிகளில் படித்தவர்கள், அவரால் வேலைவாய்ப்பு பெற்றவர்கள், அவர் காப்பாற்றிக் கொடுத்த சமூகநீதியால் உயர்வு பெற்றவர்கள், இலவச மின்சாரத் திட்டத்தால் மண்ணைச் செழிக்க வைத்திருக்கக்கூடிய உழவர் பெருமக்கள், சிப்காட், சிட்கோ தொழில் வளாகங்களால் வேலைவாய்ப்பைப் பெற்றவர்கள், குடிசைமாற்றுவாரியத்தால் வீடுகளைப் பெற்றவர்கள், நிலங்களைப் பெற்ற ஏழை எளியவர்கள், மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தால் நல்வாழ்வு பெற்றவர்கள்,மகளிருக்குச் சொத்துரிமை தரப்பட்டதால் சொத்துகள் பெற்ற மகளிர்கள், சுய உதவிக் குழுக்களால் வாழ்க்கைத் தரம் உயர்ந்த மகளிர்கள், பல்லாயிரக்கணக்கான நெசவாளர்கள், இலட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் எனத் தாய்த்திருநாட்டில் திரும்பிய பக்கமெல்லாம் நலத்திட்டங்கள் மூலமாக கோடிக்கணக்கானவர்களுக்குப் பயனளித்த வான்போற்றும் வள்ளல்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாட்டின் ஒவ்வொருவரும் அவரால் பயன்பெற்றவராக, அவர் தீட்டிய திட்டங்களால் பயன்பெற்றவர்களாகத்தான் இருப்பார்கள். அந்த வகையில், அனைத்து மக்களின் தலைவராக இருந்தவருக்குத்தான் இன்றைய நாள் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்ச் சமுதாயத்திற்காக உழைத்த எத்தனையோ பெருமக்களுக்கு சிலைகள், நினைவகங்கள், மணிமண்டபங்கள் அமைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அவருக்கு எத்தனை சிலை அமைத்தாலும் ஈடாகாது. அண்ணா சாலையில், பெரியாருக்கும் அண்ணாவுக்கும் மத்தியில் அமைந்திருக்கும் இந்தச் சிலை ஈடு இணையில்லாதது.

இதே அண்ணா சாலையில் தந்தை பெரியாரின் விருப்பப்படி, திராவிடர் கழகத்தால் முத்தமிழறிஞர்

கலைஞர் அவர்களுக்கு சிலை வைக்கப்பட்டது. ஆனால், அது சிலரால்கடப்பாரையைக் கொண்டு இடிக்கப்பட்டது. அப்போதும் கலைஞர் அவர்களுக்கு கோபம் வரவில்லை, கவிதைதான் வந்தது.

என்ன கவிதை எழுதினார் என்று கேட்டீர்களானால்,

"உடன்பிறப்பே!
செயல்பட விட்டோர்
சிரித்து மகிழ்ந்து நின்றாலும்
அந்தச் சின்னத்தம்பி
என் முதுகிலே குத்தவில்லை -
நெஞ்சிலேதான் குத்துகிறான்,
அதனால் நிம்மதி எனக்கு!
வாழ்க வாழ்க!"

- என்று எழுதிக் காட்டியிருக்கிறார்.

அதே தலைவர் கலைஞர், கோடிக்கணக்கான தமிழ் மக்களின் நெஞ்சங்களில் என்றைக்கும் வாழ்ந்து கொண்டேதான் இருப்பார்! அப்படி வாழப்போகக்கூடிய தலைவரின் தலைமைத் தொண்டன் 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' சொல்லக்கூடிய முழக்கம் என்னவென்று கேட்டீர்கள் என்றால், வாழ்க! வாழ்க! வாழ்கவே! தலைவர் கலைஞர் புகழ் வாழ்கவே! நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழாவையொட்டி கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை - 28.05.2022

புதிய யுக்திகளை, அவை எங்கிருந்தாலும், மக்களுக்குப் பயன் அளிக்கும் என்றால், அதை நம் மாநிலத்தில் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும்

மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அனைத்துத் துறை அரசுச் செயலாளர்களுக்கும், துறைத் தலைவர்களுக்கும் வணக்கம்.

நேற்றையதினம் இதேபோன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் 16 துறைகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டன.

ஆய்வின் இறுதியில், அரசுச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் எவ்வாறு அரசின் திட்டங்களை வடிவமைத்து, செயலாக்கத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று விரிவாக எடுத்துக் கூறியிருந்தேன்.

அந்தக் கருத்துக்களை எல்லாம் நீங்கள் செய்தித் தாள்களில் கவனித்திருப்பீர்கள்.

இருப்பினும், இன்று ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள துறைகளின் முக்கியத்துவம் கருதியும்,

இன்றைய ஆய்வில் நீங்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையிலும், எனது எண்ணங்கள் சிலவற்றை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நேற்று நான் குறிப்பிட்டபடி, இந்த அரசானது தற்போது இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

கடந்த ஆண்டு - குறிப்பாக, புதிய அரசாக நாம் பொறுப்பேற்ற தருணத்தில், நமது மாநிலத்தையே முடக்கிப் போட்ட கோவிட் பெருந்தொற்று, வரலாறு காணாத மழை வெள்ளம் மற்றும் மோசமான நிதி நிலைமை என்று ஒரே நேரத்தில் பல சவால்களை நாம் எதிர்கொண்டு, அதில் ஓரளவிற்கு குறிப்பிடத்தக்க வெற்றியும் பெற்றோம்.

மக்கள் நலன் கருதியும், மாநிலத்தை ஒரு புதிய வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் வகையிலும், பல்வேறு அறிவிப்புகளை நாம் கடந்த ஆண்டு அறிவித்திருக்கிறோம்.

அப்படி அறிவித்த அறிவிப்புகளில் சிறப்பான வகையில் சில திட்டங்கள் செயலாக்கத்திற்கு வந்திருக்கிறது. அதற்காக

முதலில் உங்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருந்தாலும், சில துறைகளில் இன்னும் அரசாணைகள் வெளியிடுவதில் தாமதம் காணப்படுகிறது. அதற்கான காரணங்களை நீங்கள் இங்கே தெரிவித்திருக்கிறீர்கள். அதையும் களைந்து விரைவான, தேவையான அனைத்து ஆணைகளும் நீங்கள் வெளியிட வேண்டும். இதில் நீங்கள் நேரடியாக கவனத்தை செலுத்த வேண்டும்.

அதுமட்டும் போதாது; ஏற்கெனவே ஆணை வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புகளின் மூலம் அது கடைக்கோடி மக்களுக்குப் போய் சென்றடைந்திருக்கிறதா? அவற்றிற்குச் செயலாக்க வடிவமும் தர வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

துறைத் தலைவர்களை வழி நடத்தி, மாவட்ட ஆட்சித் தலைவர்களை ஈடுபடுத்தி இதனை நீங்கள் உடனடியாக செய்ய வேண்டும். அதைத்தான் நான் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

தொழில் துறையின் மூலம் மாநிலத்தின் வளர்ச்சிக்கு பல திட்டங்களை, புரிந்துணர்வு ஒப்பந்தங்களை நாம் முன்னெடுத்திருக்கிறோம்.

அது விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வந்து, படித்த இளைஞர்கள் பயன்பெறும் வகையில் வேலைவாய்ப்புகளை நாம் பெருக்க வேண்டும்.

எனது கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி, இளைஞர்களின் வேலைவாய்ப்பினை உறுதி செய்திட வேண்டும்.

புதிய தொழில்கள் தொடங்கப்படுவதை ஊக்குவிக்க வேண்டும். அதில் நடைமுறைச் சிக்கல்கள் இருந்தால், அதை நீக்குவதற்கான முயற்சியில் நீங்கள் ஈடுபட வேண்டும். குறிப்பாக, நில எடுப்பு மற்றும் அனுமதிகள் வழங்கல் போன்றவற்றைத் துரிதப்படுத்த வேண்டும். இதற்கு தொடர்புடைய பிற துறைகள் ஒத்துழைப்பு தந்திட வேண்டும்.

மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் கோவிட் பெருந்தொற்றுப் பரவல் தடுப்புப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிலையில், தற்போது துறையின் அடிப்படையான மருத்துவச் சேவைகளை மேம்படுத்தி வழங்கி, ஐ.எம்.ஆர்., மற்றும் எம்.எம்.ஆர். போன்ற குறியீடுகளை அனைத்து மாவட்டங்களிலும் கண்காணித்து, மருத்துவமனை நிருவாகத்தினை மக்கள் மேலும் விரும்பும் வகையில், People friendly ஆக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கிராமப்புற மக்களை மையமாகக் கொண்டு செயல்படும் ஊரக வளர்ச்சித் துறையானது குடிநீர் வசதி, ஊரக வீட்டு வசதித் திட்டம், ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றில் கூடுதல் கவனம் செலுத்துவதோடு, சட்டமன்ற, நாடாளுமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றுவதிலும் சிறப்பான கவனத்தை செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், உழவர் சந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதிலும், புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்துவதிலும், புதிய பயிர் வகைகளை அறிமுகப்படுத்துவதிலும், வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டி விற்பனை செய்ய Agricultural Marketing அந்தத் துறையை பலப்படுத்திடவும், உழவர் உற்பத்தியாளர் குழுக்களை பெருமளவில் அமைக்கவும் வேண்டும் என்று இதன்மூலம் மட்டுமே, விவசாயிகளின் வருமானத்தை நாம் அதிகரிக்க முடியும். ஆகவே, இதில் இத்துறை கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இதுபோன்று ஒவ்வொரு துறைக்கும், தனக்கான Target Population யார் என்பதை தெளிவாக உணர்ந்து, அவர்களுக்கு திட்டங்களை சிந்தாமல், சிதறாமல் கொண்டு போய் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தருணத்தில், நேற்று நான் குறிப்பிட்டதை மீண்டும் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புவது, தமிழக மக்கள் இந்த அரசின் மீது வைத்துள்ள பெரும் நம்பிக்கைக்கு ஏற்ற வகையில், ஒவ்வொரு துறையும் செயலாற்ற வேண்டும்.

புதிய யுக்திகளை, அவை எங்கிருந்தாலும், மக்களுக்குப் பயன் அளிக்கும் என்றால், அதை நம் மாநிலத்தில் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும். அப்படி நீங்கள் செய்தால், உங்களை ஊக்குவிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

ஒவ்வொரு துறைத் தலைவரும், தங்கள் அமைச்சருடன் இணைந்து, தனது துறையில் செம்மையாகச் செயல்பட்டு, வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புகள் அனைத்தையும், குறிப்பிட்ட காலத்திற்குள், குறிப்பிட்ட நிதி ஒதுக்கீட்டிற்குள் நிறைவேற்றிட வேண்டுமென்று அன்போடு கேட்டு, இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற
துறைச் செயலாளர்களுடனான இரண்டாம் நாள்
ஆய்வுக் கூட்டத்தின் இறுதியில் ஆற்றிய உரை – 02.06.2022

சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டடம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கது

மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களே,

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்களே,

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களே,

பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் அவர்களே, துணை மேயர் அவர்களே,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.தயாநிதி மாறன் அவர்களே,

திரு. ஆ. ராசா அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர்களே,

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்களே,

மழலைத் தமிழில் மிக அழகோடு வரவேற்புரையாற்றி இருக்கக்கூடிய பெருநகரச் சென்னை மாநகராட்சியின் ஆணையர் அவர்களே,

நிலைக்குழுத் தலைவர்களே, மண்டலக் குழுத் தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே,

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு இருக்கக்கூடிய அரசு அலுவலர்களே,

மாநகராட்சி அலுவலர்களே,

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

மாநகராட்சி கட்டடமான இந்த ரிப்பன் கட்டடம் காலையில் வெள்ளை நிறக் கட்டடமாக தோன்றினாலும், மாலையிலே வண்ண விளக்குகளால் ஜொலிக்கக்கூடிய ஒரு சிறப்பான ஏற்பாட்டை செய்து இந்த நிகழ்ச்சியில் தொடங்கி வைக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பை எனக்கு வழங்கியமைக்காக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநகராட்சி ரிப்பன் கட்டடமானது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடம் ஆகும். இதுபோன்ற கட்டடங்களை எல்லாம் நான் பள்ளிக்கூடத்திலே மாணவனாக படித்துக் கொண்டிருக்கின்றபோது அந்த பள்ளியிலிருந்து சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்வார்கள். அப்படி அழைத்துச் செல்லும்போது சென்னையிலுள்ள முக்கியமான இடங்களான அடையாறு ஆலமரம், அருங்காட்சியகம், உயிரியல் பூங்கா, காந்தி மண்டபம், ரிப்பன் கட்டடம், விக்டோரியா மகால் போன்ற

கட்டடங்களுக்கு எல்லாம் அழைத்து செல்லப்பட்டு அவற்றை எல்லாம் சுற்றி சுற்றி வந்து வேடிக்கை பார்த்திருக்கிறேன். அப்படி வேடிக்கை பார்த்தவன் இன்றைக்கு இந்த கட்டடத்தை விளக்கெரிய வைக்கக்கூடிய வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டு இருக்கிறது என்றால் உள்ளபடியே நான் பெருமைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, 1996ஆம் ஆண்டு நாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபோது நம்முடைய தலைவரிடத்திலே நம்முடைய கழக முன்னோடிகள் அத்தனைபேரும் சென்று, இந்தமுறை அமைச்சரவையில் ஸ்டாலினுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று போராடினார்கள். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் எனக்கு அந்த வாய்ப்பைத் தரவில்லை. அதற்குப்பிறகு ஆட்சி அமைந்து, அமைச்சரவை அமைக்கப்பட்ட பிறகு, நீண்ட காலமாக நடைபெறாமல் இருந்த இந்த மாநகராட்சியினுடைய தேர்தலை நாம் நடத்தினோம். அப்படி நடத்தியபோது மேயர் வேட்பாளராக அதுவும் மக்களால் முதல்முறையாக தேர்ந்தெடுக்கக்கூடிய மேயராக நான் வரவேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் முடிவு செய்து, என்னை வேட்பாளராக நிறுத்தினார்கள். நாம் வெற்றி பெற்றோம். வெற்றி பெற்றதற்கு பிறகு இந்த மாநகராட்சியில் பதவியேற்பதற்கான நாள் குறிக்கப்பட்டு, அதற்கான விழா ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

அதற்குரிய அழைப்பிதழை தலைவர் இடத்தில் நாங்கள் எல்லாம் சென்று காண்பித்தோம். அப்போது, அந்த அழைப்பிதழின் பின் அட்டையில் ரிப்பன் மாளிகையின் படம் இருந்தது. அதனை தலைவர் கலைஞர் அவர்கள் ஒருமுறைக்கு இருமுறை பார்த்தார். ரிப்பன் கட்டடத்தை உற்று உற்று பார்த்துக் கொண்டு இருந்தார். அப்பொழுது அருகிலிருந்து மூத்த கழக முன்னோடிகள் மற்றும் அமைச்சர்களிடத்தில்,

தலைவர் அவர்கள், எல்லோரும் ஸ்டாலினை அமைச்சராக்கி ஒரு அறையில் கொண்டு போய் உட்கார வைக்கப் பார்த்தீர்கள். ஆனால் இப்போது அவரை மேயராக்கி இவ்வளவு பெரிய கட்டடத்தில் உட்கார வைத்திருக்கிறேன் என்று பெருமையாகச் சொன்னார். அதுதான் என் நினைவிற்கு வருகிறது.நான் அடிக்கடி இந்த வழியாக போகும்போதெல்லாம், இந்த கட்டடத்தை பார்த்து அவர் சொன்னதைத் தான் நினைத்து கொண்டு இருப்பேன்.

அந்த கட்டடத்தை எல்லோரும் பாராட்டக்கூடிய வகையிலே, இதற்கு மெருகூட்டுகின்ற வகையிலே வண்ண வண்ண விளக்குகளால் அமைத்து ஒரு சிறப்பான ஏற்பாட்டை செய்திருக்கக்கூடிய மேயர் அவர்களுக்கும், துணை மேயர் அவர்களுக்கும்,அதேபோல இந்த துறையினுடைய செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும் என்னுடைய இதயப்பூர்வமான வணக்கத்தையும், வாழ்த்துகளையும், நன்றியும் தெரிவித்து, உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய வாய்ப்பை பெற்றமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ், நிறம் மாறும் வண்ண விளக்குகளால் ஒளிரூட்டப்பட்ட பெருநகரச் சென்னை மாநகராட்சியின் ரிப்பன் கட்டடத்தை பொதுமக்களின் பார்வைக்காக அர்ப்பணித்து ஆற்றிய உரை - 02.06.2022

‘திராவிட மாடல்’ என்பது யாரையும் தாழ்த்தாது அனைவரையும் சமமாக நடத்தும்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ - மாணவியருக்கான பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டு இருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்களே,

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களே,

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களே,

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே. எஸ். மஸ்தான் அவர்களே,

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் அவர்களே,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களே, வழக்கறிஞர் வில்சன் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர்கள்

பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா அவர்களே,

முனைவர் இனிகோ இருதயராஜ் அவர்களே,

திரு. ஹசன் மௌலானா அவர்களே,

திரு. பிரபாகர் ராஜா அவர்களே,

திரு. அரவிந்த் ரமேஷ் அவர்களே,

துணை மேயர் திரு. மகேஷ் குமார் அவர்களே,

முன்னாள் ஒன்றிய அமைச்சர் திரு. ஈவிகேஎஸ். இளங்கோவன் அவர்களே, கவிப்பேரரசு வைரமுத்து அவர்களே,

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு. ஆ. கார்த்திக், இ.ஆ.ப., அவர்களே,

மாநில ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் ஜே. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அவர்களே, முனைவர் ஜெ. ஹாஜாகனி அவர்களே, திரு. எஸ்.டி. நெடுஞ்செழியன் அவர்களே,

தமிழ்நாடு சிறுபான்மை ஆணையத்தின் துணைத் தலைவர் திரு. மஸ்தான் அவர்களே,

ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திரு. ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களே,

கல்லூரியின் முதல்வர் உள்ளிட்ட நிருவாகிகளே,

கல்லூரியின் ஆசிரியர்களே, மாணவச் செல்வங்களே,

அந்த மாணவச் செல்வங்களை ஈன்றெடுத்த பெற்றோர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையை சார்ந்திருக்கக் கூடிய பாசமிகு நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் எனது மாலை வணக்கத்தை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அனைத்துக் கல்லூரி மாணவ - மாணவியருக்கான பேச்சுப் போட்டி நடத்தி அதனுடைய பரிசளிப்பு விழாவிலே நானும் கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய வாய்ப்பை பெற்றமைக்காக நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்பை எனக்கு உருவாக்கி தந்திருக்கக்கூடிய ஆணையத்திற்கு எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாநில சிறுபான்மை ஆணையத்தின் சார்பில் மாநிலம் முழுவதும் 'தலைநிமிரும் தமிழகம்' என்ற தலைப்பில் தமிழிலும், ஆங்கிலத்திலும் பேச்சுப் போட்டியானது நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெற்ற மாணவச் செல்வங்களுக்கு இன்று பரிசுகள் வழங்கப்பட இருக்கிறது.

முதலில் வெற்றி பெற்ற மாணவச் செல்வங்களுக்கு எனது வாழ்த்துகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வெற்றிப் பாதையில் நீங்கள் தொடர்ந்து செல்ல வேண்டும். எனது அன்புக்கும் மரியாதைக்கும் உரிய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டது முதல் மிக சிறப்பாகச் அனைவரும் பாராட்டத்தக்க வகையில் அவர் தனது கடமையை நிறைவேற்றி வருகிறார் என்பது எனக்கு மட்டுமல்ல உங்களுக்கு தெரியும். அதற்கு மகுடம் வைப்பது போல் இந்த விழா நடைபெற்று கொண்டிருக்கிறது.

சிறுபான்மையினர் ஆணையத்தின் மூலமாக தமிழ்நாட்டு மாணவர் சமுதாயத்தினர் மத்தியில் மாபெரும் விழிப்புணர்ச்சியை பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், இந்த ஆணையத்தின் அனைத்து உறுப்பினர்களும் உருவாக்கி இருக்கிறார்கள்.

அதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் முதலமைச்சர் என்ற முறையிலே என்னுடைய வணக்கத்தை, நன்றியை, பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்ததுமே தமிழகம் தலைநிமிரத் தொடங்கிவிட்டது.

இதனைக் கண்கூடாக மக்கள் பார்த்து கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலையில் 'தலைநிமிரும் தமிழகம்' என்ற தலைப்பில் தமிழில் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் பேச்சுப் போட்டி நடத்தி இருக்கிறார்கள். இன்றைய காலக்கட்டத்துக்கு இது மிக முக்கியமானது ஆகும்.

திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார். இந்தப் போட்டி தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் கலந்து கொண்டு இருக்கக்கூடிய வகையிலே இந்தப் போட்டி நடந்திருக்கிறது.

இந்தப் போட்டியில் பங்கேற்ற அனைத்து மாணவ, மாணவியரையும் நான் என்னுடைய வாழ்த்துகளை பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உங்களது உரையை நான் கேட்கவில்லை அந்த வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை, என்றாலும் - 'தலைநிமிரும் தமிழகம்' என்ற சொற்களை நீங்கள் ஓங்கி ஒலித்தமைக்கான நன்றி கூற கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாவட்ட அளவில் 228 பரிசுகளும் - மாநில அளவில் 6 பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான பரிசுகள் 20 ஆயிரம், 10 ஆயிரம், 5 ஆயிரம் எனவும், மாநில அளவிலான பரிசுகள் 1 இலட்சம், 50 ஆயிரம், 25 ஆயிரம் எனவும் வழங்கப்பட்டு இருக்கிறது.

நமது பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், கல்லூரி காலத்தில் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு ஊர்களில் பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளைப் பெற்றவர்.

அதேபோல் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களும் கவிதை, பேச்சு போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகளைக் குவித்தவர் அவர். அந்தக் காலத்தில் எவ்வளவு தரப்பட்டிருக்கும் பரிசு அதை நினைத்துப் பார்க்கிறேன். இன்று 1 இலட்சம் வரைக்கும் பரிசு தரும் அளவுக்கு போட்டி பெருகி இருக்கிறது.

உங்களது பேச்சுக்கும் மரியாதையும் மதிப்பும் உயர்ந்திருக்கிறது. போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களைப் பார்க்கும் போது நான் என்னுடைய கல்லூரிக் காலத்துக்குச் சென்று விட்டேன்.

1971ஆம் ஆண்டு தமிழகத்தில் இந்தி திணிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்ட நேரத்திலே, கோவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாணவர் மாநாடு நடந்தது, தலைவர் கலைஞர் அவர்களும் அதில் கலந்து கொண்டார்.

அந்த மாநாட்டின் தலைவர் தஞ்சையைச் சேர்ந்த எல்.ஜி. என்று அழைக்கப்படுகின்ற எல். கணேசன் அவர்கள். நானும் மாநாட்டு தலைவரிடம் சென்று "இரண்டு நிமிடம் எனக்கு பேச அனுமதி வேண்டும்" என்று வாய்ப்பு கேட்டேன். நான் சொல்வது 1971ஆம் ஆண்டு. அவரும் அனுமதி தந்தார்.

அப்போது நான் பேசும்போது சொன்னேன். "இந்தி திணிக்கப்படுகிற முயற்சி நடக்கிறது. அப்படி திணிக்கப்படுகிற நேரத்தில் அதனை எதிர்த்து போராட மாணவர் பட்டாளம் தயாராக இருக்க வேண்டும் என்று அனைவரும் சொன்னார்கள். அப்படிப்பட்ட மாணவர் பட்டாளத்தில் என்னையும் சேர்த்துக் கொள்ள வாய்ப்பு தாருங்கள்" என்று ஒரு வேண்டுகோள் வைத்துச் சொன்னேன். அது எந்த பட்டியலாக இருந்தாலும், தியாகம் செய்யக்கூடிய பட்டியலாக இருந்தாலும் அதிலே என்னையும் சேர்த்துக் கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்று சொன்னேன்.

மொழிக்காக, நம்முடைய இனத்துக்காக போராடுகிற நேரத்தில் உயிரை இழக்கக்கூடிய சூழ்நிலை வந்தாலும் அந்த தியாகத்தைச் செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிவிட்டு அந்த மேடையிலே இன்னொன்றையும் சொன்னேன், என்னுடைய தந்தைக்கு நான்கு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். எனவே அந்த நான்கு ஆண்பிள்ளைகளில் ஒரு பிள்ளை போய்விடுவதால் என்னுடைய தந்தை நிச்சயம் கவலைப்பட மாட்டார். ஏன்னென்றால் மொழிக்காக, இனத்துக்காக தனயனை இழந்த தந்தை என்று அவரை நாடு பாராட்டும், போற்றும் அந்த பெருமையை வாங்கி தந்த பெருமை எனக்குச் சேரும் என்று நான் அப்போது முழங்கினேன்.

அப்போது எனக்கு 17 வயது. நான் அந்த மாநாட்டில் பேசியது என்பது அவ்வளவுதான். அப்போது பேசியபோது

எழுந்த கரவொலி இப்போதும் என் காதுகளில் ரீங்காரமிட்டு கொண்டு இருக்கிறது.

இப்போது பரிசு வாங்கிய மாணவச் செல்வங்களைப் பார்த்தபோது - உங்கள் காலத்தில் நான் இருந்தபோது நடந்தவை நினைவுக்கு வருகின்றன.

இரத்தம் சூடான - இளமை முறுக்கேறிய - உணர்ச்சி கொப்பளித்த - எழுச்சி பீறிடும் காலக்கட்டத்தில் தமிழ்நாட்டில் நடைபெற்ற இது போன்ற பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்கள் பெரும்பாலும் அரசியல் ஆர்வம் கொண்ட மாணவர்களாகத்தான் இருப்பார்கள்.

திராவிட இயக்கம் - தேசிய இயக்கம் - பொதுவுடமை இயக்கம் - ஆகிய கொள்கைக் கோட்பாடுகளின் மீது பற்றுக் கொண்டு அது தொடர்பாக அதிகம் படிக்கும் மாணவர்கள் தான் இது போன்ற போட்டிகளில் அதிகம் கலந்து கொள்வார்கள். அவர்கள் தான் பெரும்பாலும் பரிசையும் பெற்று இருக்கிறார்கள்.

இன்னும் சொன்னால் பிற்காலத்தில் அரசியல் இயக்கங்களில் இருந்து பொறுப்புகளுக்கு வந்து பணியாற்றக் கூடியவர்களாக அந்த மாணவர் தலைவர்கள் உயர்ந்து இருக்கிறார்கள்.

இன்றைக்கு கழகப் பொதுச்செயலாளராக இருக்கும் அண்ணன் துரைமுருகன் அவர்கள் அதற்கு ஒரு அடையாளம்.

மொழிப்போர் தளபதியாக இன்றைக்கும் போற்றி பாராட்டிக் கொண்டு இருக்கக்கூடிய தஞ்சை எல். கணேசன், மதிமுக பொதுச்செயலாளர் அண்ணன் வைகோ அவர்கள், இந்த மேடையில் இருக்கும் அருமைச் சகோதரர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், முன்னாள் சபாநாயகர் மறைந்த அண்ணன் காளிமுத்து அவர்கள்,முன்னாள் துணை சபாநாயகர் விருதுநகர் சீனிவாசன் அவர்கள்,

இப்படி நான் சொல்லிக் கொண்டே போகலாம்! இதனை நான் சொல்வதற்குக் காரணம், மாணவர்களாகிய நீங்கள் அனைவரும் அரசியலுக்கு வாருங்கள் என்று அழைப்பதற்காக அல்ல, இந்த பேச்சாற்றலை மேலும் மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இதை குறிப்பிட்டு சொல்கிறேன்.

பேச்சு என்பது ஒரு கலை. அது எல்லோருக்கும் வாய்க்காது. எல்லாவற்றிலும் வென்றவர்கள் கூட மேடைகளில் தோற்றுவிடுவார்கள். மேடைகளை ஆட்சி செய்வது என்பதும், கோட்டையை ஆட்சி செய்வதைப் போல அவ்வளவு கடினமானது.

தலைவர் கலைஞர் அவர்கள் 1970ஆம் ஆண்டு இலண்டனுக்குச் சென்றபோது ஹைட் பார்க் என்ற இடத்துக்குச் சென்றிருக்கிறார். அந்தப் பூங்கா என்பது பேச்சாளர்கள் பயிற்சி பெறும் இடமாக இருந்ததாம். அதைப் போய் பார்த்திருக்கிறார். அது போன்ற பயிற்சிப் பாசறைகளை உருவாக்கும் சூழ்நிலையை நாம் ஏற்படுத்த வேண்டும். அத்தகைய பயிற்சிப் பாசறையாக சிறுபான்மையினர் ஆணையம் செயல்பட்டு கொண்டிருக்கிறது. அதற்காக நான் மனமார வாழ்த்துகிறேன்.

இந்த ஆண்டு 4 ஆயிரம் பேர் பங்கெடுத்துள்ளார்கள். மேலும் மேலும் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கலந்துகொள்ளும் அளவுக்கு இந்த ஆணையம் மாணவர்களை தயார் செய்ய வேண்டும். அதற்கு இந்த அரசு என்றைக்கும் உங்களுக்கு ஒத்துழைப்பு நல்கும்.

பேசும் கலை வளர்ப்போம் - என்று தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு புத்தகம் எழுதினார்கள். 'நீங்களும் பேச்சாளர் ஆகலாம்' என்று இனமானப் பேராசிரியர் அவர்கள் ஒரு புத்தகம் எழுதினார்கள்.

இந்த இரண்டு நூல்களையும் நம்முடைய மாணவச் செல்வங்கள் படிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

- ❖ கலைஞர் பேச்சு புயல் என்றால் பேராசிரியர் பேச்சு அமைதி!
- ❖ கலைஞர் பேச்சு மழை என்றால் பேராசிரியர் பேச்சு வெள்ளம்!
- ❖ கலைஞர் பேச்சு சூரியன் என்றால் பேராசிரியர் பேச்சு நிலா!
- ❖ கலைஞர் பேச்சு இடிமுழக்கம் என்றால் பேராசிரியர் பேச்சு எதிரொலி!

- தமிழ்நாட்டு மேடைகளை எழுபது ஆண்டுகள் ஆட்சி செய்தவர்கள் தான் இவர்கள் இருவரும். இவர்களிடமிருந்து நீங்கள் பேச்சுக் கலைக்கான அனைத்தையும் கற்றுக் கொள்ளலாம்.

- ❖ நிறையப் படியுங்கள்.
- ❖ அனைத்தையும் கற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ நிறையத் தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள்.
- ❖ முக்கியமானதை குறித்து வையுங்கள்.
- ❖ சரியான தகவல்களைத் திரட்டுங்கள்.
- ❖ எதையும் தெளிவாகச் சொல்லுங்கள்.
- ❖ உங்களுக்குத் தெரிந்ததை மட்டும் பேசுங்கள்.
- ❖ மேடையைப் பார்த்ததும் அச்சம் வேண்டாம்.
- ❖ வார்த்தைகளைச் சரியாக உச்சரியுங்கள்.
- ❖ அடுத்தவர் கருத்துக்களாக அடுக்காதீர்கள்.

- ❖ உங்களது சுய சிந்தனைக் கருத்துக்களைச் சொல்லுங்கள்.

என்று மேடைப் பேச்சுக்கு எத்தனையோ இலக்கணம் இருக்கிறது.

ஒரு காலத்தில் மிக நீண்ட நேரம் பேசினால் தான் அது சிறந்த பேச்சு என்று கருதப்பட்டது. இப்போது தேவையானதை - மிகச் சுருக்கமாக - சுவையாகச் சொல்வது மட்டுமே சிறந்த பேச்சாகக் கருதப்படுகிறது. அத்தகைய பேச்சுக்கலையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இவர் எப்போது முடிப்பார் என்று மக்கள் நினைப்பதற்கு முன்னதாக - இவர் இவ்வளவு விரைவாக முடித்துவிட்டாரே என்று நினைக்கக்கூடிய வகையில் உங்களது மேடைப்பேச்சுக்கள் அமைய வேண்டும்.

அத்தகைய திறமைசாலிகளாக அனைவரும் வருங்காலத்தில் வருவீர்கள் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருக்கிறது.

இந்தப் போட்டிக்கு நீங்கள் தேர்ந்தெடுத்த தலைப்புகள் அனைத்தும் மிக மிக உன்னதமான தலைப்புகள்.

- ❖ ஒன்றே குலம் ஒருவனே தேவன்
- ❖ மனிதநேயம் ஓங்கட்டும், மதவெறி நீங்கட்டும்.
- ❖ மக்களாட்சியின் மாண்பும் மதச்சார்பற்ற அரசும்
- ❖ ஏன் வேண்டும் இடஒதுக்கீடு?
- ❖ பன்மைத்துவமே இந்தியத்துவம்
- ❖ உழைப்பில்லாத செல்வமும் - மனிதம் இல்லாத அறிவியலும் - என்பது போன்ற தலைப்புகள் பேச்சுப்போட்டித் தலைப்புகள் மட்டுமல்ல.

இந்தியாவுக்கான தலைப்புகள் ஆகும்.

இந்தியாவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கத் தேவையான தலைப்புகள் ஆகும்.

சமூகநீதியும் - சமத்துவமும் - சகோதரத்துவமும் - மனிதநேயமும் - மதச்சார்பற்ற தன்மையும் கொண்ட இந்தியா தான் மக்களாட்சியின் இந்தியாவாக இருக்க முடியும்.

இவை அரசியல் தத்துவங்கள் மட்டுமல்ல - ஆட்சியின் தத்துவமாக மாற வேண்டும்.

இந்த அடித்தளம் கொண்டதாகத்தான் திராவிட மாடல் ஆட்சியானது இன்று தமிழகத்தில் நடைபெற்று வருகிறது.

❖ திராவிட மாடல் என்பது எதையும் இடிக்காது! உருவாக்கும்!

❖ திராவிட மாடல் என்பதை எதையும் சிதைக்காது! சீர் செய்யும்!

❖ திராவிட மாடல் என்பது யாரையும் பிரிக்காது! அனைவரையும் ஒன்று சேர்க்கும்!

❖ திராவிட மாடல் என்பது யாரையும் தாழ்த்தாது! அனைவரையும் சமமாக நடத்தும்!

❖ திராவிட மாடல் என்பது யாரையும் புறக்கணிக்காது! தோளோடு தோள் நின்று அரவணைக்கும்!

அத்தகைய அடிப்படையில் தான் இந்த திராவிட மாடல் ஆட்சி இன்றைக்கு நடைபெற்று வருகிறது.

இந்த தத்துவத்தை பயிற்றுவிக்கும் பாசறையாகவே மாநிலச் சிறுபான்மையினர் ஆணையம் திகழ்வதை நினைத்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். அனைத்துத் துறைகளும் இது போன்று மாணவச் செல்வங்களுக்கு பேச்சுப் பயிற்சி

தருமானால் தமிழ்நாட்டுக்கு ஏராளமான பேச்சாளர்கள் கிடைப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

எனவே வெற்றி பெற்று இருக்கக்கூடிய அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள், பாராட்டுகள்.

இந்த நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தியிருக்கக்கூடிய சிறுபான்மை ஆணையத்திற்கு என்னுடைய நன்றியை வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சென்னை, குருநானக் கல்லூரியில், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டி - பரிசளிப்பு விழாவில் ஆற்றிய உரை - 03.06.2022

மாற்றுத்திறனாளிகளை கைத்தூக்கிவிடும் துறையாக செயல்பட வேண்டும்

மாண்புமிகு சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களே!

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே!

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசுச் செயலாளர் அவர்களே!

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநர் திரு. ஜானி டாம் வர்கீஸ், இ.ஆ.ப., அவர்களே!

வருகை தந்திருக்கக்கூடிய அலுவலர் பெருமக்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

எத்தனையோ துறைகள் இருந்தாலும், நான் என் கையில் வைத்திருக்கக்கூடிய துறை இந்த

மாற்றுத்திறனாளிகள் துறை என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இந்தத் துறையை நான் வைத்துக் கொண்டு இருக்கிறேன் என்று சொன்னால் -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய துறையை நான் வைத்துக்கொண்டிருக்கிறேன் என்று பொருள். தலைவர் கலைஞர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் மீது நீங்காத பற்றும், பாசமும் கொண்டவர். உடல் ஊனமுற்றோர் என்ற சொல்லே, அவர்களை நோகடிக்கும் சொல்லாக இருந்த காரணத்தால் தான், அதனை மாற்றி, மாற்றுத்திறனாளிகள் என்ற தன்னம்பிக்கைச் சொல்லை உருவாக்கிக் கொடுத்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

இந்தியாவிலேயே முதன்முறையாக மாற்றுத் திறனாளிகளின் நல்வாழ்விற்காகத் தனித் துறையை உருவாக்கினார். உருவாக்கினது மட்டுமல்ல, தன்னுடைய நேரடி கட்டுப்பாட்டில் வைத்து பல்வேறு திட்டங்களை அதற்காக உருவாக்கித் தந்திருக்கிறார்.

- தொழுநோய் இரவலர் மறுவாழ்வுத் திட்டம்,
- கண்ணொளி வழங்கும் திட்டம்,
- மூன்று சக்கர சைக்கிள்கள், சக்கர நாற்காலிகள், அலுமினியத் தாங்கிகள் உள்ளிட்ட கருவிகள் வழங்கும் திட்டம்,
- மாத ஓய்வூதியத் திட்டம்,
- பராமரிப்பு உதவித்தொகை,
- திருமண உதவித்தொகை,
- அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை,
- கல்வி உதவித்தொகை,

❖ கல்லூரிகளில் கல்விக் கட்டணம்,

❖ சிறப்புக் கட்டணம்,

❖ தேர்வுக் கட்டணம் ரத்து

இப்படி பல்வேறு திட்டங்கள் இன்று அமலில் இருக்கிறது என்று சொன்னால், இவை அனைத்தையும் உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்

அந்த வகையில் இன்னும் சிறப்புக் கவனம் எடுத்து, நாம் நல்ல முன்னெடுப்புகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம்.

இந்த ஆட்சி அமைந்த போது கொரோனா என்ற பெருந்தொற்று பரவி இருந்தது. அந்தச் சூழலில், மாற்றுத்திறனாளிகளுக்கு தடுப்பூசி போடுவதற்காக தடுப்பூசி மையங்களில் தனியாக ஒரு பிரிவு, தனி வரிசை, சாய்வுதள வசதி உருவாக்கி தடுப்பூசி முகாம்களை நடத்தியிருக்கிறோம். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், வீட்டிற்கே சென்று தடுப்பூசியைச் செலுத்தி, கொரோனா பெருந்தொற்று நேரத்தில் இந்த அரசு மாற்றுத்திறனாளிகளின் பாதுகாப்பிற்கு மிகப்பெரிய நம்பிக்கையைக் கொடுத்தது.

பன்னிரெண்டாம் வகுப்பு துணைத் தேர்வுகளைத் தனித் தேர்வர்களாக எழுத விண்ணப்பித்த மாற்றுத்திறனாளி மாணவர்கள் அனைவருக்கும் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கு அளித்திருக்கிறோம். அது மட்டுமல்லாமல், அனைவரும் வெற்றி பெற்றதாக அறிவித்தோம். அவர்களுக்கு உயர் கல்வி நம்பிக்கையை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். கொரோனா தொற்று நேரத்தில், மாற்றுத்திறனாளிகளின் வீட்டிற்கே சென்று அத்தியாவசியப் பொருட்களையெல்லாம் வழங்கியிருக்கிறோம்.

அரசினுடைய ரிக்கார்டுகளில் பதிவு செய்தவர்களுக்கு மட்டுமன்றி, பதிவு செய்யப்படாத மாற்றுத்திறனாளிகளுக்கும் வழங்கி, அவர்களின் வாழ்வாதாரத்தின் மீது மிகப்பெரிய நம்பிக்கையை ஏற்படுத்திய அரசுதான் இந்த அரசு.

இதனுடைய தொடர்ச்சியாக இந்த ஓராண்டு காலத்தில், எத்தனையோ அரிய பணிகள் மாற்றுத்திறனாளிகளின் நன்மைக்காக நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

❖ உதவி உபகரணங்கள் வேண்டி விண்ணப்பித்து காத்திருப்போர் பட்டியலிலுள்ள அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் உதவி உபகரணங்கள் வழங்க ரூ.62.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என நான் அறிவிப்பு செய்தேன்.

❖ ரூ.70.76 கோடியில், 37,660 மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

❖ 1,228 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.

❖ ரூ.360.21 கோடி அளவுக்கு 2,11,505 பயனாளிகளுக்குப் பராமரிப்பு உதவித்தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

❖ மாற்றுத்திறனாளிகளுடன் செல்லும் ஒரு உதவியாளர், அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் சாதாரண பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம் மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ மாற்றுத்திறனாளிகளின் நலனுக்கென நமது நாட்டில் மட்டுமன்றி, உலகிலேயே முன்மாதிரி திட்டமாக ரூ.1,709 கோடி செலவில் “RIGHTS” – அதாவது “உரிமைகள்”

என்ற திட்டம் செயல்படுத்தப்பட தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

❖ மாற்றுத்திறனாளிகளின் நலனிற்காகச் சிறப்பான முறையில் சேவையாற்றியவர்களுக்கு மாநில அளவிலான விருதும் வழங்கப்படுகிறது.

❖ தொழுநோயால் பாதிப்படைந்தவர்களின் மறுவாழ்விற்கான மல்லவாடி அரசு மறுவாழ்வு இல்லத்தில், ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட உள்ளது.

❖ அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், நூல் கட்டுநர் மற்றும் நூல் கட்டும் உதவியாளர் பணியிடங்களுக்குப் பார்வைக் குறைவுடைய 31 நபர்கள் சிறப்பு நேர்வாகப் பணி நியமனம் செய்யப்பட்டு உள்ளார்கள்.

❖ அறநிலையத்துறையின்கீழ் உள்ள திருக்கோயில்கள் மற்றும் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச திருமணத் திட்டம் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

இப்படி ஓராண்டில், மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்திட பல்வேறு நலத்திட்டங்களை நாம் அறிவித்து இருக்கிறோம்.

தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை தன்னுடைய கையில் வைத்துக்கொண்டு எவ்வாறு பணியாற்றினாரோ, அதே வழியில் நின்று, இன்றைக்கு நானும், இந்த அரசும் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

இந்தியாவில் மாற்றுத்திறனாளிகளுக்குச் சிறப்பான சேவை வழங்கியமைக்காக, தமிழ்நாடு முதல் மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டு, மாண்புமிகு குடியரசுத் தலைவர்

அவர்களால், சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமான 03.12.2021 அன்று தமிழ்நாடு அரசுக்கு விருது வழங்கப்பட்டிருக்கிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கு மறுவாழ்வு வழங்கிய வகையில் இந்தியாவிலேயே சேலம் மாவட்டம் சிறந்த மாவட்டமாக தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.

சிறப்பாகச் செயல் புரிந்தமைக்காக இந்திய அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற விருதுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 மாற்றுத்திறனாளிகளுக்கு விருது என இந்த "முப்பெரும் விருதுகளை" குடியரசுத் தலைவர் அவர்களின் கையால் பெற்ற மாநிலம் தான் நம்முடைய மாநிலம்.

மாநிலத்திற்கான விருதைப் பெற்று, சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் கோட்டைக்கு வந்து என்னிடத்தில் அதை வழங்கினார்.அந்த விருதைப் பெறும் போது,மிகப் பெருமையாக எனக்கு இருந்தது. இத்தோடு நிற்காமல் மேலும், நாம் முன்னேற்றம் காண வேண்டும் என்று தோன்றியது. நாம் ஒவ்வொரு வருடமும் இந்த விருதுகளைப் பெற வேண்டும், அதுதான் என்னுடைய விருப்பம்.

இந்தத் துறையானது ஸ்கூட்டர் கொடுத்தோம், கருவிகளைக் கொடுத்தோம்,நிதி கொடுத்தோம் என்று மட்டும் சொல்லாமல், நம்பிக்கையும் கொடுத்தோம் என்று சொல்லும் அந்த அளவுக்கு இந்தத் துறை செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய நம்பிக்கையை உருவாக்குவது சாதாரணமான காரியம் அல்ல, அதற்கு இந்தத் துறையில் பணியாற்றக்கூடிய அதிகாரிகள் முதல் சாதாரண அலுவலர் வரைக்கும் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியை ஆற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

துறையை நோக்கி வருபவர்கள் சிலர் தான். அந்த சிலரது கோரிக்கைகளை செவி மடுத்துக் கேட்க வேண்டும். உடனடியாக நிறைவேற்ற முடியாவிட்டாலும், சில வாரங்களுக்குள்ளாவது நிறைவேற்றித் தர வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு நம்பிக்கை இந்த அரசாங்கம் தான். அந்த நம்பிக்கையை துறை அதிகாரிகளும், அலுவலர்களும் தான் காப்பாற்ற வேண்டும்.

இன்றைக்கு இந்தத் துறையில் சிலவற்றில் நாம் இன்னும் அதிகக் கவனம் செலுத்தி, மாற்றுத்திறனாளிகளின் முன்னேற்றத்திற்கு பாடுபட வேண்டும் என்று நான் உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

UDID அட்டைகள் வழங்குவதில் கொஞ்சம் சுணக்கம் தெரிகிறது. அது உடனடியாக நீக்கப்பட்டு, கார்டு வழங்குவது விரைவுபடுத்தப்பட வேண்டும்.

அனைத்து திட்டங்களின் பயன்களும் மாற்றுத்திறனாளிகளுக்கு தங்குதடையின்றி சென்றிட, ஆங்காங்கே முகாம்கள் நடத்தப்பட வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான சேவை அளிப்பதில் சுகாதாரம், குழந்தைகள் நலத்துறை, கல்வித்துறை ஆகியவை ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

நலத்திட்டங்களை கொடுப்பதோடு, மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய வேலைவாய்ப்பை வழங்கிட வேண்டும்.

பின்னடைவுப் பணியிடங்களை விரைந்து நிரப்புவதோடு, தனியார் நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு நல்ல வேலை கிடைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்காக நல வாரியம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில அளவிலான ஆலோசனை வாரியம் போன்றவற்றின் கூட்டங்களை அடிக்கடி நடத்தி, மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தை இதுவரை எந்த அரசும் உருவாக்காத அத்தியாயத்தை உருவாக்கிட வேண்டும் என்று இத்துறையின் அமைச்சர் என்ற முறையிலும் நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், மாற்றுத்திறனாளிகளை கை தூக்கி விடும் துறையாக இந்தத் துறை செயல்பட வேண்டும்.

அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மக்களின் வளர்ச்சி என்ற திராவிட மாடலுக்குள் இது போன்ற விளிம்பு நிலை மக்களின் வளர்ச்சியும், மகிழ்ச்சியும் தான் அடங்கி இருக்கிறது.

அவர்களது அனைத்துக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட வேண்டும். அவர்களது மகிழ்ச்சியில் தான், என்னுடைய மகிழ்ச்சி, இந்த அரசாங்கத்தினுடைய மகிழ்ச்சி இருக்கிறது. ஏன், இந்தத் துறையில் பணியாற்றும் அனைவரின் மகிழ்ச்சியும் இருக்கிறது என்று கூறி, இந்த அளவோடு என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின்
செயல்பாடுகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில்
ஆற்றிய உரை - 06.06.2022

கலையும் வளர வேண்டும்
மக்களும் வளர வேண்டும்

முத்தமிழ்ப் பேரவையின் 41ஆவது இசை விழா நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு, சிறப்பு சேர்த்திருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள்

திரு. எ. வ. வேலு அவர்களே!

திரு. மா. சுப்பிரமணியம் அவர்களே!

திரு. சேகர்பாபு அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர்கள்:

திரு. ஆ. ராசா அவர்களே!

திரு. கலாநிதி வீராசாமி அவர்களே!

இந்தமயிலைத்தொகுதியினுடையசட்டமன்றஉறுப்பினர் திரு.த.வேலு அவர்களே! திராவிட இயக்க தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் சகோதரர் திரு.லியோனி அவர்களே!

தொடக்கத்தில் முத்தமிழ் பேரவையின் இந்த இனிய விழாவிற்கு வருகை தந்துள்ள அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய என்னுடைய பெருமதிப்பிற்குரிய, நாங்கள் எல்லாம் சின்ன அத்தான், சின்ன அத்தான் என்று தான் அவரை அழைப்பதுண்டு, எனவே, அப்படிப்பட்ட பெருமைக்குரிய திரு. அமிர்தம் அவர்களே!

பொருளாளர் சகோதரர் திரு. இ.வி. ராஜன் அவர்களே! முன்னிலை வகித்துக் கொண்டிருக்கக்கூடிய முத்தமிழ் பேரவையினுடைய தலைவர் சகோதரர் திரு. ஜி.ராமானுஜம் அவர்களே,

துணைத்தலைவர் தம்பி திரு.குணாநிதி அவர்களே! எனக்கு முன்னால் நன்றியுரை ஆற்றியிருக்கக்கூடிய மிருதங்க செல்வம் டாக்டர் பக்தவச்சலம் அவர்களே,

விருது பெற்றிருக்கக்கூடிய பெருமைக்குரிய விருதாளர்களே! இசை உலக மேதைகளே! இசை ரசிகர்களே!

வருகை தந்திருக்கக்கூடிய ஆன்றோர்களே! சான்றோர்களே!

எல்லாவற்றுக்கும் மேலாக, என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புக்களே!

உங்கள் அனைவருக்கும் என் அன்பான மாலை வணக்கம்.

என்னைப் பொறுத்தவரையில், இது ஒரு வித்தியாசமான மேடையாக அமைந்திருக்கிறது. முதலமைச்சராக நான் பொறுப்பேற்றதற்குப் பிறகு பங்கெடுக்கும் முதல் இசை மேடையாக இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது. அதற்காக நான் பெருமைப்படுகிறேன். இந்த விழாவிலே நான் விரும்பிப் பங்கெடுப்பதற்குக் காரணம், முத்தமிழ்ப்பேரவை என்பதுமுத்தமிழறிஞர்கலைஞர்அவர்களால்உருவாக்கப்பட்ட அமைப்பு. எனவே முத்தமிழ்ப் பேரவையின் சார்பில் அழைக்கிறார்கள் என்றால், என்னைப் பொறுத்தவரைக்கும் கலைஞரே என்னை அழைக்கிறார் என்கிற அந்த உணர்வோடு தான் இந்த நிகழ்ச்சியில் நான் பங்கெடுக்க வந்திருக்கிறேன்.

அதிலும் குறிப்பாக, என்னுடைய பெருமதிப்பிற்குரிய அமிர்தம் அவர்கள் அழைக்கிறார்கள் என்றால், அங்கும் நான் தட்டாமல் வருவேன், ஏன் என்றால், என்னைத் தட்டிக் கொடுத்து வளர்த்தவர். தட்டிக் கொடுத்து வளர்த்தவர் என்றால் அதில் இன்னொரு பொருளும் உண்டு, அவருக்கும் தெரியும், சிரித்த உங்களுக்கும் புரியும். மிகச் சிறுவயதில் இருந்தே என் மீது தனிப்பட்ட முறையில் அக்கறை கொண்டவர் அமிர்தம் அவர்கள்.

நான் ஒரு அரசியல் இயக்கத்தின் தலைவராக, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பணியாற்றி வருகிறேன் என்றால், என் வளர்ச்சிக்குப் பின்னால் எத்தனையோ பேருடையவழிகாட்டுதல் இருந்திருக்கிறது. அதில் நிச்சயமாக நம்முடைய அமிர்தம் அவர்களும் இடம் பெறுகிறார் என்பதை நான் மறக்காமல் சொல்லியாக வேண்டும். அவருடைய அழைப்பை ஏற்று, இந்த நிகழ்ச்சிக்கு நான் வந்திருக்கிறேன்.

இந்த முத்தமிழ்ப்பேரவை மட்டுமல்ல, இந்த ராஜரத்தினம் கலையரங்கமும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தான் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதும் எல்லோருக்கும் தெரியும்.

வாசலில், அரங்கின் முகப்பில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலையும் அமைக்கப்பட்டிருக்கிறது. 41ஆவது ஆண்டு விழாவை நீங்கள் கொண்டாடிக்கொண்டு இருக்கிறீர்கள். 1975ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களின் ஆலோசனையின்படி, இந்த முத்தமிழ்ப்பேரவை தொடங்கப்பட்டது.

எந்த அமைப்பையும் உருவாக்குவது மிகவும் சுலபம்.ஆனால்,உருவாக்கப்பட்ட அந்த அமைப்பை தொடர்ந்து செயலாற்ற வைப்பது என்பது கடினமான பணி. எவ்வளவோ சோதனைகளுக்கிடையில், எவ்வளவோ வேதனைகளுக்கிடையில், எவ்வளவோ பிரச்சினைகளுக்கிடையில், எவ்வளவோ சங்கடங்களுக்கிடையில் இதைக் கட்டிக் காத்து, இது இன்றைக்கு கம்பீரமாக 41ஆவது இசை விழாவை நடத்திக் கொண்டிருக்கிறது.தலைவர் கலைஞர் அவர்கள் எப்படிப்பட்ட தீர்க்கதரிசி என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இப்படி ஒரு அமைப்பை உருவாக்கி அதை நம்முடைய அமிர்தம் அவர்களின் கையில் ஒப்படைத்ததுதான்.

திரு. அமிர்தம் அவர்கள் கையில் ஒப்படைத்தால் தடையில்லாமல், தடங்கல் இல்லாமல், அதே நேரத்தில் தகுதியோடு இசை விழாக்களும் நடக்கும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் நம்பினார்கள். தலைவர் கலைஞர் அவர்களுக்குக் கொடுத்த அந்த வாக்குறுதியை நம்முடைய அமிர்தம் அவர்கள் நிறைவேற்றி வருகிறார் என்பதற்கு

அடையாளம் தான் இந்த விழா என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் கடந்த 50 ஆண்டு காலமாகக் கொடிகட்டிப் பறந்த அனைத்து இசை மேதைகளும் பாடிய அரங்கமாகவும்; பரிசும், விருதும் பெற்ற இடமாகவும் இந்த முத்தமிழ்ப்பேரவை இருப்பதுதான் தலைவர் கலைஞர் அவர்களது எண்ணத்திற்கு கிடைத்திருக்கக்கூடிய மாபெரும் வெற்றி.

41ஆவது ஆண்டு விழாவை இன்று கொண்டாடி, அந்த விழாவின் மூலமாக விருதுகளைப் பெற்றுள்ள விருதாளர்கள் அனைவரையும் முதலில் உங்கள் அனைவரின் சார்பில் நானும் பாராட்ட, வாழ்த்த, போற்ற கடமைப்பட்டிருக்கிறேன்.

❖ இயல் செல்வம் விருது - நம்முடைய இளம் இயக்குநர் திரு. த. செ. ஞானவேல் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அவர் பேசுகிறபோது சொன்னார், பெரியார் தோளில் அமர்ந்த காரணத்தால் அண்ணா எந்த அளவுக்கு உயர்ந்தார், அதேபோல், அண்ணாவினுடைய தோளிலே அமர்ந்த காரணத்தால் கலைஞர் எந்த அளவுக்கு உயர்ந்தார், கலைஞருடைய தோளிலே அமர்ந்த காரணத்தால் என்னைக் குறிப்பிட்டு எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறேன் என்று பெருமையோடு பேசினார். எனக்கு அதில் உடன்பாடு இருக்கிறதோ, இல்லையோ, நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால், என்னைப் பொறுத்தவரைக்கும் எல்லோருடைய தோளோடு தோளாக இருந்து உங்களில் ஒருவனாக நான் என்றைக்கும் இருப்பேன் என்ற உணர்வோடு இருக்கக்கூடியவன் நான் என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய

நிலையில் இல்லை என்பதை நான் தெளிவாக உணர்ந்திருக்கிறேன். என்னுடைய மனதில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய திரைப்படம் அவர் இயக்கிய 'ஜெய்பீம்' படம். ஆக, ஞானவேல் அவர்களுக்கு இந்த விருதை இன்றைக்கு நாம் வழங்கியிருக்கிறோம். அவருக்கு நான் விருது அளிப்பதையும் மகிழ்ச்சியாகவே கருதுகிறேன்.

'தமிழ் இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்ற திரு. ஞானவேல் அவர்கள், பத்திரிகையாளராக தனது வாழ்க்கையைத் தொடங்கியவர், பல்வேறு புத்தகங்களை எழுதியவர், மொழிபெயர்ப்பாளர், கடந்த பத்து ஆண்டுகளாக திரைத்துறையில் கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் எனப் பணியாற்றியிருக்கக்கூடியவர்.

அந்த வரிசையில் அவரது "ஜெய்பீம்" படம் பலரது மனச்சாட்சியை உலுக்கியது. என்னுடைய அருமை நண்பர் நடிகர் சூர்யா அவர்கள் அந்தப் திரைப்படத்தைப் பார்க்க வேண்டுமென்று சொல்லி எனக்கு அழைப்பு விடுத்தார், அதைப் போய்ப் பார்த்தேன். அந்த திரைப்படத்தைப் பார்த்துவிட்டு, இரண்டு, மூன்று நாட்களுக்கு நான் தூங்கவேயில்லை.

சிறைச்சாலைச் சித்ரவதையை நீங்கள் அந்த சினிமாவில் பார்த்திருப்பீர்கள். ஆனால் நான் அதை உண்மையில் அனுபவித்தவன் ஓராண்டுகாலம். அதனால், மற்றவர்களைவிட என்னை அந்தப் படம் கூடுதலாகப் பாதித்தது. இளம் வயதில், மிகப்பெரிய உயரத்தை அடைந்திருக்கக்கூடிய ஞானவேல் அவர்களை முத்தமிழ்ப்பேரவையுடன் இணைந்து நானும் உங்கள் அனைவரின் சார்பில் அவருக்கு என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

- ❖ இசைச் செல்வம் விருது - ராஜ்குமார் பாரதி அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது.

பாட்டுத் திறத்தாலே இவ்வையகத்தையே கவர்ந்திருக்கக்கூடிய மகாகவி பாரதியாரின் கொள்ளுப் பேரன் அவர் என்பதே அவருக்கு கிடைத்திருக்கக்கூடிய மிகப் பெரிய பெருமை. பாரதியாருக்கும் பாடுவதில் பெரும் விருப்பம் இருந்தது. ஆனால் அவர் முழுமையாக அந்தப் பணியைச் செய்யவில்லை. ஆனால், ராஜ்குமார் பாரதி வடிவத்தில் அந்த ஆசையை பாரதியார் அவர்கள் நிறைவேற்றிக் கொள்வதாக அது அமைந்திருக்கிறது.

ஐந்து வயதில் இசையைக் கற்றவர். இன்று இந்தியா மட்டுமல்ல, உலகம் முழுவதும் சென்று இசைக் கச்சேரிகளை நடத்துபவராக உயர்ந்து நிற்கிறார். பல்வேறு மொழித் திரைப்படங்களில் பாடியிருக்கிறார். பாரதியின் பாடல்களுக்கு இசையமைத்திருக்கிறார். இவர் பெறாத விருதே இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு பெயரும், பெருமையும் பெற்றுள்ள ராஜ்குமார் பாரதியை மனதார நான் பாராட்டுகிறேன். உங்கள் அனைவரின் சார்பில் அவருக்கு என்னுடைய வாழ்த்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

- ❖ நாட்டிய செல்வம் விருது - வி.பி.தனஞ்சயன் அவர்களுக்கும், அவருடைய மனைவி சாந்தா தனஞ்சயன் அவர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. இவர்கள் இருவரும் நாட்டிய இணையர்கள். தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியா முழுமைக்கும் புகழ்பெற்ற நாட்டிய இணையர்களாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடியவர்கள்.

மூன்று வயதில் இருந்தே நாட்டியம் ஆடிய கால்கள் அவருடைய கால்கள். உலகப் புகழ் பெற்ற ருக்மணி அருண்டேல்

அவர்களிடம் நாட்டியம் கற்றவர் அவர்கள். அடையாறில் பாரத கலாஞ்சலி என்ற பெயரில் நாட்டியப் பள்ளியை உருவாக்கி, தன்னைப் போலவே பல கலைஞர்களை தனஞ்செயனும், சாந்தா அவர்களும் உருவாக்கி வருகிறார்கள். அத்தகைய நாட்டிய இணையர்கள் இருவரையும் முத்தமிழ்ப் பேரவை பாரட்டுகிற அதே நேரத்தில் நானும் அவர்களைப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

❖ நாதசுரச் செல்வம் விருது - நாகேஷ் ஏ. பப்பநாடு அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

புகழ்பெற்ற நாதசுரக் கலைஞரான அன்னு சேகரின் மகனான இவர், தன் தனித்திறனால், இன்று இத்துறையில் பல்வேறு சாதனைகளை அவர் செய்து கொண்டிருக்கிறார். பப்பநாடு துர்கா பரமேஸ்வரி கோவிலில் 35 ஆண்டுகளாக பணியாற்றியவர். கருநாடக சங்கீத நிருத்ய அகாடமியின் உறுப்பினராகவும் இருக்கிறார்.நாதசுரக் கலையின் பாரம்பரியம் மாறாமல் பல புதுமைகளைச் செய்து வரும் நாகேஷ் ஏ.பப்பநாடு அவர்களைப் பாராட்டுகிறேன்.

❖ தவில் செல்வம் விருது - திரு. ராமேஸ்வரம் பா. இராதாகிருஷ்ணன் அவர்களுக்குத் வழங்கப்பட்டிருக்கிறது.

தவில் இசையில் கடந்த கால் நூற்றாண்டாக, தன்னிகரற்ற கலைஞராக வலம் வரக்கூடியவர் இராதாகிருஷ்ணன் அவர்கள். 2011ஆம் ஆண்டு முதல் தவில் கலையைதிருவாரூர் அரசு இசைக் கல்லூரியில் பயிற்றுவித்து வருகிறார். மேடைகளில் மட்டுமல்ல, மின்னணுப் பதிப்புகளையும் வெளியிட்ட அப்படிப்பட்ட திறமைக்கு உரியவர் இராதாகிருஷ்ணன் அவர்கள். அவரையும் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

- அனைத்துக்கும் மகுடம் வைத்தாற்போல, ராஜரத்னா விருதானது ஷேக் மெஹபூப் சுபானி அவர்களுக்கும், அவரது மனைவி காலீஷாபி மெஹபூப் அவர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

ஆந்திராவில் பிறந்தவர்களாக இருந்தாலும், தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் இணையர்கள் இவர்கள். நாதசுர இசை உலகில் பாரம்பரியம் மாறாத இசை ஆலாபனை வழங்குவதில் பெரிய அளவில் வரவேற்பைப் பெற்றவர்கள். தாத்தா, தந்தை, மகன் எனத் தொடரும் இசை மரபுக்குச் சொந்தக்காரர்கள். அவரைப் போலவே அவர் மனைவியும் நாதசுரக் கலைஞர். மகனும் நாதசுரக் கலைஞர். அத்தகைய இசைப் பரம்பரைக்குச் சொந்தக்காரர்களுக்கு இந்த விருது தரப்பட்டிருக்கிறது. தமிழ்ச் சமுதாயத்தில் வாழ்ந்த மாபெரும் மேதைகள் பலரும் பெற்ற விருதை நீங்கள் பெற்றுள்ளீர்கள். அத்தகைய மேதைகளின் வரிசையில் நீங்களும் ஒருவராக இடம்பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உங்கள் அனைவரையும் மனதார வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

முத்தமிழ்ப் பேரவையின் விருதுகளை இவர்கள் ஏற்றுக் கொண்டதால் முத்தமிழ்ப் பேரவை இன்றைக்கு பெருமை கொள்கிறது. இவர்களுக்கு விருது வழங்கியதன் மூலமாக நானும் பெருமை அடைகிறேன்.

உங்களது இசை மேதமைக்கு நான் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் இசையை ரசிப்பேன், சினிமாப்பாடல்களைப் பாடும் அளவுக்குதான் இசை ஆர்வம் எனக்கு உண்டு. ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் பாடல்கள் எழுதுவார்; ஆனால் பாடல்களைப் பாடுவது இல்லை. ஆனால் ஒருவர் பாடுவது சரியா? ஏதாவது பிழை இருக்கிறதா? என்பதை துல்லியமாகச் சொல்லும் வல்லமை, தலைவர் கலைஞர் அவர்களுக்கு உண்டு.

நாடகமாக இருந்தாலும், இசையாக இருந்தாலும், இயல் இலக்கியமாக இருந்தாலும் அவை அனைத்தும் மக்களின் உணர்வோடு கலந்த கலையாக இருக்கின்றன. உணர்வோடு கலந்த கலையாக இருந்தால்தான் அவை மக்களால் விரும்பிப் பார்க்கப்படுகின்றன. இக்கலைகளின் நோக்கம் மக்களை மேம்படுத்துவதற்காக இருக்க வேண்டும்.

இன்றைக்கு இசையானது பல பரிமாணங்களை அடைந்திருக்கிறது.

- ❖ நாட்டுப்புற இசை
- ❖ கருநாடக இசை
- ❖ மெல்லிசை
- ❖ திரையிசை
- ❖ தமிழ் ராப் இசை
- ❖ தமிழ் ராக் இசை
- ❖ தமிழ் கலப்பிசை (Remix)
- ❖ தமிழ் இயைபிசை (Fusion) - என தமிழ் இசை பல்கிப் பெருகியுள்ளது.

எத்தனை இசைகளாக வந்தாலும், வளர்ந்தாலும் அவை அனைத்தும் தமிழ் இசையாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

இசையைக் காக்க இயக்கம் நடத்திய மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. இசை நிகழ்ச்சிகளில் தமிழ்ப் பாடல்கள் மட்டுமே பாடப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய இயக்கம் தான் நம்முடைய திராவிட இயக்கம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

ராஜா அண்ணாமலையார் இந்த இயக்கத்திற்கு அடித்தளம் அமைத்தார். 1943ஆம் ஆண்டு இசைக் கல்லூரியையே தொடங்கினார். இசை மன்றங்களை இவர் தொடங்கினார். தமிழிசை மாநாடுகளை நடத்தினார். தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தப் பாடல்கள் தமிழ்நாட்டு மேடைகளில் ஒலித்தது. தமிழ்நாட்டில் எழுந்த தமிழிசை இயக்கத்திற்கு துணையாக இருந்தது திராவிட இயக்கம். தமிழ்நாட்டு இசை மேடைகளில் பாடப்படும் பாடல்கள் தமிழ்ப் பாடல்களாகத்தான் இருக்க வேண்டும் என்று 1940ஆம் ஆண்டில் தமிழிசை இயக்கத்தைத் தொடங்கியவர் ராஜா அண்ணாமலை அவர்கள். அப்போது பெரும்பாலான பாடல்கள் சமஸ்கிருதம் மற்றும் தெலுங்குப் பாடல்களாகத்தான் இருக்கும்.

"தமிழர்கள் நடத்தும் இசைக் கச்சேரிக்கு பாடக் கூடியவர்கள், தமிழ்ப்பாடல்களைப் பாட வேண்டாமா?" என்று கேட்டவர் யார் என்றால், தந்தை பெரியார் அவர்கள்.

ராஜா அண்ணாமலையாரும், ஆர். கே. சண்முகம் அவர்களும் சேர்ந்து உருவாக்கிய தமிழிசை இயக்கத்தை வரவேற்று பெரியார் அவர்கள் பக்கம், பக்கமாக எழுதினார்கள். வானொலி நிலையங்களுக்குச் சென்று தமிழ்ப் பாடல்களைத் தான் அதிகம் ஒலிபரப்ப வேண்டும் என்று போராடிய இயக்கம் தான் திராவிட இயக்கம்.

இசையாக இருந்தாலும், இலக்கியமாக இருந்தாலும், நாடகமாக இருந்தாலும், நாட்டியமாக இருந்தாலும் அதனால் இனத்துக்கு, மொழிக்கு, நாட்டுக்கு, நாட்டு மக்களுக்கு நன்மை இருக்க வேண்டும் என்று நினைக்கக்கூடிய இயக்கம் தான் திராவிட இயக்கம். இதை எல்லாம் சொல்வதால், நான் அரசியல் பேசுவதாக யாரும் கருதவேண்டாம். மக்களுக்காகக் கலைகள் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்

சொல்கிறேன். கலையில் மூடநம்பிக்கைகளை விதைக்கக் கூடாது! கலைகள் முற்போக்கு எண்ணம் கொண்டவையாக இருக்க வேண்டும்! கலையின் மூலமாக மனிதனின் சிந்தனைக் கதவு திறக்கப்பட வேண்டும்!

கலைகள் மனதுக்கு இதமானதாக மட்டுமல்ல, மானுடத்துக்கு பயனுள்ளதாக அமைய வேண்டும்! கலையும் வளர வேண்டும்! மக்களும் வளர வேண்டும்! அத்தகைய கலையை வளர்க்கும் அமைப்பாக இருக்கக்கூடிய இந்த முத்தமிழ்ப் பேரவையை நான் வாழ்த்துகிறேன், போற்றுகிறேன்.

பல நூறு ஆண்டு இந்த அமைப்பு செயல்பட்டு, தமிழ்க் கலைகளை வாழ்விக்க வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, விருது பெற்றவர்களை மீண்டும் வாழ்த்தி அனைவருக்கும் நன்றி கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
முத்தமிழ்ப் பேரவை 41ஆம் ஆண்டு இசைவிழாவில்
கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி
ஆற்றிய உரை - 06.06.2022

புதுக்கோட்டையில், ரூ.370 கோடி மதிப்பீட்டில் 48,868 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றியிருக்கக்கூடிய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. எஸ். இரகுபதி அவர்களே!

மாண்புமிகு சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்களே!

நிகழ்ச்சியில்பங்கேற்றுசிறப்பித்துக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள் திரு. கே.என். நேரு அவர்களே! திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களே!

திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்களே!

திரு. ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் அவர்களே!

திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களே!

திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே!

நேரத்தின் அருமை கருதி சுருக்கமாக உரையாற்றி பெருமை சேர்த்திருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மதிப்பிற்குரிய திரு. சு. திருநாவுக்கரசர் அவர்களே!

திரு. கார்த்தி ப. சிதம்பரம் அவர்களே!

செல்வி ஜோதிமணி அவர்களே!

திரு. நவாஸ் கனி அவர்களே!

திரு. எம்.எம். அப்துல்லா அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள்:

டாக்டர் முத்துராஜா அவர்களே!

திரு. எஸ்.டி. ராமச்சந்திரன் அவர்களே!

திரு. எம். சின்னத்துரை அவர்களே!

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ம. செல்வி அவர்களே!

உள்ளாட்சி அமைப்புக்களைச் சார்ந்திருக்கக்கூடிய பல்வேறு நிலைகளில் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகளே!

அரசு உயர் அலுவலர்களே! அன்பிற்கினிய சகோதரர்களே, அருமை தாய்மார்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள காவல் துறையைச் சார்ந்த அலுவலர்களே! தோழர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

நான் புதுக்கோட்டைக்கு வந்திருக்கிறேன். சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் தீட்டப்பட்டிருக்கக்கூடிய திட்டங்களுக்கு, அதற்கான உத்தரவுகளை எல்லாம் அந்தக் கோட்டையிலிருந்து பிறப்பித்து, அதை நிறைவேற்றுவதற்காக "புதுக்" கோட்டைக்கு வந்திருக்கிறேன்.

ஒரு காலத்தில் திருச்சி மாவட்டத்தோடு இருந்தது இந்த புதுக்கோட்டை. 1974ஆம் ஆண்டு அதனை பிரித்து, புதுக்கோட்டையை தனி மாவட்டமாக ஆக்கியவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். அப்போது, புதுக்கோட்டை அரண்மனை மாளிகையை விலைக்கு வாங்கி, மாவட்ட ஆட்சியர் அலுவலகமாக மாற்றி, அதற்கு இராஜா கோபால தொண்டைமான் மாளிகை என பெயர் சூட்டினார் தலைவர் கலைஞர் அவர்கள்.

இன்றைக்கு புதுக்கோட்டையில் உள்ள 6 தொகுதிகளில், 5 தொகுதிகளை மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வென்று, இந்த அரசின் கோட்டையாக இந்த புதுக்கோட்டை மாறியிருக்கிறது!

5 தொகுதிகளில் வெற்றி பெற்றாலும், இந்த மாவட்டத்தில் உள்ள தொகுதி மக்களுக்காக, ஏன், இந்த மாநிலத்தில் உள்ள 234 தொகுதி மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி, பாடுபட்டு வரக்கூடிய அரசினுடைய முதலமைச்சராக நான் இங்கு வந்திருக்கிறேன்.

எந்தக் கோட்டையாக இருந்தாலும் அது ஒரு நாள் பழைய கோட்டையாக ஆகிவிடும். ஆனால் எப்போதும் புதிய-கோட்டையாகவே இருப்பது, இந்த புதுக்கோட்டை!

அமைச்சர் திரு. ரகுபதி அவர்களும், அமைச்சர் திரு. மெய்யநாதன் அவர்களும் இந்த விழாவை ஆட்சித் தலைவரின் ஒத்துழைப்போடு, அரசு அதிகாரிகள், அலுவலர் பெருமக்கள், மக்கள் பிரதிநிதிகளுடைய உற்சாகத்தோடு மிக எழுச்சியோடு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

திரு. மெய்யநாதன் அவர்கள் அமைச்சரவைக்குப் புதியவராக இருந்ததாலும், அவர் எப்படிச் செயல்படுவார் என்கிற தயக்கம் எனக்கு முதலில் இருந்தது. ஆனால் முதல் முறை சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தபோதும், இப்போது ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகு தனது துறைக்கான மானியக் கோரிக்கைக்குப் பதில் அளித்து பேசிகிறபோது, ஒரு தேர்ந்த அமைச்சராக-இரண்டாவது முறையாக அமைச்சராக அவர் பொறுப்பேற்றிருக்கிறார் என்ற அளவிற்கு அவர் அழகாகப் பேசினார்.

சுற்றுச்சூழல் துறை என்பது கொஞ்சம் டெக்னிக்கலான துறை! இன்றைய உலகில் மிக முக்கியமான துறையும் கூட! அதிலும் தனிப்பட்ட ஆர்வத்தைச் செலுத்தி அந்தத் துறையில் சிறப்பாக ஆளுமையை அவர் செலுத்தி வருகிறார்.

அதுமட்டுமல்ல, விளையாட்டுத் துறையிலும் தமிழ்நாடு பல்வேறு சாதனைகளைப் படைக்க, அவரது உற்சாகம் காரணமாக அமைந்திருக்கிறது.

அமைச்சர் ரகுபதி அவர்களைப் பற்றி நான் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை! அரசின் பல்வேறு சட்டங்களை நிறைவேற்றுவதிலும், தமிழக அரசின் வழக்குகளைத் திறம்பட கையாண்டு மாநில உரிமைகளை நிலைநாட்டுவதிலும் திரு. ரகுபதி அவர்களின் பங்கு இன்றியமையாத பங்காக அமைந்திருக்கிறது.

தமிழகத்திற்கு நல்ல அமைச்சர்களைக் கொடுத்த இந்த புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தலைவர் கலைஞரின் பாசத்துக்குரிய மாவட்டமாக இந்த புதுக்கோட்டை மாவட்டம் இருந்த காரணத்தினால்தான்,

புதிய பேருந்து நிலையம்

மகளிர் கல்லூரி

சிப்காட் தொழிற்பேட்டை

சிட்கோ தொழிற்பேட்டை

குடுமியான்மலை அண்ணா பண்ணை

காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

புதுக்கோட்டை நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டம்

அரசு மருத்துவமனை மற்றும் இராணியார் மருத்துவமனைகளின் புதிய கட்டமைப்புகள்.

ஆகிய அனைத்தையும் புதுக்கோட்டைக்கு உருவாக்கிக் கொடுத்தார்.

புதுக்கோட்டை நகராட்சி செலுத்த வேண்டிய குடிநீர்க் கட்டணம் ரூ.50 கோடியை செலுத்தி நகராட்சியை கடனிலிருந்து விடுவித்தவர் தான் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இப்படி புதுக்கோட்டைக்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

இத்தகைய புதுக்கோட்டையை உருவாக்கிய ஆட்சிதான், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி! கடந்த ஓராண்டு காலத்தில், ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு அடைந்த பயன்கள் உங்களுக்குத் தெரியும்.

அதில் இந்த புதுக்கோட்டை மாவட்டமும், இந்த மாவட்டத்தின் மக்களான நீங்கள் அடைந்த பயன்களையும் நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

❖ உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ், பெறப்பட்ட 7,463 கோரிக்கை மனுக்களில், 3,614 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

❖ 2 இலட்சம் எண்ணிக்கையிலான மகளிர்கள் கட்டணமில்லாமல் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

❖ கூட்டுறவு வங்கிகளில் நகைக் கடன் பெற்ற 170 பயனாளிகளின் நகைக்கடன் ரத்து செய்யப்பட்டுள்ளது.

❖ 4,68,519 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4 ஆயிரம் தரப்பட்டுள்ளது.

❖ 14 வகையான அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பை, 4,72,109 பேர் பெற்றிருக்கிறார்கள்.

❖ 4,82,187 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பு தரப்பட்டிருக்கிறது.

❖ 968 முகாம்வாழ் இலங்கை தமிழர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

❖ கொரோனா நோய்த் தடுப்புக்காக – 51,960 நோய் எதிர்ப்பு சக்தி உருவாக்கும் மாத்திரைகள் வழங்கப்பட்டிருக்கிறது.

❖ முதல் தவணை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் - 12,69,499 பேர்.

இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் - 11,35,783 பேர்.

❖ காவல்துறை சார்ந்த 1,716 நபர்களுக்கு ரூ.5,000 வீதம், ரூ.85,80,000 ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

❖ கொரோனா தொற்றால் பெற்றோரை இழந்திருக்கக்கூடிய குழந்தைகளுக்கு ரூ.3 இலட்சம் நிதியை 110 குழந்தைகள் பெற்றிருக்கிறார்கள்.

❖ 316 திருக்கோயில்களில் பணிபுரியும் 316 பூசாரிகளுக்கு ரூ.1,000 ஊக்கத்தொகையாக, ரூ.3,16,000 வழங்கப்பட்டிருக்கிறது.

❖ திருக்கோயில் புனரமைப்புப் பணிக்காக ரூ.1.62 கோடி, இம்மாவட்டத்திலுள்ள 81 கோயில்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

❖ அதுமட்டுமல்லாமல், கடந்த ஓராண்டில், 1,254 நபர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் 1 கோடியே 50 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

❖ அதேபோல், ஆதரவற்ற மாற்றுத்திறனாளிகள் 895 நபர்களுக்கு, 1 கோடியே 7 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயும், கணவரால் கைவிடப்பட்ட 51 பெண்களுக்கு ரூ.6.12 இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

❖ கைம்பெண்களுக்கான உதவித்தொகை – 844 நபர்களுக்கு 1 கோடியே 1 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

❖ உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முதியோர் உதவித்தொகை 97 நபர்களுக்கு ரூ.11.64 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது.

❖ இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் உள்ள 963 நபர்களுக்கு பணிக்கொடை ரூபாய் 37 கோடியே 97 இலட்சத்து 7 ஆயிரம் வழங்கப்பட்டிருக்கிறது.

இப்படி பல்லாயிரக்கணக்கானோர் பல்வேறு திட்டங்களின் மூலமாக பயனடைந்துள்ளார்கள்.

அந்த வரிசையில்தான் இன்றும் இன்னும் சில முக்கியமான திட்டங்களை நான் இங்கே துவக்கி வைக்கிறேன்.

❖ ரூ.81.31 கோடி மதிப்பீட்டில் முடிவுற்றிருக்கக்கூடிய 140 திட்டப்பணிகளை துவக்கி வைத்துள்ளேன்.

❖ ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில், ரூ.10.37 கோடி செலவில், 34 முடிவுற்ற திட்டப் பணிகள்

❖ நகராட்சி நிருவாகத் துறை சார்பில் ரூ.3 கோடி மதிப்பில் 12 பணிகள்

❖ கறம்பக்குடி பேரூராட்சி வடக்குத் தெரு நியாயவிலைக் கடை கட்டடம்

❖ மருத்துவத் துறை சார்பில் 26 பணிகள்

❖ கந்தவர்வக்கோட்டையில் கால்நடை மருத்துவமனைக் கட்டடம்

❖ புதுக்கோட்டையில் இசைப்பள்ளிக் கட்டடம்

❖ அருள்மிகு முத்துமாரியம்மன் கோவிலுக்கு அடிப்படை வசதிகள்

❖ பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வு மையங்கள் - கணினி அறைகள்

❖ அறந்தாங்கியில் நில அளவர் அலுவலகம்

❖ புதுக்கோட்டையில் அன்னை சத்தியா நினைவு குழந்தைகள் காப்பகத் திட்டம்

❖ அங்கன்வாடி மையங்கள்

❖ கோட்டைப்பட்டினத்தில் மீன் உலர் களம்

❖ தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கட்டடங்கள்

❖ புதுக்கோட்டையில் செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம்

❖ புதுக்கோட்டையில் தொழில் பயிற்சி வளாகத்தில் தங்கும் விடுதிகள்

❖ அண்டக்குளத்தில் சித்த மருத்துவ புதிய கட்டடம்

❖ பிராமணவயல் துணை வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடம்;

❖ கறம்பக்குடி அரசு கலை கல்லூரியில் வகுப்பறைகள்

❖ இலுப்பூர், இடையப்பட்டியில் குடியிருப்புகள்

❖ 15 இடங்களில் சிறுதானிய விற்பனை நிலையங்கள் என மொத்தம் ரூ.81.31 கோடி செலவில், 140 பணிகள் முடிவுற்று இன்றைக்கு இந்த விழாவிலே திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

ரூ.166.84 கோடி மதிப்பீட்டிலான 1,399 புதிய திட்டப்பணிகளுக்கு நான் அடிக்கல் நாட்டியிருக்கிறேன்.

❖ புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தின் முதல் தளத்தில் பார்வையாளர்கள் தங்குவதற்கான சிறப்புக் கட்டடம்

❖ புதுக்கோட்டை நகர் பகுதிகளில், 14 இடங்களில் உயர் மின் கோபுர விளக்குகள் அமைத்தல்

❖ பல்வேறு பேரூராட்சிகளில் தார்ச்சாலைகள் அமைத்தல்

❖ சிறிதும் பெரிதுமான ஊரக உள்ளாட்சிப் பகுதிகளில், ரூ.85.77 கோடி மதிப்பீட்டில் 1,324 திட்டப் பணிகள்;

❖ வம்பன் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைத்தல்

❖ துணை சுகாதார நிலையங்கள் அமைத்தல்

❖ புதிய அங்கன்வாடி மையங்கள் அமைத்தல்

❖ பிள்ளைத்தண்ணீர் பந்தலில் கால்நடை மருந்தகக் கட்டடம் அமைத்தல்

❖ ஆதனக்கோட்டை, பேரனூரில் வேளாண்மை விரிவாக்க மையம் கட்டுதல்

❖ துலையனூர், கீழாத்தூர் ஆகிய இரண்டு புதிய அரசு கலை அறிவியல் கல்லூரிகள் கட்டுதல்

❖ கொடியாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்

❖ முத்துக்குடா கடற்கரையில் படகுசவாரி அமைத்தல்

ஆகிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அதாவது ரூ.166.84 கோடி மதிப்பீட்டில் 1,399 திட்டப் பணிகளுக்கு

இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இவை பொதுமக்கள் அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய திட்டங்களாகும்.

தனிநபர்கள் பயன்பெறக்கூடிய வகையில் 48,868 பயனாளிகளுக்கு ரூ.370 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கிறது.

❖ ரூ.81.31 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 140 திட்டப் பணிகளைத் திறந்து வைத்திருக்கிறேன்.

இத்திட்டப் பணிகள் மட்டுமல்லாமல், இந்த மாவட்டத்தினுடைய மக்கள் மேலும் பயனடையும் வகையில் பின்வரும் திட்டங்களை இப்போது நான் அறிவிக்கப் போகிறேன்.

திருமயம் பகுதி மக்கள் பயன்பெறக்கூடிய வகையில், ரூ.10 கோடி செலவில், கூடுதல் படுக்கைகள், நவீன அறுவை சிகிச்சை அரங்கம் போன்ற வசதிகளோடு, திருமயம் வட்ட மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்.

இந்த மாவட்டத்தில் முக்கிய மீன்பிடிப்பு மையங்களாக இருந்துவரும் கோட்டைப்பட்டினம் மற்றும் ஜெகதாப்பட்டினம் பகுதிகளில் வாழக்கூடிய மீனவ மக்களின் நீண்டகால கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில், கோட்டைப்பட்டினம் மீன் இறங்குதளம் ரூ.15 கோடி செலவிலும், ஜெகதாப்பட்டினம் மீன் இறங்குதளம் ரூ.15 கோடி செலவிலும் மேம்படுத்தப்படும். மேலும் ஜெகதாப்பட்டினத்தில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மொத்தமாகச் சொல்வதாக இருந்தால், மாநிலம் முழுமைக்கும் என்ன தேவை, ஒவ்வொரு மாவட்டத்திற்கும்

என்ன தேவை, ஒவ்வொரு தனிமனிதனின் தேவையும் என்ன என்பதைப் பார்த்துப் பார்த்துச் செய்யக்கூடிய அரசாக நம்முடைய தமிழ்நாடு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டைக் கல்வியில், வேலைவாய்ப்பில், தொழில் வளர்ச்சியில், உள்கட்டமைப்பில் சிறப்புற வளர்த்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இவை அனைத்தையும் விஞ்சியதாக சாமானியர் வாழ்க்கையைப் பற்றியே, தலைவர் கலைஞர் அவர்கள் நினைத்தார்கள். இந்த அடிப்படையில்தான், இன்றைக்கு உங்களால் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த அரசு செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

❖ ஏழை, எளிய மக்களில் எத்தனை பேரின் வாழ்க்கைத் தரம் இந்த ஆட்சியால் உயர்ந்தது என்பதை இந்த ஆட்சியின் சாதனையாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

❖ ஏழை, எளிய விளிம்பு நிலை மக்கள் தங்கள் கோரிக்கைக்காக அரசாங்கத்தை சுலபமாக அணுகும் வகையில் அரசு இயந்திரம் செயல்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

❖ பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தவர், பழங்குடியினரின் சமூக வாழ்க்கை எவ்வளவு மேன்மை அடைந்திருக்கிறதோ, அதனையே நான் சாதனையாக நினைக்கிறேன்.

❖ அதுமட்டுமல்லாமல், இருளர்கள், நரிக்குறவர்கள் போன்ற சமுதாயத்தைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள் விளிம்பு நிலை மக்களின் அரசாக இது செயல்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

❖ மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் போன்ற குரலற்றவர்களின் குரலாக இந்த அரசு இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

❖ இத்தகையமக்களுக்குத்தேவையான அனைத்தையும் பார்த்துப் பார்த்து செய்து தர வேண்டும் - சிந்தித்துச் சிந்தித்து நிறைவேற்றித் தர வேண்டும் என்று நாம் நினைக்கிறோம்.

வளர்ச்சி என்ற பாதையை டெவலப்மெண்ட் என்ற பொதுவான அர்த்தத்தில் சொல்லவில்லை.மாற்றம்,மேன்மை, உள்ளார்ந்த மலர்ச்சி என்ற பண்பாட்டு அடையாளத்துடன் நாங்கள் சொல்கிறோம்.

ஒரு தொழிற்சாலை உருவாவது வளர்ச்சி. அந்தத் தொழிற்சாலை வருவதன் மூலமாக அந்த வட்டாரம் அடையக்கூடிய பயன், அந்த வட்டாரத்தை அடையக்கூடிய வேலைவாய்ப்புகள், அதன் மூலமாக அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் அடையக்கூடிய உயரம், சமூகத்தில் ஏற்படும் மாற்றம் ஆகிய அனைத்தையும் சேர்த்துத்தான் வளர்ச்சி என்று சொல்கிறோம். அத்தகைய வளர்ச்சியை உருவாக்க நாங்கள் நினைக்கிறோம்.

ஒரு பெருந்தொழிற்சாலையை உருவாக்கி, எத்தனை பெண்களுக்கு வேலை கொடுத்துள்ளது? மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்டங்கள் எத்தனை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன?

ஆகவே, இதைத்தான் கம்பீரமாகச் சொல்கிறோம், இதுதான் 'திராவிட மாடல்' ஆட்சி என்று பெருமையோடு சொல்லிக் கொண்டிருக்கிறோம். இதுதான் அதனுடைய உள்ளடக்கம்!

விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கைத் தேவையையும் பூர்த்தி செய்வதுதான் திராவிட மாடல்.

மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமானால், அதிகாரத்துக்கு வந்தாக வேண்டும் என்பதை உணர்ந்ததால், தேர்தலில் குதித்த திராவிட முன்னேற்றக் கழகம், மக்கள்தான் எங்களுக்கு முக்கியமே தவிர, இப்படிப்பட்ட பதவிகள் அல்ல. எத்தகைய திட்டத்தைக் கொண்டு வந்தாலும், அதனை வாக்கு வாங்கக்கூடிய தந்திரம் என்று கொச்சைப்படுத்துபவர்கள் சிலர் இருக்கிறார்கள். வாக்குகளை வாங்குவதற்காகத்தான் இதை எல்லாம் நிறைவேற்றுகிறோம் என்று குற்றம் சாட்டக்கூடியவர்கள், விமர்சனம் செய்யக்கூடியவர்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள்.

நான் கேட்கிறேன், இருளர்களுக்கோ, குறவர்களுக்கோ, மாற்றுத்திறனாளிகளுக்கோ, திருநங்கைகளுக்கோ அவர்களுக்கு வாக்கு வங்கி அதிகமாக இருக்கிறதா? அவர்கள் வாக்கு வங்கி உள்ளவர்களா?

இப்படி வாக்கு வங்கி இல்லாதவர்களது வாழ்க்கைக்கும், அவர்களது சேவைக்கும் உதவிகளைச் செய்யும் அரசு தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு என்பதை நீங்கள் புரிந்து கொண்டாக வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய நோக்கம், சிந்தனை, செயல் ஆகிய அனைத்தும் மக்கள் நலன்தான், சாதாரண மக்களின் நலன்தான், ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்தான்.

தன்னுடைய வாழ்நாள் முழுக்க கடைசி நாள் வரை, கடைசி நொடி வரை மூத்திரவாளியைச் சுமந்துக் கொண்டு, பகுத்தறிவை ஊட்டி எந்த மக்களின் சுயமரியாதைக்காக தந்தை பெரியார் பாடுபட்டாரோ!

உலக அரசியலை எல்லாம் எடுத்துச் சொல்லி, அரசியல் எழுச்சியையும், தமிழ் உணர்வையும் பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்த மக்களுக்காக உணர்வு ஊட்டினாரோ!

“எங்களை எல்லாம் உருவாக்கிய பெரியார் அவர்களுடைய மொழியில், இது மூன்றாம் தர அரசு கூட அல்ல, நான்காம் தர அரசு. நாங்கள் நான்காவது தரத்தைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள்; ஆகவே, நாலாந்தர அரசு நாட்டிலே இருக்கிறது. நாலாந்தர மக்களுடைய நல்வாழ்வுக்காகப் பாடுபடும் அரசு இது என்பதை இறுமாப்போடு, பெருமையோடு, கர்வத்தோடு - பெரியார் அவர்களுடைய பெயரிலும், பெருமகனார் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரிலும் சொல்லிக்கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்” என்று சமூகநீதிக்காகவும் சமத்துவத்துக்காகவும் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் எந்த மக்களுக்காகப் பாடுபட்டாரோ, அந்த மக்களின் அரசுதான் இன்று கோட்டையில் நடக்கிறது. அந்த மக்களுக்கான அரசையே தொடர்ந்து நடத்துவோம் என்பதை நான் இங்கு உங்கள் முன்னால் நின்று முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகிய நான் இங்கேயும் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே, இங்கே பேசியிருக்கக்கூடிய பல சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரவர் தொகுதியில் இருக்கக்கூடிய சில பிரச்சினைகளை, கோரிக்கைகளைச் சுட்டிக்காட்டி, ஆனால், அதே நேரத்தில் ஏற்கெனவே சொன்ன அந்த உறுதிமொழியை,வாக்குறுதியை ஓரளவுக்கு காப்பாற்றப்பட்டிருக்கிறது,மகிழ்ச்சியடைகிறோம், அதற்காக நன்றி சொல்கிறோம் என்றும் சொன்னார்கள். ஆகவே, இன்னும் சில கோரிக்கைகள், பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும், நான் மறுக்கவில்லை. இங்கே

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. திருநாவுக்கரசர் அவர்கள் பேசுகின்றபோது, அவர் சொன்னதை நான் வழிமொழிகிறேன் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் என்னென்ன கோரிக்கைகளை இங்கேமட்டுமல்ல, சட்டமன்றத்திலும் சரி, மக்கள் மன்றத்திலும் சரி எந்தக் கோரிக்கைகளை வைத்தாலும் அதில் இருக்கக்கூடிய உண்மையை, நியாயத்தை இந்த அரசு புரிந்துகொண்டு, அதற்குரிய நடவடிக்கையை நிச்சயமாக, நாங்கள் உறுதியாக எடுப்போம் என்ற நம்பிக்கையை, உறுதியை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, உங்கள் அனைவரையும் சந்தித்து உரையாற்றக்கூடிய இந்த வாய்ப்பினைப் பெற்றமைக்கு மீண்டும் ஒரு முறை நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற
அரசு விழாவில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,
முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, அரசு நலத்திட்ட
உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி
ஆற்றிய உரை - 08.06.2022

சிவகங்கையில், ரூ.136.45 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்

சிவகங்கை மாவட்டம் கோட்டை வேங்கப்பட்டியில் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்தைத் திறந்து வைத்து, இந்தப் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப்பணிகளைத் துவக்கி வைத்து, அனைத்தையும் ஒன்றிணைத்து நடத்தக்கூடிய இந்தச் சிறப்பான நிகழ்ச்சிக்கு தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்களே!

நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள் திரு. கே.என். நேரு அவர்களே!

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களே!

திரு. எஸ். இரகுபதி அவர்களே!

திரு. ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் அவர்களே!

திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்களே!

உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் என்னுடைய மதிப்பிற்குரிய சகோதரர் திரு. கார்த்தி சிதம்பரம் அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழரசி அவர்களே! திரு. மாங்குடி அவர்களே! ஊரக வளர்ச்சித் துறையின் முதன்மைச் செயலாளர் திருமதி பி. அமுதா, இ.ஆ.ப., அவர்களே!

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பி. மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய மாவட்ட வருவாய் அலுவலர் திரு. மணிவண்ணன் அவர்களே!

மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு. பொன் மணிபாஸ்கரன் அவர்களே!

உள்ளாட்சி அமைப்பைச் சார்ந்திருக்கக்கூடிய பிரதிநிதிகளே!

அரசு உயர் அலுவலர்களே!

நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்காக இங்கே வருகை தந்திருக்கக்கூடிய அன்பிற்கினிய சகோதரர்களே! சகோதரிகளே!

பெரியோர்களே! தாய்மார்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

சட்டம் - ஒழுங்கை சிறப்பான வகையில் பேணிப் பாதுகாத்து வரக்கூடிய காவல் துறை தோழர்களே!

சிறப்புக்குரிய சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்திருக்கக்கூடிய அன்பிற்கினிய தாய்மார்களே! சகோதரிகளே! பெரியோர்களே! நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

வீரம் விளைந்த இந்த சிவகங்கை மண்ணில் நடைபெறும் இந்த சிறப்பான விழாவில் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

யாருக்கும் அஞ்சாத முத்து வடுகநாதர் - அந்த முத்து வடுகநாதர் மரணத்துக்குப் பிறகு தன்னோடு தாலியை காணிக்கையாக்கி, களத்தில் குதித்த வீரமங்கை தான் வேலுநாச்சியார் அவர்கள். அவர்களுக்குப் பிறகு, அவர்களுடைய மகள் வெள்ளை நாச்சியார் என்று மண்ணைக் காக்க, குடும்பம் குடும்பமாகத் தியாகம் செய்த பூமி தான், இந்த சிவகங்கை பூமி என்பதைப் பெருமையோடு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தியாவின் விடுதலைக்காகப் போராடுவதில் நாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை என்று நிரூபித்த மண்தான், இந்த சிவகங்கை சீமை!

வீரத்துக்கு - மருது சகோதரர்கள்!

கவிதைக்கு - கவியரசு கண்ணதாசன்!

இறையியலுக்கு - தவத்திரு குன்றக்குடி அடிகளார்!

என்று இந்த தமிழினத்துக்கு பெருமதிப்புக்கு உரியவர்களை வாரி வழங்கிய மண், இந்த மண்! அத்தகைய சிறப்புக்குரிய இந்த

மண்ணில் அரசின் சார்பிலே நிறைவேற்றப்பட்ட, நிறைவேற்றப்படவிருக்கக் கூடிய பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த மாவட்டத்தில் அமைச்சராக இருக்கக்கூடியவர் ஊரகவளர்ச்சித் துறையினுடைய அமைச்சராக பொறுப்பை ஏற்றிருக்கிறார், என்னுடைய அருமை சகோதரர் பெரியகருப்பன் அவர்கள். பெயரைப் போலவே பெரிய விழாவாக இதை நடத்திக் கொண்டிருக்கிறார்.

பெரிய செயலுக்குரியவர்

பெரிய சிறப்புக்குரியவர்

பெரிய மீசைக்குரியவர்

அந்த வகையில் என்னுடைய பாராட்டுக்குரியவர் நம்முடைய பெரியகருப்பன் அவர்கள்!

இந்த மாவட்டத்தில் மட்டுமல்ல, அவர் ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய ஊரக வளர்ச்சித்துறையில் எந்தத் திட்டமாக இருந்தாலும், அதை கண்ணும் கருத்துமாகக் கவனித்துநிறைவேற்றக்கூடியவராக பெரியகருப்பன் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்போடு ஏற்பாடு செய்திருக்கக்கூடிய அவருக்கும், சிவகங்கை மாவட்ட நிருவாகத்திற்கும், ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், அதற்கு துணைநின்று பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அரசு அலுவலர்கள் அனைவருக்கும் நான் நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், கண்ணமங்கலப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட 'கோட்டை

வேங்கைப்பட்டி' கிராமத்தில் இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்பாக தந்தை பெரியார் பெயரில் அமைந்திருக்கக்கூடிய தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்தைத் திறந்து வைத்துவிட்டு இந்த நிகழ்ச்சிக்கு வந்ததில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நம்முடைய உள்ளத்தில் என்றைக்கும் நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய கனவுத் திட்டங்களில் ஒன்று தான் சமத்துவபுர திட்டம்!

'சாதியை ஒழித்தல் ஒன்று - தமிழை வளர்த்தல் மற்றொன்று' - என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடினார்.

இந்த அடித்தளத்தில் உருவாக்கப்பட்டதுதான் நம்முடைய திராவிட இயக்கம்!

தந்தை பெரியார் அவர்களின் கொள்கையினை நிலைப்படுத்தும் வகையிலும், பேரறிஞர் அண்ணாவின் கோட்பாடுகளை செயல்படுத்தும் விதமாகவும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய சமத்துவபுரங்கள், அந்த எண்ணத்திலே தான் சமத்துவபுரத்தை உருவாக்கி, சமூகநீதியினை நிலைநாட்டி, அனைத்து சமுதாய மக்களும் சாதி-மத பேதமின்றி, சமுதாயத்தில் மட்டுமல்ல, சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வின்றி ஒரே குடும்பமாக,சமத்துவமாக வாழ வேண்டும் என்று கனவு கண்டார்.

1997ஆம் ஆண்டு தந்தை பெரியார் அவர்களின் பெயரில் சமத்துவபுரத்தினை ஏற்படுத்தி, தமிழகம் முழுவதும் சமத்துவபுரங்களைக் கட்டி, சமூக நல்லிணக்கத்திற்கு ஒரு புதிய ஒளியைக் காட்டினார்.

சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் 9 சமத்துவபுரங்கள் கட்டப்பட்டது. அதில், 8 சமத்துவபுரங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு, நாம் ஆட்சிப் பொறுப்பில் அன்றைக்கு இருந்தபோதே அது வழங்கப்பட்டது. திரு. பெரியகருப்பன் அவர்கள் சொன்ன மாதிரி, இந்த கோட்டை வேங்கைப்பட்டி சமத்துவபுரமும் முன்கூட்டியே செயல்பட்டிருக்க வேண்டும்.

இந்த கிராமத்தில் பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கு 2010-2011ஆம் நிதியாண்டில் அனுமதி அளிக்கப்பட்டது. ரூ.207 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட நிலையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதன் காரணமாக, இந்தச் சமத்துவபுரம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவில்லை.

இந்த நிலையில்தான், தற்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு, மன்னிக்க வேண்டும், நம்முடைய அரசு அமைந்ததற்குப் பிறகு, ரூ.317 இலட்சம் மதிப்பீட்டில் முழுமையாக சரிசெய்யப்பட்டு, பழுது பார்க்கப்பட்டு, புனரமைக்கப்பட்டு பயனாளிகளுக்கு இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

மக்களுக்கான திட்டங்களைக் கடந்த அ.தி.மு.க. அரசு எப்படியெல்லாம் பாழ்படுத்தியது என்பது இந்த விழாவை சாட்சியாக நீங்கள் பார்க்கலாம். கடந்த ஆட்சியானது மக்களுக்கான ஆட்சியாக இல்லாமல், அரசியல் உள்நோக்கம் கொண்ட ஆட்சியாக இருந்த காரணத்தால்தான் இப்படியெல்லாம் நடந்து கொண்டார்கள்.

❖ இந்தச் சமத்துவபுரத்தில் 12 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் 100 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

❖ ஒவ்வொரு வீடும் 290 சதுர அடியில் ரூ.1.92 இலட்சம் மதிப்பீட்டில்,

குடிநீர் வசதி,

மின்வசதி,

மழைநீர் சேகரிப்பு தொட்டி,

வீட்டுக்காய்கறி தோட்டம்,

மூலிகைத் தோட்டம்,

வீட்டிற்கு 2 தென்னை மரங்கள்,

கழிப்பிட வசதி

போன்றவைகள் இணைத்து 5 சென்ட் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.

❖ ரூ.15.87 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வசதியும் செய்து தரப்பட்டுள்ளது.

❖ அது மட்டுமல்ல, அறிஞர் அண்ணா விளையாட்டுத் திடல்,

❖ அதேபோல,குழந்தைகள் விளையாட கலைஞர் சிறுவர் பூங்காவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

❖ சமத்துவபுரத்தின் முகப்பில் தந்தை பெரியாரின் மார்பளவுச் சிலையும் அமைக்கப்பட்டிருக்கிறது.

❖ அங்கு வசிக்கும் 100 குடும்பங்களுக்கும், அரசால் வழங்கப்படும் குடிமைப்பொருட்கள் நியாய விலைக்கடையும் அமைக்கப்பட்டிருக்கிறது.

❖ அனைத்து தெருக்களிலும் மின் விளக்குகளும்,

❖ மழைக்காலத்தில் தெருக்களில் தண்ணீர் தேங்காத வகையில் மழைநீர் வடிகால்களும் அமைக்கப்பட்டிருக்கிறது.

❖ ரூ.54.29 இலட்சத்தில் அனைத்து தெருக்களும், தார் சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளன.

❖ அதோடு, அங்கன்வாடி மையம் மற்றும் நூலகம் மறைந்த அமைச்சராக இருந்த நம்முடைய மதிப்பிற்குரிய மாதவன் அவர்கள் பெயரிலே தான் அந்த நூலகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதெல்லாம் அனைத்துச் சமுதாய மக்களும் ஒற்றுமையுடன் வாழ, ஒருமித்த கருத்தோடு வாழ முன்னெடுக்கப்பட்டிருக்கக்கூடியது மட்டுமல்ல, இந்தச் சமத்துவபுரங்களில், வேறுபாடுகளைக் கடந்து ஒற்றுமையுடன் நீங்கள் வாழ்ந்து, இந்த நாட்டிற்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். உங்களைப் பார்த்து அனைவரும் சமத்துவத்தைப் போற்றி, "இந்த நாடே சமத்துவபுரமாகத் திகழ வேண்டும்" என்ற நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எண்ணத்தை நாம் நினைவாக்க வேண்டும்!

சமத்துவபுர திறப்புவிழா மட்டுமல்ல, பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படக்கூடிய விழாவாக இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

❖ நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ.63.35 கோடி மதிப்பீட்டில், 51 திட்டப்பணிகளும்,

❖ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.42.48 கோடி மதிப்பீட்டில், 69 பணிகளும்,

❖ நீர்வளத்துறையின் சார்பில் ரூ.7 கோடி மதிப்பீட்டில், 1 திட்டப்பணிக்கும்,

❖ நெடுஞ்சாலைத்துறையின் (நபார்டு) சார்பில் ரூ.4.95 கோடி மதிப்பீட்டில், 1 திட்டப்பணிக்கும்,

❖ மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் ரூ.1.90 கோடி மதிப்பீட்டில், 5 பணிகளும் என மொத்தம் ரூ.119.68 கோடி மதிப்பில், 127 பணிகளுக்கான அடிக்கல்நாட்டுவிழாவைநான் இந்தமேடையில்உங்களுக்கு முன்னால் நிறைவேற்றியிருக்கிறேன்.

அதேபோல் இந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய மக்கள்பயன்பெறக்கூடியவகையில்,தொடங்கிவைக்கக்கூடிய பணிகள் என்னவென்று சொன்னால்,

❖ தமிழ்நாடுமின்உற்பத்திமற்றும்பகிர்மானக்கழகத்தின் சார்பில், ரூ.5.82 கோடி மதிப்பீட்டில், 1 திட்டப்பணியும்,

❖ பேரூராட்சிகள் துறையின் சார்பில், ரூ.5.30 கோடி மதிப்பீட்டில், 3 திட்டப்பணிகளும்,

❖ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், ரூ.3.06 கோடி மதிப்பீட்டில், 22 திட்டப்பணிகளும்,

❖ நகராட்சிநிருவாகம்மற்றும்குடிநீர்வழங்கல்துறையின் சார்பில், ரூ.3 கோடி மதிப்பீட்டில், 1 திட்டப்பணியும்,

❖ வேளாண்துறையின் சார்பில் ரூ.2 கோடி மதிப்பீட்டில், 1 திட்டப்பணியும்,

❖ தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி கழகத்தின் (தாட்கோ) சார்பில், ரூ.1.58 கோடி மதிப்பீட்டில், 4 திட்டப்பணிகளும்,

❖ மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், ரூ.1.40 கோடி மதிப்பீட்டில், 6 திட்டப்பணிகளும்,

❖ தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், ரூ.97 இலட்சம் மதிப்பீட்டில், 2 திட்டப்பணிகளும்,

❖ பொதுப்பணித்துறையின் (கட்டடம் மற்றும் பராமரிப்பு) சார்பில், ரூ.88 இலட்சம் மதிப்பீட்டில், 1 திட்டப்பணியும்,

❖ கூட்டுறவுத்துறையின் சார்பில், ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில், 2 திட்டப்பணிகளும்,

❖ கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் (ஆவின்) சார்பில், ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில், 1 திட்டப்பணியும் இங்கு தொடங்கி வைக்கப்பட இருக்கிறது. ஆக மொத்தம் ரூ.24.77 கோடி மதிப்பீட்டில், 44 பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இன்றைக்கு இந்த விழாவின் மூலமாக அர்ப்பணிக்கப்பட்டு இருக்கிறது.

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், சமுதாய வங்கி பெருங்கடன், சமுதாய முதலீட்டு நிதி, தனிநபர் கடன் உட்பட 17,438 பயனாளிகளுக்கு ரூ.40.82 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டு உள்ளது.

தனிநபர் பண்ணைக் குட்டை அமைத்தல், ஊரக வீட்டுவசதித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ், 14,300 பயனாளிகளுக்கும்,

டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி மகப்பேறு உதவித் திட்டம்,

மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின்கீழ், மருந்து பெட்டகங்கள் வழங்குதல் உட்பட 7,665 பயனாளிகளுக்கும்,

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் 4,084 பயனாளிகளுக்கும்,

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 2,970 பயனாளிகளுக்கும்,

தொழிலாளர்நலன் துறைசார்பில் 2,550 பயனாளிகளுக்கும்,

கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில், 2,357 பயனாளிகளுக்கும்,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், 1,566 பயனாளிகளுக்கும்,

கூட்டுறவுத் துறையின் சார்பில், 1,486 பயனாளிகளுக்கும்,

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் 806 பயனாளிகளுக்கும்,

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் 521 பயனாளிகளுக்கும்,

மாவட்ட முன்னோடி வங்கியின் சார்பில் உயர்கல்வி மற்றும் வங்கிக்கடனாக 264 பயனாளிகளுக்கும்,-

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 238 பயனாளிகளுக்கும்,

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில், முஸ்லீம் மற்றும் கிறிஸ்துவ மகளிருக்கான உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம் உட்பட 229 பயனாளிகளுக்கும்,

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில், பயனாளிகள் பங்களிப்புடன் மலிவு விலையில் வீடு திட்டம்,

பயனாளிகள் தாங்களாகவே வீடு கட்டும் திட்டத்தின்கீழ், 121 பயனாளிகளுக்கும்,

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், 75 சாலையோர வியாபாரிகளுக்கும்,

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பில் உதவி பராமரிப்புத் திட்டம்,

கொரோனா நோய்த்தொற்று நிவாரண நிதி உள்ளிட்ட 53 பயனாளிகளுக்கும்,

தாட்கோ நிறுவனத்தின் சார்பில்,

சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை உருவாக்கும் திட்டம்,

தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட 19 பயனாளிகளுக்கும்,

முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை உள்ளிட்ட 11 பயனாளிகளுக்கும்,

மாவட்ட வழங்கல் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் 1,359 பயனாளிகளுக்கு புதிய மின்னனு குடும்ப அட்டைகளும்,

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், ஆயிரம் பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டையினையும்,

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில், 2 பயனாளிகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையும் இங்கு வழங்கப்பட இருக்கிறது. இப்படி மொத்தம் 59,162 பயனாளிகளுக்கு ரூ.136.45 கோடி மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

இத்தனை திட்டப்பணிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் மட்டுமல்லாமல் இந்த மாவட்ட மக்கள் மேலும் பயனடையும்

வகையில் பின்வரும் திட்டங்களை நான் அறிவிக்க விரும்புகிறேன்.

சிவகங்கை வட்டத்தில் இருக்கக்கூடிய பல கிராமங்களுக்கு பயனளிக்கக்கூடிய வகையில், சீல்டுகால் கால்வாயை புனரமைக்கும் பணிகள் ரூ.22 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இதனால் மேலப்பூங்குடி, சாலூர், சோழபுரம் மற்றும் நாலுகோட்டை கிராமங்களில் உள்ள கண்மாய்கள் நிறைந்து, 1,800 ஏக்கர் வேளாண் நிலங்கள் இதனால் பயன்பெறும்.

சிவகங்கை மாவட்டத்திலுள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு மகப்பேறு சிகிச்சைகளை மேலும் சிறப்புடன் வழங்கிட, சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரியில் உள்ள மகப்பேறு மற்றும் குழந்தைகள் பராமரிப்புப் பிரிவிற்கு ரூ.12 கோடி செலவில் 100 படுக்கைகள் கொண்ட புதிய கூடுதல் கட்டிடம் அமைக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு செலவு செய்யும் ஒவ்வொரு பைசாவும், கடைக்கோடியில் இருக்கக்கூடிய குடிமகனுக்கும் சென்று சேர வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய இலட்சியம், அரசினுடைய நோக்கம்!

இந்த நோக்கம் என்பது, பேரறிஞர் அண்ணா சொன்ன, "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!" என்கிற அந்த முழக்கம்! அந்த முழக்கத்தைத்தான் நாம் திட்டங்களின் வாயிலாக செயல்படுத்தி வருகிறோம்.

இந்தத் திட்டங்களுக்கெல்லாம் கூட்டாக ஒரு பெயரிட வேண்டும் என்றால், அதுதான் 'திராவிட மாடல்!'.

அரசின் திட்டங்களின் பயன் ஒவ்வொரு குடிமகனுக்கும் சென்று சேர்வதை நம்முடைய அரசு உறுதி செய்யும். இங்கே அமர்ந்துள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளும் அதனை நாள்தோறும் கண்காணித்து உறுதிசெய்ய வேண்டும்.

கழக ஆட்சி அமைந்த பிறகு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைக்கிறேன், அடிக்கல் நாட்டுகிறேன், நலத்திட்ட உதவிகளை செய்து கொண்டிருக்கிறேன் என்பது உங்களுக்கும் தெரியும், அதை வழக்கமாக நான் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறேன்.

புதிய திட்டப்பணிகளை தொடங்கி வைப்பதாக இருந்தாலும் சரி, பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதை வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறேன்.

இப்படி ஒவ்வொரு மாவட்டமாக நானே நேரடியாகச் சென்று மக்களை சந்தித்து வருகிறேன். செல்லும் இடமெல்லாம், வழியெங்கும் சாலையோரங்களில் மக்கள் நின்று கொண்டு, மகிழ்ச்சியுடன் கையை அசைத்து, கரவொலி எழுப்பி, வணக்கம் செலுத்தி, ஆர்வத்தோடு அவர்களையெல்லாம் பார்க்கிறபோது, இதுதான் இந்த ஆட்சிக்கும், எனக்கும் தரப்படக்கூடிய நற்சான்று என்று நான் கருதுகிறேன்.

சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் இருந்ததைவிட, இப்போது அதிகமான அளவு, மூன்று மடங்கு, நான்கு மடங்கு எழுச்சி இன்றைக்கு மக்களிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. காரணம் என்ன? மக்களுக்கு மிக மிக உண்மையாக இருப்பது, மக்களுக்கு நேர்மையான ஆட்சியை வழங்குவது தான் இதற்கு முக்கியக் காரணம்.

தேர்தலுக்கு முன்னால், எப்படி மக்களைச் சந்தித்து வந்தேனோ, அதைவிட அதிகமாகவே இப்போது நான் மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறேன். மக்களைத் தொடர்ச்சியாகச் சந்திப்பது, ஆட்சியாளர்களின் மிக முக்கியமான இலக்கணமாக நான் கருதுகிறேன்.

அண்மையில், இந்தியக் குடியரசுத் துணைத் தலைவரும், பழுத்த அனுபவம் கொண்ட நாடாளுமன்றவாதியுமான மாண்புமிகு திரு. வெங்கையா நாயுடு அவர்களை அண்மையில் அழைத்தது எதற்கு என்றால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைப்பதற்காக அழைத்திருந்தோம். அவரும் மகிழ்ச்சியோடு வந்தார், வந்து நிகழ்ச்சியில் மகிழ்ச்சியோடு பங்கேற்றார், மகிழ்ச்சியோடு பேசினார், சிறப்போடு பேசினார். எந்த வகையில் எல்லாம் சிறப்பாக கலைஞர் அவர்கள் ஆட்சி நடத்தினார்கள் என்பதை அவர் சுட்டிக் காட்டிப் பெருமைப்படுத்திப் பேசினார். அதோடு நிற்காமல், 'முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது வழித்தடத்தில் இப்போதைய முதலமைச்சரும் ஆட்சி நடத்தி வருகிறார்' என்று அவர் குறிப்பிட்டதுதான் நமக்குப் பெருமை, என்னுடைய வாழ்வில் கிடைத்திருக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய பாராட்டாக நான் கருதுகிறேன்.

இந்தியாவின் பல்வேறு மாநில முதலமைச்சர்களை அறிந்த குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள், என்னையும் பாராட்டியும், தலைவர் கலைஞர் அவர்களைப் போல திறமையாக ஆட்சி நடத்துகிறேன் என்று ஒப்பிட்டுச் சொன்னது, எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஒரு மிகமிகப் பெரிய பாராட்டாக நான் கருதுகிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் இருந்த இடத்தை நான் நிரப்பிவிட்டேன் என்று சொல்லவில்லை. அவரது

இடத்தை யாராலும், எந்தக் கொம்பனாலும் நிரப்பிட முடியாது. ஆனால் அவரைப் போலச் செயல்பட முடியும் என்பதை நிரூபிக்கும் வகையில், கடந்த ஓராண்டுகாலமாக என்னுடைய செயல்பாடு அமைந்துள்ளது. சொன்னார்களே, நம்பர் 1 முதலமைச்சர் ஆக, நம்பர் 1, நம்பர் 2, அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. தமிழ்நாடு நம்பர் 1க்கு வர வேண்டும். அது தான் என்னுடைய இலட்சியம். குடியரசுத் துணைத்தலைவரின் பாராட்டு அதனைத்தான் வெளிப்படுத்துகிறது என்று நினைத்து நான் பெருமை அடைகிறேன்.

'தமிழ்ச் சமுதாயத்துக்கு என்னால் முடிந்தவரை உழைத்துவிட்டேன். எனக்குப் பிறகு யார் என்று கேட்டால், தம்பி ஸ்டாலின்தான்' என்று தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு முறை சொன்னார். அந்த நம்பிக்கையை இந்த ஓராண்டுகாலத்தில் நான் காப்பாற்றி இருக்கிறேன். இனியும் தொடர்ந்து நான் காப்பாற்றுவேன்! அதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.

ஐந்து ஆண்டுகளில் செய்யவேண்டியதை இந்த ஓராண்டு காலத்தில் செய்திருக்கிறோம். இது ஏதோ ஆரம்ப கட்ட வேகம் என்று நீங்கள் நினைக்கலாம் - எல்லோரும் இப்படித்தான் இருப்பார்கள் என்று நினைக்க வேண்டாம். எப்போதும் இதே சுறுசுறுப்புடனும், இதே வேகத்துடனும் தான் நான் இருப்பேன். மக்கள் என் மீது வைத்திருக்கும் அன்பும், பாசமும் தான் என்னை இத்தகைய சுறுசுறுப்புடனும் வேகத்துடனும் பணியாற்ற வைக்கிறது. ஒவ்வொருவரும் காட்டும் அன்பிலும் அரவணைப்பிலும் தான் தமிழகம் அனைத்து வகையிலும் முன்னேற்றம் காணும்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்துபட்ட அன்புப் பண்பாட்டைக் கொண்ட இனம் தான் இந்தத் தமிழினம். அந்தத் தமிழினம் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என்பதற்கு எடுத்துக்காட்டாக, தமிழர்களின் தாய்மடியாக விளங்கும் கீழடி இருக்கக்கூடிய மாவட்டம் தான் இந்த சிவகங்கை மாவட்டம்!

அந்த கீழடியின் தொன்மையையும், அதன் மூலமாக தமிழினத்தின் கடந்த காலப் பெருமையையும் மீட்ட அரசுதான் இந்த அரசு. தமிழினத்தின் தொன்மையான பெருமைகளைப் பேசுவோம். அதற்காக அதை மட்டுமே பேசிக் கொண்டு இருந்துவிட மாட்டோம். நிகழ்கால மக்களை அனைத்து வகையிலும் மேன்மை அடைய வைப்போம். அதுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு.

தமிழ்த் தொண்டு -

தமிழினத் தொண்டு -

தமிழ்நாட்டுத் தொண்டு

ஆகிய மூன்றையும் ஒருசேர நிகழ்காலத்தில் மட்டுமல்ல, வருங்காலத்திலும் வளமான வாழ்க்கைக்கு, வளமான தமிழ்நாட்டிற்கு வழிவகுப்போம் என்ற உறுதியை நான் இந்த நிகழ்ச்சியில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இங்கே கூட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கார்த்தி சிதம்பரம் அவர்கள், நாங்கள் ஏற்கெனவே வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுத்து விட்டீர்கள், இப்போது ஒரு கோரிக்கை வைக்கிறேன், அதை நிறைவேற்றித் தர வேண்டும். யாரிடத்தில் சொன்னால் அது நடக்கும் என்று தெரிந்து நீங்களும் சொல்கிறீர்கள். வீரமங்கை வேலுநாச்சியாரை போற்றும் வகையில் சிவகங்கை

நகரை தலைமையிடமாகக் கொண்டு, வீரமங்கை வேலு நாச்சியார் பெயரில் பெண் காவல் பயிற்சிக் கல்லூரி துவங்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்தார். நியாயமான கோரிக்கை. ஆனால் நான் சென்னைக்கு இன்று இரவு செல்கிறேன். நாளையே சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கலந்துபேசி, ஆய்வு நடத்தி, அதைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அந்த உறுதியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, இந்தச் சிறப்பான நிகழ்ச்சியை எழுச்சியோடு நடத்திக் கொண்டிருக்கக்கூடிய திரு. பெரியகருப்பன், இந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இதில் பங்கேற்றிருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றி, நன்றி என்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சிவகங்கை மாவட்டம், காரையூரில் நடைபெற்ற
அரசு விழாவில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,
முடிவுற்ற பணிகளைத் திறந்துவைத்து, அரசு நலத்திட்ட
உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி
ஆற்றிய உரை - 08.06.2022

கொளத்தூரில், மாணவியருக்கு தன்னம்பிக்கை ஊட்டிவரும் அனிதா அச்சீவர்ஸ் அமைப்பு

கலைஞர் 99 வேருக்கு விழா என்கிற பெயரில் நடைபெறக்கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்களே!

பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா அவர்களே!

நம்முடைய மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேகர்பாபு அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களே!

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. ரெங்கநாதன் அவர்களே!

மாநிலங்களவைஉறுப்பினராகதேர்வுசெய்யப்பட்டிருக்கிற வழக்கறிஞர் திரு. கிரிராஜன் அவர்களே! மற்றும் கொளத்தூர் தொகுதிக்கு உட்பட்டிருக்கக்கூடிய பகுதிக் கழகத்தின் செயலாளர்கள் திரு. நாகராஜன் அவர்களே, திரு. முரளிதரன் அவர்களே,

மற்றும் பல்வேறு அணிகளைச் சார்ந்திருக்கக்கூடிய அமைப்பாளர்களே, துணை அமைப்பாளர்களே,

கொளத்தூர் தொகுதிக்கு உட்பட்டிருக்கக்கூடிய வட்டக் கழகத்தின் செயலாளர்களே,

வருகை தந்திருக்கக்கூடியநம்முடையகழகத்தின் இரத்த நாளங்களாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய இயக்கத்தினுடைய முன்னோடிகளே,

அனிதா அச்சீவர்ஸ் அகாடமி (Anitha Achievers Academy) சார்பிலே தேர்வு செய்யப்பட்டிருக்கக்கூடிய, தேர்ச்சிப் பெற்றிருக்கக்கூடிய அன்பிற்குரிய மாணவியர்களே, சகோதரிகளே!

பெரியோர்களே, தாய்மார்களே,

தொலைக்காட்சி, பத்திரிகைத் துறை நண்பர்களே!

என் உயிரோடு கலந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும், உயிரான அன்பு உடன்பிறப்புக்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

"வேருக்கு விழா" என்கிற பெயரில் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 99ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, இந்த நிகழ்ச்சி ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது.கழகமூத்தமுன்னோடிகளுக்கு 328 பேர்களுக்கு சிறப்பு செய்தல், அதேபோல் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு 250 பேர்களுக்கு உதவித்தொகை வழங்குதல், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் சார்பில் பயிற்சி முடித்திருக்கக்கூடிய 349 மகளிருக்கு சான்றிதழ் மற்றும் மின் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் வழங்குதல் ஆகிய நிகழ்ச்சி இங்கு நடைபெற்று கொண்டிருக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் நானும் கலந்து கொள்ளக்கூடிய, கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதே கொளத்தூர் தொகுதியிலிருந்து நான் மூன்று முறை உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்பது அனைவருக்கும் தெரியும்.அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தக் காலகட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும், இந்த தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றி இருக்கிறேன். இப்பொழுது முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டு இந்தத் தொகுதியில் பணியாற்றக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். இந்த இரண்டையும் நான் வேறுபடுத்திப் பார்க்கவில்லை, இரண்டையும் ஒன்றாகத்தான் நான் கருதுகிறேன். எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எப்போதும் உங்களில் ஒருவனாக இருக்கக்கூடியவன் தான் நான் என்பதைநான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்துக் கொள்ளவேண்டிய நிலையில் இல்லை.

எதிர்க்கட்சி வரிசையில் இருந்த நேரத்தில், என்னதான் தமிழ்நாடு முழுவதும் நான் சுற்றுப்பயணம் நடத்திக் கொண்டிருந்தாலும் கட்சியினுடைய பணியின் காரணமாக

பல்வேறு கழகத் தோழரின் இல்லங்களில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளில், விழாக்களில், பொதுக்கூட்டங்களில், பொது மாநாடுகளில், பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக்கூடிய அந்த வாய்ப்பில் நான் ஈடுபட்டிருந்தாலும், எப்படியும் வாரத்திற்கு இரண்டு முறை இந்தத் தொகுதிக்கு நான் வராமல் இருந்ததில்லை. இப்பொழுது முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கிற காரணத்தில் இன்னும் எவ்வளவு பளு, எவ்வளவு பணி உள்ளது என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, இந்த சூழ்நிலையிலும், எப்படி எதிர்க்கட்சி வரிசையில் இருந்த நேரத்தில் நான் பணியாற்றி இருக்கிறேனோ, அதைவிட இன்னும் அதிகமாக இந்தத் தொகுதிக்கு பணியாற்றிட வேண்டும் என்று விரும்பக்கூடிய நிலையில் இருந்தாலும், எப்படியாவது பத்து நாளைக்கு ஒரு முறையாவது இந்த தொகுதிக்கு வர வேண்டும் என்று முடிவு செய்து அந்த பணியை நிறைவேற்றி வருகிறேன்.

எத்தனையோ நிகழ்ச்சிகளில், எத்தனையோ விழாக்களில் நான் கலந்து கொள்கிறபோது எனக்கு உரிய அந்த வரவேற்பு, உரிய அந்த உபசரிப்பு இவைகளெல்லாம் கொடுக்கப்பட்டிருந்தாலும், அதெல்லாம் எனக்கு பெருமையாக இருந்தாலும், அது எல்லாம் எனக்கு சிறப்பு சேர்ப்பதாக இருந்தாலும், அதையெல்லாம் தாண்டி இந்தக் கொளத்தூர் தொகுதிக்கு வருகிறபோது இன்னும் அதிகமான அளவிற்கு எனக்கு பெருமை, சிறப்பு, வரவேற்பு கிடைக்கிறது என்பதில் எந்த மாற்றமும் கிடையாது. ஆனால் அதைவிட எனக்கு ஒரு திருப்தி, எனக்கு ஒரு மன திருப்தி ஏற்படுகிறது என்பதை நான் இங்கு சொல்லித்தான் தீரவேண்டும்.

கழக முன்னோடிகளுக்கு 328 பேர்களுக்கு இந்த நிகழ்ச்சியில் பொற்கிழி வழங்கப்படுகிறது. அந்த பொற்கிழி வழங்கப்படுகிற காரணத்தால், அதை பெறக்கூடியவர்கள் ஏதோ

நீங்கள் ஆற்றிய பணிகளுக்கு கைமாறு செய்கிறோம் என்று நீங்கள் கருதவேண்டிய அவசியம் இல்லை. உங்கள் உழைப்பிற்கு, உங்கள் தியாகத்திற்கு, நீங்கள் இல்லையென்றால் நான் முதலமைச்சராக இல்லை, நீங்கள் இல்லையென்றால்,மேயர் இல்லை,சட்டமன்றஉறுப்பினர்கள் இல்லை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லை. ஏன் இந்தக் கட்சியே இல்லை. அதனால் தான் நம்முடைய திரு.சேகர்பாபு அவர்கள், வேருக்கு விழா, நீங்கள் தான் வேர். அந்த வேருக்கு மேலே தான் மரம் வருகிறது, கிளைகள் வருகிறது, இலைகள் வருகிறது, பழங்கள் வருகிறது, காய், கனிகள் வருகிறது. ஆனால் அந்த வேர் கண்ணுக்குத் தெரியாது பூமிக்கு அடியில் இருக்கும். அது மாதிரி தான் நீங்கள். கண்ணுக்குத் தெரியமாட்டீர்கள். ஆகவே அந்த வேருக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் இன்னும் உறுதியாக இருக்கும். ஆகவே, உங்களுக்கு வழங்கப்படுகிறது என்றால், உங்களை பெருமைப்படுத்துவதற்காக மட்டுமல்ல, உங்களுக்கு வழங்கி நாங்களும் அதில் பெருமைப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த முறையை தமிழக முழுவதும் இருக்கக்கூடிய கழக முன்னோடிகளுக்கு கலைஞருடைய பிறந்தநாளை ஒட்டி, அடுத்த ஆண்டு நூற்றாண்டு விழாவை கலைஞருக்கு நாம் கொண்டாடப் போகிறோம். அதற்கு முன்கூட்டியே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய வேண்டும் என மாவட்டக் கழக செயலாளர்கள் முடிவு செய்து, தீர்மானம் செய்து, அது இன்றைக்கு படிப்படியாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை நிறைவேற்றுவதில் எப்போதும் முதல் இடத்தில் இருக்கக்கூடியது நம்முடைய திரு. சேகர்பாபு அவர்களுடைய மாவட்டம் தான் நம்முடைய மாவட்டம் தான். ஏற்கெனவே துறைமுகத் தொகுதி அவரைத் தேர்ந்தெடுத்த

சட்டமன்ற தொகுதி, அந்த தொகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நான் தான் கலந்து கொண்டேன். இன்றைக்கு நம்முடைய கொளத்தூர் தொகுதியில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சியில் நான் பங்கேற்க வந்து இருக்கிறேன்.

நம்முடைய ஆட்சியைப் பொறுத்தவரைக்கும் எல்லாத் திட்டங்களுக்கும் முன்னுரிமை கொடுத்துக் கொண்டிருந்தாலும், எல்லாத் திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடுகளை நாம் செய்து கொண்டிருந்தாலும், கல்விக்கும் மருத்துவத்துக்கும் நாம் அதிகமான அளவிற்கு அக்கறை செலுத்தி கொண்டிருக்கிறோம் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. அந்த அடிப்படையில்தான் சட்டமன்ற அலுவலகத்தில் தந்த மனுக்கள், நேரடியாக என்னிடத்தில் தந்த மனுக்கள், வருகிற வழியெல்லாம் பல இடங்களில் மாணவ, மாணவிகள் என் கையில் தந்திருக்கக்கூடிய மனுக்கள் எல்லாம் பரிசீலித்து அந்த அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு உதவித் தொகை இந்த விழாவில் வழங்கப்பட இருக்கிறது.

நீட் என்கிற தேர்வு எழுதினால் தான் மருத்துவப்படிப்பை தொட முடியும் என்ற ஆபத்தான ஒரு நிலை. ஆகவே இந்த நீட் உடனே அகற்றப்படவேண்டும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் அதற்கு விலக்கு அளித்திட வேண்டும் என்று நாம் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறோம், குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் நம்முடைய தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவ, மாணவிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போயிருக்கிறார்கள். அதில், முதலில் அரியலூர் பகுதியைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த அனிதா என்கிற சகோதரி, பள்ளி தேர்வில் அதிகமான அளவிற்கு மதிப்பெண் பெற்றிருந்தாலும், நீட் தேர்வு வருகிற காரணத்தால் அந்த சகோதரி எண்ணிக்கொண்டிருந்த கனவு

நிறைவேறாமல் போய்விடுமோ என்ற அதிர்ச்சிக்கு ஆளாகி அவர் தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தி உங்களுக்கு எல்லாம் தெரியும். அதனால் தான் முதலில் நாம் அந்த மாணவிகளுக்கு ஒரு நம்பிக்கையை ஊட்ட வேண்டும் என்பதற்காகத்தான் நம்முடைய கொளத்தூர் தொகுதியில் அனிதா என்கிற பெயரிலேயே அச்சீவர்ஸ் அகாடமி என்ற அமைப்பை ஏற்படுத்தி அவர்கள் படிப்பிற்கு, தகுந்த வேலையை பெற வேண்டும் என்பதற்காக பயிற்சிகளை நாம் கடந்த சில ஆண்டுகளாக செய்து கொண்டிருக்கிறோம்.

அதேபோல், தையல் இயந்திரங்களை தந்து, அதில் பயிற்சி பெற்று அதன் மூலமாக தங்களுடைய குடும்பத்தை, தங்களுடைய வாழ்க்கையை, வளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக மின்மோட்டார் பொருத்திய தையல் இயந்திரத்தை 349 மகளிருக்கு அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயிற்சி முடித்திருக்கக்கூடிய அந்த சகோதரிகளுக்கு இங்கு வழங்க இருக்கிறோம்.

ஆகவே திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரைக்கும், ஆட்சியில் இருந்தாலும் இல்லை என்று சொன்னாலும், மக்களுக்காக ஏழை, எளியவர்களுக்காக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, ஒட்டுமொத்த தமிழக மக்களுக்காக, பாடுபடக்கூடிய ஒரு இயக்கம் என்பது அனைவருக்கும் நன்றாக தெரியும். ஆகவே இந்த விழாவில் பங்கேற்று பொற்கிழி பெற வந்திருக்கக்கூடிய நம்முடைய கழகத்தின் முன்னோடிகள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்துக்களையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் இங்கு வந்திருக்கக்கூடிய மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை பெற வந்திருக்கக்கூடிய மாணவச் செல்வங்களுக்கும், தையல் இயந்திரத்தை பெற வந்திருக்கக்கூடிய நம்முடைய அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயிற்சி பெற்றிருக்கக்கூடிய மாணவியர்களுக்கும், என்னுடைய அன்பான வாழ்த்துக்களையும், மகிழ்ச்சியையும், பெருமையும் தெரிவித்துக்கொண்டு, இந்த இனிய நிகழ்ச்சியில் உங்களை எல்லாம் சந்திக்கக்கூடிய ஒரு நல்வாய்ப்பை எனக்கு ஏற்படுத்திக் தந்திருக்கக்கூடிய கிழக்கு மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர் திரு. சேகர்பாபு அவர்களுக்கும், கொளத்தூர் தொகுதியினுடைய கழக நிருவாகிகளுக்கும், மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியினை தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
சென்னை, கொளத்தூர், எவர்வின் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற கலைஞர் 99 வேருக்கு விழாவில் நலத்திட்ட உதவிகள் வழங்கி ஆற்றிய உரை - 11.06.2022

எண்ணும் எழுத்தும்
இந்த ஆட்சியின் கண்ணும் கருத்தும்

பள்ளிக் கல்வித் துறையின் 'எண்ணும் எழுத்தும்' திட்டத் தொடக்க விழாவில் நம் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே!

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. சா.மு. நாசர் அவர்களே!

வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திரு. திண்டுக்கல் ஐ. லியோனி அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள்:

திரு. எஸ். சுதர்சனம் அவர்களே!

திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்களே!

திரு. சந்திரன் அவர்களே!

திரு. கணபதி அவர்களே!

திரு. ஜோசப் சாமுவேல் அவர்களே!

திரு. கே.பி. சங்கர் அவர்களே!

திரு. துரை சந்திரசேகர் அவர்களே!

பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களே!

பள்ளிக் கல்வித் துறை ஆணையர் திரு. க. நந்தகுமார், இ.ஆ.ப., அவர்களே!

திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப., அவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய தொடக்கக் கல்வி இயக்குநர்

முனைவர் க. அறிவொளி அவர்களே!

வருகை தந்திருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்திருக்கக்கூடிய பிரதிநிதிகளே!

அரசுத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளே! அலுவலர் பெருமக்களே!

ஆசிரியர் பெருமக்களே!

மாணவச் செல்வங்களே!

பத்திரிகைமற்றும்ஊடகத்துறையைச்சார்ந்திருக்கக்கூடிய தோழர்களே! நண்பர்களே!

தமிழகம் முழுவதும் இந்தப் பள்ளியைத் திறந்து வைத்திருக்கக்கூடிய மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

‘எண்ணும் எழுத்தும்’ இயக்கம் என்கிற நிலையில் இந்த நிகழ்ச்சியை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். ‘எண்ணும் எழுத்தும்’ திட்டத்தைத் தொடங்கி வைக்க, புழலுக்கு அருகே இருக்கக்கூடிய அழிஞ்சிவாக்கத்திற்கு நான் வந்திருப்பது உள்ளபடியே எனக்கு மகிழ்ச்சியை, பெருமையைத் தந்து கொண்டிருக்கிறது. இந்தப் பகுதிக்கு எத்தனையோ சிறப்புகள் இருந்தாலும், நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது போல, சென்னையில் குடிநீர்த் தேவைக்கு முக்கிய ஆதாரங்களுள் ஒன்றாகத் திகழ்வது புழல் ஏரி என்பது அனைவருக்கும் தெரியும்.

நீர் எப்படி தாகத்தைப் போக்குகிறதோ, அதேபோல், கல்வியினுடைய தாகத்தை, அந்த அறிவு தாகத்தை தீர்க்கக்கூடிய வகையிலே இந்தத் திட்டம் இங்கு தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் கல்விக்கு மிக மிக அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்து, நம்முடைய அரசு பல்வேறு திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்றி வந்துகொண்டிருக்கிறது.

அதிலும் குறிப்பாக, கொரோனா வந்த சமயத்தில், ஊரடங்கு பிறப்பித்த நேரத்தில் குழந்தைகளுக்கு ஏற்பட்டுள்ள கற்றல் இழப்பை ஈடுசெய்வதற்கும், எதிர்காலத்திற்கு ஏற்ற சிந்தனைத் திறனைக் கல்வியின் மூலமாக அவர்கள் பெறுவதற்கும், பல்வேறு முன்னெடுப்புகளை நாம் தொடர்ந்து எடுத்து வந்து கொண்டிருக்கிறோம்.

அந்த வரிசையில் தான், அந்த அடிப்படையில்தான் 'எண்ணும் எழுத்தும்' என்கிற இந்த இயக்கத்தைத் தொடங்கி வைப்பதற்காக இந்த அழிஞ்சிவாக்கத்திற்கு நான் வந்திருக்கிறேன்.

'எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்' - என்றார் அவ்வையார் அவர்கள்.

அந்தத் தமிழ் மூதாட்டியின் வழியில் 'எண்ணும் எழுத்தும்' இயக்கம் இங்கு தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

கொரோனா பெருந்தொற்றினால் பள்ளிகள் ஓராண்டுகளாக, ஏன் ஒன்றரை ஆண்டுகளாக மூடப்பட்டிருந்தது. அதனால் வகுப்பறையில் நேரடியாக கற்கும் வாய்ப்பை குழந்தைகள் பெற முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் கற்றலில் ஒரு பெரிய இடைவெளி ஏற்பட்டது. அதனைக் குறைக்கவும், குழந்தைகளின் கற்றலை, அந்த ஆற்றலை அதிகப்படுத்தவும் 'எண்ணும் எழுத்தும்' என்ற இந்த முன்னோடித் திட்டம் இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வழக்கமான படிப்புகள் மட்டும் போதாது, புதிய உத்தி தேவை என்பதை அரசு உணர்ந்ததன் அடிப்படையில் தான்,

இந்தத் திட்டத்தை நாம் இன்றைக்கு வகுத்திருக்கிறோம். ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய கற்றல் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்காக ஒரு உயர்மட்டக் குழுவும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதில் கல்வித்துறை சார்ந்த அலுவலர்களும்,கல்வியாளர்களும் இருப்பார்கள்.தமிழ், ஆங்கிலம், கணக்கு ஆகிய ஒவ்வொரு பாடத்துக்கும் தனித்தனியாக குழுக்கள் உருவாக்கப்பட்டு இருக்கும். இவர்கள் தேசிய மற்றும் மாவட்ட அளவில் ஆலோசனைகளை நடத்தி இந்தத் திட்டத்தை சீர்செய்து, செழுமைப்படுத்துவார்கள். இது தொடர்பாக கருத்துக்கேட்பு கூட்டங்களும் நடத்தப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களிடமும் கருத்துக்கள் கேட்கப்பட்டிருக்கிறது. இதில் 92,386 தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். இவர்கள் சொன்ன கருத்துகளை அடிப்படையாக வைத்தே ‘எண்ணும் எழுத்தும்’ இயக்கம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

“இளமையில் கல்” - என்றார் அவ்வையார் அவர்கள்.

‘இளமையில் கற்காவிட்டால், முதுமையில் மண்’ என்பார்கள். இளமைப் பருவத்தில் அவர்களுக்குள் புகுத்தப்படக்கூடிய அறிவு மிக எளிதாக நுழைந்து விடும். ஒரு குழந்தை தனது ஐந்து வயதை அடைவதற்குள் 90 விழுக்காடு அளவுக்கு அதன் மூளை வளர்ந்து விடுகிறது என்று சொல்கிறார்கள்.

3 முதல் 5 வயதுக்குள் அதனுடைய சிந்தனை ஆற்றல் பெருகிவிடுகிறது. இந்தச் சிந்தனை ஆற்றல்தான் அந்தக் குழந்தையின் ஆளுமைத் திறனை தீர்மானிக்கிறது. எனவே, இத்தகைய தொடக்கப்பருவத்தில் கல்வியைத் தர வேண்டிய கடமை பெற்றோருக்கு உண்டு. அதனைத்தாண்டி அரசுக்கும் உண்டு.

அனைவருக்கும் கல்வி - அனைவருக்கும் உயர்கல்வி என்பதே இந்தத் திராவிட மாடல் அரசினுடைய இலட்சியமாக, கடமையாக அமைந்திருக்கிறது.

'அனைவருக்கும் கல்வி' என்ற நோக்கத்திற்காகத்தான் திராவிட இயக்கமே உருவானது. திராவிட இயக்கத்தின் அடிப்படை நோக்கமான சமூகநீதி என்பதே கல்வித் தேவைக்காக உருவாக்கப்பட்டதுதான். நீதிக்கட்சி காலம் தொட்டு இன்றுவரை கல்விக்கு முக்கியத்துவம் தரும் இயக்கமாக நம்முடைய திராவிட இயக்கம் செயல்பட்டு வருகிறது.

தொடக்கக் கல்வியை வெறும் கல்வியாக மட்டும் பார்க்க முடியாது. அது வாழ்க்கையின் வழிகாட்டியாக, தன்னம்பிக்கையின் தூண்டுகோலாக அமைந்திருக்கிறது. இந்தச் சமூகத்தின் திறவுகோலாக ஒவ்வொரு மனிதருக்கும் இருப்பது இந்தத் தொடக்கக் கல்வி!

ஒவ்வொரு குழந்தைக்கும் தொடக்கக் கல்வி மட்டும் ஒழுங்காக, முறையாகக் கிடைத்துவிட்டால், அதன் பிறகு நடப்பது அனைத்துமே சிறப்பாக நடக்கும். அதனால்தான், 'திராவிட மாடல்' அரசு 'எண்ணும் எழுத்தும்' என்ற இந்த இயக்கத்தைத் தொடங்கியிருக்கிறது,

- 2025ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டில் உள்ள எட்டு வயதுக்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளும் பிழையின்றி எழுதவும் படிக்கவும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பது நம்முடைய இலக்கு!

- 2025ஆம் ஆண்டுக்குள் எட்டு வயதுக்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளும் எண்ணறிவு பெற்றவர்களாகத் திகழ வேண்டும் என்பது நம்முடைய இலக்கு!

- 2022-2023ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1, 2, 3 ஆகிய மூன்று வகுப்புகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

- தமிழ், ஆங்கிலம், கணக்கு ஆகிய மூன்று பாடங்களுக்குப் பயிற்சி நூல்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது.

- தமிழ்வழி - ஆங்கிலவழி ஆகிய இரண்டு மொழி வழியாகவும் இந்த நூல்கள் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

- பாடமாக மட்டுமல்லாமல், எளிமையான செயல்பாட்டு வடிவத்திலும் பயிற்சி நூல்கள் தயாரிக்கப்பட்டு இருக்கிறது.

- குழந்தைகளுக்கு அச்சம் ஏற்படாத வகையில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இதற்காக 'எண்ணும் எழுத்தும்' செயலி உருவாக்கப்பட்டுள்ளது.
- இப்பாடங்களை எப்படி கற்பிக்க வேண்டும் என்பதற்கான வழிகாட்டி நெறிமுறைகளும் இணைக்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு பாடமும் நடத்துவதற்கு ஏற்றவாறு வகுப்பறைக்களம் அமைய வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.
- ஆடல் - பாடல் - கதையாகச் சொல்லுதல் - நடித்துக் காட்டுதல் - பொம்மலாட்டம் - கைவினைப் பொருள்கள் எனப் பல்வேறு வடிவங்களில் இப்பாடங்கள் பயிற்றுவிக்கப்பட இருக்கின்றன.
- இதற்கான காணொளிகளும் வழங்கப்பட உள்ளன.
- இப்படி பல்வேறு வகையில் இத்திட்டம் செதுக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தின் வடிவமைப்பு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துக் கொண்டிருக்கிறது. இதனை வடிவமைத்திருக்கக்கூடிய இந்தத் துறையினுடைய அமைச்சர், அதேபோல் இந்தத் துறையினுடைய செயலர், ஆணையர், அதிகாரிகள், அலுவலர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள் என அனைவரையும் நான் மனதார வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

இதன் மூலமாக தமிழகக் குழந்தைகளின் எதிர்காலம் ஏற்றம் பெறும் என்பதில் சந்தேகமில்லை!

குழந்தைகள் கவனச் சிதறல் இல்லாமல் கல்வி கற்பார்கள். கடந்த இரண்டு ஆண்டுகள் ஏற்பட்ட கற்றல் இடைவெளி குறைவது மட்டுமல்ல - மிகச்சிறந்த அளவில் அவர்கள் கற்றல் திறன் அதிகமாகும். கல்வி ஆர்வமும் அதிகமாகும். படைப்பாற்றல் அதிகமாகும். அறிவாற்றலும் அதிகமாகும். தன்னம்பிக்கையும் அதிகமாகும். ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிய அவர்களது பயணம் சிறப்பாகும்.

தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிக் குழந்தைகள் வியத்தகு உலக சாதனை ஒன்றை செய்திருக்கிறார்கள். 'இல்லம் தேடி கல்வி' திட்டத்தின் ஒரு பகுதியாக Reading, Marathon என்கிற தொடர் வாசிப்பு இயக்கம் ஜூன் 1 முதல் 12 வரை நடத்தப்பட்டது. கூகுள் நிறுவனத்தின் Read aloud செயலியை பயன்படுத்தி நமது அரசுப் பள்ளிக் குழந்தைகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் 200 கோடி சொற்களை வாசித்து இருக்கிறார்கள். 14 இலட்சம் மாணவர்கள் பங்கு கொண்ட இந்த சாதனையில் 81.04 இலட்சம் கதைகள் 7.04 இலட்சம் மணி நேரத்தில் வாசிக்கப்பட்டிருக்கின்றன. உலகிலேயே Read aloud செயலியில் இது வரையிலான பயன்பாடுகள் இவ்வளவு பெரிய சாதனையை நிகழ்த்தப்பட்டதே கிடையாது. இச்சாதனையை செய்து தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்திருக்கக்கூடிய மாணவக் கண்மணிகளுக்கு வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதற்காக உழைத்த தன்னார்வலர்களையும் நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2025ஆம் ஆண்டுக்குள் நாம் அடைய வேண்டிய இலக்கை நிச்சயம் அடைவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அமைச்சர் முதல் ஆசிரியர்கள் வரை நான் சொல்ல விரும்புவது - இந்தத் திட்டம் எப்படி வடிவமைக்கப்பட்டிருக்கிறதோ - அதன் நோக்கம் சிதையாமல் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் உங்களுக்கு இருக்கிறது. இவ்வளவு சிறப்பான திட்டமாகி அமைந்திருந்தாலும், அது தொடங்கப்படும்போது இருக்கும் ஆர்வமும் அக்கறையும் தொடர்ந்து இருந்தால்தான், இதில் இறுதிப் பயன் என்பதை நாம் முழுமையாக அடைய முடியும். எனவே தொடக்கவிழாவின்போது இருக்கும் அக்கறையும் ஆர்வமும் இறுதிவரை இருக்க வேண்டும். இன்று நடக்கும் தொடக்கவிழாவை விட, மூன்று ஆண்டுகள் கழித்து நடக்க இருக்கும் வெற்றிவிழாவையும் நான் முக்கியமாகக் கருதுகிறேன். பள்ளிக்கல்வித் துறையின் வெற்றி மட்டுமல்ல, இந்த அரசின் வெற்றியும் அதில்தான் அடங்கி இருக்கிறது. விலைமதிக்க முடியாதது எது என்று கேட்டால் அது கல்வி மட்டும்தான். அத்தகைய கல்வி ஆற்றலை நம்முடைய குழந்தைகளுக்குத் தருவதன் மூலமாக நாம் ஆற்றும் இந்தப் பணி என்பது விலைமதிக்க முடியாதது ஆகும்!

கல்வி என்பதுதான் யாராலும் திருட முடியாத சொத்து என்று நான் ஏற்கெனவே பலமுறை குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். அந்தச் சொத்தை உருவாக்கக்கூடிய திருமிகு திட்டம்தான் இந்த 'எண்ணும் எழுத்தும்'.

தமிழ்நாட்டுக் குழந்தைகள் கல்வியில், அறிவாற்றலில் மேன்மை அடைய எத்தனையோ நல்ல பல திட்டங்களை தமிழக அரசு தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

❖ இல்லம் தேடிக் கல்வி

❖ நான் முதல்வன்

❖ இளந்தளிர் இலக்கியத் திட்டம்

❖ வகுப்பறை உற்றுநோக்குச் செயலி

❖ கல்வி தொலைக்காட்சி

- ஆகியவற்றின் வரிசையில் இந்த எண்ணும் எழுத்தும் திட்டமும் இணைந்திருக்கிறது.

கல்வியில் சிறந்த தமிழ்நாடாக - உயர்கல்வியிலும் - ஆராய்ச்சிக் கல்வியிலும் - அறிவாற்றலிலும் - சிந்தனைத் திறத்திலும் உயர்ந்த தமிழ்நாடாக மாறுவதற்கான அனைத்துத் திட்டங்களையும் நாம் வகுத்துச் செயல்படுத்துவோம்.

கல்விமட்டும்தான்நம்வாழ்க்கைத்தரத்தைமுன்னேற்றும்!

கல்வி மட்டும்தான் நமக்கு மதிப்பைத் தேடித் தரும்!

கல்வியால்பெறக்கூடியபெருமைமட்டும்தான் எதனாலும் அழிக்க முடியாதது!

கல்வியுரிமை என்பது நாம் போராடிப் பெற்றது!

எனவே, கல்வியின் மீதான ஈடுபாட்டை வளர்த்துக் கொள்ளுங்கள்!

படிக்காமல்சாதித்தஒருவரையாராவதுஎடுத்துக்காட்டாகக் காட்டினால், அதற்கு இணையாகப் படித்துச் சாதித்தவர்கள் இலட்சம் பேரை நாம் காட்டமுடியும்!

'படிக்காமலே சாதிக்கலாம்' என்று யாராவது சொன்னால், அது தன்னம்பிக்கை ஊட்டுவது அல்ல; அது வெறும் ஆசை வார்த்தை!

இவர்களெல்லாம் படித்து முன்னேறுகிறார்களே என்ற எரிச்சலில் தவறான பாதையை கை காட்டும் சூழ்ச்சி அது!

எனவே, குழந்தைகள் - பள்ளிப் பிள்ளைகள் அனைவருக்கும் எனது அன்பான வேண்டுகோள் என்பது படிப்பு - படிப்பு - படிப்பு மட்டும்தான்.

இதனை முதலமைச்சராக அல்ல - ஒரு தந்தையாக உங்களில் ஒருவனாக இருந்து நான் கேட்டுக் கொள்கிறேன். "எண்ணும் எழுத்தும்" இந்த ஆட்சியின் கண்ணும் கருத்தும் என்பதைச் சொல்லி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
'எண்ணும் எழுத்தும்' திட்டத்தை தொடங்கி வைத்து
ஆற்றிய உரை - 13.06.2022

நம் மாநிலத்தின் வளர்ச்சிதான் நம் நாட்டின் வளர்ச்சி

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே!

நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஹசன் மவுலானா அவர்களே!

தொழில்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச. கிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களே!

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், இ.ஆ.ப., அவர்களே!

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்களே!

டசால்ட் சிஸ்டம்ஸ் மேலாண்மை இயக்குநர் திரு.என்.ஜி. தீபக் அவர்களே!

ஃபோர்ஜ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.சங்கர் வானவராயர் அவர்களே!

அயல்நாட்டுத் தூதரக அதிகாரிகளே!

தொழிலதிபர்களே!

தொழிலகங்களின் தலைமை செயல் அலுவலர்களே!

அரசு உயர் அலுவலர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக் கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

'எல்லார்க்கும் எல்லாம்' என்ற இலக்கை நோக்கிய திராவிட மாடல் ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

அனைத்துத் துறை வளர்ச்சி - அனைத்து சமூக வளர்ச்சி - அனைத்து மாவட்ட வளர்ச்சி என்பதை உள்ளடக்கிய இந்த திராவிட மாடல் வளர்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை முதலில் நீங்கள் புரிந்து கொண்டாக வேண்டும். இதில் தொழில்துறையின் பங்களிப்பு மிகமிக முக்கியமானது என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், தொழில்துறையானது மிகச் சிறப்பான வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணமான நம்முடைய மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களையும், அவருக்கு முன்பு துறைச் செயலாளராக இருந்த திரு. முருகானந்தம், இ.ஆ.ப., அவர்களையும், இப்பொழுது இருக்கக்கூடிய நம்முடைய தொழில்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. கிருஷ்ணன், இ.ஆ.ப.,

அவர்களையும், மற்றும் இருக்கக்கூடிய அதிகாரிகளையும் நான் மனதார இந்த நேரத்தில் பாராட்ட, வாழ்த்த கடமைப்பட்டிருக்கிறேன்.

மேம்பட்ட உற்பத்தி மையம் (Advanced manufacturing Hub-AMHUB) தொடர்பான மாநாடாக இது ஒருங்கிணைக்கப்பட்டிருக்கிறது. நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சிக்கு (Industry 4.0) நம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டிய நேரம் இது. அந்த இலக்கை நிச்சயமாக நாம் எட்டுவோம்!

தற்போதுள்ள தொழிற்சாலைகளை மேம்படுத்த வேண்டும். அவற்றை ஸ்மார்ட் தொழிற்சாலைகளாக உருவாக்க வேண்டும். அதன் மூலமாக மின்னணு மயமாக்கப்பட்ட உற்பத்தியை செயல்படுத்த வேண்டும். இதனால் உற்பத்தி பலமடங்கு உயரும்.

295 பில்லியன் அமெரிக்க டாலர் உள்நாட்டு உற்பத்தி என்ற வகையில், அகில இந்திய அளவில் இரண்டாவது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு திகழ்கிறது. உற்பத்தியில், அகில இந்திய அளவில் மட்டுமல்ல, தெற்காசியாவிலேயே தலைசிறந்த இடத்தைத் தமிழ்நாடு பெற்றிருக்கிறது.

இவற்றோடு நாம் மனநிறைவு அடைந்துவிடாமல் 2030ஆம் ஆண்டில், நமது மாநிலத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும். அந்த இலக்கை அடைவதற்கான பாதைகளை அடையாளம் கண்டு, அப்பாதையில் நமது அரசு வெற்றிகரமாக பயணத்தை மேற்கொண்டு வருகிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

நமது இளைஞர்களை படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு, சமீபத்தில் துவக்கி வைக்கப்பட்டிருக்கக்கூடிய திட்டம்தான் அது என்னுடைய கனவுத் திட்டம் என்று கூட சொல்ல மாட்டேன், நம்முடைய கனவுத் திட்டமாக விளங்கக்கூடிய "நான் முதல்வன் திட்டம்". நமது இளைஞர்களின் வேலைபெறும் திறனை அதிகரிக்கச் செய்வதை குறிக்கோளாகக் கொண்ட திட்டம் தான் இந்தத் திட்டம்!

தமிழ்நாட்டில் இருக்கின்ற திறன்மிக்க மனிதவளத்தை மேலும் மேம்படுத்தி, ஓர் அறிவுசார் பொருளாதாரத்தை உருவாக்கும் நோக்கத்துடன், உலகளாவிய பங்களிப்புடன் "அறிவுசார் நகரம்" (Knowledge City) ஒன்று உருவாக்கப்படும் என்று ஏற்கெனவே தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO)
- தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT)
- "தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO) போன்ற அரசு பொதுத்துறை நிறுவனங்களுடன் இணைந்து மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் தங்களின் வளாகங்களில் ஆராய்ச்சிப் பூங்காக்களை (Research Parks) நிறுவ ஊக்குவிக்கப்படும்" என்று தமிழ்நாடு அரசு அறிவித்திருந்தது.

அதன்படியே, அறிவுசார் ஆராய்ச்சிப் பூங்கா ஒன்று பாரதியார் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்படும் என்று

அண்மையில் கோயம்புத்தூரில் நடைபெற்ற தொழில் முனைவோருடனான சந்திப்பில் நான் அதை அறிவித்தேன். இவையெல்லாம், அறிவுசார் மனித வளத்தை உருவாக்கி, மேம்பட்ட உற்பத்தி மற்றும் புத்தாக்கங்களை உருவாக்கி, ஊக்குவிக்க தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் சிறப்பு நடவடிக்கைகள்.

மேம்பட்ட உற்பத்தி தொடர்பாக உலகப் பொருளாதார மன்றமும் (World Economic Forum-WEF), தமிழ்நாடு தொழில் வழிகாட்டி (Guidance) நிறுவனமும் இணைந்து புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருவதை நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள். உலக அளவிலான நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சிக்கான திட்டக்கூறுகளை வழிநடத்துவது மட்டுமின்றி, தமிழ்நாட்டின் வெற்றிப் பாதையை உலகிற்கு வெளிச்சமிட்டு காட்டுவதற்கும் இது ஏதுவாக அமைகிறது.

- சூரிய எரிசக்தி,
- மின்னணுவியல்,
- மின்வாகனங்கள்,
- வான்வெளி & பாதுகாப்பு,
- தொழில்நுட்ப ஜவுளிகள்,
- கூட்டு உற்பத்தி (Additive manufacturing)
- முப்பரிமாண வடிவமைப்பு மற்றும் அச்சிடுதல் (3D Design & Printing),
- ரோபோடிக்ஸ் (Robotics) ஆகியவை புதிய தொழில் வாய்ப்பு உள்ள துறைகளாக அறியப்பட்டிருக்கிறது.

இந்தத் துறைகளின் உற்பத்தியில் மேம்பட்ட தொழில்நுட்பங்களையும், தொழில்முறை 4.0 தரத்தையும் அறிமுகப்படுத்தி,தமிழகத் தொழில்துறைச் சூழலை எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ப செயல்படுத்துவது நமது தொழில் சூழலை மேலும் செம்மைப்படுத்த வழிவகுக்கும் என்று நான் மனதார நம்புகிறேன்.

மேம்பட்ட உற்பத்தியைப் (Advanced Manufacturing) பொறுத்தவரையில், தமிழ்நாடு பல புதிய முயற்சிகளை மேற்கொண்டு வந்து கொண்டிருக்கிறது.

குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை இந்தத் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்றவாறு தயார்படுத்திட வேண்டும் என்பதில் அரசு தீவிரம் காட்டி வருகிறது.அதற்கென மாணவர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் இளம் தொழில்முனைவோருக்கு, அதிநவீன மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களை அளித்திட அரசு முனைந்திருக்கிறது.

திறன்மிகு மையங்களை (Centres of Excellence) அமைக்கக்கூடிய முயற்சியில்,

முதலாவதாக, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனமான டசால்ட் சிஸ்டம்ஸ் உடன் இணைந்து, சென்னை டைடல் பார்க்கில் ரூ.212 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்தி முறைக்கான திறன்மிகு மையம் (TANCAM) இங்கு என்னால் துவக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

சென்னையை மையமாகக் கொண்டு, மைய மற்றும் துணை மைய மாதிரி (Hub and Spoke model) அடிப்படையில் இயங்கும் TANCAM, மாநிலமெங்கும் இருக்கின்ற கல்வி நிறுவனங்களுடனும், தொழில் நிறுவனங்களுடனும்

இணைந்து துணை மையங்களை நிறுவி, பரவலாக்கப்பட்ட திறன்பயிற்சி, புதிய பொருட்கள் உருவாக்குதல் (Product Development), நவீன உத்திகள் ஆகியவை பெருக வழிவகுக்கும்.

- ❖ மாணவர்களுக்கும், தொழில் முனைவோருக்கும், அவர்களின் படிப்புக்கும், பணிக்கும், இடையூறு எதுவுமில்லாமல், மெய்நிகர் சூழல் வழியாக பயிற்சி அளிக்கப்படும்.
- ❖ புதிய பொருட்களின் வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கும், சிறந்த பயிற்சிகளுக்கும், சூழலமைப்பு (eco system) அமைத்துக் கொடுக்கப்படும்.
- ❖ தொழில்துறையினருக்கு ஒரு சாதகமான களம் உருவாக்கித் தரப்படும்.
- ❖ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையினரின் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான நவீன உத்திகளுக்கும், புதுப்புது திட்டப்பணிகளுக்கும் வழிவகை செய்து தரப்படும்.
- ❖ இதன்மூலம், தமிழ்நாடு இந்தியாவின் மிகவும் மேம்பட்ட தொழில் மாநிலமாக வளர்ச்சி அடைவது உறுதி செய்யப்படும்.

டிட்கோ நிறுவனம், ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனமான 'சீமென்ஸ்' உடன் இணைந்து, தமிழ்நாடு மின்னணுமயமாக்கப்பட்ட & மேம்பட்ட உற்பத்தி மையம் (TANSAM) மற்றும் அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான ஜி.இ.ஏவியேஷன் உடன் இணைந்து, தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்திக்கான திறன்மிகு மையம் (TAMCOE) அமைக்கும் பணிமுடிக்கப்பட்டு, விரைவில் துவக்கிவைக்கப்பட இருக்கிறது

என்பதை மகிழ்ச்சியுடன் நான் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக, திருபெரும்புதூர் மற்றும் ஓசூரில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காக்களில் ரூ.33.46 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள 2 தொழில் புத்தாக்க மையங்கள், (Industrial Innovation Centres) இன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மையங்கள், தொழில்துறை புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் தொடக்கநிலை தொழில்முனைவோர் விரைவில் வளர்ந்திடவும், தமிழ்நாட்டில் உயர்தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சியை அதிகரிப்பதற்கும், உற்பத்தித் துறையின் உற்பத்தி மற்றும் போட்டித் தன்மையை மேலும் வலுப்படுத்துவதற்கும், திறன் கொண்ட உலகத்தரம் வாய்ந்த மையங்களாக விளங்கும். ஒவ்வொரு மையமும் 23,500 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இவற்றின் மூலம், ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதுமையான யோசனைகள், 200க்கும் மேற்பட்ட முன்மாதிரிகளை மதிப்பீடு செய்யவும், 30க்கும் மேற்பட்ட தொடக்க காலப் பட்டப்படிப்பு நிலையில் உள்ளவர்களை தொழில்முனைவோர்களாக உருவாக்கிடவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த மையங்களை இயக்குவதற்காக ஃபோர்ஜ் (Forge) எனப்படும் கோயம்புத்தூர் இன்னோவேஷன் மற்றும் பிசினஸ் இன்குபேட்டருடன் (Coimbatore Innovation and Business Incubator) சிப்காட் இணைந்து செயல்பட இருக்கிறது.

மூன்றாவதாக, தமிழ்நாட்டிலுள்ள இரண்டாம் மற்றும் மூன்றாம் அடுக்கு நகரங்களிலும் “மினி டைடல் பூங்காக்கள்” (Neo Tidel Parks) அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தேன். அதனடிப்படையில் திருப்பூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள்

அமைப்பதற்கு என்னால் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பூங்காக்கள் செயல்படத் துவங்கும்போது, பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு அவர்களது மாவட்டத்திலேயே வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

நான்காவதாக, வழிகாட்டி நிறுவனமும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த நாட்டிங்ஹாம் பல்கலைக்கழகமும் இணைந்து மேற்கொள்ளக்கூடிய நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சி முதிர்வு கணக்கெடுப்பு (Industry 4.0 Maturity Survey) துவக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

தொழில்துறை மட்டுமின்றி, தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற துறைகளும், மேம்பட்ட உற்பத்தித் தொழில்களை மாநிலத்திற்குக் கொண்டுவருவதற்கான கூட்டுமுயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, டாடா டெக்னாலஜீஸ் நிறுவனத்துடன் இணைந்து தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்தி வருகின்றது.

ரூ.2,877.43 கோடி செலவில் இவை அமைக்கப்பட இருக்கிறது. இதன்மூலம், நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சியினால் ஏற்படவுள்ள தொடர் மாற்றங்களை, நமது தொழிலாளர்கள் சுலபமாகக் கையாள முடியும்.

இதனைக் கருத்தில் கொண்டு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை (DITDS), தமிழ்நாடு மின்னணு நிறுவனத்துடன் இணைந்து, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவு அளித்திடவும், புதிய தொழில் நுட்பங்களைப் புகுத்திடவும், அத்துறையினரின் பிரச்சினைகள் மற்றும் சவால்களைத் தீர்த்து வைக்கக்கூடிய வகையில், "வளர் 4.0" என்ற இணையதளத்தை உருவாக்கியிருக்கிறது.

நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சிக்கான மூலதனம் நம்மிடம் இருக்கிறது. அதற்கான பணியாளர்களின் திறன் மேம்பாடு அடைய வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு திறன்மிகு மையங்களும், புத்தாக்க மையங்களும் தொடங்கப்பட்டிருக்கிறது. நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சிக்குத் தயார்நிலைப்படுத்திக் கொள்வதற்கான நம்முடைய அரசின் முயற்சிகளில் நீங்களும் பங்கேற்று, ஒத்துழைக்க வேண்டுமென்று என்று நான் எல்லோரையும் அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் வளர்ச்சிதான் நம் மாநிலத்தின் வளர்ச்சி!

நம் மாநிலத்தின் வளர்ச்சிதான் நம் நாட்டின் வளர்ச்சி!

உலக அரங்கில் தமிழ்நாட்டினை நோக்கி கவனம் ஈர்க்கக்கூடிய முயற்சிகளை நிச்சயமாக இவை அனைத்தும் அமைய வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டு இந்த நல்ல வாய்ப்பிற்கு என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
சென்னை, தரமணி, டைடல் பூங்காவில் நடைபெற்ற
தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்தி மாநாட்டில் கலந்து கொண்டு
ஆற்றிய உரை - 24.06.2022

கல்வி, படிப்பு, விளையாட்டு, கலைத்திறன்களில் முதல்வர்களை உருவாக்குவதுதான் “நான் முதல்வன்” திட்டத்தின் நோக்கம்

"**நா**ன் முதல்வன்" திட்டத்தின் கீழ் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கான உயர்கல்விக்கு வழிகாட்டும் “கல்லூரி கனவு” நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களே!

மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே!

மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சி.வி. கணேசன் அவர்களே!

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர்களே!

சட்டமன்ற உறுப்பினர்களே!

சென்னை மாநகரத்தின் துணை மேயர் அவர்களே!

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே!

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. முகமது நசிமுதின், இ.ஆ.ப., அவர்களே!

காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ. சைலேந்திரபாபு, இ.கா.ப., அவர்களே!

பள்ளிகல்வித்துறை ஆணையர் திரு. க. நந்தகுமார், இ.ஆ.ப., அவர்களே!

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்களே!

செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., அவர்களே!

HCL Technologies நிறுவனத்தின் துணைத் தலைவர் திரு. சுப்பராமன் பாலசுப்பிரமணியன் அவர்களே!

உரையாற்றுவதற்காக வருகை தந்திருக்கக்கூடிய நம்முடைய அருமை சகோதரர் திரு. கோபிநாத் உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்களே!

அரசு உயர் அதிகாரிகளே! அலுவலர் நண்பர்களே!

பத்திரிகைமற்றும்ஊடகத்துறையைச்சார்ந்திருக்கக்கூடிய அருமைத் தோழர்களே!

என் உயிரினும் மேலான அன்பிற்குரிய மாணவச் செல்வங்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இந்த இனிய காலை வேளையில், உங்களை எல்லாம் பார்க்கும்போது, எனக்கு உற்சாகமாக இருக்கிறது! கடந்த ஐந்தாறு நாட்களாக எனக்கு காய்ச்சல் ஏற்பட்டு, அதனால் உடல் சோர்வான நிலையில் இருந்த எனக்கு இந்த நிகழ்ச்சி அந்த சோர்வுகள் எல்லாம் நீங்கி, ஒரு புத்துணர்ச்சியையும் உற்சாகத்தையும் பெறக்கூடிய நிலையில் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

கள்ளம் கபடம் இல்லாத உங்கள் முகங்களில் இருக்கும் இந்த இயல்பான அழகுதான் இனிமையான அனுபவத்தைத் தருகிறது!

இந்த மாநிலத்தின் முதலமைச்சராக மட்டும் நான் இந்த நிகழ்ச்சிக்கு வந்துவிடவில்லை; உங்களையெல்லாம் என்னுடைய சொந்தப் பிள்ளைகள் என்று கருதி அந்த உணர்வோடு உங்களை நான் வாழ்த்த வந்திருக்கிறேன்.

அரசு அதிகாரிகள்கூட இதனை 'வழிகாட்டும் நிகழ்ச்சி' என்று சொன்னார்கள். நம்மை விட, இந்தக் காலத்துப் பிள்ளைகள் மிக மிக விவரமானவர்கள்! (நான் சொல்வது உண்மைதானே...!, அதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள் தானே) எனவே உங்களுக்கு எல்லாமே தெரியும். ஏனென்றால், எல்லோர் கையிலும் இப்போது மொபைல் போன் வந்துவிட்டது. இல்லை... இல்லை... உலகமே உங்கள் விரல்நுனிக்கு இப்போது வந்துவிட்டது.

மேற்படிப்புகள் என்னென்ன உள்ளன என்பது பற்றியெல்லாம் நீங்கள் இணையத்தைப் பார்த்து அறிந்துகொள்ளக்கூடிய சூழ்நிலை இப்போது வந்திருக்கிறது. இருந்தாலும், உங்கள் மதிப்பெண் அடிப்படையில் எந்தப் படிப்புகளைத் தேர்ந்தெடுக்கலாம், எதிர்கால வேலை வாய்ப்புகள் எப்படி இருக்கின்றன இதையெல்லாம் எடுத்துக் கூறி நாங்களும் உங்களுக்கு வழிகாட்டுவதற்கான வாய்ப்புதான், இந்த நிகழ்ச்சி. நாங்கள் ஏற்படுத்தியுள்ள இந்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதனை உங்களுக்கு உற்சாகம் ஊட்டக்கூடிய நிகழ்ச்சியாகவும்தான் நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம்.

நீங்கள் உங்கள் வாழ்க்கையில், பள்ளிக் கல்வி என்ற ஒரு படியைத் தாண்டி, கல்லூரிக் கல்வியில் அடியெடுத்து வைக்கப் போகிறீர்கள். மாணவர்களாகிய நீங்கள்தான் இந்த மாநிலத்தின்

அறிவுச் சொத்துக்கள்! உங்களை வளர்த்தெடுக்க வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது.

தமிழ்நாட்டு மக்களுக்கு நான் முதல்வராக இருக்கலாம். ஆனால் நீங்கள் அனைவரும் ஒவ்வொரு துறையிலும் முதல்வனாக விளங்க வேண்டும் என்ற பரந்த உள்ளத்தோடு, பரந்த எண்ணத்தோடு தொடங்கப்பட்ட திட்டம்தான், 'நான் முதல்வன்' என்கிற இந்தத் திட்டம்! அதன் ஓர் அங்கமாகத்தான் இந்த 'கல்லூரிக் கனவு' நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பன்னிரண்டாம் வகுப்பை முடித்தோம் -

கல்லூரியில் சேர்ந்தோம் -

பட்டம் வாங்கினோம் -

வேலையில் சேர்ந்தோம் -

கைநிறைய சம்பளம் வாங்கினோம் - என்பதோடு உங்கள் கடமை முடிந்துவிடுவது இல்லை.

எத்தகைய ஆற்றல் படைத்தவர்களாக நீங்கள் உயர்ந்தீர்கள், அத்தகைய ஆற்றலை வைத்து இந்தச் சமூகத்தை எப்படி மேம்படுத்த முயன்றீர்கள் என்பதுதான் முக்கியம்.

இதுதான், 'நான் முதல்வன்' திட்டத்தின் உண்மையான நோக்கம்!

பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்றேன் -

மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெற்றேன் -

மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்றேன் - என்று பெயர் எடுப்பது மட்டுமல்ல

கல்வித் திறனில் முதல்வன் -

அறிவாற்றலில் முதல்வன் -

படைப்புத் திறனில் முதல்வன் -

பன்முக ஆற்றலில் முதல்வன் -

ஒருவரை மதிக்கத் தெரிந்தவன் -

சமத்துவமாக நடக்கத் தெரிந்தவன் -

அனைவரும் பின்பற்றும் பண்பாட்டு அடையாளம் கொண்டவன் -

அனைவரையும் வழிநடத்தும் தலைமைத் திறன் பெற்றவன் -

என்று தமிழ்நாட்டு இளைஞர்களை, மாணவர்களை உயர்த்தும் திட்டம்தான் இந்த நான் முதல்வன் என்கிற திட்டம்! அந்த இலக்கை அடையவே இந்தக் கல்லூரிக் கனவு நிகழ்ச்சியை நாம் இங்கே நடத்திக் கொண்டிருக்கிறோம்.

அரசுப் பள்ளியில் படித்து, பல துறைகளில் மிகச் சிறந்த ஆளுமைகளாக உருவாகியவர்கள் பெயரை, என்னால் இங்கு பட்டியலிட முடியும்.

அரசுப் பள்ளியில் படித்து, ஒவ்வொரு நாளும் செய்தித்தாளை விநியோகம் செய்தவர், இந்த நாட்டின் மிகச் சிறந்த குடியரசுத் தலைவர்களுள் ஒருவராக உருவானவர் தான் மிகச் சிறந்த விஞ்ஞானியாக இருந்த, ஏவுகணைத் தொழில்நுட்பம் முதல், பிரதமரின் அறிவியல் ஆலோசகர் உட்பட பலவற்றிலும் சிறப்பாகச் செயல்பட்டு, இறுதியாக மக்கள் குடியரசுத் தலைவர் என்று போற்றப்பட்ட, அப்துல் கலாம் அரசுப் பள்ளியில் படித்தவர்தான்.

சந்திராயன் புகழ் மயில்சாமி அண்ணாதுரை அரசுப் பள்ளியில் படித்தவர்;

இஸ்ரோ தலைவராக இருந்த சிவன் அரசுப் பள்ளியில் படித்தவர்!

ஏன்!இந்த மேடையில் அமர்ந்திருக்கக்கூடிய,வரவேற்புரை ஆற்றிய நம்முடைய தலைமைச் செயலாளர் அரசுப் பள்ளியில் படித்தவர். காவல்துறை தலைமை இயக்குநர் அரசுப் பள்ளியில் படித்தவர்தான்.

அரசுப் பள்ளியில், அரசு உதவி பெறும் பள்ளியில் படித்து, அவரவர் துறையில் கோலோச்சிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசுப் பள்ளியில், தமிழ்வழியில் படித்தாலும், நிச்சயம் முன்னேற முடியும் என்பதற்கு, நம் கண்முன்னாலேயே மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகள் இருக்கிறார்கள்.

அனைவரும் படிக்க வேண்டும் என்பதற்காக உருவான இயக்கம்தான் நம்முடைய திராவிட இயக்கம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அதற்கான வாசற்படிதான் சமூகநீதி! அந்தச் சமூகநீதியை, இடஒதுக்கீட்டு உரிமையை சட்டமாக்கி வித்திட்டது,திராவிட இயக்கத்தின் தலைமகனான நீதிக்கட்சி!

‘எப்படியாவது படித்துவிடு -
எங்காவது போய் முன்னேறி விடு’

என்று தந்தை பெரியார் அவர்கள், நம்முடைய கல்வி உரிமையை வென்றெடுக்க இந்தச் சமுதாயத்துக்கு எழுச்சியூட்டினார்.

அவரால் ‘பச்சைத் தமிழர்’ என்று போற்றப்பட்ட பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தமிழகம் முழுவதும் பள்ளிகளைத் திறந்தார்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு முழுவதும் கல்லூரிகளை, பல்கலைக்கழகங்களை உருவாக்கினார்.

இன்று நாங்கள் உயர்கல்வியை, ஆராய்ச்சிக் கல்வியை ஊக்கப்படுத்தி வருகிறோம்.

பள்ளிக் கல்வியாக இருந்தாலும், உயர்கல்வியாக இருந்தாலும், திறமை மற்றும் அறிவுசார் கல்வியாக அதனை மாற்றிக் காட்டி வருகிறது நம்முடைய தமிழ்நாடு அரசு. இந்தியாவில் மற்ற மாநிலங்களைவிட தமிழகம் உயர, இதுதான் காரணமாக அமைந்திருக்கிறது.

மிக அதிகளவு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது.

கல்வி அறிவு விகிதம் என்பது தேசிய சராசரியை விட அதிகம்!

கல்வித் தரம் என்பதும் மற்ற மாநிலங்களை விட அதிகம்!

கல்வியில் உயர்ந்த தமிழ்நாடாகத் தற்போது விளங்குகிறது!

உலகமெங்கும் தமிழர்கள், உயர்ந்த பதவிகளில் அமர்ந்திருக்கிறார்கள்.

இதனை மேலும் மேலும் உயர்த்திக் கொண்டே போகவேண்டும். அதற்கான கல்விக் கொள்கையைத்தான் நாம் இதுநாள் வரை கடைப்பிடித்து வருகிறோம்.

இந்திய துணைக் கண்டத்தில் உள்ள மாநிலங்களில், தமிழ்நாட்டுக்கு இணையான கல்விக் கொள்கை எந்த மாநிலத்திலும் இல்லையென்றே சொல்லலாம்!

இதனை இன்னும் செம்மைப்படுத்தி, கல்வியில் சிறந்த தமிழ்நாடாக ஆக்குவதற்காகத் தீட்டப்பட்ட திட்டம்தான் 'நான் முதல்வன் திட்டம்'. அந்தத் திட்டத்தின்படிதான் கல்லூரிக் கனவு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பன்னிரண்டாம் வகுப்பை முடித்திருக்கும் நீங்கள், அடுத்தக்கட்டத்துக்கு உயரப் போகிறீர்கள். பள்ளியில் இருந்து கல்லூரிக்கு உயரப் போகிறீர்கள்.

காலேஜ் ஸ்டூடண்ட் - என்று கெத்தாக வலம் வரப் போகிறீர்கள்.

பள்ளிக்கூடங்களில் இருந்தளவுக்கு உங்களுக்கு கட்டுப்பாடுகள் இருக்காது என்று சொன்னாலும், கல்லூரிக் காலத்தில் உங்களுக்கான பொறுப்புகள் அதிகம் ஆகிவிடும். அதை மறந்துவிடக்கூடாது. எனவே, பள்ளிக் கல்விக் காலத்தை எப்படி பயன்படுத்தினீர்களோ, அதேபோல, நீங்கள் கல்லூரிக் காலத்திலும் கவனமாக பயன்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரியையும் - படிப்பையும், கவனமாகத் தேர்ந்தெடுப்பது எவ்வளவு முக்கியமோ, அதைவிட முக்கியம், கல்லூரிக் காலத்தில், கவனத்தைச் சிதறவிடாமல் இருப்பதுதான் மிக முக்கியம். அந்த வகையில், நீங்கள் படிக்கும் ஒவ்வொரு நாளும், படிப்பில் கவனம் செலுத்துவது மட்டுமல்ல, நீங்கள் கல்லூரியில் அடியெடுத்து வைப்பதற்குக் காரணமான,

உங்கள் பெற்றோரின் கனவையும் உழைப்பையும், நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டின் மாணவச் செல்வங்களுக்கும், பெற்றோர்களுக்கும் என்னுடைய அன்பான ஒரு வேண்டுகோள்.

பொறியியல், மருத்துவம் என்பது மிகச் சிறந்த படிப்புகள்தான். ஆனால், அந்த இரண்டு கனவுகளோடு மட்டும் நின்றுவிட வேண்டாம். இன்று வாய்ப்புகள் எல்லாத் துறைகளிலும் ஏராளமாகக் கொட்டிக் கிடக்கின்றன. ஒவ்வொரு துறையிலும் படித்து முன்னேறி, உழைப்பைக் கொடுத்து வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் மிக அதிகமாக இருக்கின்றன. ஆகவே, கிடைக்கின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்தி, அந்தந்தத் துறையில் மிகச்சிறந்த வல்லுநர்கள் ஆவதற்கு, கல்வி நிறுவனங்கள் அளிக்கும் பாடப்பிரிவுகள் குறித்தான ஒரு வழிகாட்டி நிகழ்ச்சிதான் இது. பல திறன்கள், தனித்திறன்கள் கொண்டிருக்கக்கூடிய சமுதாயத்தை உருவாக்குவதே நம் நோக்கம்.

கல்லூரிக் கனவு நிகழ்ச்சிக்காக சென்னையில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் மேனிலைப் பள்ளிகளில் பன்னிரண்டாம் வகுப்பு படித்து முடித்திருக்கக்கூடிய மாணவ, மாணவியர்கள் இங்கு வந்திருக்கிறீர்கள்.

நேரு விளையாட்டு அரங்கமே உங்களால் மகிழ்ச்சிக் கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. உங்களால் இந்த அரங்கமே அதிர்ந்து கொண்டு இருக்கிறது.

உலக அளவில் ஒவ்வொரு துறையிலும், வெற்றி பெற்றவர்களை உற்றுப் பாருங்கள். அவர்கள் அனைவருமே, தங்களுக்குப் பிடித்தமான துறையைத் தேர்ந்தெடுத்திருப்பவர்களாக, அந்தந்தத் துறையில், அளவுக்கதிகமாக கடுமையாக உழைத்திருப்பார்கள். பிடித்த துறையைத் தேர்ந்தெடுப்பதும், கடும் உழைப்பும் ஒவ்வொருவருடைய வெற்றிக்கு மிகமிக முக்கியமான காரணமாக அமைந்திருக்கிறது. ஆகவே நீங்களும், உங்களுக்குப் பிடித்தமான துறையைத் தேர்ந்தெடுங்கள்! அதில் அதிகமான உழைப்பைக் கொடுங்கள்! உங்களுடைய வெற்றி நிச்சயம்!

இங்கே, உங்களுக்கான அடுத்த கட்டத் திட்டங்கள் குறித்து இங்கே விளக்கிப் பேச இருக்கிறார்கள். இங்கே வல்லுநர்கள் ஒவ்வொருவராக வந்து உங்களுக்கு விளக்கக்கூடிய வகையில் தகவல்களை சொல்லப் போகிறார்கள். நான் மாணவக் கண்மணிகளை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன், அவர்கள் சொல்லக்கூடிய விளக்கங்களை, விவரங்களை, குறிப்புகளை நீங்கள் தயவு செய்து குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இங்குப் பல்வேறு கல்வி நிறுவனங்களின் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன, நான் கூட அதை பார்த்துவிட்டுத்தான் இந்த மேடைக்கு வந்தேன். அவற்றையும் நீங்கள் தெளிவாக, பொறுமையாக அதைப் பார்த்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த 'நான் முதல்வன் - கல்லூரிக் கனவு' நிகழ்ச்சியானது, தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ஜூன் 29, 30 மற்றும் ஜூலை 1, 2 ஆகிய நாட்களில் நடக்கப் போகிறது.

தமிழகத்தில் ஏராளமான கல்வி நிலையங்கள் உள்ளன. இந்தியாவில் தலைசிறந்த கல்லூரிகளாக 100 கல்லூரிகளைத் தேர்வு செய்தால், அதில் 30 கல்லூரிகள் தமிழ்நாட்டில்தான் இருக்கிறது என்று நான் இங்கு பெருமையோடு பதிவு செய்ய விரும்புகிறேன். எனவே கல்லூரிப் பட்டம் என்பதை எளிதாக அனைவரும் பெறுவதற்கான வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. ஆனால், அந்தப் பட்டத்தைத் தாண்டிய தனித்திறமை இருந்தால்தான் நீங்கள் தனித்து ஜொலிக்க முடியும், பிரகாசிக்க முடியும். அதற்கு தன்னம்பிக்கை வேண்டும். நம்மால் முடியும் என்ற தைரியம் வேண்டும். நல்ல மொழியாற்றல் வேண்டும்.

தமிழ் மொழியாக இருக்கக்கூடிய நம்முடைய தாய்மொழியான தமிழிலும் உலக மொழியாக இருக்கக்கூடிய ஆங்கிலத்திலும் எழுத, பேச, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். அதே நேரத்தில் அது பகுத்தறிவாக இருக்கவேண்டும் என்பது தான் மிக மிக முக்கியம், அதை மறந்துவிடக் கூடாது.

விரக்திமனோபாவம் என்பது ஒருபோதும் இருக்கக்கூடாது. உங்களோடு மற்றவர்களை ஒப்பீடு செய்யாதீர்கள். இந்தப் பண்புநலன்கள் எல்லாம் ஒருவருக்கு நல்ல கல்வியால்தான் அமைந்திட முடியும். அத்தகைய கல்வியை, உயர்கல்வியைப் பெற வழிகாட்டியாக இருக்கப்போவதுதான், இந்தக் 'கல்லூரிக் கனவு' நிகழ்ச்சி'!

அறிவை விரிவு செய்!

அகண்டமாக்கு!

விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!

அணைந்து கொள்!

உன்னைச் சங்கமம் ஆக்கு!

மானிட சமுத்திரம் நானெனக் கூவு

- என்று பாடினார் பாவேந்தர் பாரதிதாசன்.

உங்களுக்கு நான் சொல்வது இதுதான்.

இன்று முதல் புதிய மனிதர்களாக நீங்கள் ஆகிறீர்கள்.

வருங்காலச் சமுதாயம் உங்களுக்கு ஒளிமயமானதாக மாறப் போகிறது.

உங்களது வாழ்வில் தென்றல் வீசப் போகிறது.

உங்கள் வாழ்க்கைக்கு ஒளியேற்றுவதற்கான ஒரு வாய்ப்பை நான் பெற்றமைக்காக உள்ளபடியே பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன், புலங்காகித உணர்வோடு உங்கள் முன்னால் கம்பீரமாக நான் நின்று கொண்டிருக்கிறேன்.

கல்லூரிச் சாலைக்குள் நீங்கள் செல்கிறீர்கள். கலையில், அறிவியலில், மருத்துவத்தில், பொறியியலில், சட்டத்தில் என உங்களது அறிவு மேம்பாடு அடையட்டும். உங்களின் வளர்ச்சியைப் பார்த்து ரசிக்கக்கூடிய, பெருமைப்படும் ஒரு தந்தையாக, நிச்சயம் நான் உங்களில் ஒருவனாக இருப்பேன் என்று உறுதியோடு கூறுகிறேன்.

2026ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தின் 2 மில்லியன் இளைஞர்களின் திறன் மேம்பாடு அடைய வேண்டும் என்று நான் அடிக்கடி சொல்லி வருகிறேன். அதில் நீங்களும் இடம்பெற்றுள்ளீர்கள்.

அதேபோல, 2030ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும் என்று சொல்லி வருகிறேன். அதில் உங்கள் பங்கும் இருக்க வேண்டும்.

ஒரு மனிதனின் மாபெரும் சொத்து என்பது அவனது கல்விதான். அதனால்தான் அதனை யாராலும் திருட முடியாத சொத்து என்று நான் திரும்ப திரும்பச் சொல்லி வருகிறேன்! வாய்ப்புக் கிடைக்கும் இடங்களில் எல்லாம், கல்வியின் அவசியத்தை நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

கல்வி உரிமை நாம் போராடிப் பெற்றிருக்கிறோம், தயவு செய்து அதை யாரும் மறந்துவிடக் கூடாது.

கல்வியை சிறுமைப்படுத்தி பேசக்கூடிய யாருடைய பேச்சையும் நீங்கள் காதில் வாங்காதீர்கள்!

படிப்பில் கவனம் செலுத்துங்கள்!

உயர்படிப்புகளையெல்லாம் கற்றுத் தேறுங்கள்!

அறிவார்ந்த தமிழ்நாட்டு மக்கள் எனப் பார் புகழ நீங்கள் விளங்க வேண்டும்!

அதுதான் நமக்கானப் பெருமை!

உங்களையெல்லாம் 'அவையத்து முந்தியிருக்கச் செய்யும்' தந்தை எனும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

படியுங்கள்... படியுங்கள்... படியுங்கள்... பகுத்தறிவோடு சிந்தியுங்கள்...

உங்கள் சிறகுகளை விரித்து, உலகம் என்னும் பரந்த வெளியில் சிறகடித்துத் திரியுங்கள்...

உங்களுக்குப் பின்னால் வருபவர்களுக்கு நீங்கள் வழிகாட்டிகளாய் திகழுங்கள்...

இன்றைக்கு அறிவு என்பதுதான் ஒரு மனிதனின் ஆற்றலாக அளவிடப்படுகிறது.

"Knowledge is one's power" - என்பார்கள்.

ஏதோ ஒன்றில் உங்களது அறிவு கூர்மை பெறுமானால், அந்த அறிவு உங்களது வாழ்க்கையை வளமானதாக ஆக்கும்.

கல்வியில், படிப்பில், விளையாட்டில், கலைத்திறன்களில் முதல்வர்களை உருவாக்குவதுதான் இந்த 'நான் முதல்வன்' திட்டத்தின் நோக்கம்.

நம்முடைய இளைஞர்களில் பல முதல்வர்களை உருவாக்கும் இந்தத் திட்டத்துக்கு, நான் தமிழக முதல்வராக வரவில்லை! உங்களில் ஒருவனாகத்தான் வந்திருக்கிறேன்.

அந்த நாற்காலியில் ஒவ்வொருவரையும், "நான் முதல்வன்" என்று கம்பீரமாக நீங்கள் சொல்லி, உங்களுடைய துறையில் முதல்வராக நீங்கள் வீற்றிருந்து, அந்த நாற்காலியை அலங்கரிக்கச் செய்வதுதான் என்னுடைய கடமை!

சாதி, மதம், பணம், அதிகாரம், வயது, அனுபவம், குடும்பம், பதவி, நாடுகள், வளர்ச்சி ஆகிய அனைத்தின் தன்மையும், ஆளுக்கு ஆள், நேரத்துக்கு நேரம், நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. ஆனால் அறிவு மட்டும்தான் அனைத்தையும் கடந்து ஒரே அளவுகோலோடு அளவிடப்படுகிறது.

இங்குப் பிறந்த திருவள்ளுவர் உலக ஞானியாக போற்றப்படுவதும், ஜெர்மனியில் பிறந்த காரல் மார்க்ஸ் உலகச்

சிந்தனைவாதியாக மதிக்கப்படுவதும்தான், அறிவுலகத்தின் ஆற்றல்.

கல்வியால் அடையும் புகழ்தான் நிலையானது!

அதற்கான அறிவுலகப்பயணத்தின் அடுத்தகட்டத்துக்குள் நுழையும் எனது பிள்ளைகளை - ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா என்று அழைத்து வாழ்த்துகிறேன்.

தவழும் குழந்தை தவறி விழுந்தால், தாங்கிப் பிடிக்கும் தாயின் கரங்கள்! அதே குழந்தை வளர்ந்து வெற்றிக்கொடி நாட்டும்போது, தாயின் கண்கள் 'வானமே எல்லை' என்று சுட்டிக்காட்டும்!

அந்த வகையில், இந்த நிகழ்ச்சி வெறும் வழிகாட்டி நிகழ்ச்சி மட்டுமல்ல! கல்வி, விளையாட்டு, கலைத்திறன், தொழில்நுட்பம் என்று ஒவ்வொரு துறையிலும் தமிழக இளைஞர்களை வெற்றியாளர்களாக,செதுக்கியநிகழ்ச்சிதான் இது.

வாருங்கள்!

உலகை வெல்லும் இளைய தமிழகத்தைப் படைப்போம்!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
"நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கான உயர்கல்விக்கு வழிகாட்டும் "கல்லூரி கனவு" நிகழ்ச்சியை தொடங்கி வைத்து ஆற்றிய உரை - 25.06.2022

கல்வியுடன் சிறந்த மனிதாபிமானத்தையும் ஊட்டும் நிறுவனம்

திருச்சி ஜமால் முகமது கல்லூரியினுடைய முப்பெரும் விழாவில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்களே!

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களே!

மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள்:

திரு. அப்துல் சமது அவர்களே!

நண்பர் இனிகோ இருதயராஜ் அவர்களே!

சகோதரர் சௌந்திரபாண்டியன் அவர்களே!

ஸ்டாலின் குமார் அவர்களே!

தியாகராஜன் அவர்களே!

திருச்சி மாநகராட்சியின் மேயர் அருமை நண்பர் அன்பழகன் அவர்களே!

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியினுடைய தேசியத் தலைவரும், நாடாளுமன்றத்தினுடைய முன்னாள் உறுப்பினருமான நம்முடைய பெருமைக்குரிய பேராசிரியர் ஐயா காதர் மொகிதீன் அவர்களே!

ஜமால் முகமது கல்லூரியின் நிருவாகக் குழுத் தலைவர் ஹாஜி திரு.எம்.ஜே.ஜமால் முகம்மது பிலால் அவர்களே!

செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் அ. கா. காஜா நஜீமுதீன் அவர்களே!

பொருளாளர் ஹாஜி திரு. எம். ஜே. ஜமால் முகம்மது அவர்களே!

கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் அவர்களே!

துணை முதல்வர் முனைவர் அ.முகம்மது இப்ராஹிம் அவர்களே!

உயர் நீதிமன்றத்தினுடைய மேனாள் நீதியரசர் அக்பர் அலி அவர்களே!

வக்பு வாரியத்தினுடைய தலைவர் திரு. அப்துல் ரஹ்மான் அவர்களே!

கல்லூரியின் நிருவாகிகளே!

பேராசிரியர் பெருமக்களே!

என்னுடைய அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே!

பத்திரிகைமற்றும்ஊடகத்துறையைச்சார்ந்திருக்கக்கூடிய தோழர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் முப்பெரும் விழாவில் காணொளிக் காட்சியின் மூலமாகப் பங்கெடுத்து உங்கள் முன்னால் உரையாற்றுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். நேரில் வந்து சந்திக்கவேண்டும், இந்த விழாவில் உங்களோடு நேரடியாகப் பங்கெடுக்க வேண்டும் என்று நான் விரும்பினாலும், மருத்துவர்களின் ஆலோசனைப்படி சில நாட்களாக நான் காய்ச்சலில் அவதிப்பட்ட காரணத்தினால், சற்று வெளியூர் பயணத்தை தவிர்க்க வேண்டியதாக ஒரு சூழ்நிலை அமைந்திருக்கிறது.

சிறிது காய்ச்சல் இருந்ததாலும், ஓய்வெடுத்து காய்ச்சல் குறைந்ததும் வெளியூர் பயணங்களை ஒரு வார காலத்திற்காவது தவிர்க்க வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுரை சொன்னார்கள். என்னதான் நான் மாநிலத்தினுடைய முதலமைச்சராக இருந்தாலும், மருத்துவர்கள் வார்த்தைக்கு கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும், அந்த வகையில், திருச்சிக்கு நேரடியாக வர இயலவில்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விழாவில் என்னை பங்கெடுக்க வைக்க வேண்டுமென்று நம்முடைய அருமைச் சகோதரர் மாண்புமிகு அமைச்சர் நேரு அவர்களும், நம்முடைய பேராசிரியர் அய்யா காதர் மொய்தீன் அவர்களும் மிகவும் அக்கறையாக இருந்தார்கள். அதற்காக தேதியும் பெற்றார்கள். திருச்சி என்பதற்காக மட்டும் அவர்கள் ஆர்வத்தைக்

காட்டவில்லை. அதையும் தாண்டிய ஒரு பாசம் அவர்களுக்கு இருந்திருக்கிறது என்பதை பின்னர்தான் நான் தெரிந்து கொண்டேன். அது என்னவென்றால், அவர் படித்த கல்லூரி இந்த ஜமால் முகமது கல்லூரி. இந்தக் கல்லூரியின் பழைய மாணவர்கள் என்ற அடிப்படையிலும் இந்த விழாவில் நான் பங்கெடுக்க ஆர்வம் காட்டினார் நேரு அவர்கள்.

அவர் மட்டுமல்ல, நம்முடைய வேளாண் மற்றும் உழவர் நலன் துறை அமைச்சராக இருக்கும் அருமைச் சகோதரர் மாண்புமிகு எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களும், உங்கள் கல்லூரியில் படித்தவர்தான். அந்த வகையில், இரண்டு அமைச்சர்களை தமிழ்நாட்டுக்குக் கொடுத்த கல்லூரி இந்த ஜமால் முகமது கல்லூரி. அதேபோல, மேடையில் அமர்ந்திருக்கக்கூடிய நம்முடைய மரியாதைக்குரிய பேராசிரியர் அய்யா காதர் மொய்தீன் அவர்களும், இந்தக் கல்லூரியில் படித்தவர் தான். தமிழக அரசியல் பண்பாட்டுக்கு இலக்கணமாக அரசியல் தலைவர்களில் ஒருவர் நம்முடைய காதர் மொய்தீன் அவர்கள்.

இதேபோல் இக்கல்லூரியில் படித்தவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக, ஐ.பி.எஸ். அதிகாரிகளாக, கல்வியாளர்களாக, பேராசிரியர்களாக, தொழிலதிபர்களாக விளங்கி வருகிறார்கள்.

திருச்சியின் அடையாளங்களில் ஒன்று ஜமால் முகமது கல்லூரி. கல்லூரியினுடைய நிறுவனர் நாள் விழா, கல்லூரி வரலாற்றைத் தொகுக்கும் பெருந்திட்டத் தொடக்க விழா, குளோபல் ஜமாலியன் பிளாக் கட்டட அடிக்கல் நாட்டு விழா ஆகிய இந்த மூன்று விழாக்களை இணைத்து முப்பெரும் விழாவாக ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்.

தீரர்களின் கோட்டம் என்று அழைக்கப்படுவது இந்த திருச்சி மாநகரம். அங்கே பல்வேறு கல்விக் கோட்டங்களும் இருக்கின்றன. அதில் தலைசிறந்த கல்விக் கோட்டம்தான் இந்த ஜமால் முகமது கல்லூரி.

நாட்டுப்பற்றுமிக்க தலைசிறந்த தமிழர்கள் இருவரால் உருவாக்கப்பட்ட கல்லூரிதான் இந்த ஜமால் முகமது கல்லூரி. அந்த தலைசிறந்த இரண்டு தமிழர்களில் ஒருவர் எம். ஜமால் முகமது அவர்கள். மற்றொருவர் என். எம். காஜாமியான் இராவுத்தர் அவர்கள்.

❖ 1931ஆம் ஆண்டு மகாத்மா காந்தி அவர்கள் இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்றபோது, அவருடன் சென்றவர்தான் ஜமால் முகமது அவர்கள். இந்தியாவின் விடுதலைப் போராட்ட நிதிக்காக அண்ணல் காந்தி அடிகளிடம் தொகை நிரப்பப்படாத காசோலையை வழங்கிய தேசியவாதிதான் ஜமால் முகமது அவர்கள்.

❖ அதேபோல் காஜாமியான் இராவுத்தர் அவர்களும் விடுதலைப் போராட்ட வீரர்தான். தேசியத்தின் அடையாளமாக அப்போது இருந்த கதர் துணிகளைத் தயாரிக்க திருச்சியில் கதர் ஆலையை நிறுவியவர் இராவுத்தர் அவர்கள். தான் தயாரித்த கதர் துணியை ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக வழங்கினார். தேசிய இயக்கத்தில் மட்டுமல்ல, சுயமரியாதை இயக்கத்துடனும் தொடர்பு கொண்டவர் தான் இவர். தந்தை பெரியார் அவர்களுடன் நெருக்கமான நண்பராக இருந்தவர் இராவுத்தர் அவர்கள். 1938ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் இந்தித் திணிப்பு

எதிர்ப்புப் போராட்டம் நடந்தபோது தனது மனைவியுடன் சேர்ந்து பங்கெடுத்தவர் இராவுத்தர் அவர்கள்.

இத்தகைய காஜாமியான் இராவுத்தர் அவர்கள் 90 ஏக்கர் நிலத்தைத் தந்திருக்கிறார். அதில் ஜமால் முகமது கட்டடம் கட்டித் தருகிறார். அதுதான் இன்று நாம் பார்க்கக்கூடிய ஜமால் முகமது கல்லூரி ஆகும். எழுபது ஆண்டுகளைக் கடந்து அறிவியக்கமாக இந்தக் கல்லூரி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இரண்டே இரண்டு நல்லவர்கள் சேர்ந்தால், எத்தனை பேருக்கு அறிவொளி கொடுக்க முடியும் என்பதன் அடையாளமாக இந்த ஜமால் முகமது கல்லூரி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஜமால் முகமது அவர்களாக இருந்தாலும், காஜாமியான் இராவுத்தராக இருந்தாலும் இருவரும் பெரும் பணக்காரர்கள், தொழிலதிபர்கள். பல்வேறு நிறுவனங்களை நடத்தக்கூடிய திறம் படைத்தவர்கள். ஆனால் அவர்கள் இந்த நாட்டு மக்களுக்குக் கல்வியைக் கொடுக்க நினைத்தார்கள். ஏழை, எளிய பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்களுக்கு உயர் கல்வியைக் கொடுக்க நினைத்தார்கள். அதற்காக அவர்கள் இரண்டு பேரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

அதைவிட முக்கியம் என்னவென்று கேட்டால், ஒரு நிறுவனத்தைத் தொடங்குவது எளிது. அதைத் தொடர்ச்சியாக நடத்துவதும் நோக்கம் சிதையாமல் நடத்துவதும், அப்படி நடத்தி வளர்ப்பதும் சாதாரணமான காரியம் அல்ல.

ஜமால் முகமது காஜாமியான் இராவுத்தர் ஆகிய இருவரது வழித்தோன்றல்களும் தங்களது முன்னோர்களது நோக்கம் கொஞ்சம் கூட சிதையாமல், இந்தக் கல்வி நிறுவனத்தை

நடத்தி வருவதை அறிந்து நான் உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன், அதற்காக அவர்களுக்கு வாழ்த்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உங்கள் முன்னோர்களுக்கு நீங்கள் செய்யும் உண்மையான அஞ்சலி என்பது இதுதான்.

நாமும் ஒரு கல்வி நிறுவனத்தை நடத்துகிறோம் என்று இல்லாமல் அதனை தரமானதாக நடத்துவதில் இந்த நிறுவனம் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டு வந்து கொண்டிருக்கிறது. அதனால் தான் கல்வி குறித்த தேசிய தரமதிப்பீட்டில் "A" தரத் தகுதியைப் பெற்றிருக்கிறது.

இந்திய அளவில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வரும் 100 கல்லூரிகளில் 65ஆவது இடத்தில் ஜமால் முகமது கல்லூரி இருப்பதை அறிந்து நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன். இது இன்னும் முன்னோக்கி வர வேண்டும் என்று என்னுடைய வாழ்த்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

சிறுபான்மையினர் கல்வி நிறுவனமாக இருந்தாலும், அனைவரும் பயிலும் நிறுவனமாக இது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோல், ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் இணைந்து பயிலக்கூடிய கல்லூரியாகவும் இருக்கிறது.

அந்த வகையில் சமத்துவக் கல்லூரியாகவும், இந்த ஜமால் முகமது கல்லூரி செயல்பட்டு வருவதை அறிந்து நான் பாராட்டுகிறேன்.

தனித்திறமைக்கு முக்கியத்துவம் தரும் கல்லூரியாகவும் இது அமைந்திருக்கிறது.

- இந்திய அரசு சார்ந்த நிறுவனங்களின் நிதி உதவியை பெற்று ஆராய்ச்சிகள் செய்து வரும் நிறுவனமாகவும் இது இருக்கிறது.
- இந்தக் கல்லூரி மாணவி ரேஷ்மி பரத நாட்டியக் கலையில் உலக சாதனை புரிந்துள்ளார்.
- பல்கலைக்கழக மானியக் குழு ஆற்றல் வளத் தனித்தகுதி பெற்ற கல்லூரி எனப் பாராட்டி இருக்கிறது.
- இசை நாடகக் கலை மன்றம், தேசிய மாணவர் படை, தேசிய நாட்டு நலப்பணி.
- இளையோர் ரெட் கிராஸ் போன்ற அமைப்புகளும் இங்கு மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.
- டெல்லியில் நடைபெறக்கூடிய குடியரசு தின அணிவகுப்பில் கடந்த 16 ஆண்டுகளாக இந்தக் கல்லூரி தேசிய மாணவர் படை மாணவர்கள் அணிவகுத்து வருகிறார்கள்.
- அனைத்து விளையாட்டுப் போட்டிகளுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டு வருகிறது.

இத்தகைய தனித்திறமைகளை வளர்ப்பதில் அனைத்துக் கல்லூரிகளும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வி, படிப்பு, பட்டம் ஆகியவற்றைத் தாண்டிய தனித்திறமைகளும்,பல்துறை அறிவாற்றலும் இருக்கக் கூடிய இளைஞர்களால் தான் எதிர்காலத்தில் சிறப்பாகச் செயல்பட முடியும், அதிக வளர்ச்சியை அடைய முடியும். அந்த நோக்கத்துக்காகத்தான் 'நான் முதல்வன்' என்ற திட்டத்தை நம்முடைய தமிழக அரசு தொடங்கி இருக்கிறது.

இது என்னுடைய கனவுத் திட்டம். அதனால் தான் என்னுடைய பிறந்த நாளான மார்ச் 1 அன்று அந்தத் திட்டத்தை நான் தொடங்கி வைத்தேன்.

தமிழ்நாட்டு மாணவர்கள், இளைஞர்கள் கல்வியில், அறிவாற்றலில், பன்முகத் திறமையில் முதல்வனாகத் திகழ வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டத் திட்டம் தான் "நான் முதல்வன்" என்கிற அந்தத் திட்டம். நேற்றைக்குக்கூட இந்தத் திட்டத்தினுடைய ஒரு பகுதியாக "கல்லூரிக் கனவு" என்கிற உயர்கல்வி வாய்ப்புக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சியை சென்னையில் நான் தொடங்கி வைத்தேன். தொடர்ந்து மாநிலம் முழுவதும் அடுத்த சில நாட்களில் இந்த நிகழ்ச்சி நடக்கவிருக்கிறது.

பள்ளிக் கல்வியில் பெருந்தலைவர் காமராசர் காலமும், கல்லூரிக் கல்வியில் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் காலமும், சிறப்பாக விளங்கியதைப் போல, இந்த ஆட்சிக் காலம் உயர்கல்வியின், ஆராய்ச்சிக் கல்வியின் பொற்காலமாகத் திகழ வேண்டும் என்ற இலக்கோடு நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த இலக்கு நோக்கிய பயணத்தில் ஜமால் முகமது போன்ற தனியார் கல்வி நிறுவனங்களும் துணைநிற்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்லூரிக் கல்வியைத் தேடி வரும் இளைஞர்களை, பட்டதாரிகளாக மட்டுமல்ல, அறிவாளிகளாக, அறிவுக்கூர்மை கொண்டவர்களாக, பன்முகத் திறமை கொண்டவர்களாக, வளர்த்தெடுக்க நீங்கள் திட்டமிட வேண்டும். ஜமால் முகமது கல்லூரியில் படித்த மாணவர்கள் உலகின் பல்வேறு நாடுகளில் சிறப்பாக வாழ்ந்து வருகிறார்கள்.

இக்கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கமானது உலகின் 19 நாடுகளில் இயங்கி வருவதைப் பார்க்கும்போது, எத்தகைய திறமைசாலிகளை உருவாக்கி இருக்கிறீர்கள் என்பதை என்னால் உணர முடிகிறது. இப்படி படித்த மாணவர்கள் தங்கள் கல்லூரியையும் மறந்துவிடாமல், பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களது கல்விக்கு உதவி செய்து வருவதை அறியும் போது, கல்வியுடன் சிறந்த மனிதாபிமானத்தையும் ஊட்டும் நிறுவனமாக நீங்கள் செயல்பட்டு வருவதை உணர முடிகிறது.

இத்தகைய சிறப்புமிகு கல்லூரியின் முப்பெரும் விழாவில் காணொளி மூலமாகக் கலந்து கொண்டு என்னுடையவாழ்த்துக்களைநான் தெரிவிக்கவிரும்புகிறேன். பின்பு ஒரு முறை இங்கே வரவேற்புரை ஆற்றுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னதுபோல, நிச்சயம் வாய்ப்புக் கிடைக்கும்போது நான் உங்களுடையகல்லூரிக்கு வருவேன் என்ற அந்த உறுதியை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
திருச்சியில் நடைபெற்ற ஜமால் முகமது கல்லூரி
முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு
ஆற்றிய உரை - 26.06.2022

சர்வதேச விளையாட்டு வீரர்களை உருவாக்க இந்த மாநாடு அடித்தளம் அமைக்கும்

'ஸ்போர்ட்ஸ் ஸ்டார்' இதழ் நடத்தக்கூடிய 'சவுத் ஸ்போர்ட்ஸ்' மாநாட்டிலே பங்கேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களே!

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களே!

'தி இந்து' குழுமத்தின் டைரக்டர் திரு. முரளி அவர்களே!

'தி இந்து' குழுமத்தின் தலைவர் இங்கே தொடக்கத்தில் எனக்கு முன்னால் உரையாற்றியிருக்கக்கூடிய டாக்டர் மாலினி பார்த்தசாரதி அவர்களே!

இந்தியா சிமெண்ட்ஸ் குழுமத் தலைவர் மதிப்பிற்குரிய திரு. சீனிவாசன் அவர்களே!

'ஸ்போர்ட்ஸ் ஸ்டார்' இதழின் ஆசிரியர் திரு. அயோன் சென்குப்தா அவர்களே!

முதன்மை செயல் அலுவலர் திரு. நவநீத் அவர்களே!

சர்வதேச சதுரங்க 'கிராண்ட் மாஸ்டர்' திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்களே!

இந்த மாநாட்டில் பங்கேற்றிருக்கக்கூடிய விளையாட்டு வீரர்களே! வீராங்கனைகளே! பயிற்சியாளர்களே! விளையாட்டு அலுவலர்களே!

'தி இந்து' குழுமத்தினுடைய நிருவாகிகளே!

பத்திரிகையாளர்களே! ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி அமைந்ததற்குப் பிறகு, அனைத்துத் துறைகளிலும் பல்வேறு முன்னெடுப்புகளைச் செய்து வருகிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அதிலும் குறிப்பாக ஒரு திராவிட மாடல் ஆட்சியை நடத்திக்

கொண்டிருக்கிறோம் என்பதும் உங்களுக்கு நன்றாகப் புரியும்.

அதாவது, அனைவருக்குமான வளர்ச்சி - அனைத்துத் துறையினுடைய வளர்ச்சி - அனைத்து மாவட்டத்தினுடைய வளர்ச்சி, அதையும் தாண்டி, அனைத்து சமூக வளர்ச்சி என்ற அடித்தளத்தில் நம்முடைய 'திராவிட மாடல்' ஆட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சி என்பதைத் தொழில் வளர்ச்சியாக மட்டும் சிலர் எடுத்துக் கொள்கிறார்கள். 'டெவலப்மெண்ட்' என்பதைத் தாண்டிய விரிவான பொருள், 'வளர்ச்சி' என்ற சொல்லுக்கு உண்டு. அந்த வகையில் தமிழ்நாடு அனைத்து வகையிலும், அனைத்துத் துறைகளிலும் மேம்பட்டு விளங்க முயற்சித்துக் கொண்டு இருக்கிறோம்.

அதில் ஒரு முக்கியமான துறை தான், விளையாட்டுத் துறை. அத்தகைய விளையாட்டுத் துறையிலும் முன்னோக்கிய பாய்ச்சலில் தமிழ்நாடு இன்றைக்கு சென்று கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

குறிப்பாக, வருகின்ற ஜூலை 28 அன்று 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி சென்னையில் நடப்பது நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஒரு மிகப்பெரிய பெருமை என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். 200 நாடுகள் - ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்க உள்ள செஸ் ஒலிம்பியாட் திருவிழா, முதல்முறையாக நம்முடைய சென்னை மாநகரில் நடைபெற இருக்கிறது.

2022ஆம் ஆண்டிற்கான போட்டியை, உக்ரைன் போர் காரணமாக, ரஷ்யாவில் நடத்தும் முடிவை கைவிடுவதாக சர்வதேச செஸ் கூட்டமைப்பு அறிவித்தது. எனவே இந்தப் போட்டியைத் தங்கள் நாடுகளில் நடத்துவதற்கு பல நாடுகள் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டன.

அகில இந்திய செஸ் கூட்டமைப்பு, இந்தியாவில் செஸ் ஒலிம்பியாட்டை நடத்த நாமும் முயற்சிகளை மேற்கொண்டோம். அப்போது நமது அரசு உரிய நேரத்தில், உரிய நடவடிக்கை எடுத்த காரணத்தால் அந்த வாய்ப்பு சென்னைக்குக் கிடைத்திருக்கிறது.

இந்தியாவில் நடப்பது இது முதல் முறை என்பதையும், அதையும் தாண்டி பெருமையாக சொல்ல வேண்டுமென்றால், அந்த முதல் முறையும் நம்முடைய தமிழ்நாட்டில் நடப்பதுதான் நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய மகிழ்ச்சி.

விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் என 2,500 பேர் உலகம் முழுவதிலும் இருந்து அந்தப் போட்டிக்கு, நிகழ்ச்சிக்கு வர இருக்கிறார்கள். இதனால் சர்வதேச அளவில் தமிழகம் அனைவராலும் உற்றுநோக்கக்கூடிய ஒரு மாநிலமாக மாறப் போகிறது.

செஸ் ஒலிம்பியாட் விளையாட்டுப் போட்டியை நடத்துவதன் மூலமாக நம்முடைய தமிழக அரசு பெருமையடைகிறது. இந்த சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை நடத்துவதற்காக மாநில அரசு ரூ.92.13 கோடி நிதியை ஒதுக்கியிருக்கிறது.

44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான இலச்சினை (Logo) மற்றும் சின்னத்தை சில வாரங்களுக்கு முன்னால் நான் வெளியிட்டேன்.சதுரங்கவிளையாட்டில்இருக்கக்கூடிய 'நைட்' போலவே ஒரு குதிரை வடிவமைக்கப்பட்டு, அது வணக்கம் சொல்லும் வகையில் காணப்பட்டது. தமிழ் முறைப்படி அது வேட்டி - சட்டை அணிந்துகொண்டு, அதற்கு 'தம்பி' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இத்தகைய 'கவுண்ட் டவுன்' தொடங்கப்பட்டுள்ள நேரத்தில் இந்த கான்க்ளேவ் நடப்பது மிகமிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது. சரியான நேரத்தை தேர்வு செய்த 'தி இந்து' குழுமத்தை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன், அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நானும் கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளில் ஆர்வம் உள்ளவன்தான். கிரிக்கெட் போட்டிகளை பார்ப்பதை நான் தவற விடமாட்டேன். பள்ளிக் காலம் முதல் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கக்கூடியவன். மேயர் ஆனபோதும் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்டு நான் விளையாடி இருக்கிறேன்.

எத்தகைய பணிச்சூழல்கள் இருந்தாலும் மறைந்த நம்முடைய தமிழக முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்களும் கிரிக்கெட் போட்டிகளைத் தவறாமல் பார்த்துவிடுவார்கள்.

விளையாட்டுப்போட்டிகள் என்பது,விளையாடுபவர்களை மட்டுமல்ல, போட்டிகளை பார்ப்பவர்களையும் உற்சாகம்

ஊட்டக்கூடியவகையில் அது அமைந்திருக்கிறது. அதேபோல் விளையாடுபவர்களை 'விளையாட்டு வீரர்கள்' என்று சொல்கிறோம்.

அத்தகைய கம்பீரமான துறைதான் இந்த விளையாட்டுத் துறை. இத்தகைய விளையாட்டுத் துறையில் ஏராளமான முன்னெடுப்புகளை தமிழ்நாடு அரசு செய்து வருகிறது.

நம்முடைய கழக ஆட்சி அமைந்தவுடனே ஒரு அறிவிப்பைச் செய்தோம். அதாவது

- ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூ.3 கோடி, வெள்ளிப்பதக்கம் வெல்லக்கூடிய வீரருக்கு ரூ.2 கோடி, வெண்கலப்பதக்கம் வெல்லக் கூடிய வீரருக்கு ரூ.1கோடி என்று அறிவித்தோம். இது மிகப்பெரிய பரிசுத் தொகை!

விளையாட்டு வீரர்களுக்கு முதலில் தேவையானது ஊக்கம்தான். அத்தகைய ஊக்கத்தை அளிப்பதற்காக இந்த அறிவிப்பை நம்முடைய அரசின் சார்பில் நாம் செய்தோம்.

- டோக்கியோ ஒலிம்பிக், பாராலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளும் வீரர்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.55 இலட்சம் வழங்கினோம்.

- வாள்சண்டை வீராங்கனை பவானிதேவி அவர்களுக்கு டோக்கியோ ஒலிம்பிக்கில் கலந்துகொள்ள ரூ.5 இலட்சம் ஊக்கத்தொகை வழங்கினோம்.

❖ தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் இறகுப்பந்து பயிற்சிக் கூடம், மேசைப்பந்து பயிற்சிக் கூடம், தங்கும் விடுதி, ஆய்வகம் ஆகியவை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பக் கலை வீரர்களுக்கு விளையாட்டு ஒதுக்கீட்டில் 3 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ காட்பாடியில் திறந்தவெளி மாவட்ட விளையாட்டு வளாகமும் - சென்னையில் பெண்களுக்கான புதிய விளையாட்டு விடுதியும் - கிருஷ்ணகிரி, ஓசூரில் விளையாட்டு அரங்குகளில் புதிய அரங்குகளும் அமைக்கப்பட இருக்கிறது.

❖ டோக்கியோ ஒலிம்பிக்கில் நடந்த தடகளப் பிரிவில் கலந்துகொண்ட தனலட்சுமி, சுபா ஆகிய இருவருக்கும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திலும் - பாராஒலிம்பிக்கில் உயரம் தாண்டுதலில் வெள்ளிப்பதக்கம் வென்ற மாரியப்பனுக்கு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகிதங்கள் நிறுவனத்திலும் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

விளையாட்டு வீரர்களுக்கு ஏராளமாக - தாராளமாக நிதி உதவிகளை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது, செய்யவும் போகிறது. தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட நிலையை இன்றைக்கு நாம் உருவாக்கியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல,

- ஜப்பான் நாட்டில் நடந்த மாற்றுத்திறனாளிகளுக்கான பாராலிம்பிக் தடகள விளையாட்டில் வெள்ளிப்பதக்கம் வென்ற மாரியப்பன் அவர்களுக்கு ரூ.2 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.
- ஸ்காட்லாந்தில் நடந்த ஸ்குவாஷ் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தீபிகா பல்லிக்கல், கார்த்திக், சவுரவ் கோஷல், ஜோஷ்னா சின்னப்பா ஆகியோருக்கு ரூ.3 கோடி ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- 2015 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா, அபுதாபியில் நடந்த சிறப்பு ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு ரூ.3.90 கோடி நிதி உதவி தரப்பட்டுள்ளது.
- 2020ஆம் ஆண்டுக்கான 'ஃபிடே' உலக சதுரங்க ஆன்லைன் குழு வாகையர் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற குழுவினருக்கு ரூ.92 இலட்சம் நிதி வழங்கப்பட்டது.
- 2021ஆம் ஆண்டுக்கான 'ஃபிடே' உலக சதுரங்க ஆன்லைன் குழு வாகையர் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற குழுவினருக்கு ரூ.57.60 இலட்சம் நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

இதற்கெல்லாம் மேலாக, மகுடம் வைத்தாற்போல மதுரையில், அலங்காநல்லூரில் நமது பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கென பிரம்மாண்டமான அரங்கம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டில் கட்டுமானப் பணிகள் துவங்கப்படவிருக்கிறது

என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல், மாவட்ட அளவில் விளையாட்டுகளை ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் விளையாட்டு அரங்கம் அமைக்கவும் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நம்முடைய அரசு வெளியிட்டிருக்கிறது. இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். இவை அனைத்தும் இந்த ஓராண்டு காலத்தில் செய்யப்பட்டவை.

தமிழக விளையாட்டுத் துறை மிகமிக வேகமாகவும், சுறுசுறுப்பாகவும் செயல்பட்டுவருகிறது என்பதை இதன்மூலம் நாம் அறியலாம். இத்தகைய விளையாட்டு வீரர்களைத் தேடியும், உருவாக்கியும் வருகிறது நம்முடைய அரசு. இத்தகைய செயல்பாடுகளுக்கு ஊக்கம் அளிப்பதாக இந்த மாநாடு அமைந்திருக்கிறது.

நமது மாநிலத்திலுள்ள அனைத்து விளையாட்டு வீரர்களையும் ஊக்கப்படுத்தவும், அனைத்து விளையாட்டுக்களையும் மேம்படுத்தவும் இங்கேயே சர்வதேச விளையாட்டு வீரர்களை உருவாக்கவும் இந்த மாநாடு அடித்தளம் அமைக்கும் என்று நான் மனதார நம்புகிறேன்.

விளையாட்டுத் துறையில் தமிழக அரசு எடுக்க வேண்டிய முன் முயற்சிகள் குறித்தும், பள்ளி, கல்லூரி மாணவர்களிடம் விளையாட்டை ஊக்கப்படுத்த என்னென்ன செய்யலாம் என்பது குறித்தும், விளையாட்டை உடல்சார் கல்வியாக அனைவரும் நினைக்க என்ன மாதிரியான வடிவங்களில் இதனை அறிமுகம் செய்யலாம் என்பது குறித்தும், மெகா

விளையாட்டு போட்டிகளை எந்த வகையில் நடத்தலாம் என்பது குறித்தும் அரசுக்கு இந்த மாநாடு அரிய ஆலோசனைகளைச் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில் எத்தனையோ கனவுகள் நமது அரசிற்கு இருக்கிறது. அவற்றை நனவாக்கும் வகையில் விளையாட்டுத் துறை இன்னும் சிறக்க வழிவகைகளை நாம் காணவேண்டும். அதற்கு இந்த கான்கிளேவ் நல்ல துவக்கமாக அமையும் என்று நான் கேட்டு, இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டமைக்காக மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
'தி ஹிந்து' குழுமத்தின் சார்பில் நடைபெறும் ஸ்போர்ட்ஸ் ஸ்டார் தென்னக விளையாட்டு மாநாட்டில் (Sportstar - South Sports Conclave) கலந்து கொண்டு ஆற்றிய உரை - 28.06.2022

வேலூரில், ரூ.325 கோடி மதிப்பீட்டில் 9 கிராமங்களின் வழியே 137 கி.மீ. நீளத்தில் வட்டச் சாலை

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களே!

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்களே!

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் மத்திய இணை அமைச்சர் டாக்டர் ஜெகத்ரட்சகன் அவர்களே!

வேலூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கதிர் ஆனந்த் அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்களாக வருகை தந்திருக்கக்கூடிய திரு. கார்த்திகேயன் அவர்களே!

மாவட்டச் செயலாளர் திரு. நந்தகுமார் அவர்களே!

திருமதி அமுத விஜயன் அவர்களே!

திரு. ஈஸ்வரப்பன் அவர்களே!

திரு. வில்வநாதன் அவர்களே!

வேலூர் மாநகராட்சியின் மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார் அவர்களே!

துணை மேயர் திரு. சுனில்குமார் அவர்களே!

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பெ. குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ராமமூர்த்தி அவர்களே!

நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக் கூடிய முன்னாள் அமைச்சர் டாக்டர் விஜய் அவர்களே!

சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களே!

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முகமது சகி அவர்களே!

மற்றும் அரசு உயர் அலுவலர்களே!

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்காக வருகை தந்திருக்கும் பயனாளப் பெருமக்களே!

அன்பிற்கினிய பெரியோர்களே! அருமை தாய்மார்களே!

தொழிலாளர் தோழர்களே! பாட்டாளிப் பெருமக்களே!

ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புக்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

வேலூர் என்பது வீரத்தின் அடையாளம்.

விவேகத்தின் அடையாளம்.

விடுதலையின் அடையாளம்.

போர்க்களத்தின் அடையாளம்.

இத்தகு சிறப்புகள் அனைத்தும் பொருந்திய, நல்லிணக்கத்தின் அடையாளமாகத் திகழும், சீர்மிகு மாவட்டமாம் வேலூரில் நடைபெறும் இந்த அரசு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவின் முதலாவது சுதந்திரப் போராட்டம் 1857இல் நடந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் சொல்வார்கள். அதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்பே கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக, அனலும் கனலும் தெறித்த ஊர்தான் இந்த வேலூர்.

1806ஆம் ஆண்டு ஜூலை 10ஆம் நாள் வேலூர் கோட்டையில் நடத்திய புரட்சிதான் அதனுடைய தொடக்கமாக அமைந்திருக்கிறது. இந்தியர்கள் அடிமைகளாக வாழத் தயாராக இல்லை என்பதை பிரிட்டிஷ் ஆட்சிக்கு அறிவித்தது. அத்தகைய எழுச்சி மிகுந்த ஊரில் இந்தக் கோட்டையில் இந்த விழா நடந்துகொண்டு இருக்கிறது.

இன்னொரு மகிழ்ச்சிக்குரிய பெருமை என்ன என்றால், என்னுடைய அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய என்னுடைய

ஆருயிர் அண்ணன் துரைமுருகன் அவர்களின் மாவட்டமும் இதுதான். எனவே கூடுதல் மகிழ்ச்சியோடு நான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறேன்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களும், இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களும் அடுத்தடுத்து நம்மை விட்டு விலகிய நிலையில், கழகத்தைக் கொண்டு செலுத்தக்கூடிய பெரும் கடமை, என்னுடைய தோளில் முழுமையாக விழுந்தது. அப்போது என்னைத் தாங்கி நிற்கக்கூடிய தூணாக இருந்தவர்தான் இங்கு இருக்கக்கூடிய அண்ணன் துரைமுருகன் அவர்கள்.

கட்சியைப் பொறுத்தவரை கழகத்தின் பொதுச்செயலாளராக, சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் அவைமுன்னவராக, ஆட்சியைப் பொறுத்தவரை அமைச்சராக இருந்து, எனக்கு வழிகாட்டும் திசைகாட்டியாக இருக்கிறார் அண்ணன் துரைமுருகன் அவர்கள்.

'துரை' - 'துரை' என்று தலைவர் கலைஞர் அவர்கள் எப்படி அவரை அழைத்து அருகில் வைத்துக் கொள்வாரோ, அதேபோல, என்னோடும் தோளோடு தோள் கொடுத்து நின்று வருகிறார் அண்ணன் அவர்கள். அவரை நான் சக அமைச்சராக அல்ல, என்னுள் ஒருத்தராக நினைத்துதான் அவரிடம் நான் அன்பு செலுத்தி வருகிறேன்.

என்னைச் சிறு வயது இளைஞராக பார்த்தவன் என்று அவர் அடிக்கடி எடுத்துச் சொல்வார். உண்மைதான். அவர் என்னை இளைஞராகப் பார்த்தவர், இன்று தலைவராகப் பார்க்கிறார். ஆனால், நான் உங்களை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் இடத்தில், இனமானப் பேராசிரியர் இடத்தில் வைத்துப் பார்க்கிறேன் என்று முன்பு ஒரு முறை சொன்னேன். அதையே இந்தக் கூட்டத்தில், இந்த விழாவில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் அண்ணன் துரைமுருகன் அவர்களின் பொதுவாழ்வுப் பொன்விழாவை முன்னிட்டு, சிறப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து நான் பேசினேன். சட்டமன்றத்தின் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் தொடர்ந்து அவரை வாழ்த்திப் பேசினார்கள். அண்ணன் துரைமுருகன் அவர்கள் நூற்றாண்டு விழாவையும் காண வேண்டும் என்று அந்த எண்ணத்தை, எனது வாழ்த்துக்களை உங்கள் அனைவரின் சார்பாகவும் அங்கு சொன்னது மட்டுமல்ல, இங்கும் அதை வழிமொழிய நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் சிறப்பாக செயல்படுகிறேன், - வேகமாக உழைக்கிறேன் என்று சொன்னால், அதற்கு அண்ணன் துரைமுருகன் போன்ற என்னுடைய அமைச்சரவைச் சகோதரர்கள் அனைவரும் அளித்து வரும் ஒத்துழைப்பும், செயல்பாடுகளும்தான் காரணம்.

அனைத்துத் துறைகளிலும் இந்த அரசு சிறப்பாகச் செயல்படுகிறது என்று சொன்னால், அனைத்து அமைச்சர்களும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்கள் என்று பொருள்.

அனைத்துத் துறைகளும் வளர வேண்டும், அனைத்து மாவட்டங்களும் வளர வேண்டும், அனைத்துத் தரப்பு மக்களும் வளம்பெற்று பல்வேறு வாய்ப்புகள் பெருக வேண்டும் என்கிற உணர்வோடு பாடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய அரசு தான் இந்த திராவிட மாடல் அரசு. அதுதான் இன்றைக்கு ஆட்சிப்பீடத்தில் இருக்கிறது. இந்த மாடல் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, காலையில் நான் சொன்னதுபோல, இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டக்கூடிய மாடல் என்று போற்றிப் புகழப்படக்கூடிய சூழலில், வேலூரில் இந்த

அரசு விழா சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணமான அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களையும், அண்ணன் துரைமுருகன் அவர்களும் நானும் என்ன நினைக்கிறோம் என்பதை அறிந்து சிறப்பாக செய்து முடிக்கக்கூடிய மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் செயல்வீரர் தம்பி நந்தகுமார் அவர்களையும், அதேபோல் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய டாக்டர் ஜெகத்ரட்சகன் அவர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர் தம்பி கதிர் ஆனந்த் அவர்களையும், சட்டமன்ற உறுப்பினர் வேலூர் கார்த்திகேயன் அவர்களையும், சகோதரி அமுலு விஜயன் அவர்களையும், மேயர், துணை மேயர் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு அதேபோல, நம்முடைய மாவட்டத்தின் ஆட்சியர் திரு. குமாரவேல் பாண்டியன் ஐ.ஏ.எஸ். அவர்களையும், மற்றுமுள்ள அதிகாரிகளையும், அலுவலர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன், அவர்களுக்கு நான் நன்றி சொல்ல விரும்புகிறேன்.

வேலூரில் அரசு நலத்திட்ட விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்ட நேரத்தில், கடந்த ஓராண்டு காலத்தில் இந்த மாவட்டத்திற்கு என்னென்ன பணிகளை செய்திருக்கிறோம்? என்னென்ன சாதனைகளைச் செய்திருக்கிறோம்? என்கின்ற பட்டியலை என்னுடைய அலுவலகத்தில் இருக்கக்கூடிய செயலாளர் அவர்களிடத்தில் நான் கேட்டேன், கொடுத்தார்கள். ஒரு புத்தகம் போடும் அளவுக்கு கட்டுகளாகக் கொண்டுவந்து கொடுத்தார்கள். “இவ்வளவும் இந்த ஓராண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களா, செய்யப்பட்ட உதவிகளா” என்று நானே சந்தேகப்பட்டு, வியந்து அவர்களைக் கேட்டேன். “ஆமாம்” என்று சொன்னார்கள். அவை அனைத்தையும் இந்த விழாவில்

சொல்வதாக இருந்தால், கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் ஆகும். அந்தளவுக்கு மகத்தான சாதனைகளை இந்த ஓராண்டு காலத்தில் செய்துள்ள காரணத்தால், உங்கள் முன்னால் நான் கம்பீரமாக இன்றைக்கு நின்று கொண்டிருக்கிறேன்.

வேலூருக்கு என்னென்ன பணிகள் நடந்திருக்கிறது என்று இங்கு அமைச்சர்கள் சொன்னார்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள்.

❖ வேலூர் மாநகராட்சியைப் பொறுத்தவரை ஏராளமான திட்டப்பணிகள் நடந்து வருகின்றன. சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் 52 பணிகள், ரூ.963 கோடி மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு, 24 பணிகள் ரூ.334 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

❖ பள்ளிகொண்டா மற்றும் ஒடுக்கத்தூர் பேரூராட்சிகளில், சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ பேரணாம்பட்டு நகராட்சியில் சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

❖ வருகந்தாங்கல் இரயில்வே பாலம் ரூ.22 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.

❖ சிறுகளம்பூர் இருளர் இன மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

❖ கடந்த ஒரு வருடத்தில், இம்மாவட்டத்தில் 12 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன.

❖ தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம், 704 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.61.55 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

❖ 45 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.3.25 கோடி வழங்கப்பட்டுள்ளது.

❖ 7,305 அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு ரூ.1.73கோடி மதிப்பிலான நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

❖ 346 புதிய சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கிறது.

❖ கூட்டுப் பண்ணைத் திட்டத்தின்கீழ், தொடங்கப்பட்ட 16 உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கும் ரூ.80 இலட்சம் மூலநிதி வழங்கப்பட்டது.

❖ வேலூர் மாவட்டத்தில் கடந்த ஓராண்டு காலமாக 4,647 இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

❖ உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ், 7,897 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

❖ முதல்வரின் முகவரி திட்டத்தின்கீழ், 34,672 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

❖ சமூகப் பாதுகாப்பு திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் 12,415 தகுதியுடைய நபர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

❖ 1,915 உழவர்களுக்கு உழவர் பாதுகாப்புத் திட்ட நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

❖ 230.81 ஹெக்டேர் பரப்பளவுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

இப்படி நான் சொல்லிக் கொண்டே போகலாம்.

இங்கு இருக்கின்ற அரசு அதிகாரிகள் “அந்தத் திட்டத்தை சொல்லவில்லையே, இந்த திட்டத்தைச் சொல்லவில்லையே” - என்று நினைக்கலாம். ஒவ்வொரு

துறையிலும் பல்வேறு பணிகளைச் செய்தாலும், அதில் ஒன்றிரண்டை நேரத்தின் அருமை கருதி நான் சிலவற்றை மட்டும் சொல்லியிருக்கிறேன். எனவே "நமது துறையைச் சேர்ந்த திட்டங்களை எல்லாம் முதலமைச்சர் அவர்கள் சொல்லாமல் விட்டு விட்டாரே!" என்று சம்பந்தப்பட்ட துறையைச் சார்ந்த அதிகாரிகள் வருத்தப்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில், இப்போதும் பல பணிகள் இந்த வேலூர் மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

❖ பாலாற்றின் குறுக்கே பொய்கை கிராமத்தில் தடுப்பணை, சேண்பாக்கம் கிராமத்தில் தரைகீழ் தடுப்பணை, அகரம் ஆற்றின் குறுக்கே கோவிந்தம்பாடி கிராமத்தில் தடுப்பணை, பொன்னையாற்றின் குறுக்கே குகையநல்லூர் கிராமத்தில் தடுப்பணை என ரூ.58 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் விரைவில் துவங்கப்பட இருக்கிறது.

❖ பழுதுபார்த்தல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் திட்டத்தின் (RRR) கீழ், பின்வரும் 9 ஏரிகளை புனரமைக்கும் பணிகள் துவங்கப்பட்டுள்ளது.

❖ முத்துக்குமரன் மலை முதல் பீஞ்சமந்தை பழங்குடியின மலை கிராமம் வரை, 6.55 கிலோமீட்டர் தூரம் தார்ச்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

❖ பேரணாம்பட்டு நகராட்சியில், அண்ணாநகர் சிறுவர் விளையாட்டுப் பூங்கா அமைக்கும் பணிக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

❖ குடியாத்தம் நகராட்சியில் தார்ச்சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ கரிகிரி, தொரப்பாடி மற்றும் பத்தலபல்லி ஆகிய பகுதிகளில் 864 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

❖ நரிக்குறவர் இனமக்கள் 43 நபர்களுக்கு ரூ.98 இலட்சம் மதிப்பிலான தொகுப்புவீடுகள் கட்டப்பட்டு வருகிறது.

இந்த வரிசையில், மேலும் சில புதிய திட்டங்களை இந்த விழா மூலமாக நான் அறிவிப்பதற்காகத் திட்டமிட்டிருந்தேன். ஆனால், நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் இந்த மாவட்டத்தினுடைய மண்ணின் மைந்தன் அண்ணன் துரைமுருகன் அவர்கள் இந்த மேடையில் கலைஞர் காலத்தில், அதற்குப் பிறகு இப்போது நான் பொறுப்பேற்று நான் நடத்திக் கொண்டிருக்கக்கூடிய இந்த ஆட்சியின் மூலமாக எத்தனை திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, எதைக் கேட்டாலும் கொடுத்திருக்கிறார்கள், தட்டாமல் தந்திருக்கிறார்கள் என்று பெருமையோடு சொல்லி,இவ்வளவு திட்டங்களைப் பெற்றாலும் இன்னும் ஒரு திட்டம் பாக்கி இருக்கிறது என்று ஒரு கோரிக்கையை வைத்தார். அதாவது,

❖ காட்பாடி வட்டம், மகிமண்டலம் கிராமத்தில், சுமார்300ஏக்கர்பரப்பளவில்,புதியதாகசிப்காட்தொழிற்பேட்டை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை அமைச்சர் அவர்களுக்கு இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதன் மூலமாக, அவர் சொன்னது போல ஆயிரக்கணக்கானவர்களுக்கு, இந்த மாவட்டத்தைச் சார்ந்த இளைஞர்களுக்கு நிச்சயமாக வேலைவாய்ப்பு உருவாகும்.

❖ வேலூர்வட்டம்,மேல்மொணவூர்மற்றும்அப்துல்லாபுரம் கிராமப் பகுதிகளில், சுமார் 5 ஏக்கர் \பரப்பளவில் டைடல் பார்க் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ காட்பாடி வட்டம், சேர்க்காடு கிராமத்தில், சுமார் 6 ஏக்கர் பரப்பளவில், புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

❖ அணைக்கட்டு வட்டம், பள்ளிகொண்டா பேரூராட்சியில், புதிய உழவர் சந்தை அமைக்கும் பணி தொடங்கப்பட்டிருக்கிறது.

❖ வேலூர் வட்டச்சாலையானது 9 கிராமங்களின் வழியே, 13.7 கிலோமீட்டர் நீளத்தில், சுமார் ரூ.325 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட இருக்கிறது. தற்போது நில எடுப்புப் பணிகள் நிறைவடையக்கூடிய தருவாயில் உள்ளது.

❖ காங்கேயநல்லூர் முதல் சத்துவாச்சாரி வரை பாலாற்றின் குறுக்கே, சுமார் ரூ.120 கோடி மதிப்பீட்டில், 3.2 கி.மீ நீளத்தில், உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்பட இருக்கிறது.

❖ குடியாத்தம் புறவழிச்சாலை, 7 கிராமங்களின் வழியே 7 கிலோமீட்டர் நீளத்தில் சுமார் ரூ.225 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட இருக்கிறது.

❖ வேலூர் புறவழிச்சாலைகள் 13 கிராமங்களின் வழியே, 21 கிலோமீட்டர் நீளத்தில், சுமார் ரூ.250 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட இருக்கிறது.

❖ காட்பாடி வட்டம் சேர்க்காடு கிராமத்தில், சுமார் 6 ஏக்கர் பரப்பளவில், பன்னோக்கு அரசு மருத்துவமனை அமைக்கப்பட இருக்கிறது.

❖ வல்லம் மற்றும் கீழ்ப்பள்ளிக் குப்பம் ஆகிய கிராமங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம் (LC 109), சுமார் ரூ.181கோடி மதிப்பீட்டில் அது அமைக்கப்பட இருக்கிறது.

❖ அணைக்கட்டு ஒன்றியத்தில், பீஞ்சமந்தை, ஜர்தான்கொள்ளை மற்றும் பாலாம்பட்டு கிராமங்களில் உள்ள, 73 கிராமங்களில் சுமார் 18 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றனர். இந்தப் பகுதிக்கு நல்ல சாலை இணைப்பு வழங்கி, மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட, ரூ.34 கோடி செலவில் தரமான தார்சாலைகள் அமைக்கப்படும்.

❖ வேலூர் மாவட்டத்தில் மழைக்காலங்களில் பல கிராமங்களின் சாலை இணைப்பு வசதி துண்டிக்கப்பட்டு, அந்த கிராமங்களில் வசிக்கக்கூடிய மக்கள் பல்வேறு இன்னலுக்கு உள்ளாகின்றார்கள். இதனை சரிசெய்யக் கூடிய வகையில், காட்பாடி ஒன்றியத்தில் ஒரு சாலையிலும், குடியாத்தம் ஒன்றியத்தில் இரண்டு சாலைகளிலும், பேர்ணாம்பட்டு ஒன்றியத்தில் ஒரு சாலையிலும், அணைக்கட்டு ஒன்றியத்தில் இரண்டு சாலைகளிலும் ரூ.14 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலங்கள் அமைக்கப்படும்.

❖ கே.வி.குப்பம் வட்டத்தில் உள்ள விரிஞ்சிபுரத்திலும், வேலூர் வட்டத்திலுள்ள கீழ்மொணவூரிலும், பாலாற்றின் கரையில் வெள்ளச் சேதங்களை தவிர்த்திட, ரூ.7 கோடி செலவில் வெள்ளத்தடுப்புப் பணிகள் செயல்படுத்தப்படும்.

ஆகிய திட்டங்களை நான் முதல்கட்டமாக அறிவித்திருக்கிறேன். இன்னும் பல சிறப்பான திட்டங்கள் வர இருக்கின்றன.

வேலூர் மாவட்டத்தில் என்னென்ன பணிகள் நடந்திருக்கிறது, நடக்கப் போகிறது என்பதை சொன்னேன். இதேபோல, அனைத்து மாவட்டங்களிலும் பணிகள் நடந்து வருகிறது.

கடந்த பத்தாண்டு காலத்தில் செய்யத் தவறிய அனைத்துப் பணிகளையும், கடந்த ஓராண்டு காலத்தில் செய்து

முடித்திருக்கிறோம் என்கிற அந்த நெஞ்சை நிமிர்த்தி இன்றைக்கு நான் உங்கள் முன்னால் நின்றிருக்கிறேன். இப்படி, அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு பணிகளைச் செய்வதன் மூலமாகத்தான், தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் சிறந்த மாநிலமாக நாம் வளர்த்தெடுக்க முடியும். தமிழ்நாட்டை, இன்று இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும், அண்ணாந்து பார்க்கும் நிலையில் வைத்திருக்கிறோம். நமது நாட்டின் வளர்ச்சியிலும், ஒன்றிய அரசின் நிதி ஆதாரங்களிலும், தமிழ்நாடு எவ்வளவு அதிகமான பங்களிப்பைத் தருகிறது என்பதை அண்மையில் பாரதப் பிரதமர் அவர்கள் சென்னையில் வந்திருந்தபோது அந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டு அவர் முன்னிலையிலேயே சொன்னேன். பத்திரிகையில் படித்திருப்பீர்கள், ஊடகங்களில் பார்த்திருப்பீர்கள்.

- இந்தியாவினுடைய மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பில், தமிழ்நாட்டின் பங்கு 9.22 விழுக்காடு!

- ஒன்றிய அரசின் மொத்த வரிவருவாயில் தமிழ்நாட்டின் பங்கு 6 விழுக்காடு!

- இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 8.4 விழுக்காடு!

- இந்தியாவின் ஜவுளித் துறை ஏற்றுமதியில் 19.4 விழுக்காடு!

- கார்கள் ஏற்றுமதியில் 32.5 விழுக்காடு!

- தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 33 விழுக்காடு!

ஆனால், நமது தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசால் பகிர்ந்தளிக்கப்படுவது 1.21 விழுக்காடு மட்டுமே! தமிழ்நாடு போன்ற வளர்ந்த மாநிலங்கள், நாட்டின் வளர்ச்சிக்கும்,

பொருளாதாரத்திற்கும் அளிக்கக்கூடிய பங்கிற்கு ஏற்ப, ஒன்றிய அரசும், திட்டங்களிலும் நிதியிலும், தனது பங்களிப்பை உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு பிரதமரை மேடையில் வைத்துக் கொண்டு நான் பேசும்பொழுது இந்தக் கோரிக்கையை எடுத்து வைத்தேன். உரிமையோடு கேட்டேன். மாநில சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்ற உணர்வோடு குறிப்பிட்டேன். அதுதான் உண்மையான கூட்டுறவுக் கூட்டாட்சியாக அமையும் என்றும் சொன்னேன்.

நிதி உரிமைகளைக் கேட்பது என்பது, ஏராளமான மக்கள் நலத்திட்டங்களை மக்களுக்குக் கொண்டு வருவதற்காகத்தான். இந்த மாநிலத்தின் உரிமைகளைப் பெறுவதற்காகதான், எந்த சமரசத்துக்கும் இடமில்லாமல் போராடும் அரசாக திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கிறது.

அதற்கு சமீபத்திய எடுத்துக்காட்டு சொல்ல வேண்டுமென்றால், மேகதாது அணை பிரச்சினை. தமிழ்நாட்டு மக்களின் உயிர்நாடியான பிரச்சினைகளில் ஒன்று காவிரிப் பிரச்சினை. தமிழ்நாட்டுக்குக் காவிரி நீரில் முழு உரிமை இருக்கிறது. எனவே, காவிரி நீர் உரிமையைப் பெறுவதில், திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவுக்கும் சென்று போராடும்! வாதாடும்! என்பது உங்களுக்கு நன்றாக தெரியும். தனது உரிமையை நிலைநாட்டும்! என்று நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதன்படிதான் இப்போதும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

காவிரியின் குறுக்கே கருநாடக அரசு - மேகதாது என்ற புதிய அணையைக் கட்டத் திட்டமிட்டிருக்கிறது. அதைத் தொடக்கத்தில் இருந்தே நாம் எதிர்த்து, தடுத்து வருகிறோம். ஆனாலும் அவ்வப்போது நேரம் கிடைக்கிறபொழுது

எல்லாம், பொழுது போகவில்லை என்றால், உடனே அதைப் பற்றி தொடங்கிவிடுகிறார்கள். அணை கட்ட நிதி ஒதுக்குவது, சட்டம் போடுவது, ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுப்பது,டெல்லிக்குப்படையெடுப்பது என்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் செய்யும்போதெல்லாம், நாமும் அவற்றுக்குத் தடுப்பணை போடும் காரியங்களைத் தொடர்ந்து செய்து கொண்டு வருகிறோம்.

இரண்டு வாரங்களுக்கு முன்னால், கருநாடக அரசு இதில் அதிகமான முனைப்பைக் காட்டியது. காவிரி ஆணையத்தில் மேகதாது அணை குறித்து விவாதிக்க வேண்டுமென்று சொன்னார்கள். உடனடியாக, நான் பிரதமருக்குக் கடிதம் எழுதினேன். மேகதாது தொடர்பாக விவாதிக்கக் கூடாது அப்படி என்று வலியுறுத்தி, பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன்.

இந்த நிலையில் கருநாடக முதலமைச்சர் அவர்கள், டெல்லி சென்று ஒன்றிய அமைச்சரைச் சந்தித்து, மேகதாது அணைக்கு ஆதரவா பேசிவிட்டு வந்திருக்கிறார்கள். உடனடியாக, நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர், காவிரிப் பிரச்சினையில் அத்துப்படி அவருக்கு. எந்த நேரத்தில், எதைக் கேட்டாலும், தூங்கிக் கொண்டிருக்கும் போது எழுப்பிக் கேட்டால் கூட அந்த காவிரிப் பிரச்சினையில் பட்டு, பட்டு என்று அப்படி Finger tips-ல் வைத்திருப்பார். அவர் தான் அன்றைக்கு அந்தத் துறையினுடைய அமைச்சராக பொறுப்பேற்றிருக்கக்கூடியவர். ஆகவே அவருடைய தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் எல்லாம் அழைத்துப் பேசி முடிவெடுத்து, ஒரு குழு அமைத்து, அந்தக் குழு டெல்லிக்கு போனது. அவருடைய தலைமையில் தான்

போனார்கள். ஒன்றிய நீர்வளத் துறை அமைச்சரை போய் சந்தித்து நமது தரப்பினுடைய வாதங்களை வலியுறுத்தி சொல்லி இருந்தார்கள். ஆகவே டெல்லிக்கு சென்று அமைச்சரை சந்தித்து "தமிழகத்துக்கு உடன்பாடு இல்லாமல், எந்தக் காரியத்தையும் காவிரிப் பிரச்சினையில் செய்ய நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என்று ஒன்றிய அமைச்சரிடம் வாக்குறுதி பெற்று வந்திருக்கிறது நம்முடைய குழு. அந்த உறுதியைப் பெற்றுத்தான் அண்ணன் துரைமுருகன் அவர்கள் சென்னைக்கு வந்தார்கள்.

அதேபோல்,காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் மேகதாது குறித்து விவாதிக்க மாட்டோம் அப்படி என்று அந்த அறிவிப்பையும் வெளியிட்டு இருக்கிறார்கள். இப்போது தற்சமயத்தில், கூட்ட விவரத்தில் இருந்து மேகதாது விஷயத்தை நீக்கி விட்டார்கள்.

நான் என்ன சொல்கிறேன் என்றால்,காவிரி விவகாரத்தில் உச்சநீதிமன்றம் 2018ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 16ஆம் தேதி வழங்கிய தீர்ப்பின்படி, தொடர்புடைய மாநிலத்தின் அனுமதியைப் பெறாமல், ஒன்றிய அரசின் அனுமதியையும் பெறாமல் அணையைக் கட்ட முடியாது.

ஆகவே, கருநாடக அரசின் முடிவானது உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரானது! எனவே,கருநாடக அரசுக்கு எந்தவிதமான தொழில்நுட்ப, சுற்றுச்சூழல் அனுமதியையும், ஒன்றிய அரசு தரக்கூடாது என்பதை இந்தக் கூட்டத்தின் வாயிலாகவும் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி தமிழ்நாட்டின் அனைத்து உரிமைகளுக்காகவும், எந்த சமரசங்களுக்கும் இடமில்லாமல் போராடக்கூடிய, வாதாடக்கூடிய அரசு தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு.

நிதி உரிமை வேண்டும் –

சமூகநீதி உரிமை வேண்டும் –

காவிரி உரிமை வேண்டும் –

கல்வி உரிமை வேண்டும் –

என்று குரல் கொடுப்பதால், இது ஏதோ ஒன்றிய அரசுக்கு எதிரான குரலாக அனைவராலும் பார்க்கப்படுகிறது. ஒரு சிலரால்.இல்லை! இவை அனைத்தும் தமிழ்நாட்டு மக்களுக்கு ஆதரவான குரல்கள்தான் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. ஆளும் கட்சியாக இருக்கும்போதும், தீட்டக்கூடிய திட்டமாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருக்கும்போது வைக்கும் கோரிக்கையாக இருந்தாலும் சரி, அவை அனைத்தும் தமிழ்நாட்டின் அனைத்து மக்களுடைய நலனுக்காக மட்டுமே! அப்படித்தான் திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை என்பதே எல்லா மக்களும், எல்லா நலனையும் பெற வேண்டும் என்பதுதான். மக்களுக்காகத்தான் எங்களது கொள்கையே வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, ஏழை, எளிய நடுத்தர வகுப்பு மக்களுக்காகவே பிறந்து, மக்களுக்காகவே வாழ்ந்து இன்றும் நம்மை இயக்கிக் கொண்டு இருப்பவர்கள்தான், தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களும்.

95 வயதில், மூத்திரவாளியைத் தூக்கிக் கொண்டு, தமிழ்ச் சமுதாயத்துக்காக உழைத்தவர் தந்தை பெரியார் அவர்கள்.

புற்றுநோய் தன்னைத் துன்புறுத்திய நிலையிலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை உருவாக்கி நல்ல பல

திட்டங்களை நிறைவேற்றிவிட்டு மறைந்தார் நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அண்ணா.

14 வயதில் தமிழ்க்கொடி தாங்கி, போராட்டக் களத்துக்கு வந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 95 வயது வரையிலும் ஓயாமல் இந்த இனத்துக்காகப் போராடினார். இவர்களது வாழ்க்கையே ஒரு கொள்கைப் பாடம்!

மக்களுக்காகப் போராடு - மக்களுக்காக வாதாடு - மக்களுக்காகச் சேவை செய் - மக்களுக்குத் தேவையானதை மட்டுமே செய் – என்பதையே இவர்கள் மூவரும் இன்றைக்கும் நமக்கு உணர்த்திக் கொண்டு இருக்கிறார்கள்.

அத்தகைய மக்கள் நலனுக்காகவே, இத்தகைய விழாக்களை மாவட்டம்தோறும் அரசு விழாக்களாக மட்டுமல்ல, மக்கள் விழாக்களாகவே நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

அந்த வகையில் இப்போது அமைந்துள்ள ஆட்சி, மக்களாட்சியாகத் தொடங்கியது!

மக்களாட்சியாகவே தொடரும்! தொடரும்! தொடரும்! என்று கூறி விடைபெறுகிறேன்!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
வேலூரில் நடைபெற்ற அரசு விழாவில்,
முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து,
புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,
பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி
ஆற்றிய உரை - 29.06.2022

திருப்பத்தூரில், ரூ.103.43 கோடி மதிப்பீட்டில் 16,820 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களே!

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்களே!

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி அவர்களே!

முன்னாள் மத்திய அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜெகத்ரட்சகன் அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர்கள்: திரு. கதிர் ஆனந்த் அவர்களே! திரு. சி.என். அண்ணாதுரை அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்: திரு. தேவராஜி அவர்களே! திரு. நல்லதம்பி அவர்களே! திரு. வில்வநாதன் அவர்களே! திரு. அமுலு விஜயன் அவர்களே! துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று அமர்ந்திருக்கக்கூடிய திருப்பத்தூர்

மாவட்டத்தின் ஆட்சித்தலைவர் திரு. அமர்குஷ்வாஹா, இ.ஆ.ப., அவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி வளர்மதி அவர்களே!

அரசு உயர் அதிகாரிகளே! அலுவலர் பெருமக்களே!

முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களே!

மக்கள் பிரதிநிதிகளாக பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

நலத்திட்ட பெறுவதற்காக வந்திருக்கும் பயனாளிகளே!

பெரியோர்களே! தாய்மார்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

பெரும் திரளாக திரண்டிருக்கக்கூடிய அன்பிற்கினிய தோழர்களே! அன்பர்களே!

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புக்களே!

உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கம்.

நீண்ட நெடிய வரலாற்றினைக் கொண்டுள்ள நகரம், இந்த திருப்பத்தூர் நகரம். இந்த திருப்பத்தூரின் புகழை, பெருமைகளைப் பற்றி நம்முடைய திரு.துரைமுருகன் அவர்களும், திரு. வேலு அவர்களும் மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சுமார் 1,600 ஆண்டுகள் பழமையானது எனவும், சோழ, விஜயநகர, ஹொய்சாள மன்னர்கள் ஆண்ட பகுதி எனவும் இந்த வரலாறு கூறுகின்றது.

விஜயநகரப் பேரரசின் ஆட்சியின்போது, பதினான்காம் நூற்றாண்டில் திரு-வன-புரம் என்ற பெயரில் இருந்த ஊர்தான், திருப்பத்தூர் எனப் பெயர் மாற்றம் அடைந்து இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. பத்து புனிதமான ஊர்கள் இருந்ததால் திரு-பத்து-ஊர் என அழைக்கப்பட்டு, பின்னர், அது திருப்பத்தூர் ஆனது எனவும் கூறப்படுகிறது. இத்தகைய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த புகழ்மிக்க மாவட்டத்து மக்களான உங்களை சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன், பூரிப்பு அடைகிறேன்.

ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலைத் தொடர்களால் சூழப்பட்ட, இயற்கை எழில் மிகுந்த மாவட்டம் இந்த மாவட்டம்.பழங்குடி மக்கள் அதிகமாக வசிக்கும் மலைத்தொடர் இது. ஏலகிரி மலையில் உற்பத்தியாகும் காட்டாறு, மலை அடிவாரத்தில் கீழே இறங்கி, ஜலகம்பாறை அருவியாக உருவெடுக்கிறது. பொதுமக்கள் பல இடங்களிலிருந்து வந்து கண்டுகளிக்கக்கூடியவகையிலும் இந்த இடம் அமைந்துள்ளது.

அப்படிப்பட்ட இயற்கை சூழ்ந்த மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாவில் கலந்துகொண்டு, உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கக்கூடிய ஒன்றுபட்ட வேலூர் மாவட்டத்திற்கான, என்னதான் நீர்வளத் துறை அமைச்சராக இருந்தாலும், கழகத்தினுடைய பொதுச் செயலாளராக இருந்தாலும், இந்த ஒன்றுபட்ட வேலூர் மாவட்டத்திற்கான அமைச்சர்யார் என்று கேட்டால் அண்ணன் துரைமுருகன் தான் என்று எந்த நேரத்திலும் சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலை. எனவே, அப்படிப்பட்ட அவருக்கும், இந்த மாவட்டத்திற்கான பொறுப்பு அமைச்சராக பொறுப்பேற்றிருக்கக்கூடிய, எந்நாளும் பொறுப்பான

அமைச்சராக இருக்கக்கூடிய திரு. எ. வ. வேலு அவர்களுக்கும், மாவட்டக் கழக நிருவாகத்திற்கும் எனது நன்றியைத் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அவரே சொன்னார், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர் அவர். எனவே, அந்த மாவட்டத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், திருப்பத்தூர் பொறுப்பைக் கொடுத்ததும், இங்கு வந்து தன்னுடைய சொந்த மாவட்டத்தைப் போல, பல்வேறு பணிகளை முடுக்கி விட்டிருக்கிறார் அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

"நான் என்ன நினைப்பேன் என்பதை, நான் சொல்லாமலேயே, என் கண் ஜாடையைப் புரிந்து கொண்டு செயலாற்றுவதில் திரு. எ.வ. வேலு முன்னிலையில் இருக்கிறார்" என்று தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர் அவர்.

தலைவர் கலைஞர் அவர்களுடைய மனதை நிறைவு செய்வது என்பது சாதாரண காரியம் அல்ல, எளிதான செயல் அல்ல, நம் துரைமுருகன் அவர்களுக்குத் தெரியும். அவரோடு நெருங்கிப் பழகக்கூடியவர்களுக்குத் தெரியும். அவர் மனதை அறிந்து, புரிந்து, அதைப்போலவே செயல்படுத்திக் காட்டுவதும் எளிதான செயல் அல்ல. அதில் ஒரு சிலர்தான் சிறப்பாகச் செயல்பட்டு தலைவர் கலைஞரின் பாராட்டைப் பெற்றார்கள். அதில் எ.வ. வேலு அவர்களும் ஒருவர். அதனால்தான், 'எதிலும் வல்லவர் வேலு; அதனால்தான் அவர் எ.வ. வேலு' என்று நான் குறிப்பிட்டேன். 'எ' – எதிலும், 'வ' – வல்லவர். அத்தகைய எதிலும் வல்லவர் உங்கள் மாவட்டத்திற்கு கிடைத்திருக்கிறார். அதனால், திருப்பத்தூர் – 'திரு-புத்தூர்' என்று சொல்லும் அளவுக்குப் புதிதாக இப்போது மாறிக் கொண்டு வந்திருக்கிறது. அவருக்கு தோளோடு தோள் நின்று

பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர், செயல்வீரர் திரு. தேவராஜி அவர்களுக்கும், அதேபோல, நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய என்னுடைய அருமை தம்பி திரு. கதிர் ஆனந்த் அவர்களுக்கும், தம்பி திரு.அண்ணாதுரை அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. நல்லதம்பி அவர்களுக்கும், திரு.வில்வநாதன் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் முதலில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 25ஆம் நாளன்று இந்த விழா நடந்திருக்க வேண்டும். ஆனால் கடந்த வாரம், லேசான காய்ச்சல் எனக்கு ஏற்பட்டு, அது முழுமையாக குணமாகாத காரணத்தால், மருத்துவர்கள் "ஒருசில நாட்கள் ஓய்வெடுப்பது நல்லது" என்று எனக்கு உத்தரவிட்டதால், அந்த குறிப்பிட்ட தேதியில் என்னால் வர முடியவில்லை.

ஆனால், இன்றைய நாள் புதிய உற்சாகத்தோடு உங்களைப் பார்க்க வந்திருக்கிறேன். மருந்து, மாத்திரைகளைவிட மக்கள் முகங்களைப் பார்க்கும்போது தான், எனக்கு உற்சாகமும் மலர்ச்சியும் ஏற்படுகிறது. உங்களது முகங்களைப் பார்த்ததும், உடல்சோர்வு நீங்கி, உற்சாகம் பிறக்கிறது. மக்களைச் சந்திக்கின்றபோது ஏற்படக்கூடிய உற்சாகத்திற்கு ஈடு, இணை எதுவும் கிடையாது.

அண்ணன் திரு. துரைமுருகன் சொன்னார், வருகிற வழியெல்லாம் மக்கள் கூட்டம் எப்படி வரவேற்றது என்பதைப் பற்றி திரு. வேலுவும் எடுத்துச் சொன்னார், திரு.காந்தி அவர்களும் குறிப்பிட்டுக் காட்டினார். உண்மை தான். எழுச்சியை மட்டுமல்ல, உணர்ச்சியை

மட்டுமல்ல, வாழ்க என்ற அந்த முழக்கத்தை மட்டுமல்ல, சில தாய்மார்கள், சில இளைஞர்கள் என்னை நிறுத்தி, என் கையைப் பிடித்துக்கொண்டு கேட்டார்கள், "உடம்பு எப்படி இருக்கிறது, முதலில் அதைச் சொல்" என்று சொன்னார்கள். அதுதான் என்னுடைய மெய் சிலிர்த்துக் கொண்டிருக்கிறது. நான் சொன்னேன், நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா? இந்த ஆட்சி எப்படி நடக்கிறது? ஏதாவது குறை இருக்கிறதா? குற்றம் இருக்கிறதா? என்று சொல்லுங்கள் என்று கேட்டபோது, எந்தக் குற்றமும் கிடையாது, குறையும் கிடையாது, முதலில் நீங்கள் ஓய்வு எடுங்கள் என்று தான் சொன்னார்கள். அவர்களுடைய சிரிப்பைப் பார்த்தேன்.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

ஏழையின் சிரிப்பைக் காணும்போது, நாமும் உற்சாகம் அடைகிறோம் என்பதுதான் முழு உண்மை!

இந்த திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்டு இருக்கக்கூடிய 4 சட்டமன்ற தொகுதிகளை சார்ந்திருக்கக்கூடிய 16,820 பயனாளி பெருமக்களுக்கு பல்வேறு துறைகளின் சார்பில் 103 கோடியே 42 இலட்சத்து 92 ஆயிரத்து 445 ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை இப்போது இந்த மேடையில் நாம் வழங்கவிருக்கிறோம். அதாவது 16,820 குடும்பங்களின் கோரிக்கை இன்றைய நாள் நிறைவேற்றப்படவிருக்கிறது. இப்படி ஒவ்வொரு தேவைகளையும் தேடித்தேடி நிறைவேற்றி வரக்கூடிய ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் ரூ.109 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு, இந்த மேடைக்கு நாங்கள் வருவதற்கு முன்பு திறந்துவிட்டுத்தான் இங்கு

வந்திருக்கிறோம். அந்த கட்டடத்தின் பெருமையைப் பற்றி நம்முடைய அமைச்சர்கள் சொன்னார்கள். மிக கம்பீரமாக இருக்கிறது. இதில் என்ன ஒரு பெரிய மகிழ்ச்சி என்றால், என்ன ஒரு பெரிய பெருமை என்றால், என்ன ஒரு சிறப்பு என்றால், குறித்த காலத்திற்கு முன்பே கட்டி முடித்து, அதை இன்றைக்கு நாம் திறந்து வைத்திருக்கிறோம். அதுதான் மிகப்பெரிய பெருமை.

அதேபோல், வாணியம்பாடி வருவாய்க் கோட்ட அலுவலர் அலுவலகம் ரூ.2.12 கோடி மதிப்பீட்டிலும்,

ஆதியூர் ராவுத்தன்பட்டியில் சமுதாயக் கூடமும் – சோலூர் கிராமத்தில் கல்லூரி விடுதிகளும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

ரூ.4.53 கோடி மதிப்பீட்டில் 16 சுகாதார நிலையங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வாணியம்பாடியில் தொழிற்பயிற்சி அளிக்கும் மையம் தொடங்க அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

இவை அனைத்தும் ஒரே விழாவாக இந்த விழா நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

கடந்த ஆட்சியாளர்கள், ஒரு திட்டத்துக்கு ஒரு விழா நடத்துவார்கள். ஆனால் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான், பல்வேறு திட்டங்களுக்கும் சேர்த்து ஒரே விழாவாக நாம் எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

ஒரு திட்டத்திற்கு ஒரு விழா எடுப்பதாக இருந்தால், ஒவ்வொரு மாவட்டத்திலும் 365 நாளும், தனித்தனியாக நாம் விழா எடுத்தாக வேண்டும். அந்தளவுக்கு ஏராளமான திட்டங்கள், அந்தத் திட்டங்களை நிறைவேற்றிக்

கொண்டிருக்கக்கூடியநிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கடந்த ஓராண்டு காலத்தில், இந்த திருப்பத்தூர் மாவட்டத்திற்கு இந்த அரசு செய்திருக்கும் பணிகளை நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

1,703 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

'முதல்வரின் முகவரி' திட்டத்தின்கீழ் 2,218 மனுக்கள் பெறப்பட்டு, 1,741 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது.

85 இலட்சம் முறை கட்டணமில்லாப் பேருந்து பயணத்தை பெண்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

20,518 பேரின் கூட்டுறவு நகைக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

5 இலட்சம் பேர் 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தின் மூலமாக பயனடைந்துள்ளார்கள். நான் சொல்வது இந்த திருப்பத்தூர் மாவட்டம்.

'இன்னுயிர் காப்போம்' திட்டத்தின் மூலமாக 196 பேரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன.

'கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்' மூலமாக 10,963 பேர் பயனடைந்துள்ளார்கள்.

3,13,000 குடும்பங்கள், ரூ.4 ஆயிரம் நிதியுதவி பெற்றுள்ளார்கள்.

3,12,000 குடும்ப அட்டைதாரர்கள் – 14 வகையிலான மளிகைப் பொருள்களை பெற்றுள்ளார்கள்.

3,22,000 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு, 22 வகையிலான மளிகைப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளது.

காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு, அதில் 25,52,000 பேருக்குச் சோதனை செய்யப்பட்டுள்ளது.

2,85,000 பேருக்கு நோய் எதிர்ப்பு சக்தி மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளது.

தனியார் மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை பெற்ற, 11,978 பேருக்குக் காப்பீட்டு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

தேசிய முதியோர் ஓய்வூதியம், மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம், மகளிருக்கான பல்வேறு ஓய்வூதியங்கள் என சுமார் ரூ.70 கோடி அளவில் வழங்கப்பட்டுள்ளது.

1,89,000 மரக்கன்றுகள் தரப்பட்டிருக்கின்றன.

காய்கறித் தோட்டத் தளைகள் 7,000 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

860 வேளாண் குடும்பங்களுக்கு வேளாண் உபகரணத் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

நான்கு கோவில்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

'நமக்கு நாமே' திட்டத்தின்கீழ் 3,750 பணிகள் நடைபெற்று வருகின்றன.

821 உழவர்களுக்கு புதிதாக மின் இணைப்பு தரப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் வாயிலாக இவ்வளவு பணிகளை நாம் செய்து முடித்திருக்கிறோம். ஆகவே, இந்த விழாவில் சில முக்கியமான அறிவிப்புகளை, நீங்கள் எதிர்பார்க்கக்கூடிய அளவிற்கு இருக்கக்கூடிய சில முக்கியமான அறிவிப்புகளை நான் இங்கு வெளியிட விரும்புகிறேன்.

விஷமங்கலம் கிராமத்தில் பாம்பாறு மீது பாலம் –

கொல்லகுப்பம் கிராமத்தில் கானாறு மீது பாலம் –

வடம்பூங்குளம் கிராமத்தில் பாம்பாறு மீது பாலம் –

கொடுமாம்பள்ளி கிராமத்தில் பாம்பாறு மீது பாலம் –

ஆகிய பணிகள் உடனடியாகத் தொடங்க இருக்கின்றன.

அது மட்டுமல்ல.

ஏலகிரி மலையில் சாகச சுற்றுலாத் தளம் ஒன்று ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மற்றொரு சுற்றுலாத் தளமான ஆண்டியப்பனூர் அணையில் ரூ.1.03 கோடி மதிப்பீட்டில் படகு குழாம் மற்றும் பல வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

ஜலகம்பாறை அருவியில் பல்வேறு வசதிகளைச் செய்துதர, வனத்துறை சார்பில் திட்டப்பணிகள் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கு விரைவில் அனுமதி அளிக்கப்படும்.

ஆம்பூர் அருகே உள்ள, 'ஊட்டல்' சரஸ்வதி கோயில் மற்றும் அங்குள்ள வற்றாத சுனை நீர் ஆகியவற்றை மேம்படுத்திட, சுற்றுலாத் துறை சார்பில் திட்டப்பணிகள் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு விரைவில் அனுமதி வழங்கப்படும்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஏலகிரி வேகமாக வளர்ந்து வரும் சுற்றுலாத்தலமாக விளங்குவதால், இங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் படுக்கை வசதிகள் மற்றும் மருத்துவ வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

திருப்பத்தூர் மாவட்டத்தில், உயர்கல்வியில் பின்தங்கியுள்ள நாட்றாம்பள்ளி வட்டத்தில் உள்ள மாணவர்களுக்கு,

உயர்கல்வி பயில்வதற்கான கல்லூரி வசதிகள் இல்லாத நிலையைக் கருத்தில் கொண்டு, புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று தொடங்கப்படும்.

இப்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அவசிய, அவசரமான திட்டங்கள் எவை எவை என்பதைப் பட்டியலிட்டுப் பார்த்து, அதனை நிறைவேற்ற நிதி ஒதுக்கீடு நாம் தொடர்ந்து செய்துவருகிறோம்.

அனைவருக்குமான வளர்ச்சி –

அனைத்துத் துறை வளர்ச்சி –

அனைத்து மாவட்ட வளர்ச்சி –

அனைத்து மக்களின் வளர்ச்சி இது தான் 'திராவிட மாடல்' ஆட்சி, அதைத்தான் இன்றைக்கு நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்த திராவிட மாடல் ஆட்சி என்பது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்குமான வெற்றிச் சூத்திரமாக அமைந்துள்ளது. எப்போதுமே இந்தியாவுக்கு வழிகாட்டும் மாநிலமாக தமிழ்நாடுதான் இருந்திருக்கிறது.

இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்தபோது, விடுதலை முழக்கத்தை முதன்முதலாக ஒலித்த மண் இந்தத் தமிழ்நாட்டு மண். அதுவும் உங்கள் மாவட்டத்திற்கு அருகில் இருக்கும் வேலூரில் தான் முதன் முதலில் புரட்சியே தொடங்கியது.

இன்றைக்கு இந்தியா முழுக்க சமூகநீதியின் குரல் ஒலிக்கிறது. பல்வேறு மாநிலங்களில் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. இந்த சமூகநீதித் தத்துவத்தை முதன்முதலாக 1920ஆம் ஆண்டே அமல்படுத்தியது தமிழ்நாடுதான்.

இன்றைக்கு இந்தியா முழுக்க மாநில சுயாட்சிக் குரல் ஒலிக்கிறது. பா.ஜ.கட்சி நீங்கலாக அனைத்து மாநில முதலமைச்சர்களும் மாநில சுயாட்சிக்காக குரல் கொடுப்பவர்களாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மாநில சுயாட்சிக்காக, 1974ஆம் ஆண்டே தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியவர் தான் நம்முடைய உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்கள்.

இன்றைக்கு இந்தியா முழுமைக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, 27 விழுக்காடு இடஒதுக்கீடு உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது என்று சொன்னால்,அதற்குக்காரணம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

இரண்டு நாட்களுக்கு முன்பு பிறந்த நாள் கொண்டாடினோமே, 'சமூகநீதிக் காவலர்' வி.பி. சிங் அவர்கள், இந்தியாவின் பிரதமராக இருந்தபோது, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்த வைத்து, அவர்கள் மூலமாக இந்தியா முழுமைக்குமான பிற்படுத்தப்பட்ட மக்களுடையவாழ்வில் ஒளியேற்றினோம் என்று சொன்னால், இப்போதும் 27 விழுக்காட்டு இடஒதுக்கீட்டு உரிமையை,நமது சட்டப் போராட்டங்களின் மூலமாக உறுதி செய்து தந்திருக்கிறோம்.இப்படி என்னால் அடுக்கிக் கொண்டே போக முடியும்.

அந்த வகையில் அரசியல் நெறிமுறைகளை மட்டுமல்ல, ஆட்சியியல் நெறிமுறைகளையும் இந்தியாவுக்கு வழங்கும் வழிகாட்டியாக திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கிறது.

இப்போதும் நாம் அறிமுகம் செய்து வரும் எத்தனையோ நல்ல பல திட்டங்களை பல்வேறு மாநில அரசுகள் பின்பற்றி வருகின்றன. பெரும்பாலான மாநில அரசுகள் சமூகநீதி

அரசுகளாக – மாநில சுயாட்சி பேசக்கூடிய அரசுகளாக – ஒடுக்கப்பட்ட மக்களுக்கான பல்வேறு சமூகநலத் திட்டங்களை அமல்படுத்தும் அரசுகளாக – பெண்கள், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள் ஆகிய, விளிம்புநிலை மக்களைப் பற்றிக் கவலைப்படும் அரசுகளாகச் செயல்பட, வழிகாட்டும் அரசாக திராவிட கம்பீரத்தோடு சொல்லவேண்டும் என்று சொன்னால், அது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு தான் என்பதை நான் அழுத்தந்திருத்தமாக குறிப்பிட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு பேரறிஞர் அண்ணா அவர்களது தலைமையில் முதன்முதலில் 1967ஆம் ஆண்டு அமைந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் மூன்று முத்தான திட்டங்களை நமக்குக் கொடுத்தார். ஆனால் காலம் அவரை நம்மிடம் இருந்து பிரித்தது. இரண்டே ஆண்டுகளுக்குள் நம்மிடமிருந்து அவரை பிரித்தது.

அதன் பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கிய திட்டங்களால் உருவானதுதான் இந்த நவீன தமிழ்நாடு! இன்றைக்கு நாம் பார்க்கிறோமே இந்த தமிழ்நாடு, நவீன தமிழ்நாடாக பார்க்கிறோமே, இது தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு!

அப்போது, வெளிமாநிலத்தில் இருந்து வந்த பத்திரிகையாளர்கள், ஊடகத்துறையை சேர்ந்தவர்கள் இதனை ஆய்வு செய்து விட்டு சொன்னார்கள், 'திராவிட முன்னேற்றக் கழகம் தனது எல்லையை தமிழ்நாட்டுடன் சுருக்கிக் கொண்டாலும், அவை முன்னெடுக்கும் தத்துவங்கள் இந்தியா முழுமைக்கும் ஏற்றவாறு அமைந்திருக்கிறது என்று எழுதிக் காட்டினார்கள்.

அந்த அடிப்படையில்தான், நாம் தமிழ்நாட்டை ஆண்டாலும், நாம் முன்னெடுக்கும் திட்டங்கள், அமல்படுத்தி வரும் திட்டங்கள் இந்தியா முழுமைக்கும் அவசியமான, முக்கியமானவையாக அமைந்திருக்கின்றன.

இந்தியா முழுமைக்கும் வர வேண்டும் என்றால், இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் வளர வேண்டும். மாநிலத்தை ஆளும் முதலமைச்சராக இருப்பதால், நான் இப்படி சொல்கிறேன் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். சமீபத்தில் தமிழ்நாட்டிற்கு வந்தாரே இந்திய குடியரசு துணைத் தலைவர் திரு. வெங்கையா நாயுடு அவர்கள், இதைத்தான் வலியுறுத்தி சொன்னார். ஒரு மாநிலம் வளர வேண்டும் என்று சொன்னால், அந்த மாநிலத்திற்கு உட்பட்டிருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களும் வளர வேண்டும். மாநிலத்தின் முதலமைச்சர் என்பதால், மாவட்டங்களை நான் மறந்துவிடவில்லை.

இப்போது, திருப்பத்தூர் மாவட்டத்திற்கான திட்டங்களை அறிவித்திருக்கிறேன். மாலையில், வேலூருக்கு போகிறேன், நாளைக்கு இராணிப்பேட்டைக்கு போகிறேன். இப்படி தொடர்ந்து மாவட்டத்துக்கான திட்டங்களை நான் அறிவிக்க இருக்கிறேன். இப்படி அனைத்து மாவட்டங்களையும் வளர்த்தெடுப்பதை முக்கியமாக நான் நினைக்கிறேன்.

மாவட்டங்களுக்கான பொதுவான திட்டங்களை அறிவித்தால் போதுமா? அதோடு கடமை முடிந்துவிடுகிறதா? இல்லை!

ஒவ்வொரு தனிமனிதருடைய தேவையையும் நிறைவேற்றியாக வேண்டும். அந்த வகையில்தான் அனைத்து மக்களிடமும் கோரிக்கை மனுக்களைப் பெற்று, அவற்றையும் நான் நிறைவேற்றிக் கொண்டுவந்திருக்கிறேன்.

இதுதான் நாம் இன்றைக்கு பெருமையோடு சொல்லிக் கொண்டிருக்கிறோமே, திராவிட மாடல் ஆட்சி இது தான்! இது தான் இந்த திராவிட மாடல் ஆட்சியின் இலக்கணம்!

இந்த இலக்கணத்தில் இருந்து இம்மியளவும் மாறாமல் இந்த ஆட்சி தொடர்ந்து பீடுநடை போடும். அப்படி நடந்தால், ஐந்தாண்டு காலத்தில் மிகப்பெரிய மாற்றத்தை தமிழ்நாடு நிச்சயம் பெறும். உங்கள் ஒவ்வொருவருடைய குடும்பமும் வளம் பெற வேண்டும்; நல்வாழ்வு பெற வேண்டும்; அதற்கு என்ன செய்ய வேண்டும்? நன்றாக கவனியுங்கள், உங்கள் குடும்பத்தில் உள்ள பிள்ளைகளை நல்லா படிக்க வைக்க வேண்டும்! படித்த பின்னர் அவர்கள் வேலை தேடித் தவிப்பதை தடுக்கத்தான், சமீபத்தில், மாணவர்களுக்கான கல்வி வேலைவாய்ப்பிற்கான சிறப்புத் திட்டமான "நான் முதல்வன்" என்ற திட்டத்தை நான் துவக்கியிருக்கின்றேன். "நான் முதல்வன்" என்றால் ஸ்டாலின் மட்டும் முதல்வன் இல்லை. இங்கே இருக்கக்கூடிய அத்தனை பேரும் முதல்வர்கள். இளைஞர்கள், மாணவர்கள் அத்தனை பேரும் முதல்வனாக தன்னை கருத வேண்டும்.

உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்கு அது பெரிதும் உதவும். வாழ்க்கை வழிகாட்டி திட்டமாக, இளைஞர்களிடையே இந்தத் திட்டம் வரவேற்பை இன்றைக்கு பெற்று வருகிறது. இப்படி, ஒவ்வொரு திட்டத்தையும், தமிழ்நாட்டு மக்களாகிய உங்கள் நலன் கருதியே, இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

உங்களின் வாழ்வு உயர, தமிழ்நாடும் உயரும். அத்தகைய பொற்காலத்தை உருவாக்குவதற்காகதான் எனது உடல்சோர்வைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல், நான் உழைத்துக்கொண்டு இருக்கிறேன். இன்னும்

சொல்லட்டுமா, எனது சக்தியை மீறி உழைத்துக்கொண்டு இருக்கிறேன். நான் மட்டுமல்ல, அனைத்து அமைச்சர்களும் அப்படித்தான் செயல்பட்டு வருகிறார்கள். அமைச்சர்கள் மட்டுமல்ல, அதிகாரிகள், அலுவலர்கள் அனைவருமே அப்படித்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

முதலமைச்சர் பொறுப்பில் இருக்கின்ற நானும், அரசின் இளநிலைப் பொறுப்பில் இருக்கிற ஓர் அலுவலரும் ஒரே மாதிரியான நோக்கத்துடன் செயல்பட்டால், இந்த அரசுதான் சிறப்பான அரசாக விளங்கிடும். அத்தகைய அரசாக இன்றைய தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

இத்தகைய ஆட்சிக் காலமானது தமிழ்நாட்டின் பொற்காலம்! இந்தப் பொற்கால ஆட்சியைத் தொடர்வோம்... இந்தப் பொற்கால ஆட்சியைத் தொடர்வோம்...

இந்தியாவுக்கே முன்மாதிரியான ஆட்சியாக இதனை மலரச் செய்வோம். மீண்டும் சொல்கிறேன், இது இந்தியாவுக்கே முன்மாதிரியான ஆட்சியாக மலரச் செய்வோம்.... மலரச் செய்வோம் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
திருப்பத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில் முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி ஆற்றிய உரை - 29.06.2022

இராணிப்பேட்டையில்,
ரூ.267.10 கோடி மதிப்பீட்டில்
71,103 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களே!

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்களே!

இந்த நிகழ்ச்சி சிறப்போடு அமைவதற்கு எல்லா வகையிலும் காரணமாக அமைந்திருக்கக்கூடிய மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர்கள்

டாக்டர் ஜெகத்ரட்சகன் அவர்களே! திரு. கதிர் ஆனந்த் அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு. முனிரத்தினம் அவர்களே! திரு. ஈஸ்வரப்பன் அவர்களே! திரு. நந்தகுமார் அவர்களே! திரு. கார்த்திகேயன் அவர்களே!

தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பாஸ்கரபாண்டியன், இ.ஆ.ப., அவர்களே!

நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய மாவட்ட வருவாய் அலுவலர் திரு. குமரேஸ்வரன் அவர்களே!

அரசு உயர் அதிகாரிகளே!

நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்காக வருகை தந்திருக்கும் பயனாளிப் பெருமக்களே!

அருமை பெரியோர்களே! தாய்மார்களே!

ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

காவல் துறையைச் சார்ந்த தோழர்களே!

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புக்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இராணிப்பேட்டை என்பது புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டம். ஒரு காலத்தில் ராணுவப் பேட்டையாக இருந்ததுதான் இந்தப் பகுதி. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், குதிரைப்படைகள் நிலைகொண்ட பகுதியாக, வரலாற்றில் இது பதிவாகி இருக்கிறது. இங்கு இருக்கும் பழைய கட்டடங்களில், இராணுவ அதிகாரிகள் தங்கியிருந்தார்கள். முதல், இரண்டாம் உலகப் போர்கள் நடந்த காலத்திலும், இது முக்கிய தளமாக இருந்திருக்கிறது.

எனவே, புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டமாக இருந்தாலும், இராணிப்பேட்டை பழமையானதுதான்! வரலாற்றுச் சிறப்புக்குரிய மாவட்டமாக இது விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆந்திரா, கருநாடகா ஆகிய இரண்டு அண்டை மாநிலங்களையும் இணைக்கும் இடத்தில், இந்த மாவட்டம் அமைந்திருப்பது, இன்னொரு சிறப்பாக நாம் பார்க்கிறோம். கனிம வளங்கள் நிறைந்த மாவட்டமாகவும் இருக்கிறது. ஆன்மீகத்தில் நாட்டமுள்ளவர்கள் குறிப்பிடும், 108 திவ்ய தேசங்களில் 65ஆவது திவ்ய தேசமாகச் சொல்லப்படும் சோளிங்கர் அமைந்துள்ள மாவட்டம் இது. இந்த மேடையில் இருக்கும் தலைவர் கலைஞர் அவர்களால் அடிக்கடி புகழப்படக்கூடிய திராவிட ஆழ்வார் ஜெகத்ரட்சகனிடம் கேட்டால், இதைப்பற்றி மட்டுமே ஒரு மணி நேரம் பேசுவார்!

தென்னிந்தியாவில் இருக்கும் தொழில் மையங்களில் ஒன்றாகவும் இராணிப்பேட்டை இருக்கிறது. தோல் பொருள் ஏற்றுமதியில், உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் மாவட்டமாகவும் இது இருக்கிறது. அனைத்து சமூக மக்களும் அமைதியாக வாழும் சமரசம் உலவும் மாவட்டமாகவும் இந்த மாவட்டம் இருக்கிறது.

புதிதாக உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய மாவட்டமாக இருந்தாலும், பல்வேறு பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றி வரும் மாவட்டங்களில் இந்த இராணிப்பேட்டை முன்னணியில் இருப்பதை நான் தெளிவாக உணர்ந்திருக்கிறேன்.

'மீண்டும் மஞ்சள் பை' திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய மாவட்டமாக இராணிப்பேட்டை மாவட்டம் இருப்பதை அறிந்து, இந்த மாவட்ட நிருவாகத்தை நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

36,000 பங்களிப்பாளர்களின் பங்களிப்புடன், 3 மணி நேரத்தில் 187 டன் நெகிழிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு இருக்கிறது. இது மிகப்பெரிய சாதனை! ஏற்கெனவே 128 டன் சேகரித்து, ஸ்விட்சர்லாந்து நாட்டில் நிகழ்த்தப்பட்ட உலக சாதனையை முறியடித்திருக்கிறது. இதனால், பல்வேறு சாதனைப் புத்தகங்களில் இராணிப்பேட்டை மாவட்டம் இடம்பெற்றிருக்கிறது. இத்தகைய சாதனை தொடர வேண்டும். இதே போன்ற செயல்பாடுகளில் மற்ற மாவட்டங்களும் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் இந்த நிகழ்ச்சியின் மூலமாக கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இத்தகைய சிறப்புமிகு மாவட்டத்தில், இத்தகைய சிறப்புக்குரிய விழாவை ஏற்பாடு செய்துள்ள என்னுடைய அருமை சகோதரர், சாதனைச் செல்வன் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் அமைச்சர் திரு.காந்தி அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் அமைச்சராக அவர் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அந்தத் துறையில் பல்வேறு முன்னெடுப்புகளை, அவர் சீரிய முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார்.

அவருக்கு இங்கு இருக்கக்கூடிய மக்கள் செல்வாக்கைப் பற்றி, நான் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை. 1996, 2006, 2016, 2021 என நான்கு முறை இந்தத் தொகுதியில் வெற்றி பெற்று, எல்லோருமே அவரை இராணிப்பேட்டை காந்தி என்று அழைப்பதை விட அவர், சாதனைச் செல்வர், சாதனைச் செல்வர் என்று அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொன்னால், இராணிப்பேட்டை என்று சொல்வதைவிட, காந்திப்பேட்டை என்று சொன்னால் கூட அது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அண்ணன் திரு.துரைமுருகன் அவர்கள் திரு.காந்தியைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் பலமுறை இந்த மாவட்டத்திற்கு வந்தபோது அவரைப்பற்றி பலமுறை பேசியிருக்கிறேன்.

காந்தி என்றால் கலகலப்பு என்று பொருள். அந்தளவுக்கு, தான் இருக்கும் இடத்தை எப்போது அவர் கலகலப்பாக வைத்திருப்பார். அவர் பேசக்கூடிய தமிழ் இருக்கிறது பாருங்கள், மிகவும் அழகாக இருக்கும். மழலைத் தமிழில், இந்த வட்டார மக்களின் தமிழாகவே அது இருக்கும். அந்த வகையில் மக்களின் அமைச்சராக இருந்து செயல்படும் அவருக்கு மீண்டும், மீண்டும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர் ஆற்றக்கூடிய அந்த பணிகளுக்கெல்லாம் துணை புரியும் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெகத்ரட்சகன் அவர்களையும், அதேபோல இந்த மாவட்டத்திற்கு உட்பட்டிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் தம்பி ஆற்காடு ஈஸ்வரப்பன் அவர்களையும், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர் நம்முடைய இயக்கத்தோடு எந்த அளவுக்கு நெருக்கமாக, உறவாக பழகிக் கொண்டிருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். அப்படிப்பட்ட சோளிங்கர் முனிரத்தினம் அவர்களையும், இந்த மாவட்டத்தின் ஆட்சியரையும், பல்வேறு அதிகாரிகளையும், அலுவலர்களையும், இந்த நிகழ்ச்சி சிறப்போடு அமைவதற்காக பாடுபட்டிருக்கக்கூடிய அனைவரையும் நான் இந்த நேரத்தில் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

71,103 பயனாளிகளுக்கு, 267 கோடியே 10 இலட்சத்து 9 ஆயிரத்து 302 ரூபாய் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகள் இன்றைக்கு வழங்கப்பட இருக்கிறது.

- ❖ வீட்டுமனைப் பட்டா
- ❖ உதவித்தொகைகள்
- ❖ நிவாரண நிதிகள்
- ❖ மகளிர் நலன்சார் திட்டங்கள்
- ❖ தனிநபர் இல்லக் கழிவறை அமைத்தல்
- ❖ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் அட்டைகள்
- ❖ மாற்றுத்திறனாளிகளுக்கு ஸ்கூட்டர், செயற்கைக் கால் மற்றும் கை
- ❖ வீடுகட்டும் திட்டம்
- ❖ மருத்துவக் காப்பீடுகள்
- ❖ இலவசத் தையல் இயந்திரங்கள்
- ❖ மூன்றாம் பாலினத்தவர்களுக்கான அட்டைகள்
- ❖ வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்குதல்
- ❖ உழவர் கடன்கள்
- ❖ ஆதிதிராவிடர் நலத்திட்ட உதவிகள்
- ❖ சூரிய ஒளி பம்பு செட்டுகள் அமைத்தல்
- ❖ நரிக்குறவர் அடையாள அட்டை
- ❖ பால்கறவை இயந்திரம்

- இப்படி பல்வேறு திட்ட உதவிகளை, 71,103 பயனாளிகள் பெற இருக்கிறார்கள்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்றார் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள்.

அவரது பொன்மொழிக்கு இலக்கணமான பொற்காலமாக அமைந்திருக்கக்கூடிய கழக ஆட்சி இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது.

அதனுடைய அடையாளமாகத்தான் இன்றைய தினம் ஒரே நாளில் இராணிப்பேட்டை மாவட்டத்தில் மட்டும் 71,000 பேரின் கோரிக்கைகள் நிறைவேறுகிறது. இப்படி ஒவ்வொரு தனிமனிதரின் கோரிக்கைகளையும், கேட்டுக் கேட்டு, பார்த்துப் பார்த்து, நிறைவேற்றித் தரும் அரசுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு.

பெற்றவர்கள் தான் தங்களுடைய பிள்ளைகளுக்கு என்னவெல்லாம் தேவையோ அதையெல்லாம் தனித்தனியாக நிறைவேற்றித் தருவார்கள். அதைப்போலத்தான், ஒரு அரசும் செயல்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அதனால்தான் ஒவ்வொரு தனிமனிதரின் கோரிக்கையையும் கேட்டுப் பெற வேண்டும் என்று அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியிருக்கிறேன்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் -

முதல்வரின் முகவரி -

மக்கள் குறைதீர்ப்பு நாள் -

இதுபோன்ற அரசு விழாக்களில், அமைச்சர்களே மக்களைச் சந்தித்து மனுக்களை பெறுவது என பல்வேறு வழிமுறைகளின் மூலமாக உங்கள் கோரிக்கைகள், உடனடியாக எங்களை வந்து சேர வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

❖ இன்றைய நாளில் மட்டும், ரூ.4 கோடி மதிப்பீட்டில், கன்னிகாபுரம் - பொன்னமங்கலம் சாலையில், செய்யாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்கும் திட்டப்பணியும் -

❖ ரூ.7.46 கோடி மதிப்பீட்டில், இராணிப்பேட்டை மற்றும் அரக்கோணம் அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்களில், புதிய பணிமனைக் கட்டடங்கள் (Work Shop) அமைக்கும் திட்டப்பணிகளும் -

❖ இராணிப்பேட்டையில் ரூ.10.25 கோடி மதிப்பீட்டில், புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி மற்றும் ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில், ஆற்காட்டில் கட்டப்படவுள்ள கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டப்பணி என்று –

மொத்தம் 22 கோடியே 19 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான நான்கு திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

முடிவுற்ற பல்வேறு திட்டப்பணிகள், இன்று திறப்பு விழா கண்டிருக்கிறது.

❖ ரூ.118.40 கோடி மதிப்பீட்டில், இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

❖ ரூ.13.14 கோடி மதிப்பீட்டில் வாலாஜா, சோளிங்கர், ஆற்காடு, கலவை ஆகிய பகுதிகளில், புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் சோளிங்கர், வாலாஜா மற்றும் கலவை வட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

❖ ரூ.5.65 கோடி மதிப்பீட்டில், ஆற்காடு மற்றும் அரக்கோணம் பகுதிகளில், ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் -

❖ ரூ.1.37 கோடி மதிப்பீட்டில், 2 ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், 4 அங்கன்வாடி மையக் கட்டடங்கள், 2 புதிய வகுப்பறைக் கட்டடங்கள், 2 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க கட்டடங்கள் -

❖ ரூ.76 இலட்சம் மதிப்பீட்டில், வாலாஜா வட்டாரம் லாலாபேட்டை மற்றும் திமிரி வட்டாரம் கலவை ஆகிய பகுதிகளில் துணை வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடங்கள் -

❖ ரூ.5.60 கோடி மதிப்பீட்டில், வாலாஜா அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், 30 வகுப்பறைகள் கொண்ட கூடுதல் கட்டடம் -

❖ ரூ.5.67 கோடி மதிப்பீட்டில், அரக்கோணம் வட்டம், அரிகில்பாடி கிராமத்தில் கல்லாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள, தளமட்ட சுவர் (தடுப்பணை) ஆகியவை திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மொத்தமாக சொல்வதாக இருந்தால், 150 கோடியே 58 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 24 முடிவுற்ற திட்டப் பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, தோல் மற்றும் காலணி உற்பத்தித் தொழிலில், இராணிப்பேட்டை மாவட்டம் சிறந்து விளங்குகிறது. காலணி மற்றும் அது சார்ந்த பொருட்களின் உற்பத்தியை, சர்வதேசத் தரத்திற்கு மேலும் உயர்த்தி, அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் இப்போது நான் ஒரு புதிய அறிவிப்பை மகிழ்ச்சியோடு வெளியிடப் போகிறேன். திரு. காந்தி, அதேபோல இராணிப்பேட்டை தொகுதியில் இருக்கக் கூடியவர்கள், இந்த மாவட்டத்தில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் பெருமைப்படக்கூடிய வகையில் ஒரு அறிவிப்பு.

❖ பனப்பாக்கத்தில், ரூ.400 கோடி செலவில் 250 ஏக்கர் பரப்பளவில் மெகா காலணி உற்பத்தி பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

நேற்று மாலை வேலூரில் நடைபெற்ற அரசு விழாவில், நம்முடைய திரு. துரைமுருகன் அவர்கள் எடுத்து வைத்த அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, காட்பாடியில் சிப்காட் அறிவித்தேன். இன்று இராணிப்பேட்டையில் இந்தப் பூங்காவை அறிவித்திருக்கிறேன்.

இதனால், சர்வதேச அளவில், தலைசிறந்த காலணி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மையமாக இராணிப்பேட்டை மாவட்டம் மேலும் வலுப்பெறும். இந்தப் பூங்கா நிறுவப்படும் காரணத்தால், 20 ஆயிரம் பேருக்கு, குறிப்பாக பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இந்த ஓராண்டு காலத்தில், கழக அரசின் சார்பாக, இராணிப்பேட்டை மாவட்ட மக்களுக்குச் செய்து தரப்பட்டுள்ள நன்மைகளையும், இந்த நேரத்தில் நான் நினைவூட்டுவது என்னுடைய கடமையாக, பொருத்தமாகக் கருதுகிறேன்.

❖ முதல்வரின் முகவரி திட்டத்தின்கீழ், 9,309 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

❖ 1,696 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

❖ 527 பேருக்கு கல்விக் கடன் தரப்பட்டுள்ளது.

❖ 1 கோடியே 69 ஆயிரத்து 510 பேருந்து பயணங்களை கட்டணமில்லாமல் மகளிர் மேற்கொண்டுள்ளார்கள்.

❖ 24,031 பேரின் நகைக்கடன் ரத்து செய்யப்பட்டுள்ளது. ஆட்சிக்கு வந்தவுடன் 5 சதவீதம் தள்ளுபடி செய்யப் போவதாக சொன்னோம். அதையெல்லாம் கூட கிண்டல் செய்தார்கள். கேலி செய்தார்கள். விமர்சனம் எல்லாம் செய்தார்கள். ஆக, அதையெல்லாம் சரியாக இருக்கிறதா? என்று சரிபார்த்து இப்போது படிப்படியாக செய்திருக்கிறோம். அந்த வகையில் இந்த

மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், 24,031 பேரின் நகைக்கடன் ரத்து செய்யப்பட்டுள்ளது.

- ❖ ஆறு இலட்சம் பேர் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் மூலம் சிகிச்சை பெற்றுள்ளார்கள்.
- ❖ 346 பேர் இன்னுயிர் காப்போம் திட்டம் மூலம் பயனடைந்துள்ளார்கள்.
- ❖ ஆவின் பால் விலையைக் குறைத்ததன் மூலமாக 90 ஆயிரம் நுகர்வோர் பயனடைந்துள்ளார்கள்.
- ❖ 2,082 உழவர்களுக்கு புதிதாக இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது.
- ❖ 18,377 பேர் வருமுன் காப்போம் திட்டம் மூலம் பயனடைந்துள்ளார்கள்.
- ❖ 3,30,366 பேர் கொரோனா கால நிவாரண நிதி பெற்றுள்ளார்கள்.
- ❖ 3,30,091 பேர் 14 வகையிலான மளிகைப் பொருள்களைப் பெற்றுள்ளார்கள்.
- ❖ 3,30,000 பேர் 22 வகையிலான மளிகைப் பொருள்களைப் பெற்றுள்ளார்கள்.
- ❖ 2,437 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த, 34,987 பேரின் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.
- ❖ 84 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டது.
- ❖ 1,82,950 மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது.
- ❖ 1,680 குடும்பங்களுக்கு வேளாண் உபகரணத் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

- ❖ 6 திருக்கோயில்கள் ரூ.12 கோடி செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.
- ❖ தனியார் வேலைவாய்ப்பு முகாம் மூலமாக 4 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பை பெற்றுள்ளார்கள்.
- ❖ ஊரக வளர்ச்சித் துறை மூலமாகப் பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- ❖ 7,289 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.361 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.
- ❖ 239 இளைஞர்களுக்கு தொழில்திறன் பயிற்சி தரப்பட்டுள்ளது.
- ❖ 300 புதிய சுய உதவிக்குழுக்கள் தொடங்கப்பட்டு உள்ளன.
- ❖ நான்கு நகராட்சிகளில் ரூ.2.14 கோடி மதிப்பீட்டில் பூங்காக்கள்.
- ❖ 40 சாலைப் பணிகள்.

இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால், நேரம் கடந்து கொண்டிருக்கிறது. இவை எல்லாம் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அல்ல, செய்து முடிக்கப்பட்ட திட்டங்கள். 'இவை அனைத்தும் ஓராண்டு காலத்தில், 'செய்து முடிக்கப்பட்ட' திட்டங்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டதில் ஏறக்குறைய 70 சதவீதம், 80 சதவீதம் நாம் நிறைவேற்றி இருக்கிறோம் என்று சொன்னால், இவை அனைத்தையும், தாண்டிய அளவில் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய திட்டங்கள். அதனால்தான் உங்கள் முன்னால் இன்றைக்கு கம்பீரமாக நான் நின்று கொண்டு இதை தெளிவுப்படுத்திக் கொண்டிருக்கிறேன்.

நாங்கள் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை என்று எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்கள், சில உதிரிக் கட்சியில் இருக்கக்கூடியவர்கள், நாங்கள் தான் அடுத்த முதலமைச்சர் என்று சொல்லிக் கொண்டு அனாதைகளாக அலைந்து கொண்டிருக்கக்கூடியவர்கள் இன்றைக்கு பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் இதை சட்டமன்றத்திலும் சொல்லியிருக்கிறேன், மக்கள் மன்றத்திலும் சொல்லி இருக்கிறேன், எந்தெந்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை நான் பட்டியல் போட்டு, இங்கே கூட பட்டியல் போட்டுத்தான் உங்களிடத்தில் சொல்லியிருக்கிறேன். புள்ளி விபரத்தோடு தான் சொல்லியிருக்கிறேன். ஆக, நீங்கள் பலன்பெற்று வருகிறீர்கள். ஆனால், பூனை கண்ணை மூடிக்கொண்டு உலகம் இருண்டு விட்டது என்று நினைப்பதைப் போல சிலர் நினைக்கிறார்கள்! பேசுகிறார்கள்!

இன்னொன்றையும் சொல்கிறார்கள், 'ஸ்டாலின் விளம்பரப் பிரியராக இருக்கிறார்' அப்படி என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு எதற்கு விளம்பரம்? இனிமேலும் எனக்கு விளம்பரம் தேவையா? 55 ஆண்டுகளாக அரசியலில் இருக்கக்கூடியவன் நான். இனிமேல் எனக்கு விளம்பரம் எதற்கு?

நரிக்குறவர் வீட்டுக்குப் போனார் -

இருளர் வீட்டுக்குப் போனார் -

அங்கே போய் அவர்கள் வீட்டில் சாப்பிட்டார் –

என்றெல்லாம் வரும் செய்திகளை வைத்து அப்படி சொல்கிறார்கள், நான் கேட்கிறேன் அவர்களை பார்த்து நான் கேட்க விரும்புகிறேன். அந்த ஒரு சந்திப்புக்குப் பின்னால் எத்தனை நலத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன என்பதை அவர்கள் முதலில் அறிந்திருக்க வேண்டும்.

நரிக்குறவர் வீட்டுக்கும், இருளர் வீட்டுக்கும் சென்றதன் மூலமாக, 'இது நமது அரசு' என்ற நம்பிக்கையை, அவர்கள் மனதில் ஆழமாக நாம் விதைத்திருக்கிறோம்! அதுதான் முக்கியமானது! ஏதோ ஒரு நாள் அவர்களது வீட்டுக்குச் சென்றதன் மூலமாக எனது கடமை முடிந்துவிட்டதாக நான் நினைத்து, அத்துடன் நான் சும்மா இருந்து விட்டேனா?

இதே இராணிப்பேட்டையில், சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, 'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' என்ற தலைப்பில்,நடைபெற்றநிகழ்ச்சியில் உங்களை எல்லாம் வந்து சந்தித்தேன். மனுக்களைப் பெற்றேன். அனைவரது கோரிக்கையையும் கேட்பதற்காக அன்றைக்கு வந்தேன். பலர் எனது கையில் மனுக்களை கொடுத்தீர்கள். அதில் சில பேர்களை நான் பேச வைத்தேன்.அப்போது சில நரிக்குறவர்கள் பெண்கள், அதிலும் குறிப்பாக பெண்கள் மேடைக்கு பக்கத்தில் வந்து, நாங்களும் பேச வேண்டுமென்று கேட்டார்கள். பேச வைத்தோம். அவர்கள் கோரிக்கையைக் கவனமாகக் கேட்டேன்.

ஆட்சிக்கு வந்ததும் அதையெல்லாம் மறந்து விடவில்லை என்பதன் அடையாளமாகத்தான், தற்போது பல்வேறு திட்டங்களைச் செய்து கொடுத்தும் வருகிறோம்.

இன்றைக்கு 293 நரிக்குறவர் இன மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த இராணிப்பேட்டை விழாவிலேயே இருளர் பழங்குடியினர் மக்களுக்கு அரசின் அனைத்து நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டிருக்கிறது.

- ❖ குடும்ப அட்டை,
- ❖ இலவச வீட்டுமனைப் பட்டா,

- வீடு ஒதுக்கீடு ஆணை,
- முதியோர் உதவித்தொகை,
- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டை,
- வாக்காளர் அடையாள அட்டை,
- சாதிச் சான்றிதழ்,
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட அட்டை,
- சேமிப்பு வங்கிக் கணக்கு,
- நலவாரிய அட்டைகள் ஆகியவற்றை வழங்கி, விளிம்புநிலை மக்களின் அடிப்படைத் தேவைகளைத் தீர்த்திருக்கிறோம்.

இன்று நலத்திட்ட உதவிகள் பெறக்கூடிய நபர்களில், 5,767 பேர் இருளர் இன மக்கள். இந்த மாவட்டத்தில் உள்ள 9,600 இருளர் பழங்குடியின மக்களில், 5,767 இருளர் பழங்குடியினர் இன மக்களுக்கு இன்றைய தினம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படயிருக்கிறது.

அதேபோல் திருநங்கையர் 20 பேருக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படயிருக்கிறது.

9,522 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.15.89 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் செய்யப்படயிருக்கிறது.

101 மாற்றுத்திறனாளி மற்றும் சிறப்புக் குழந்தைகளின் தாய்மார்களுக்கு மின்மோட்டாருடன் கூடிய இலவசத் தையல் இயந்திரங்கள் வழங்கி, அவர்கள் மூலமாக, குறைந்த விலையில் மஞ்சள் பைகள் தயாரித்து விநியோகத்திட, நடவடிக்கை மேற்கொள்ளப்படயிருக்கிறது.

இந்த அரசாங்கத்தினுடைய இதயம் என்பது இத்தகைய விளிம்புநிலை மக்களின் மகிழ்ச்சியில்தான் இருக்கிறது. பழங்குடியின மக்களுக்கு ஒரு அடையாள அட்டை கொடுப்பதும், பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை உருவாக்குவதற்கு இணையானது! இவை விளம்பரத்துக்காகச் செய்யப்படுவது அல்ல.

பிள்ளைகளுக்குக் கொடுக்கும் புத்தகப் பைகளில், கடந்த ஆட்சியைப் போல, முதலமைச்சரான நான் எனது படத்தை போட்டுக் கொண்டு இருந்தால், அதை விளம்பரம் என்று சொல்லலாம். கழக ஆட்சி கடந்த ஆண்டு பொறுப்புக்கு வந்தபோது, நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். பள்ளிக்கல்வித் துறை சார்பில், கடந்த ஆட்சிக் காலத்தில் அப்போதைய முதலமைச்சர்களின் படத்தை அச்சிட்டுத் தயாரிக்கப்பட்ட பைகள் இன்னமும் மீதம் இருக்கிறது. அதைப் பயன்படுத்த வேண்டாம் என்று அமைச்சர், அதிகாரிகள் என்னிடத்தில் வந்து சொன்னார்கள். நான் உடனே சொன்னேன். அதைப் பயன்படுத்தாமல் போனால், ரூ.17 கோடி அரசுக்கு வீண் இழப்பீடு ஏற்படும், செலவு ஏற்படும், பணம் வீணாகும், "பரவாயில்லை, முன்னாள் முதலமைச்சர்கள் படமே இருக்கட்டும்" என்று சொல்லி அந்தப் பைகளைக் கொடுக்கச் சொன்னவன்தான் இந்த ஸ்டாலின் என்பதை மக்களாகிய நீங்கள் அறிவீர்கள்.

விளம்பரங்கள் எனக்குத் தேவையில்லை. ஏற்கெனவே கிடைத்த புகழையும் பெருமையையும் காலமெல்லாம் கரையாமல் காப்பாற்றினால் போதும் என்று நினைப்பவன் நான்.

❖ திராவிட மாடல்' என்று சொன்னால், காலமெல்லாம் இந்த ஸ்டாலின் முகம்தான் நினைவுக்கு வரும்!

- ❖ இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் என்று சொன்னால் போதும்! என் குரல் நினைவுக்கு வரும் உங்களுக்கு!
- ❖ 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை இந்தியா முழுமைக்கும் கொண்டுசேர்த்தது யார்? என்றால், என் முகம்தான் நினைவுக்கு வரும்!
- ❖ அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் என்பது, யார் ஆட்சிக்காலத்தில் அமலானது? என்று கேட்டால், என் முகம் தான் நினைவுக்கு வரும்.
- ❖ தமிழ்நாட்டின் அம்பேத்கரான பெரியாருக்கும், இந்தியாவின் பெரியாரான அம்பேத்கருக்கும், அவர்களது பிறந்தநாளை சமூகநீதி நாளாகவும், சமத்துவ நாளாகவும் அறிவித்தது யார்? என்றால், என் பெயர் தான் நினைவுக்கு வரும்.
- ❖ கையில் காசு இல்லை என்றாலும் போகவேண்டிய இடத்திற்கு போய்ச் சேரலாம் என்ற நம்பிக்கையுடன்,

பேருந்துகளில் ஏறும் பெண்களுக்கு எந்நாளும் என் முகம்தான் நினைவுக்கு வரும். நான் என்று சொல்வது தனிப்பட்ட இந்த ஸ்டாலின் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். நாம் அனைவரும் சேர்ந்த கூட்டுக்கலவைதான் நான்.

என்றும் உங்களில் ஒருவன் தான் நான்! முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்திருப்பதால் மட்டும் நான் அல்ல! உங்கள் அனைவரது சேர்க்கையாக நான் அமர்ந்திருக்கிறேன். நாம் அனைவரும் சேர்ந்து நடத்தும் ஆட்சி தான் இது! நமக்கான ஆட்சி தான் இது!

இந்த ஆட்சியானது கடந்த பத்தாண்டு காலமாக, தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சரிவைச் சீர் செய்து கொண்டிருக்கிறது.

பள்ளத்தை நிரப்பி வருகிறது!

துன்பங்களை போக்கி வருகிறது!

தொய்வைத் துடைத்து வருகிறது!

அதே சமயத்தில் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க எந்நாளும் உழைத்து வருகிறது. மீண்டும் சொல்கிறேன், நேற்றைக்கும் சொன்னேன், என் சக்தியை மீறியும் உங்களுக்காக உழைப்பேன், உழைப்பேன்!

இந்த உதயசூரிய அரசு உழைக்கும் உழைக்கும்! என்று உறுதியளித்து விடைபெறுகிறேன்!

நன்றி வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
இராணிப்பேட்டையில் நடைபெற்ற அரசு விழாவில்,
முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து,
புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,
பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி
ஆற்றிய உரை - 30.06.2022

கரூர் மாவட்டத்தில் ரூ.582 கோடி மதிப்பீட்டில் 99 பணிகளுக்கு அடிக்கல்

கரூர் மாவட்ட அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கக்கூடிய இந்த பிரம்மாண்டமான விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்திருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அன்பிற்குரிய திரு.கே.என்.நேரு அவர்களே!

இந்த நிகழ்ச்சியை அரசு நிகழ்ச்சியாக மட்டுமல்லாமல், மக்கள் நிகழ்ச்சியாக, நிகழ்ச்சி என்று சொல்வதை விட ஒரு மாநாடு போல் எழுச்சியோடு, ஏற்றத்தோடு நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அன்பிற்குரிய திரு. செந்தில்பாலாஜி அவர்களே!

நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக் கூடிய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சிவசங்கர் அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர் அன்பிற்கினிய செல்வி ஜோதிமணி அவர்களே!

கரூர் மாநகராட்சியினுடைய வணக்கத்திற்குரிய மேயர் திருமதி வே. கவிதா அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள்

இரா. மாணிக்கம் அவர்களே!

திருமதி க. சிவகாமசுந்தரி அவர்களே!

துணை மேயர் சரவணன் அவர்களே!

கரூர் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் திரு. பிரபுசங்கர், இ.ஆ.ப., அவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்றவுள்ள மாவட்ட வருவாய் அலுவலர் திரு. லியாகத் அவர்களே!

உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகளே!

அரசினுடைய பல்வேறு துறைகளைச் சார்ந்திருக்கக் கூடிய அரசு உயர் அதிகாரிகளே, அலுவலர்களே!

நலத்திட்ட உதவிகளை பெறுவதற்காக வருகை தந்திருக்கக்கூடிய பயனாளி பெருமக்களே!

அருமை பெரியோர்களே, அன்பிற்கினிய தாய்மார்களே!

ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய பாசமிகு நண்பர்களே!

காவல் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய சகோதரர்களே!

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புகளே!

பேசாமல் அப்படியே கொஞ்ச நேரம் நின்று கொண்டு உங்களை எல்லாம் பார்த்துக் கொண்டே இருந்தால் போதும்

என்று சொல்லும் அளவுக்கு மாபெரும் கடல் அலையை இங்கே நான் பார்க்கிறேன்.

கடல் இல்லாத இந்த கரூருக்கு, மக்கள் கடலையே உருவாக்கி இருக்கிறார் நம்முடைய அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்கள். அலை இல்லாத கரூருக்குள் மக்கள் அலையை உருவாக்கி இருக்கிறார் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்கள்.

இங்கு மட்டுமல்ல, இந்த மாவட்டத்திற்குள்ளே நுழைந்ததில் இருந்தே நான் பார்க்கிறேன், பார்க்கும் இடமெல்லாம் மக்கள்!

நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் பெருமையோடு எடுத்துச் சொன்னார்கள்.

நோக்க நோக்க மகிழ்ச்சி என்று சொல்லிப் பாராட்டும் அளவுக்கு மக்கள் தலைகளால் கரூரை மக்களூராக மாற்றிக் காண்பித்திருக்கிறார் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் செந்தில்பாலாஜி அவர்கள். எப்போதும், எந்த நேரத்திலும், எதையும் மிகப் பிரம்மாண்டமாகச் செய்துகாட்டக் கூடியவர் அவர். அடுத்த பிரம்மாண்டத்தை மிஞ்சக்கூடிய அளவுக்கு, அடுத்த பிரம்மாண்டத்தையும் அவரே தான் செய்வார். அந்த வகையில் ஒப்பில்லாத மிகப் பிரம்மாண்டமான ஒரு அரசு விழாவாக இது அமைந்துள்ளது.

எந்தப் பணியாக இருந்தாலும் அதற்கு ஒரு டார்கெட் நிர்ணயிப்பார். எந்தச் சூழலிலும் அந்த டார்கெட்டை முடித்துக்காட்டக் கூடியவர் என்று அவரை நான் ஏற்கெனவே பலமுறைபாராட்டி இருக்கிறேன்,வாழ்த்தியிருக்கிறேன்.அவர் அமைச்சராக வருவதற்கு முன்பு, மின்சாரத்துறை எந்த நிலைமையில் இருந்தது என்று உங்கள் எல்லோருக்கும் தெரியும்.

❖ மக்களின் குறைகளை உடனடியாகத் தீர்க்க மின்னகம் சேவை மையம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

❖ மிகக் குறுகிய காலத்தில் ஒரு இலட்சம் உழவர்களுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

❖ 316 துணை மின் நிலையங்கள் ஆகிய மாபெரும் சாதனைகளைச் செய்து அந்த துறையை மீட்டெடுத்து வருகிறார்.

அதே நேரத்தில், கரூர் மாவட்டத்தை மட்டுமல்ல, கோவை மாவட்டத்தில் பொறுப்பு அமைச்சராக பொறுப்பேற்று அந்த மாவட்டத்தையும் சேர்த்துக் கவனித்து, எங்கும் எந்தத் தொய்வும் இல்லாமல் அவர் செயல்பட்டு வருகிறார். இத்தகைய ஆற்றலை அனைவரும் பெற வேண்டும் என்று சொல்லும் அளவுக்கு தன்னை அவர் நிரூபித்துக் கொண்டு வருகிறார்.

அந்த வரிசையில்தான், 80,750 பேருக்கு ரூ.500 கோடி மதிப்பிலான நலத்திட்டங்கள் வழங்கும் விழா,

ரூ.28.60 கோடி மதிப்பிலான 95 பணிகளை திறந்து வைக்கும் விழா,

ரூ.582 கோடி மதிப்பிலான 99 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டும் விழா என சுமார் ரூ.1,100 கோடி மதிப்பிலான திட்டப் பணிகளுக்கான விழாவாக இது அமைந்திருக்கிறது.

இதுவும் பிரம்மாண்டம்தான்!

கருநாடக மாநிலத்தின் குடகுமலையில் உற்பத்தியாகும் காவிரிக்கு ஆடு தாண்டும் காவிரி என்று பெயர். அதாவது அவ்வளவு குறுகிய அளவுதான் அந்த நீர்ப்பகுதியின் அகலம் இருக்கும். ஆனால் தமிழ்நாட்டின் எல்லையில் நுழையும் காவிரி ஆறானது, கரூர் மாவட்டம், குளித்தலையில் பாயும்போது விரிவடைந்து பாயும். அதனால் அதற்கு 'காகம் கடக்கா காவிரி'

என்று பெயர். அதாவது காகம் கூட கடக்க முடியாத அளவு என்று அதன் பிரம்மாண்டத்தைச் சொல்வார்கள்.

கரூர் என்றாலே பிரம்மாண்டம்தான். அதற்கு இந்த விழாவே மிகப் பெரிய சாட்சி, எடுத்துக்காட்டு. இதற்கான ஏற்பாடுகளைச் செய்து அதில் வெற்றி பெற்றிருக்கக் கூடியவர், மன்னிக்க வேண்டும், மிகப் பெரிய வெற்றி பெற்றிருக்கக்கூடியவர் அமைச்சர் செந்தில்பாலாஜி அவர்களையும், அதேபோல் அவருக்கு துணை நின்று பணியாற்றி இருக்கக்கூடிய, நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நம்முடைய மேயர், துணைமேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்பில் பொறுப்பேற்று இருக்கக்கூடிய பிரதிநிதிகள், அதிலும் குறிப்பாக, சிறப்பாக சொல்ல வேண்டுமென்றால் நம்முடைய மாவட்ட ஆட்சியர் பிரபு சங்கர் அவர்களையும், மற்றுமுள்ள அதிகாரிகள், அலுவலர்களையும் மனதார வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன், நன்றி கூற விரும்புகிறேன்.

இன்று நடைபெறும் இந்த விழாவில்,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.26.39 கோடி மதிப்பீட்டில் 55 பணிகளுக்கும்,

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் 6 பணிகளும்,

பேரூராட்சித்துறையின் சார்பில் ரூ.9.30 கோடி மதிப்பீட்டில் 9 பணிகளுக்கும்,

கலை பண்பாட்டுத் துறை சார்பில் ரூ.1.51கோடி மதிப்பீட்டில் ஒரு பணிக்கும்,

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சார்பில் ரூ.387 கோடி மதிப்பீட்டில் 13 பணிகளுக்கும்,

மாநகராட்சித் துறை சார்பில் ரூ.51 கோடி மதிப்பீட்டில் 8 பணிகளுக்கும்,

நீர்வளத்துறை சார்பில் ரூ.91.58 கோடி மதிப்பீட்டில் 6 பணிகளுக்கும்,

என மொத்தம் ரூ.582 கோடி மதிப்பிலான 99 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இதை எல்லாம் விரைவில் உறுதியாக நான் வந்து திறக்கப் போகிறேன், விரைவாக, அந்த உறுதியை நான் முன் கூட்டியே வழங்க விரும்புகிறேன்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் 5 திட்டப்பணிகளும்,

வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் ஒரு பணியும்,

நில அளவைப் பதிவேடுகள் துறை சார்பில் 3 திட்டப்பணிகளும்,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில் 33 திட்டப்பணிகளும்,

கூட்டுறவுத் துறை சார்பில் 14 திட்டப்பணிகளும்,

பொதுப்பணித்துறை சார்பில் 9 திட்டப்பணிகளும்,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், 2 திட்டப்பணிகளும்,

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை (சத்துணவு) சார்பில், 6 திட்டப்பணிகளும்,

நபார்டு மற்றும் கிராம சாலைகள் சார்பில் 3 திட்டப்பணிகளும்,

நீர்வளத்துறை சார்பில் 19 திட்டப்பணிகளும் இன்றைக்கு பொதுமக்களின் பயன்பாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இவற்றின் மொத்த மதிப்பு என்னவென்று கேட்டால் 28 கோடி ரூபாய்.

ஏராளமான சாலைகள் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

அங்கன்வாடி மையங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

உணவு தானியக் கிடங்குகள் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

பல்வேறு இடங்களில் துணை சுகாதார நிலையக் கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

குடியிருப்புடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

அங்கன்வாடி கட்டடங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது.

பள்ளிகள் மறுசீரமைப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

பள்ளிகளில் சமையல் கூடங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது.

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கிறது.

இவை அனைத்தையும் நான் இங்கே ஊர் வாரியாக சொல்லத் தொடங்கினால், நேரம் அதிகமாகும். அதனால், ஒட்டுமொத்தமாக சொல்ல வேண்டுமென்றால், ஒவ்வொரு பகுதிக்கும், ஒவ்வொரு ஊருக்கும், கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிலான திட்டப்பணிகள் செய்து முடிக்கப்பட்டும் இருக்கிறது. புதிதாக கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டும் இருக்கிறது.

இந்த ஓராண்டு காலத்தில் ஓய்வில்லாமல் மக்கள் பணியை ஆற்றி வருகிறோம் என்பதற்கு இந்த கரூர் மாவட்டத்தில் செய்யப்பட்டிருக்கக்கூடிய சாதனைகளே சாட்சியாக அமைந்திருக்கிறது!

பொதுவாக, புதிதாக ஆட்சிக்கு வந்த ஒரு அரசாங்கத்திடம் முதல் ஆறு மாத காலம் எதையும் எதிர்ப்பார்க்க மாட்டார்கள். இது தான் வழக்கம்.

"இப்போதுதான் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள், எனவே அவர்களுக்கு ஆறு மாத காலம் அவகாசம் கொடுக்கலாம்"- அப்படி என்று சொல்வார்கள்.

துறைகளைப் பற்றி தெரிந்து கொள்ளும் காலம், முதல் ஆறு மாத காலம். அடுத்த ஆறு மாத காலம் என்பது திட்டமிடும் காலமாக அது அமையும். இரண்டாவது ஆண்டுதான் செயல்படுத்தத் தொடங்கும் காலமாக அமையும். ஆனால் ஆட்சிக்கு வந்த நொடியில் இருந்து செயல்படுத்தும் காலமாகத் தொடங்கிய ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி!

உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் ஆட்சி! ஏனென்றால் தலைவர் கலைஞர் அவர்கள் என்னுள் இருந்து என்னை இயக்கிக் கொண்டு இருக்கிறார். தலைவர் கலைஞர் அவர்கள் இருந்தால், என்ன நினைப்பார், என்ன சிந்திப்பார், எப்படிச் செயல்படுத்துவார் என்று நித்தமும் சிந்தித்து, நான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

இந்த ஓராண்டு காலத்தில்

திட்டமிட்டோம் -

செயல்பட்டோம் -

உருவாக்கினோம் -

மக்கள் கையில் கொடுத்துள்ளோம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு மக்களுக்கு பயனுள்ள காலமாக இந்த ஓராண்டு காலம் அமைந்திருக்கிறது. தேர்தல் நேரத்தில் கரூர் மாவட்டத்திற்கென்று அளித்த வாக்குறுதிகளில் பலவற்றை, அனைத்தையும் அல்ல, பலவற்றை, இந்த ஓராண்டிலேயே நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம்.

இங்கே மாண்புமிகு அமைச்சர் திரு. செந்தில்பாலாஜி அவர்கள் பேசுகின்றபோது சொன்னாரே, கரூர் நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்துவோம் என்று சொன்னோம். செய்து காட்டியிருக்கிறோம்!

புகளூர், பள்ளப்பட்டி பேரூராட்சிகளை நகராட்சிகள் ஆக்குவோம் என்று சொன்னோம். அதை நிறைவேற்றி இருக்கிறோம்.

அரவக்குறிச்சியில் அரசு கலை - அறிவியல் கல்லூரி தொடங்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்தோம். அதை நிறைவேற்றியிருக்கிறோம்.

கரூரில் சுற்று வட்டச் சாலை,

சாயப்பட்டறைப் பூங்கா,

காமராசர் மார்க்கெட்டில் புதிய வளாகம் ஆகியவை அறிவிக்கப்பட்டு விரைவில் நிறைவேற்றப்பட இருக்கிறது.

அதுமட்டுமல்ல, ஜவுளித்தொழிலில் தலைசிறந்து விளங்கும் இந்த கரூர் மாவட்டத்தில், இந்தத் தொழிலை மேலும் மேம்படுத்திட சிப்காட் பூங்கா ஒன்று அமைக்கப்படும் என ஏற்கெனவே அறிவித்து இருந்தோம்.

இதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் இப்போது நடைபெறத் தொடங்கி இருக்கிறது. நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் சொன்னார்களே, நேற்று இரவு நான் கரூருக்கு

வந்தவுடனே இந்த மாவட்டத்தில் உட்பட்டிருக்கக்கூடிய தொழில் முனைவோர்கள், என்னை சந்திக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பை நம்முடைய அமைச்சர் செந்தில்பாலாஜி அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். கிட்டதட்ட ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் அவரோடு நான் கலந்து பேசினேன். அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள், நமது ஆட்சியிலே இப்போது ஒருவருடத்தில் கிடைத்திருக்கக்கூடிய நன்மைக்கு நன்றி தெரிவித்தார்கள். அதே நேரத்தில் சில கோரிக்கைகளையும் முன் வைத்தார்கள். அந்த அடிப்படையில், சில அறிவிப்புகளை நான் வெளியிடுகிறேன்.

இந்த மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் ஜவுளிப் பொருட்களை வாங்க பல்வேறு மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வரக்கூடிய வாடிக்கையாளர்களுக்கு, இந்தப் பொருட்களை காட்சிப்படுத்தத் தேவையான காட்சி அரங்கம் ஒன்று அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக உள்ளதாக சொன்னார்கள். இதனை இந்த அரசு ஏற்று, ஜவுளி உற்பத்தியாளர்களுடன் இணைந்து அத்தகைய பெரும் காட்சி அரங்கம் மற்றும் வளாகம் ஒன்று கரூர் மாவட்டத்தில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று கரூர் மாவட்டத்தில் உற்பத்தியாகும் ஜவுளிப்பொருட்களின் தரம் மற்றும் தொழில்நுட்பம் குறித்த பரிசோதனைகளை இங்கேயே மேற்கொள்வதற்காக, சர்வதேச தரத்திலான ஜவுளிப்பொருட்கள் பரிசோதனை நிலையம் (Advanced Testing Lab) ஒன்றும் கரூர் மாவட்டத்தில் அமைக்கப்படும்.

அதே போல் மாநகரப் பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக புதிய பேருந்து நிலையம் வேண்டும் என்பது இந்த மாநகர மக்களின் நீண்டகால

கோரிக்கை. இதனை நிறைவேற்றக்கூடிய வகையில், திருமாநிலையூரில் ரூ.47 கோடி செலவில் நவீன புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

மற்ற கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளோடு, அமைச்சர்களோடு கலந்து பேசி வருங்காலத்தில் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புறேன்.

இந்த ஓராண்டு காலத்தில் இந்த கரூர் மாவட்டத்திற்கு செய்திருக்கக்கூடிய சாதனைகள் மட்டுமல்ல, இதேபோல் மற்ற மாவட்டங்களுக்குச் செய்திருக்கக்கூடிய சாதனைகள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்திருக்கக்கூடிய சாதனைகளைப் பார்க்கும்போது நான் மனநிறைவை அடைகிறேன்.

இந்த ஓராண்டு காலமானது எனக்கு மனநிறைவைத் தருகிறது. ஒவ்வொருவருக்கும் அவரது மனச்சாட்சிதான் நீதிபதி என்று சொல்லுவார்கள். அந்த வகையில் எனது மனசாட்சி அளிக்கும் தீர்ப்பு இது!

இதுதான் மக்களுடைய மனங்களிலும் இருக்கிறது என்பதன் அடையாளம் தான் உங்கள் முகங்களில் பார்க்கக்கூடிய மகிழ்ச்சி. நான் செல்கின்ற இடமெல்லாம் மக்கள் அலையலையாக வருகிறார்கள் என்பது மட்டுமல்ல, அந்த மக்களின் முகங்களில் நான் மலர்ச்சியைப் பார்க்கிறேன், மகிழ்ச்சியைப் பார்க்கிறேன்.

'உன்னுடைய ஆட்சிக் காலத்தில் நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறோம்' என்று அவர்கள் முகங்கள் சொல்கின்றது.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். இந்த முகங்களின் மூலமாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மக்களை முன்னேற்றும் ஆட்சியாக அமைந்துள்ளது என்பதை

தெளிவாக அறிய முடிகிறது. அதனால்தான் நான் வீண் விமர்சனங்களுக்கெல்லாம் பதில் சொல்லி என்னுடைய நேரத்தை வீணடிப்பதில்லை. இப்போது எனக்கு மக்களுக்கு நன்மை செய்வதற்கே நேரம் போதவில்லை. அதனால் அக்கப்போர் மனிதர்களின் அரைவேக்காட்டு விமர்சனங்களுக்கு நான் பதில் சொல்வதற்கு தயாராக இல்லை. அதற்கு நேரமில்லை.

“மானத்தைப் பற்றிக் கவலைப்படும் ஆயிரம் பேருடன் கூட போராடலாம். ஆனால் மானத்தைப் பற்றிக் கவலைப்படாத ஒரே ஒரு ஆளுடன் நாம் போராடவே முடியாது” என்று தந்தை பெரியார் அவர்கள் சொல்வார். அடிக்கடி சொல்வார். அப்படி மானத்தைப் பற்றிக் கவலைப்படாத மனிதர்கள் வைக்கும் விமர்சனத்தைப் பற்றி நான் மதிக்க விரும்பவில்லை.

தி.மு.க. ஆட்சியானது எப்படிச் செயல்படுகிறது என்பதை இதுபோன்ற மனிதர்கள் முன்னால் மைக்கை நீட்டாமல், தமிழ்நாட்டு மக்கள் முன்னால் மைக்கை நீட்டித் தெரிந்துகொள்ளுங்கள், யாருக்கு சொல்கிறேன், இதோ இங்கே இருக்கக்கூடிய ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக் கூடிய நண்பர்களுக்கு சொல்கிறேன். உரிமையோடு சொல்கிறேன். யார் யாரிடமோ மைக்கை நீட்டுகிறீர்களே, மக்களிடம் சென்று மைக்கை நீட்டிப் பாருங்கள். மிகவும் உரிமையோடு உங்களிடத்தில் கேட்கிறேன்.

பேருந்துகளில் இலவசப் பயணம் என்பது அதிலிருந்து நகைக்கடன் தள்ளுபடி என்பதுவரை பயன்பெற்ற கோடிக்கணக்கான பெண்களிடத்தில் சென்று நீங்கள் கேளுங்கள்!

இல்லம் தேடிக் கல்வி திட்டம் முதல் உயர்கல்வி கற்கக்கூடிய அரசுப் பள்ளி மாணவியருக்கு ஆயிரம் ரூபாய் என்பது வரையிலான கல்வித் திட்டங்கள் குறித்து மாணவச் செல்வங்களிடத்தில் சென்று நீங்கள் மைக்கை நீட்டுங்கள்!

நான் முதல்வன் திட்டம் முதல் தமிழில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்பது வரையிலான திட்டங்கள் குறித்து இளைஞர்களிடத்தில் சென்று கேளுங்கள்!

இருளர்கள், நரிக்குறவர்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் என விளிம்புநிலைக்குக் கீழே இருக்கக்கூடிய மக்களிடம் இந்த ஆட்சியைப் பற்றிப் போய் கேளுங்கள்!

தூர்வாரிய பணிகள் முதல் விளை பொருட்களுக்கான தொகுப்புகள் வரை அதனால் பயனடையும் நம்முடைய வேளாண் பெருங்குடித் தோழர்களிடம் இந்த ஆட்சியைப் பற்றிக் கேளுங்கள்!

'மீண்டும் மஞ்சப்பை' முதல் சுற்றுச்சூழலுக்கான எடுக்கப்பட்ட முன்னெடுப்புகள் பற்றி சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடம் சென்று கேளுங்கள்!

இந்த ஆட்சியில் சமூகநீதி எந்தளவுக்கு போற்றிப் பாதுகாக்கப்படுகிறது என்பது குறித்து சமூகநீதிக்காகப் போராடுபவர்களிடம் சென்று கேளுங்கள்!

அவர்கள் இந்த ஆட்சியின் சாதனைகளைப் பற்றிச் சொல்வார்கள். தாங்கள் அடைந்த பயனைப் பற்றிச் சொல்வார்கள். நியாயமான கோரிக்கையை யார் வைத்தாலும் அதை நிறைவேற்றித் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அனைவருடைய கருத்தையும் கேட்டு. அதனை செயல்படுத்தித் தருபவனாகத்தான் நான் இருக்கிறேனே தவிர, நான் நினைப்பது மட்டும்தான் நடக்க வேண்டும் என்று நினைப்பவனல்ல நான்.

இத்தகையமக்களிடம்கருத்துக்களைப்பெற்றுஊடகங்கள் ஆட்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். தாங்களும் இருக்கிறோம் என்பதைக் காட்டிக் கொள்வதற்காக நாள்தோறும் மைக் முன்னால் வாந்தி எடுப்பவர்கள் அளிக்கும் பேட்டிகளுக்கு நான் பதில் சொல்வதற்கு என்றைக்கும் தயாராக இல்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியை விமர்சிப்பதன் மூலமாக என்னை எதிர்த்து கருத்துச் சொல்வதன் மூலமாக பிரபலம் அடையலாம் என்று நினைப்பவர்களைப் பார்த்து நான் வருத்தப்படுகிறேன்.

நான் கோடிக்கணக்கான தமிழ் மக்களின் வீட்டில் விளக்கு ஏற்றவேண்டும் என்று விரும்புகிறவன். அதுவும் சாதாரண விளக்காக அல்ல, அது அறிவு விளக்குகளாக, அன்பு விளக்குகளாக, சேவை விளக்குகளாக, மற்றவர்களுக்கு பயன் தரும் விளக்குகளாக அமைய வேண்டும் என்று நினைக்கிறேன்.

உங்களில் ஒருவனாக என்னை ஏற்றுக்கொண்டு முதலமைச்சர் நாற்காலியை தமிழ்நாட்டு மக்கள் எனக்கு வழங்கி இருக்கக் காரணம் என்ன? தங்களுக்கு நல்லது செய்வான் என்ற நம்பிக்கையில் தான்! அந்த நம்பிக்கையை நான் எந்நாளும் காப்பாற்றுவேன்.

இந்த மாவட்டம், முன்பு கருவூர் என்று தான் அழைக்கப்பட்டது. அதுவே பின்பு கரூர் ஆனது என்பார்கள்.

அந்த கரூரில், 95 வயது வரையில் தமிழ்ச் சமுதாயத்துக்காக எழுதியும்,பேசியும்,செயல்பட்டும்,உழைத்ததமிழினத்தலைவர் கலைஞர் அவர்கள், சட்டமன்றத்திற்கு முதன்முதலில் நுழையக்காரணமான குளித்தலை தொகுதியைஉள்ளடக்கிய மாவட்டம் இந்த மாவட்டம்.

தலைவர் கலைஞர் அவர்களின் சட்டமன்ற வாழ்க்கை கருவான ஊர் இந்தகரூர்மாவட்டம்.அமைச்சர் செந்தில்பாலாஜி என்னை மக்கள் கடல் அலையில் மிதக்க வைத்துள்ளார். நேற்று இரவிலிருந்து இந்த நிமிடம் வரையில், அதற்காக மீண்டும், மீண்டும் உங்கள் அனைவரின் சார்பில் என்னுடைய வாழ்த்துக்களை மீண்டும் ஒருமுறை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தக் கூட்டத்தின் வாயிலாக ஒரு கோரிக்கையை கரூர் மாவட்ட தொழில் முனைவோர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் கரூர் மாவட்ட மக்களுக்கு நான் வைக்க விரும்புகிறேன். என்னவென்று கேட்டால், நமது மாநிலத்தினுடைய தொழில் துறையில் மிகவும் முன்னேறிய மாவட்டங்களில் ஒன்றாக திகழக்கூடிய இந்த கரூர் மாவட்டம். ஜவுளி உற்பத்தித் தொழில், கொசு வலை உற்பத்தி, வாகனங்களுக்கு கூண்டுகள் கட்டுதல், முருங்கை ஏற்றுமதி போன்ற பல்வேறு துறைகளில் நம்முடைய மாநிலத்தில் முதன்மை மாவட்டமாக இந்த மாவட்டம் விளங்குகிறது. இந்தத் தொழில் வளர்ச்சியில் கரூர் மாவட்டம் மேலும், மேலும் உயர்ந்து ஏற்றுமதியில் சிறந்து இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால் திருப்பூர் மாவட்டத்திற்கிணையாக வளர வேண்டும் என்பது என்னுடைய ஆசை. என்னுடைய கோரிக்கை. அதனை

நீங்கள் நிறைவேற்றுவீர்களா? உங்களை தான் கேட்கிறேன், நீங்கள் நிறைவேற்றத் தயாராய் இருக்கிறீர்களா? எனவே அப்படிப்பட்ட உணர்வோடு நான் சொல்ல விரும்புவது மாவட்டங்களுக்குள் இத்தகைய ஆரோக்கியமான தொழில் போட்டிகள் இருக்கத்தான் வேண்டும். ஏன் என்று கேட்டீர்கள் என்றால், மாவட்டங்கள் வளர, மாநிலம் வளரும், அந்த வளர்ச்சிக்கு எந்நாளும் உதவக்கூடிய கலங்கரை விளக்காக திராவிட மாடல் ஆட்சி திகழும், திகழும் என்பதை இந்தக் கரூரில் வீரமாக நான் சூளுரைத்து விடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
கரூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில்,
முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து,
புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,
பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி
ஆற்றிய உரை - 02.07.2022

தமிழ் மொழியை வளர்ப்போம்
தமிழினத்தைக் காப்போம்



அனைவருக்கும் வணக்கம்!

வட அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவையின் தலைவர் பாசத்திற்குரிய திரு.கால்டுவெல் வேலுநம்பி அவர்களே!

ஒருங்கிணைப்பாளர்கள்

திரு. ரங்கநாதன் புருஷோத்தமன் அவர்களே!

திரு. பால சுவாமிநாதன் அவர்களே!

நியூயார்க் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. ராம்மோகன் அவர்களே!

மற்றும் இதில் பங்கேற்றிருக்கக்கூடிய அனைவருக்கும் முதலில் என்னுடைய அன்பான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ள 70க்கும் மேற்பட்ட தமிழ்ச் சங்கங்களின் ஒட்டுமொத்த

அமைப்பான - வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையான "ஃபெட்னா" அமைப்பைச் சார்ந்த - அதன் அமைப்பாளர் அனைவருக்கும் மீண்டும் எனது அன்பான வணக்கங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் அமைப்பாக,தமிழின அமைப்பாக நீங்கள் செயல்பட்டு வருகிறீர்கள். கூடிக் கலையும் அமைப்பாக இல்லாமல், கூடிச் செயல்படும் அமைப்பாக இருக்கிறீர்கள்.கொரோனா காலத்தில் நீங்கள் செய்த உதவிகளை தமிழ்நாடு மறக்கவில்லை. ஏன் நானும் மறக்கவில்லை. அப்போதே, இதன் அமைப்பாளர்கள் அனைவரையும் வாழ்த்தி நான் காணொலியில் பேசியிருக்கிறேன்.

அப்போதே,என்னைச் சந்தித்த ஃபெட்னா அமைப்பாளர்கள், "இந்த ஆண்டு ஜூலை முதல் வாரத்தில், ஃபெட்னா சார்பில் மிகப்பெரிய விழா நடக்க இருக்க இருக்கிறது. இது ஃபெட்னாவின் 35ஆவது ஆண்டு விழா.அந்த விழாவின்போது கலந்து கொள்ள வேண்டும்" என்று என்னிடம் ஒரு அன்பான கோரிக்கையை வைத்தார்கள்.

கலந்து கொள்ளலாம் என முதலில் நான் திட்டமிட்டு இருந்தாலும், தமிழ்நாட்டில் பல்வேறு பணிகள் இருந்த காரணத்தால் குறிப்பிட்ட இந்த நாட்களில் வர இயலாத சூழல் இருந்ததை அமைப்பாளர்களுக்கு நான் எடுத்துச் சொன்னேன். இம்முறை வரவில்லை என்றாலும், நிச்சயமாக ஒருமுறை உங்கள் மாநாட்டில் கலந்துகொள்வேன் என்ற உறுதியை இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவில் உலகத் தமிழ்ப் பீடம் விருதையும் அளிக்க இருக்கிறீர்கள். 2020ஆம் அண்டுக்கான உலகத் தமிழ்ப் பீட விருதை மறைந்த இலக்கியச் செம்மல் 'தமிழ்கோ

இளங்குமரனார்' அவர்களுக்கும் - 2021ஆம் ஆண்டுக்கான விருதை மாபெரும் தமிழ்க்கவி 'ஈரோடு தமிழன்பன்' அவர்களுக்கும் வழங்குவதை அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இதன் பரிசுத்தொகை 15,000 அமெரிக்க வெள்ளி, அதாவது, இந்திய மதிப்பில் சுமார் ரூ.12 இலட்சம். இந்தச் சிறப்புக்குரிய விருது தகுதிசால் அறிஞர்களுக்கு தரப்பட இருக்கிறது.

500க்கும் மேற்பட்ட நூல்களைத் தமிழுக்குத் தந்திருக்கக்கூடிய இளங்குமரனார் அவர்கள் மறைந்தபோது, அவருக்கு தமிழ்நாடு அரசு - அரசு மரியாதை வழங்கியது என்பதையும், அவரது நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன என்பதையும் உங்கள் எல்லோருக்கும் நான் நினைவூட்டுகிறேன்.

அதேபோல், இந்த ஆண்டுக்கான எழுத்தாளர்களுக்குக் கனவு இல்லம் வழங்கும் திட்டத்தில், ஈரோடு தமிழன்பன் அவர்கள் வீடு பெறுகிறார். போற்றப்பட வேண்டிய ஆளுமைகளை நீங்கள் போற்றுகிறீர்கள். உங்கள் தேர்வுக் குழுவை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

உலகின் மிக மூத்த மொழியான தமிழ் மொழிக்குச் சொந்தக்காரர்கள் நாம். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பாடினார்.

"கனியிடை ஏறிய சுளையும் -
முற்றல் கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும், -
காய்ச்சுப் பாகிடை ஏறிய சுவையும்;
நனிபசு பொழியும் பாலும் -
தென்னை நல்கிய குளிர் இளநீரும்,
இனியன என்பேன் எனினும், -

தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர்!”- என்று பாடினார்.

இத்தகைய அமிழ்தினும் இனிய மொழிக்குச் சொந்தக்காரர்கள் நாம். உலகில் மூத்த இனமான தமிழினத்தைச் சேர்ந்தவர்கள் நாம். இத்தகைய மொழிப்பெருமையும் - இனப்பெருமையும் கொண்டவர்கள் நாம். அத்தகைய பெருமையுடனும் பெருமிதத்துடனும்தான் நாம் இங்கே கூடியிருக்கிறோம்.

உலகம் முழுவதும் பரந்து விரிந்து வாழும் ஒரு இனம் உண்டென்றால் அது தமிழினம்தான். நம்முடைய இனம் ஒரு நிலத்தில், ஒரு நாட்டில் மட்டுமே வாழும் இனம் அல்ல. 30க்கும் மேற்பட்ட நாடுகளில் அதிக எண்ணிக்கையிலும், 60க்கும் மேற்பட்ட நாடுகளில் குறைந்த எண்ணிக்கையிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள். இது குறித்து தமிழ்நாடு சட்டமன்றத்திலேயே நான் விரிவாகப் பேசியிருக்கிறேன்.

- வணிகம் செய்வதற்காகச் சென்றார்கள்.
- வாழ்வதற்காகச் சென்றார்கள்.
- வேலைகள் தேடிச் சென்றார்கள்.
- கடற்கோள்களில் இருந்து தப்புவதற்காகச் சென்றார்கள்.
- தப்பிச் செல்வதற்காகச் சென்றார்கள்.
- புதிய இடங்களை அறிவதற்காகச் சென்றார்கள்.

- இப்படிப் பலருக்கும் பல நோக்கங்கள் இருந்திருக்கும். இத்தகைய இடப்பெயர்வுகள் காலம்காலமாக நடந்து வருகின்றன. எங்கே தமிழர்கள் வாழ்ந்தாலும், அவர்களுக்கு தமிழ்நாடுதான் தாய்வீடு. அத்தகைய தாய்வீடாம் தமிழ்நாட்டில் இருந்து என்னுடைய வாழ்த்துகளை உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நிலத்தின் தொன்மை என்பது ஏதோ பழம்பெருமையோ, இலக்கியக் கற்பனையோ மட்டுமல்ல, அது வரலாற்றுப்பூர்வமானது. இத்தகைய வரலாற்றை மீட்டெடுக்கும் காலத்தில் இந்த மாநாடு நடைபெறுவது மிக மிகப் பொருத்தமானது!

கீழடியில் கிடைத்த சான்றுகள்தான், இந்த வரலாற்று வழித்தடத்தை மீண்டும் புதுப்பித்திருக்கிறது. தமிழ்நாட்டில் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே நகரமயமாக்கம் ஏற்பட்டிருந்தது என்பது மட்டுமல்லாமல், படிப்பறிவும் எழுத்தறிவும் பெற்ற மேம்பட்ட சமூகமாக விளங்கியதைக் கீழடி அகழாய்வு நிலைநிறுத்தியிருக்கிறது.

அதேபோல், சிவளையில் முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட - உமிநீங்கிய நெல்மணிகளின் காலம் கி.மு. 1150 எனக் கண்டறியப்பட்டிருக்கிறது.

'தண் பொருநை' என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் 3,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அறிவியல்வழி ஆய்வுகளின் அடிப்படையில் உறுதி செய்திருக்கிறோம்.

இந்த ஆய்வுகளை மேலும் விரிவுபடுத்த நான் உத்தரவிட்டிருக்கிறேன். கீழடி, அழகன்குளம், கொற்கை, சிவகளை, ஆதிச்சநல்லூர், கொடுமணல், மயிலாடும்பாறை, கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் ஆய்வுகள் இப்போது சிறப்பாகத் தொடங்கியிருக்கிறது.

சங்ககாலத் துறைமுகங்களான பூம்புகார், கொற்கை, அழகன்குளம், வசவசமுத்திரம் ஆகியவை அன்றைய தமிழ் நிலத்தில் முக்கியப் பங்காற்றின. அவற்றையும் ஆய்வு செய்ய உத்தரவிட்டிருக்கிறோம்.

சிலர் தங்களது வரலாற்றை கற்பனையான கதைகளின் மூலமாக வடிவமைக்கிறார்கள். நாம் அப்படி அல்ல! வரலாற்றுத் தரவுகள் அடிப்படையில் உறுதிசெய்துதான் அறிவிக்கிறோம்.

''இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு, இனி, தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில் அறிவியல்பூர்வமாக நிறுவுவதற்கு, மேற்காணும் அகழாய்வுகளும், முன்களப் புலஆய்வுப் பணிகளின் முடிவுகளும் உறுதி செய்யும்'' என்றும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நான் அறிவித்தேன்.

இதனைச் செய்வதற்குக் காரணம் - ஏதோ பழம்பெருமை பேசுவதற்காக மட்டுமல்ல. பழம்பெருமை பேசுவது தவறும் இல்லை. நாம் ஏன் பழம்பெருமை பேசுகிறோம் என்றால் -

பழம்பெருமை நமக்கு இருக்கிறது. அதனால் பேசுகிறோம்!

நாம் பேசுவது ஏன் சிலருக்குக் கசப்பாக இருக்கிறது என்றால், அவர்களுக்கு எந்தப் பெருமையும் இல்லாமல் இருப்பதுதான் அதற்குக் காரணம்.

"வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்"

என்பதைத் தமிழ் மண்ணில் விதைத்து மொழிப்பற்றும் -

'தமிழா இன உணர்வு கொள்!' என்று முழங்கி -

இனமான உணர்வும் ஊட்டிய இயக்கம்தான் திராவிட இயக்கம். மொழிக்காக போராடிய - வாதாடிய இயக்கம் மட்டுமல்ல, மொழியைக் காக்க, தனது தேகத்தை தீக்குத் தின்னத் தந்த தீரர்களின் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்த இனத்தின் மொழியைக் காக்க தமிழ்க் காப்புப் போராட்டங்கள் அனைத்தையும் நடத்தியது திராவிட இயக்கம்தான். 1938 முதல் இன்று வரை தமிழ்க் காப்புப் போராட்டங்கள் என்பவை திராவிட இயக்கங்களால் நடத்தப்பட்டவையே. அதே நேரத்தில் ஆட்சிக்கு வந்த பிறகு தமிழ்க் காப்புக் கொள்கைகள் அனைத்தையும் நிறைவேற்றியதும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

ஈராயிரம் ஆண்டு பழமை கொண்ட மொழிக்கு செம்மொழித்தகுதியைபெற்றுத்தந்தது திராவிட முன்னேற்றக் கழகம். தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் இந்த மாநிலத்திற்குத் ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டியது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

ஐந்து முறை ஆட்சியில் இருந்தபோது -

- ‘மெட்ராஸ்’ என்ற பெயரை ‘சென்னை’ என ஆக்கியது!
- தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையை நிறைவேற்றியது!
- ஸ்ரீ, ஸ்ரீமதி என்ற சொல்லுக்கு பதிலாக திரு, திருமதி சொல்லைச் சட்டப்பூர்வம் ஆக்கியது!
- தலைநகரில் வள்ளுவர் கோட்டமும், கடல் நகரில் 133 அடியில் வள்ளுவர் சிலையும் அமைத்தது!
- திரும்பிய பக்கம் எல்லாம் திருக்குறளைத் தீட்டியது!
- தமிழ் வாழ்க என எழுத வைத்தது!
- சிலம்பின் பெருமையைக் காட்டும் பூம்புகார் கோட்டம் அமைத்தது!
- தமிழில் வழிபாடு செய்யும் உரிமையை வழங்கியது!
- ஆட்சிமொழியாய்த் தமிழை முழுமையாக்கியது!

- ❖ இப்படி எத்தனையோ சாதனைகளைச் செய்திருக்கிறோம்.

ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த ஓராண்டு காலத்தில்,

- ❖ தமிழ்நாட்டு அரசுத் துறை பணியிடங்களில் நுழைபவர்களுக்கு தமிழ்மொழி அறிவு கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது.
- ❖ ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் உள்ளிட்ட மாநிலத்தில் உள்ள அனைத்து தெரிவு முகமைகளைப் பொறுத்தவரையில், தமிழ்மொழித் தகுதித் தேர்வு கட்டாயம்.
- ❖ ஆலயங்களில் அன்னைத் தமிழ் ஒலிக்கத் தொடங்கி இருக்கிறது.
- ❖ சங்க இலக்கிய நூல்களை குறைந்த விலையில் அச்சிட்டு வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்.
- ❖ மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் மாநிலப் பாடலாக ஆக்கப்பட்டுள்ளது.
- ❖ மதுரையில் கலைஞர் நினைவு நூலகம்
- ❖ தமிழ்நூல்கள் நாட்டுடமை
- ❖ எழுத்தாளர்கள் பிறந்தநாளில் கூட்டங்கள்
- ❖ குறைந்த விலையில் சங்க இலக்கிய நூல்கள் வெளியீடு
- ❖ திராவிடக் களஞ்சியம் உருவாக்கம்
- ❖ இதழியலாளருக்கு கலைஞர் எழுதுகோல் விருது
- ❖ உலகப் பல்கலைக்கழகங்களில் செம்மொழித் தமிழ் இருக்கைகள்

- நூலகங்களுக்குச் சிற்றிதழ்கள்
- இலக்கியமாமணி விருதுகள்
- உயரிய விருது பெற்ற எழுத்தாளருக்கு கனவு இல்லம்
- திசை தோறும் திராவிடம்
- முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம் - இப்படி தமிழாட்சி நடந்து வருகிறது.

தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் தருவதோடு, தமிழினத்தைக் காக்கும் ஆட்சியாகவும் நடந்து வருகிறது.

தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழர்கள் நலனிலும் அக்கறை கொண்ட ஆட்சியாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்திருக்கிறது. உலகளாவிய தமிழாட்சியை இங்கிருந்து நடத்தி வருகிறோம்.

அயலகத் தமிழர் மேன்மைக்காக தன்னுடைய வாழ்வையே ஒப்படைத்தவர்தான் நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்!

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்வதற்காக, வெளிநாடுவாழ் தமிழர் நலச்சட்டம் 2011ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் நாள் கழக அரசால் இயற்றப்பட்டது.

“வெளிநாடுவாழ் தமிழர் நலவாரியம்” ஒன்றை உருவாக்கி அவர்களுக்கு நலத்திட்டங்களைச் செயல்படுத்துவோம் என்று அறிவித்தோம். அப்போது ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக, நம்மால் அதை அமைக்க முடியவில்லை. அடுத்து வந்த ஆட்சியாளர்களும் அதை அமைக்கவில்லை. மீண்டும் ஆட்சிக்கு வந்த நான், ‘வெளிநாடுவாழ் தமிழர் நலவாரியம்’ அமைக்கப்படும் என்பதை ஐந்தே மாதத்தில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவித்தேன்.

- பதிமூன்று பேரைக் கொண்டு இந்த வாரியம் அமைக்கப்படும்.
- ரூ.5 கோடி வெளிநாடுவாழ் தமிழர் நலநிதி உருவாக்கப்படும்.
- வெளிநாடுவாழ் தமிழர் குறித்த தரவுத் தளம் (Data Base) ஏற்படுத்தப்படும்.
- தமிழர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால், அவர்கள் குடும்பத்தில் உள்ள - கல்வி பயிலக்கூடிய குழந்தைகளுக்கு, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை வழங்கப்படும்.
- தமிழர்கள் புலம்பெயரும்போது, பயணப்புத்தாக்கப்பயிற்சி பல்வேறு ஊர்களில் நடத்தப்படும்.
- ஆலோசனை பெற வசதியாக, கட்டணமில்லாத் தொலைபேசி வசதி மற்றும் வலைத்தளம், கைப்பேசிச்செயலி (Mobile application) அமைத்துத் தரப்படும்.
- சட்ட உதவி மையம் அமைக்கப்படும்.
- தமிழ்நாடு திரும்பியவர்களுக்கு குறு தொழில்கள் செய்திட, அதிகபட்சமாக, ரூ.2.50 இலட்சம் மானியத்துடன் கூடிய கடன் வசதி செய்து தரப்படும். இதற்கென ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.
- வெளிநாடுவாழ் தமிழர்களின் முதலீடுகளை அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் பாதுகாப்பான முதலீடு செய்ய ஏதுவான சூழல் உருவாக்கப்படும்.
- புலம்பெயர்ந்த தமிழர்கள், ‘எனது கிராமம்’ திட்டத்தின் மூலம் தங்களது சொந்த ஊருக்கு நன்மைகள் செய்து தரலாம்.

- புலம்பெயர்ந்தோர் பிள்ளைகள் தமிழ் கற்றுக்கொள்ள வசதி ஏற்படுத்தித் தரப்படும்.
- புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் அந்தந்த நாடுகளில் உருவாக்கியுள்ள நலச்சங்கங்கள் ஒருங்கிணைக்கப்படும்.

- இவை அனைத்துக்கும் ரூ.20 கோடியை நான் ஒதுக்கி இருக்கிறேன்.

இவை அனைத்தும் செயல்பாட்டிற்கு படிப்படியாக வந்து கொண்டிருக்கிறது. இந்த வரிசையில்தான், வெளிநாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12ஆம் நாள் உலகத்தமிழர் புலம்பெயர்ந்தோர் நாளாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்தேன். கடந்த ஜனவரி - 12 அன்று அது கொண்டாடப்பட்டது. கொரோனா காலமாக இருந்ததால், காணொலி மூலமாக அது முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில் இருந்து தமிழகத்தை நோக்கி வந்த தமிழர்களுக்கு ரூ.317 கோடி மதிப்பீட்டில் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

- கீழடி உள்ளிட்ட ஆய்வுகளின் மூலமாக நமது வரலாற்றை மீட்டெடுப்பது -
- எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதை நடைமுறைப்படுத்துவது -
- உலகளாவிய தமிழினத்தை ஒருங்கிணைப்பது -
- தமிழன் எங்கு பாதிக்கப்பட்டாலும் அவன் கண்ணீரைத் துடைப்பது -

❖ தமிழ்நாட்டை அனைத்து மேன்மைகளும் அடைந்த நாடாக வளர்த்தெடுப்பது -

ஆகிய ஐந்து மாபெரும் குறிக்கோள்கள் கொண்ட அரசாக நம்முடைய தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. நான் மிகக் கவனமாகத்தான் இது நம்முடைய அரசு என்று சொல்கிறேன். எனது அரசு என்றோ, தி.மு.க. அரசு என்றோ சொல்லவில்லை. 'இது ஒரு கட்சியின் அரசாக இல்லாமல் - ஓர் இனத்தின் அரசாக அமையும்' என்று நான் சொல்லி இருக்கிறேன்.

சமூகநீதி - சுயமரியாதை - சமத்துவம் - சகோதரத்துவம் - மானுடப்பற்று - தமிழ் மொழிப்பற்று - இன உரிமைகள் - கூட்டாட்சித் தத்துவம் - மாநில சுயாட்சித் தத்துவங்களைக் கொண்ட திராவிட மாடல் அரசாக இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இத்தகைய திராவிடவியல் ஆட்சியியல் கோட்பாட்டை கடந்த 100 ஆண்டுகால திராவிட இயக்கத் தலைவர்கள் முன்னெடுத்த சமூக, பொருளாதார, அரசியல் கோட்பாடுகளின் அடிப்படையில் நான் வடிவமைத்து இருக்கிறேன்.

திராவிடம் என்ற சொல்லைத் திட்டமிட்டுத்தான், நான் குறிப்பிடுகிறேன். திராவிடம் என்ற சொல் ஒரு காலத்தில் இனப்பெயராக, இடப்பெயராக, மொழிப்பெயராக இருந்தது. இது ஓர் இயக்கத்தின் பெயராக கடந்த 100 ஆண்டு காலமாக இருக்கிறது. இன்று ஓர் அரசியல் தத்துவத்தின் பெயராக - ஒரு கோட்பாட்டின் பெயராக இருக்கிறது!

'எல்லார்க்கும் எல்லாம்' என்ற கோட்பாட்டின் அரசியல் வடிவமாக அது சொல்லப்படுகிறது. இந்தத் தத்துவத்திற்கு எதிரானவர்கள், இந்தக் கோட்பாட்டுக்கு எதிரானவர்கள் - எல்லார்க்கும் எல்லாம் கிடைக்கக் கூடாது என்று நினைப்பவர்கள், திராவிட இயக்கத்தையும் எதிர்க்கிறார்கள்! இந்த ஆட்சியையும் எதிர்க்கிறார்கள்! திராவிடம் என்ற

சொல்லையும் எதிர்க்கிறார்கள். இத்தகைய எதிரிகள் ஆயிரம் ஆண்டுகளாக இருக்கிறார்கள். இவர்களை மீறித்தான், இவர்களை எல்லாம் தாண்டித்தான் தமிழினம் வளர்ந்திருக்கிறது! வாழ்ந்துகொண்டு இருக்கிறது! எனவே இவர்களை புறந்தள்ளி நாம் வளர்வோம்! வாழ்வோம்!

உங்கள் அனைவரது செயல்பாடுகளும் தமிழை, தமிழினத்தை, தமிழர்களை மேம்படுத்துவதாக அமைய வேண்டும். நம்மைப் பிளவுபடுத்தும் எண்ணங்களை பின்னுக்குத் தள்ளி, நம்மை இணைக்கும் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பவையாக உங்களது செயல்கள் அமைய வேண்டும்! தமிழகத்தில் இருக்கும் பிளவுகளுக்கு வெளிநாடுகள் சென்ற பிறகும் முக்கியத்துவம் தராதீர்கள்! ஒருதாய் மக்களாக வாழுங்கள்! கல்வியிலும் வேலைவாய்ப்பிலும், தொழில் வளர்ச்சியிலும் முன்னேற்றம் காணுங்கள்! எவ்வளவு உயரமாக மரம் வளர்ந்தாலும் அது தன்னுடைய வேரை விட்டுவிடுவதில்லை என்பதைப் போல தமிழை - தமிழ்நாட்டை விட்டுவிடாதீர்கள்! இன்று நாம் முன்னெடுக்க வேண்டிய இயக்கமானது 'தமிழால் இணைவோம்' என்பதாகும்.

தமிழுக்குத்தான் அந்த வலிமை இருக்கிறது! மத மாய்மாலங்களையும் சாதிச் சழக்குகளையும் வீழ்த்தும் வல்லமை மொழிக்குத்தான் உள்ளது!

மதம் என்று நான் சொல்லும்போது, யாருடைய இறைநம்பிக்கையையும் நான் சொல்லவில்லை. இறைநம்பிக்கை என்பது அவரவர் சிந்தனை! விருப்பம்! உரிமை! அதில் ஒருநாளும் தலையிடமாட்டோம். அதே நேரத்தில், தமிழர்களைப் பிளவுபடுத்தும் கருவியாக மதத்தைப் பயன்படுத்துவதைத்தான் நாம் எதிர்க்கிறோம்.

சாதிக்கு அத்தகைய சமாதானத்தைச் சொல்ல முடியாது. சாதி என்பது தமிழினத்தைப் பிளவுபடுத்தும் முதலாவது

சக்தியாக இருக்கிறது. அதனால்தான் 'சாதியை ஒழித்தல் ஒன்று, தமிழை வளர்த்தல் மற்றொன்று' என்று பாவேந்தர் பாடினார். அதனால்தான், 'தமிழால் இணைவோம்' என்பதை நமது முழக்கமாகக் கொண்டிருக்கிறோம்.

சாதியால், மதத்தால் தமிழர்களைப் பிரிக்கும் சக்திகள் அதிகமாகிவரும்சூழலில்நாம்அனைவரும்ஒன்றுசேர்வதற்கு, நம்மை ஒருங்கிணைக்கும் ஆற்றல் தமிழ்மொழிக்கு மட்டும்தான் இருக்கிறது! உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் - பல்லாயிரம் மைல் கடந்தும் இன்று நாம் ஒன்றாகக் கூடியிருக்கிறோம் என்றால் - தமிழர் என்ற உணர்வோடு நாம் கூடி இருக்கிறோம்.

நம்மை நாடுகள் பிரிக்கலாம்! நிலங்கள் பிரிக்கலாம்! ஆனாலும், மொழி இணைக்கிறது. அந்த வல்லமை தமிழ்மொழிக்கு உண்டு. அந்த மொழியை வளர்ப்போம்! தமிழினத்தைக் காப்போம்!

உங்களை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும் போது நானே வந்து சந்திப்பேன். நீங்களும் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வாருங்கள் என்ற அன்பான அழைப்புடன் உங்களிடம் இருந்து விடைபெறுகிறேன்!

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக
வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையான
"ஃபெட்னா" அமைப்பின் 35ஆவது ஆண்டு விழாவில்
கலந்து கொண்டு ஆற்றிய உரை - 04.07.2022

எல்லாருக்கும் எல்லாம் என்ற இலக்கை நோக்கி முன்னேறுவோம்

"முதலீட்டாளர் முதல் முகவரி" மாநாட்டில் பங்கேற்று உரையாற்றியிருக்கக்கூடிய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அருமை சகோதரர் தங்கம் தென்னரசு அவர்களே!

தொழில் துறையினுடைய கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.கிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களே!

வழிகாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் திருமதி பூஜா குல்கர்னி, இ.ஆ.ப., அவர்களே! அமெரிக்கா நாட்டின் துணைத் தூதர் டித் ரவின் அவர்களே, டாடா பவர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் முதன்மைச் செயல் அலுவலர், திரு. பிரவீன் சின்ஹா அவர்களே!

ACME குழுமத்தின் நிறுவனர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. மனோஜ்குமார் உபாத்யாய் அவர்களே!

கூபிக் பிவி நிறுவனத்தின் முதன்மை நிதி அலுவலர் திரு. பீட்டர் வான் மீர்லோ அவர்களே!

மதிப்பிற்குரிய திரு. வேணு சீனிவாசன் உள்ளிட்ட தொழிலதிபர்களே! பல்வேறு நாடுகளைச் சார்ந்திருக்கக்கூடிய தூதரக அதிகாரிகளே!

தொழில் நிறுவனங்களின் நிருவாகிகளே! அரசு உயர் அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எனது உரையைத் தொடங்குவதற்கு முன்னால், மகிழ்ச்சிகரமான ஒரு செய்தியை உங்களோடு நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். தொழில் தொடங்க சிறந்த மாநிலங்களின் பட்டியலில் நம்முடைய தமிழ்நாடு 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளது என்ற செய்தி மிகப்பெரிய வரலாற்றுச் சாதனையாக அமைந்திருக்கிறது. 14ஆவது இடத்தில் இருந்து, இன்றைக்கு தமிழ்நாடு 3ஆவது இடத்தைப் பிடித்திருக்கிறது. இது, இந்த ஆட்சிக்குக் கிடைத்திருக்கக்கூடிய மிகப் பெரிய ஒரு நற்சான்றிதழ் ஆக அமைந்திருக்கிறது.

ஆட்சிக்கு வந்து ஓராண்டு காலத்திலேயே இத்தகைய இமாலயச் சாதனையை நாம் அடைந்திருக்கிறோம். இதற்கு முழுமுதல் காரணமாக அமைந்துள்ள மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். கடந்த காலங்களில் நம்முடைய கழக ஆட்சியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சராக இருந்து, மிக மிகச் சிறப்பாக பணியாற்றியவர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள். இந்த முறை அமைச்சரவையில் அவருக்கு அதே துறையை வழங்குவதா? வேறு துறையை வழங்குவதா? என்று நான் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, திடீரென்று தொழில் துறையை நான் தேர்ந்தெடுத்தேன்.

கடந்த காலத்தில் மிக மிகத் தொய்வாக இருந்த இந்தத் துறையை மீட்டெடுப்பதற்கு, ஆர்வமான, திறமையான, துடிப்பான பல்வேறு முயற்சிகளைத் துணிச்சலாக செய்யக் கூடிய தங்கம் தென்னரசு இருந்தால்தான் சரியாக இருக்கும் என்று நினைத்து அவர் பெயரை நான் 'டிக்' செய்தேன்.

என்னுடைய தேர்வு சரியாக இருந்தது என்பதை நித்தமும் அவர் நிரூபித்துக் கொண்டிருக்கிறார். தமிழ்நாடு அரசின் தொழில்துறையைத் தங்கமாக மாற்றி வரும் தங்கம் தென்னரசு அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். அதேபோல, இந்தத் துறையின் செயலாளர் திரு. கிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களும், அவருக்கு துணைநிற்கக்கூடிய அதிகாரிகள், அலுவலர்கள் என அனைவரையும் நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மாநாடு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியோடு தொடங்கியிருக்கிறது. தொழில்துறை சார்பாக நடக்கும் இந்த முதலீட்டு மாநாட்டில் பங்கேற்பதில் மிக்க பெருமையும், மகிழ்ச்சியும் நான் அடைகிறேன்.

நமது அரசு ஆட்சிப் பொறுப்பேற்று இதுவரை 5 மாநாடுகளை நடத்தி இருக்கிறோம். சென்னையில் இரண்டு மாநாடுகள் நடந்திருக்கிறது. கோவையில் ஒரு மாநாடும் - தூத்துக்குடியில் ஒரு மாநாடும் - துபாயில் ஒரு மாநாடும் நடந்துள்ளது.

இந்த மாநாடு, ஆறாவது மாநாடாக இங்கே நடந்து கொண்டிருக்கிறது. ஓராண்டு காலத்திற்குள் ஆறு முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்துவதே ஒரு மிகப்பெரிய சாதனை.

அனைவருக்குமான வளர்ச்சி - அனைத்துத் துறை வளர்ச்சி - அனைத்து மாவட்ட வளர்ச்சி - அனைத்து சமூக

வளர்ச்சி - அமைதி, நல்லிணக்கம் என்பதை அடிப்படையாகக் கொண்ட ‘திராவிட மாடல்’ மாநிலத்தை நோக்கி இந்தியத் தொழிலதிபர்கள் - உலக நிறுவனங்கள் வரத் தொடங்கியதன் அடையாளமாக இந்த மாநாடு நடந்து கொண்டிருக்கிறது.

இன்று இந்த மாநாட்டில், நிதி நுட்பங்களுக்கான தொழில் திட்டங்களுக்காக சிறப்பு முக்கியத்துவம் அளித்திருக்கிறோம். 10 நாட்களுக்கு முன்புதான், மேம்பட்ட உற்பத்தி (Advanced Manufacturing) தொடர்பான ஒரு சிறப்பு மாநாட்டையும் நடத்தினோம். இந்த முதலீட்டு மாநாடுகளுக்கு உயர்ந்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

- ❖ முதலாவதாக, தமிழ்நாட்டை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்த வேண்டும்.
- ❖ இரண்டாவதாக, தெற்காசியாவிலேயே முதலீடுகளுக்கு மிகவும் உகந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்க வேண்டும்.
- ❖ மூன்றாவதாக, உலகத்தின் மூலை முடுக்கிற்கெல்லாம், தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட (Made in Tamil Nadu) பொருட்கள் சென்றடைய வேண்டும்.
- ❖ நான்காவதாக, மாநிலம் முழுவதும் முதலீடுகள் பரவலாகவும், சீராகவும் மேற்கொள்ளப்பட வேண்டும்; அதன்மூலம், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை அடைய வேண்டும்.

இந்த இலக்குகளை அடைய தமிழ்நாடு அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் அனைத்துத் தொழில் முயற்சிகளும் இந்த நான்கு இலக்குகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இவை அனைத்தும் அனைத்து

நிறுவனங்களது கவனத்தையும் ஈர்த்திருக்கிறது. அதன் அடையாளம்தான் தமிழகத்தை நோக்கி தொழில் நிறுவனங்கள் வருவது.

தமிழ்நாடு அரசின் மீது அபார நம்பிக்கை வைத்து, தொழிலதிபர்களும், தொழில் நிறுவனங்களும் இன்றைக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ள முன்வந்திருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. நம் மாநிலத்தின் வளர்ச்சிக்குத் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள முன்வந்திருக்கக்கூடிய உங்களையெல்லாம் மிகவும் மகிழ்ச்சியோடு, உற்சாகத்தோடு நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உங்கள் தொழில் திட்டங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும், அனுமதிகளையும் பெறுவதற்கும், உங்கள் தொழில் சிறந்திடவும், உறுதுணையாக இருப்போம் என்று உங்களுக்கெல்லாம் நான் உறுதி தரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய மாநாட்டின் சிறப்பம்சமாக, நிதிநுட்பத் துறைக்காக பல ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மின்னணுமயமாக்கப்பட்ட நிதிச் சேவைகள் அனைத்தும், ஏழை, எளிய மக்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும். ஆன்லைன் விற்பனைகள் இன்று பல மடங்கு அதிகரித்திருக்கிறது. மின்னணுமயமக்கப்பட்ட வங்கிச் சேவைகளின் பயன்பாடும் அதிகரித்திருக்கிறது. இந்த வளர்ச்சியை நன்கு பயன்படுத்திக் கொண்டு, நாமும் வளர்ந்திட வேண்டியதை அரசின் கடமையாக நான் கருதுகிறேன்.

வளர்ந்து வரும் நிதிச் சேவைகள், துறையின் ஆதரவுடன், உலகின் மிகச்சிறந்த தொழில்நுட்பத் துறையை தமிழ்நாடு கொண்டிருக்கிறது.

❖ இதற்காகவே "தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை 2021" அறிக்கையை கோவையில் நான் வெளியிட்டேன்.

❖ தொழில்துறை வழிகாட்டி நிறுவனத்தில் ஒரு நிதிநுட்பப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

❖ தொழில்துறை அமைச்சர் தலைமையில் ஒரு நிதிநுட்ப ஆட்சிமன்றக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

❖ டி.என்-டெக்ஸ்பீரியன்ஸ் (TN-Tecxperience) திட்டத்திற்கான இணையதளத்தினையும் நான் இன்று துவக்கி வைத்திருக்கிறேன்.

❖ இந்தத் திட்டம் மூலம் தொழில்நுட்பச் சேவைகள், ஒரே குடையின் கீழ் அளிக்கப்படும். இதற்கான இளைய அறிவுசக்தி உருவாக்கப்பட்டு வருகிறது.

என்னுடைய கனவுத் திட்டமாக இருக்கக்கூடிய 'நான் முதல்வன்' திட்டம் பற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும். இந்தத் திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்திடும் பொருட்டு, தமிழ்நாடு அரசு, இன்ஃபோசிஸ் நிறுவனத்துடன் இணைந்து, நிதிநுட்ப அறிவுச் சூழல் அமைப்பை உருவாக்க, தொழில் மற்றும் கல்வித் துறைகளுடன் இணைந்து பணியாற்றும்.

தொழில் மற்றும் கல்வித்துறைகள் இணைந்து, இன்ஃபோசிஸ் நிறுவனத்துடன் கூட்டாக இந்த முன்முயற்சி செயல்படுத்தப்பட உள்ளது.

❖ நிதிநுட்ப நகரம்: தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) சென்னையில் குறைந்தபட்சம் 10 இலட்சம் சதுர அடி பரப்பளவில் கட்டமைக்கப்பட்ட ஒரு நிதிநுட்ப நகரத்தை படிப்படியாக உருவாக்க இருக்கிறது. இதன் மூலம், அடுத்த தலைமுறைத் தொழில்நுட்பங்களான நிதிச் சேவைகள் மற்றும் அது தொடர்பான

செயல்பாடுகளின் மையமாக இந்த நிதிநுட்ப நகரம் செயல்படும்.

❖ தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில்களுக்கு ஒரு தளத்தை உருவாக்கும் வகையிலும், தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் சூழலை தொழில் மூலதன நிறுவனங்கள் மற்றும் புது முதலீட்டாளர்களுக்கு அறியப்படுத்தும் வகையிலும் தமிழ்நாடு நிதிநுட்ப முதலீட்டுக் களவிழா (TN PitchFest) இன்று துவக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

உலகத்திற்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் அளவுக்குத் தமிழ்நாட்டை ஒரு ஸ்மார்ட் மாநிலமாக உருவாக்குவதுதான் இந்த அரசினுடைய இலக்கு.

நிதிநுட்பத் தொழில்களை மதிநுட்பத்துடன் நம் மாநிலத்திற்கு ஈர்க்க நினைக்கிறோம். அதன் முதற்கட்டத்திலேயே வெற்றியும் பெற்றிருக்கிறோம்.

இன்றைய தினம், இங்கே, 11 நிதிநுட்பத் திட்டங்களுக்கு நிறுவனப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல, நிதிநுட்ப ஆட்சிமன்றக் குழு, நிதிநுட்பக் கொள்கையின்கீழ் ஊக்குவிப்புச் சலுகை வழங்குவதற்கு 2 நிறுவனங்களைத் தேர்வு செய்திருக்கிறது. அந்த இரு நிறுவனங்களுக்கும் இன்று ஊக்கத் தொகுப்புச் சலுகைகள் அளிப்பதற்கான ஆணைகள் அளிக்கப்பட்டிருக்கிறது.

இது வெறும் தொடக்கம்தான். நாங்கள் மேற்கொண்டுள்ள பயணத்தில், உங்கள் அனைவரின் ஈடுபாட்டையும் நான் வரவேற்கிறேன். உங்கள் நிதிநுட்பத் தீர்வைகள் மூலம், இந்த மாநிலத்தினை புதிய உயரங்களுக்கு கொண்டு செல்வதற்கு உங்கள் ஆதரவை இந்த நேரத்தில் நான் வேண்டுகிறேன்.

“தமிழ்நாடு உயிர் அறிவியல் கொள்கை 2022” மற்றும் “தமிழ்நாடு ஆராய்ச்சி & மேம்பாட்டுக் கொள்கை 2022” ஆகிய கொள்கைகளை இன்று நான் வெளியிட்டிருக்கிறேன். இதன்மூலம் முதலீடுகளை ஈர்த்திடும் வரையறையை, மேலும் நீட்டித்துக் கொள்ள முடியும்.

பரிணாம வளர்ச்சி என்பது மனிதர்களுக்கு மட்டுமல்ல, மாநிலத்திற்கும்தான். மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப, நம் வளர்ச்சிப் பாதைகளை வகுத்துக் கொண்டால், நமது போட்டித்தன்மை பன்மடங்கு அதிகரிப்பதோடு, உலகளவில், நம்மால் முதலீடுகளை ஈர்ப்பதில் சிறந்து விளங்க முடியும்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்து, இந்த ஓராண்டு காலத்தில், எடுத்த முயற்சிகளின் காரணமாக, இதுவரை 192 ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கிறது. இதன் மொத்த மதிப்பு 2 இலட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய்.

கடந்த ஆண்டு ஈர்த்த முதலீடுகளைவிட, இந்த ஆண்டு இருமடங்கு முதலீடுகளை ஈர்க்கவேண்டும். அதாவது 1.50 இலட்சம் கோடி ரூபாய்க்கான முதலீடுகளை ஈர்க்கவேண்டும் என்று ஒரு அன்புக் கட்டளையிட்டேன். தமிழகத் தொழில்துறை மீதான நம்பிக்கையால்தான் அந்தக் கட்டளையிட்டேன். அதனால் தான் இந்த இலக்கை வைத்தேன்.

அதற்கேற்றவாறே, இன்று மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் சேர்த்தால், இதுவரை 2 இலட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டிருக்கிறது. இது, கிட்டத்தட்ட இரண்டரை மடங்கு அதிக முதலீடுகள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு சொன்னது போல, நான் மதிப்பாய்வு மேற்கொண்ட தேதியிலிருந்து, ஒன்றரை

ஆண்டு நிறைவு செய்வதற்கு இந்த இரண்டு வாரங்களுக்கு முன்பாகவே, தொழில்துறை இந்த இலக்கை அடைந்திருப்பது உள்ளபடியே எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. இதற்காக, சுறுசுறுப்பாக, அல்லும் பகலும் உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுகளையும் நன்றியையும் நான் தெரிவித்திருக்கிறேன்.

- பல துறைகளிலும் முதலீடுகளை ஈர்த்து, பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் இந்த அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது.
- பள்ளிக்கல்வி பயின்றவர்களுக்கு, அதிக அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய காலணி உற்பத்தி, ஆயத்த ஆடைகள் உற்பத்தி உள்ளிட்ட திட்டங்களை ஊரகப்பகுதிகளில் செயல்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.
- அதேபோல், உயர்கல்வி பயின்றவர்களுக்கு நிதிநுட்பம், உலகளாவிய மையங்கள் (GCC) போன்ற துறைகளிலும், வளர்ந்துவரும் தொழில்நுட்பத் துறைகளான மின் வாகனம், லித்தியம் அயான் பேட்டரி, பசுமை ஹைட்ரஜன் போன்ற துறைகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் சீரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- காற்றாலை மின் உற்பத்தி, சூரிய சக்தி மின் உற்பத்தி ஆகியவற்றுடன், தமிழ்நாட்டிலேயே முதல்முறையாக பசுமை ஹைட்ரஜன் தொழிற்சாலையையும் தூத்துக்குடி பகுதியில் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். இதன் மூலம் தூத்துக்குடி பகுதி "புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மையமாக" (Renewable Energy Hub) உருவாகும்.

உலகளவில் அதிகமாக பேசப்பட்டு வரும் வளர்ந்துவரும் துறையான செமிகண்டக்டர் உற்பத்திக்கான உயர் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை - ரூ.25,600 கோடி முதலீட்டில் தமிழ்நாட்டில் அமைப்பதற்கு IGSSV நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டிருக்கிறது.

அதைப் போலவே, எதிர்கால எரிசக்தித் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய வளர்ந்துவரும் துறையாக பசுமை ஹைட்ரஜன் விளங்குகிறது.

ரூ.52,695 கோடி முதலீட்டில் ஆக்மே (ACME) நிறுவனம் தூத்துக்குடியில் பசுமை ஹைட்ரஜன் மற்றும் பசுமை அமோனியா உற்பத்தித் திட்டத்தை அமைக்க இருக்கிறது. இந்தத் திட்டம் தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவப் போகிறது.

இப்படி அனைத்து வகையான தொழில்களிலும் இறங்கி, முன் முயற்சியை தமிழ்நாடு அரசு எடுத்து வருவதை உங்களைப் போன்ற நிறுவனங்களைச் சார்ந்திருக்கக் கூடியவர்கள் நன்றாக அறிவீர்கள். அதனால்தான் தமிழகத்தை நோக்கி ஈர்க்கப்பட்டு வருகிறீர்கள். தொழில் புரிவதற்கு எளிதான சூழலமைப்பு (Ease of Doing Business) கொண்ட மாநிலங்களில், அகில இந்திய அளவில் 2020ஆம் ஆண்டில் 14ஆவது இடத்திலிருந்த நம்முடைய தமிழ்நாடு, தற்போது 3ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளதற்கு இதுதான் காரணம். மூன்றாவது இடத்தில் இருந்து விரைவில் முதலிடத்திற்கு வருவோம். அதற்கான திட்டமிடுதலைத் தொடங்கி விட்டோம் என்பதன் அடையாளம் தான் இந்த மாநாடு.

இன்றைய தினம் 60 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இதன் மூலம் ரூ.1,25,244 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது.

74,898 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். பல்வேறு மாவட்டங்களில், இந்த நிறுவனங்கள் அமைய இருந்தாலும், 68% முதலீடுகள் தென் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட உள்ளன. பரவலான வளர்ச்சி அடைய முயற்சி செய்வோம் என்று நாங்கள் சொல்வதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. சொன்னதைச் செய்து வருகிறோம்.

21 திட்டங்களுக்கு இன்றைய மாநாட்டில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ரூ.22,252 கோடி முதலீட்டில் இவை தொடங்கப்பட்டுள்ளது. 17,654 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள 21 திட்டங்களில், 20 திட்டங்கள் நமது அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்.

அது போலவே, ரூ.1,497 கோடி முதலீடு மற்றும் 7,050 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் 12 திட்டங்கள் இப்போது துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுவதோடு நம்முடைய கடமை முடிந்து விடுவதாக நாங்கள் இருந்து விடுவது இல்லை. அதனால் தான் ஒப்பந்தங்கள் - நிறுவனங்களின் தொடக்க விழாவாக இது மாறி வருகிறது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு மாநாடுகளிலேயே இந்த மாநாடுதான் மிகப் பெரிய மாநாடாக அமைந்துள்ளது. வருங்காலங்களில் இதையும் விட பெரிய முதலீட்டு மாநாடுகளை நடத்த வேண்டும் என்று அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

சமூக நீதி மாநிலமான தமிழ்நாடு -

கூட்டாட்சித் தத்துவத்தை முன்னெடுக்கும் தமிழ்நாடு -

சகோதரத்துவ மண்ணான இந்த தமிழ்நாடு -

இந்த வரிசையில் தொழில்துறையில் சிறந்த தமிழ்நாடாகவும் உயர வேண்டும்.

என்ன வளம் இல்லை இந்த தமிழ்நாட்டில் என்று கேட்கும் தமிழ்நாடாக இது உயர வேண்டும்.

தொழில்துறையின் வளர்ச்சி என்பது அந்தந்த வட்டாரத்தின் சமூக வளர்ச்சியாக மாறி தமிழ்நாடு உன்னதத் தமிழ்நாடாக, மேன்மையான தமிழ்நாடாக உயர வேண்டும். தமிழ்நாட்டு அறிவாற்றலை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் தொழில் நிறுவனங்களும் வர வேண்டும். அந்தத் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தகுதி படைத்தவர்களாக தமிழ்நாட்டு இளைஞர்களும் உருவாக வேண்டும்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற இலக்கை நோக்கி முன்னேறுவோம்.

அதற்கு இத்தகைய முதலீட்டு மாநாடுகள் அடித்தளமாக அமையட்டும் என்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
தலைமையில், சென்னையில் நடைபெற்ற
"முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு"
முதலீட்டாளர்கள் மாநாட்டில் ஆற்றிய உரை - 04.07.2022

உங்கள் கனவுகளையும், பெற்றோரின் கனவுகளையும், நாட்டின் கனவுகளையும் நிறைவேற்றுங்கள்

மாநிலக் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று சிறப்புரை ஆற்றி அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்

திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்களே!

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன் அவர்களே!

சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள்:

திரு. மயிலை வேலு அவர்களே!

திரு. மோகன் அவர்களே!

திரு. எபிநேசர் அவர்களே!

உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களே!

கல்லூரிக் கல்வி இயக்குநர் முனைவர் எம். ஈஸ்வரமூர்த்தி அவர்களே!

சென்னை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் ஆர். இராவணன் அவர்களே!

மாநிலக் கல்லூரி முதல்வர் முனைவர் இரா. இராமன் அவர்களே!

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் முனைவர் க. சிவக்குமாரி அவர்களே!

பெருமதிப்பிற்குரிய பேராசிரியப் பெருமக்களே!

என்னுடைய அன்பிற்கும், பாசத்திற்குமுரிய மாணவச் செல்வங்களே!

அரசு உயர் அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கும் நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இந்த ஓராண்டு காலத்திற்குள்ளாக எத்தனையோ நிகழ்ச்சிகளில் நான் பங்கேற்றிருக்கிறேன். அரசு நிகழ்ச்சிகளில், கழக நிகழ்ச்சிகளில் இதுபோன்ற பல்வேறு கல்லூரி நிகழ்ச்சிகளில், பள்ளி நிகழ்ச்சிகளில், பல்வேறு நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொண்டு இருக்கிறேன். ஆனால், அந்த நிகழ்ச்சிகளில் எல்லாம் பங்கேற்கிறபோது எந்த அளவிற்கு மகிழ்ச்சி அடைவேனோ அதைவிட பல மடங்கு

மகிழ்ச்சியை நான் படித்த கல்லூரியான இந்த மாநிலக் கல்லூரியில் நடைபெறக்கூடிய இந்த நிகழ்ச்சியின்போது அதிகமான மகிழ்ச்சியை நான் அடைந்து கொண்டு இருக்கிறேன். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், சிறிது இறுமாப்புடன் நின்று கொண்டிருக்கிறேன்.

முதலில் கையில் பட்டங்களுடனும் - மனதில் கனவுகளுடனும் அமர்ந்திருக்கும் நம்முடைய மாணவ - மாணவியர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமைய வேண்டும்! அமைய வேண்டும் என்ற வேண்டுகோள் மட்டுமல்ல, அமையும் என்ற நம்பிக்கையோடு மீண்டும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டும் நான் உங்களை வாழ்த்த வரவில்லை. இந்தக் கல்லூரியின் முன்னாள் மாணவர் என்ற முறையிலும் உங்களை வாழ்த்துவதற்காக நான் வந்திருக்கிறேன். உங்களுடைய சீனியர் - என்ற அடிப்படையில் என்னுடைய வாழ்த்துக்களைத் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கு எல்லோரும் சொன்னார்கள், 1972ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 15ஆம் நாள், இந்தக் கல்லூரியில் அரசியல் அறிவியல் பாட மாணவனாகச் நான் சேர்ந்து படித்தேன். முழுமையாக என்னைக் கல்வியில் ஈடுபடுத்திக் கொண்டேனா என்றால் இல்லை. ஏனென்றால், அப்போதே எனக்கு அரசியல் ஆர்வம் வந்துவிட்டது. அதுவும் அதிகமான ஆர்வம் கொண்டவனாக, நான் நேரடியாக அரசியலில் இறங்கி விட்டேன்.

1971ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வெற்றிக்காக, அதனுடைய பிரச்சாரத்திற்காக தேர்தல் பிரச்சார நாடகங்களை ஊர் ஊராகச் சென்று - தொகுதி தொகுதியாகச் சென்று நான் நடத்தினேன். அந்தக் காரணத்தால், என்னால் முழுமையாகப் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் போய்விட்டது. படிப்பில் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளாத நான், இந்தியாவில் நெருக்கடி நிலை ஏற்பட்ட நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்திருக்கக்கூடிய 500-க்கும் மேற்பட்டவர்கள், அதாவது மிசா என்ற அந்த கொடுமையான சட்டத்தை, நெருக்கடி நிலையை, திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, அதை எதிர்த்த காரணத்தால், கலைஞர் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்த கழக ஆட்சி அன்றைக்கு கலைக்கப்பட்டது. கலைக்கப்பட்டவுடன் 500க்கும் மேற்பட்ட கழகத்தைச் சார்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு, மிசா கைதிகளாக சிறையில் அடைக்கப்பட்டார்கள். நான் சென்னை சிறைச்சாலையில் ஓராண்டு காலம் இருந்தேன். நினைத்து பார்க்கிறேன். அந்த மிசா சட்டத்தில் சென்னை சிறையில் சிறைவாசியாக இருந்தபோது தான், அங்கிருந்து போலீஸ் பாதுகாப்போடு இந்தக் கல்லூரிக்கு வந்து நான் பரிட்சை எழுதிவிட்டுச் சென்றேன். அதையெல்லாம் இப்போது நான் நினைத்துப் பார்க்கிறேன்.

இப்போது தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக உயர்ந்துள்ளேன் என்று சொல்லி, இதனையே நீங்கள் அனைவரும் முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது! விதிவிலக்குகள் என்பது விதிகள் ஆகாது! இதைத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி குறிப்பிட்டுக் காட்டுவார்கள்!

அந்த வகையில் கல்வியைக் கட்டாயக் கடமையாக வலியுறுத்தி, இன்று ஒரு இயக்கமாகவே அதை நான் தொடங்கியிருக்கிறேன்.

கல்விதான் யாராலும் திருட முடியாத உண்மையான சொத்து! அத்தகைய அறிவுச் சொத்துக்களை உருவாக்கித் தரக்கூடிய மகத்தான கல்லூரிதான், இந்த மாநிலக் கல்லூரி என்பதை நான் இங்கே பெருமையோடு பதிவு செய்ய விரும்புகிறேன்.

கல்வியைக் கடல் என்று சொல்வார்கள். அந்தக் கடலோரத்தில் இருக்கும் கல்லூரி, இந்த மாநிலக் கல்லூரி. இப்படி கடலைப் பார்த்து இருக்கும் கல்லூரிகளை விரல் விட்டு எண்ணி விடலாம். குளிரும் - தென்றலும் - குளுமையும் - இனிமையும் கலந்த சூழலில் இருக்கும் மாநிலக் கல்லூரியில் படிக்கும் வாய்ப்பு என்பதே ஒரு மிகப்பெரிய வாய்ப்பு!

அதிலும் - இந்தச் சென்னை மாகாணத்தின் முதல் கல்லூரி, இந்த மாநிலக் கல்லூரி! 1840ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கல்லூரி இது. பொதுவாகப் பல்கலைக்கழகங்களுக்குக் கீழ்தான் எல்லாக் கல்லூரிகளும் வரும். ஆனால், சென்னைப் பல்கலைக்கழகம் உருவாக்கப்படுவதற்கு முன்பே தொடங்கப்பட்ட கல்லூரிதான் இந்த மாநிலக் கல்லூரி!

மாநிலக் கல்லூரி தொடங்கப்பட்டு 14 ஆண்டுகள் கழித்துதான் சென்னைப்பல்கலைக்கழகமே தொடங்கப்பட்டது. எனவே, இதனை சென்னைப் பல்கலைக்கழகத்தின் தாய் நிறுவனம் என்று சொல்வார்கள்.

தாய் நிறுவனத்தில் படித்த பிள்ளைகள் நீங்கள். உங்களது எதிர்காலம் நிச்சயம் சிறப்பாகத்தான் அமையும். கடந்த 182 ஆண்டுகால வரலாற்றில் பல இலட்சம் பேருக்குக் கல்வியை வழங்கியதன் மூலமாக, பல தலைமுறைக்கும்

கல்வியை வழங்கிய மாபெரும் கல்லூரியாக இது அமைந்திருக்கிறது.

இங்கே பலர் குறிப்பிட்டுச் சொன்னார்கள்,

- ❖ திராவிட இயக்கத்தின் மிக மூத்த தலைவர்களான சர். பிட்டி தியாகராயர் முதல் டி.எம்.நாயர் வரை இந்தக் கல்லூரியில் படித்தவர்கள் தான்.
- ❖ தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்படும் உ.வே.சாமிநாதர் அவர்கள் இங்குதான் படித்திருக்கிறார்.
- ❖ நோபல் பரிசு பெற்றிருக்கக்கூடிய சர்.சி.வி.ராமன் அவர்களும், சுப்பிரமணியன் சந்திரசேகர் அவர்களும் இந்த கல்லூரியில் படித்தவர்கள் தான்.
- ❖ இந்தியாவின் மிக உயர்ந்த பதவிகளை வகித்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இங்கேதான் படித்தார்.

இத்தகைய பெருமைக்கும் - உயர்வுக்கும் காரணமான கல்லூரியில் படித்த நீங்கள் எல்லோரும் அறிவில் - ஆற்றலில் - சிந்திக்கும் திறத்தில் மாபெரும் வெற்றியைப் பெற்று முன்னேறி அனைவருக்கும் எடுத்துக்காட்டாக வளர வேண்டும் என்று நான் மனதார உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

மாநிலக் கல்லூரியில் மொத்தம் 26 துறைகள் கலை - அறிவியல் பாடங்களில் உள்ளன. 4,645 மாணவ, மாணவியர் படிக்கும் மிகப்பெரிய கல்லூரியாக இது அமைந்திருக்கிறது. சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளில் ஒவ்வோர் ஆண்டும் மாநிலக் கல்லூரி மாணவர்களே அதிகளவில் முனைவர் பட்டம் பெற்றிருக்கிறார்கள். 500-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் இப்போது முனைவர் பட்ட ஆய்வில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அந்த வகையில், முனைப்பான கல்லூரியாகச் செயல்பட்டு வருகிறது இந்த மாநிலக் கல்லூரி. பெரும்பாலும் முதல் தலைமுறைப் பட்டதாரிகள் அதிகம் படிக்கக்கூடிய கல்லூரி, விளிம்புநிலை மக்கள் அதிகம் படிக்கக்கூடிய கல்லூரி, ஒடுக்கப்பட்ட சமூகத்து மாணவர்கள் அதிகம் படிக்கக்கூடிய கல்லூரி, புறநகர்ப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அதிகம் படிக்கக்கூடிய கல்லூரி என்கிற வகையில் சமூகநீதிக் கல்லூரியாகவும் இது அமைந்திருப்பது உள்ளபடியே பெருமைக்குரிய ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

இதில் முக்கியமான ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்று சொன்னால், இதில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைத்தான் நான் மிக மிக முக்கியமானதாகக் கருதுகிறேன்.

பார்வை குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவர்கள் 94 பேரும், செவித்திறன், பேச்சுத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவர்கள் 200க்கும் மேற்பட்டோரும் பயின்று வருகிறார்கள். இவர்களுக்காக பி.காம், பி.சி.ஏ. ஆகிய பாடப்பிரிவுகள் இருக்கிறது.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது ஆட்சிக்காலத்தில்தான், இவை 2007ஆம் ஆண்டு தொடங்கப்பட்டன என்பதும் பெருமைக்குரிய ஒன்று!

செவித்திறன், பேச்சுத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான எம்.காம்., படிப்புக்கும், தமிழ்நாடு அரசு இப்போது அனுமதி வழங்கி இருக்கிறது.

நான் பெருமையோடு சொல்கிறேன், இந்தியாவில் இப்படி ஒரு வாய்ப்பு எந்த மாநிலத்திலும் கிடையாது. மாற்றுத்திறனாளிகளின் கல்விக்கு உதவுவதன் மூலமாக, மாநிலக் கல்லூரி மனித நேயக் கல்லூரியாகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

கடந்த ஓராண்டு காலத்தில் இந்தக் கல்லூரியில் பல்வேறு தனித்திறன் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதை நான் அறிவேன்.

- ❖ எழுத்தாளர் - மாணவர் சந்திப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதில் ஏராளமான தமிழ் எழுத்தாளர்கள் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.
- ❖ தமிழ் இலக்கிய ஆளுமைகளை அழைத்து வந்து கூட்டம் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.
- ❖ திராவிட இயக்கத் தலைவர்களின் அரசியல் மற்றும் சமூகப் பங்களிப்பை விளக்கும் கூட்டங்கள் நடந்து வருகின்றன.
- ❖ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வுகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.
- ❖ இந்திய ஆட்சிப் பணித் தேர்வுகள் அதற்கான பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.
- ❖ எனது கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தினால் உந்துதல் பெற்றுத் தொழில் முனைவோருக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள் பல நடத்தப்பட்டு வருகின்றன.
- ❖ திரைப்படப் பயிற்சி வகுப்புகள் மூலமாக ஒரு நல்ல சினிமாவை ரசிப்பது எப்படி என்ற அந்தக் கோணத்தில், மாணவர்களுக்குச் சினிமா கலை நுட்பங்களைக் கற்பித்து வருகிறார்கள்.
- ❖ ஐந்துக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்பு முகாம்கள் இந்தக் கல்லூரியில் நடத்தப்பட்டிருக்கிறது. இளங்கலைப் பட்டம் பெற்று வெளியில் செல்லும் ஆயிரம்

மாணவர்களில், 800க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இவற்றை எல்லாம் முன்னெடுத்து வரும் கல்லூரி முதல்வர் பேராசிரியர் ராமன் அவர்களையும், கல்லூரிப் பேராசிரியர்களையும்,மாணவ,மாணவியரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன், அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாநிலக் 'கல்லூரி'யாக இருந்தாலும், மாநிலக் கல்லூரி பல்கலைக்கழகம்போல இது செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தப் பணிகளை விடாமல் தொடருங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பல ஊர்களில் பல அரசு நிகழ்ச்சிக்கு நான் செல்கிறபோது, ஆங்காங்கே சில அறிவிப்புக்களை அரசின் சார்பில், முதலமைச்சர் என்கின்ற முறையில் நான் வெளியிடுவது உண்டு. ஆக, நான் நேற்றிரவு, நாளை நான் படித்தக் கல்லூரிக்குச் செல்கிறேன். அங்கே சென்று என்ன அறிவிப்புக்களை வெளியிடலாம் என்று அதிகாரிகளோடு கலந்து பேசி, யோசித்துக் கொண்டிருந்தபோது, சில முடிவுகளை எடுத்திருக்கிறோம். அதை இப்போது உங்கள் முன்னால் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இந்த சிறப்புக்குரிய மாநிலக் கல்லூரியின் மேம்பாட்டுக்கான ஒரு சில அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்.

- 2,000 பேர் அமரக்கூடிய வகையில், நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பெயரால் மாபெரும் அரங்கம் மாநிலக் கல்லூரி வளாகத்தில் கட்டித் தரப்படும்.

இங்கே சட்டமன்ற உறுப்பினர் தம்பி உதயநிதி பேசுகின்றபோது கூட, ஒன்றைச் சுட்டிக்காட்டினார். அதே போல நாடாளுமன்ற உறுப்பினரும் காரில் வரும்போது என்னிடத்தில் எடுத்துச் சொன்னார். ஆக, நான் இந்த கோரிக்கை வைத்தது மட்டும் நீங்கள் விட்டுவிடக் கூடாது, உங்களுக்கு என்று தொகுதி மேம்பாட்டு நிதி இருக்கிறது. எனவே நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் தம்பி தயாநிதிமாறனையும், சட்டமன்ற உறுப்பினராகக்கூடிய தம்பி உதயநிதியையும் நான் கேட்டுக் கொள்கிறேன். உங்களால் இயன்ற அளவு அந்த தொகுதி மேம்பாட்டு நிதியை அதற்கு நீங்கள் வழங்கிட வேண்டுமென்று உங்கள் அனைவரின் சார்பில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

❖ 300க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் இங்கே படிக்கிறார்கள். தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களில் இருந்து அவர்கள் இங்கே வந்து, தங்கிப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கென்று விடுதி கிடையாது. அவர்களுக்கான விடுதி, மாநிலக் கல்லூரி வளாகத்திலேயே அமைத்துத் தரப்படும்.

முதற்கட்டமாக இந்த இரண்டு அறிவிப்புகளையும் மாநிலக் கல்லூரியின் கல்வித் தொண்டுக்காக நான் அறிவிக்க விரும்புகிறேன்.

பள்ளிகள், கல்லூரிகள் என்பவை படிப்பை மட்டுமல்லாமல், பாடங்களை மட்டுமல்லாமல், மாணவ, மாணவியருக்கு அறிவாற்றலையும் தனித்திறமையையும் உருவாக்கும் அடிப்படையில் இயங்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கனவு!

இந்தக் காலத்தில் பள்ளிகளை அதிகம் திறந்து விட்டோம். கல்லூரிகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம். பள்ளி,

கல்லூரிச் சாலைக்குள் அனைவரும் வர வேண்டிய சூழலை உருவாக்கியிருக்கிறோம்.

பணம் அதற்கு ஒரு தடையாக இருக்கக் கூடாது என்ற காரணத்தால், பல்வேறு உதவிகளை அரசு தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது. கல்விக்காகச் செலவு செய்வதைத் தாண்டி, படிக்க வந்தால் ரூ.1,000 என்று அரசுப் பள்ளி மாணவிகளுக்கு கொடுக்கும் என்ற ஒரு தாயுள்ளம் படைத்த அரசாக நம்முடைய தமிழ்நாடு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அனைவரும் படிக்க வேண்டும், அதற்கு அனைவரும் முன் வரவேண்டும், பல முன்னேற்றங்களை நீங்கள் பெற்றாகவேண்டும்,அனைத்துவாய்ப்புகளையும்அனைவரும் பெற வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டதுதான் நம்முடைய திராவிட இயக்கம்.

சமூகநீதி என்ற தத்துவமே பிள்ளைகளின் கல்விக்காகத் தான், இளைஞர்களின் வேலை வாய்ப்புக்காகத்தான் உருவாக்கப்பட்டது. இன்றைக்கு சாமானியர்களைக் கை தூக்கி விடும் சமூகநீதிக் கொள்கை எல்லா இடங்களிலும் செழித்து வரும் நிலையில், அந்த வாய்ப்பை மாணவ, மாணவியர் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

படியுங்கள்! பட்டம் பெறுங்கள்! ஒரு பட்டத்தோடு நிறுத்திக் கொள்ளாதீர்கள்! எந்தப் பட்டமாக இருந்தாலும், அதில் உள்ள உயர்ந்த நிலையை அடையுங்கள்!

இங்கு மேடையில் அமர்ந்திருக்கும் தமிழ்நாட்டின் உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் முனைவர் பொன்முடி அவர்கள் எத்தனை பட்டங்கள் வாங்கி இருக்கிறார் தெரியுமா?

சட்டப் படிப்பு, எம்.ஏ. வரலாறு, எம்.ஏ. அரசியல் அறிவியல், எம்.ஏ. பொதுத்துறை நிருவாகம் ஆக இப்படி பல பட்டங்களைப் பெற்றவர்.

அது மட்டுமல்ல, அதைத் தாண்டி, அரசியல் அறிவியலில் முனைவர் பட்டம் பெற்றவர். கலைஞர் கூட அடிக்கடி அவரை சொல்கிறபோது பொன்முடி என்று சொல்லமாட்டார், அறிவுமுடி என்று தான் கூப்பிடுவார் பாசத்தோடு. அந்த அளவுக்கு ஆற்றலைப் பெற்றவர். எந்த அவையாக இருந்தாலும், எந்தப் பொருளாக இருந்தாலும், அதைப் பற்றி தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆற்றலோடு பேசக்கூடிய திறமையைப் பெற்றவர் பொன்முடி அவர்கள். கல்லூரிப் பேராசிரியராக இருந்து, இன்று பல்கலைக்கழகங்களின் இணைவேந்தராக இருக்கிறார் என்றால், இதற்குக் காரணம் அவரது கல்வித் திறனும் அறிவாற்றலும்தான்.

அத்தகைய ஆற்றலைப் பெற்றவர்களாக மாணவ, மாணவியர்கள் இருக்கவேண்டும். கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பார்கள். இந்தச் சிறப்பு கற்றோருக்கு மட்டும்தான் உண்டு, மற்றோருக்கு இல்லை என்பதை உணருங்கள். குறிப்பாக, பெண்கள் மிகுதியாகக் கல்வி பெற வேண்டும். 'கல்வி இல்லாப் பெண்கள் களர் நிலம்' என்று பாடினார் பாவேந்தர் அவர்கள்.

பெண்கள் கல்வி கற்பது என்பது, வேலைக்குப் போவது என்பதோடு மட்டுமல்ல, அதோடு முடிந்து விடுவது இல்லை, பெண்களுக்குத் தன்னம்பிக்கை அளிப்பதாக, தைரியத்தை வழங்குவதாக கல்வி அமைகிறது. எனவே, பெண் பிள்ளைகள் நிச்சயமாக படிக்க வேண்டும், பட்டங்களைப் பெற வேண்டும்.

பட்டம் பெற்ற பெண்கள், தங்களது தகுதிக்கேற்ற வேலைக்குச் செல்ல வேண்டும். படிக்கின்ற காலத்தில் பல்வேறு தனித்திறமைகளைப் பெற்றிருக்கும் பெண்கள், 100க்கு 100 மதிப்பெண் வாங்கிய பெண்கள், திருமணம் ஆனதும் தங்களது பணிகளை விட்டு விடுகிறார்கள். கலை, இலக்கியம், நாடகம், நாட்டியம், விளையாட்டு போன்றவற்றில்

இருக்கக்கூடிய விருப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகிறார்கள்.

அப்படி இல்லாமல் தங்களது விருப்பங்களை, அறிவாற்றலை வாழ்நாள் முழுக்கப் பயன்படுத்தக்கூடிய சூழலை தங்களுக்குத் தாங்களே உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

- ❖ இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புகளில் ஏராளமான பெண்கள் பல்வேறு பொறுப்புகளில் அமர்ந்திருக்கிறார்கள்.

50 விழுக்காடுதான் இடஒதுக்கீடு என்று சொன்னாலும், நான் மகிழ்ச்சியோடு சொல்கிறேன், இன்றைக்கு 56 விழுக்காடு பெண்கள் அந்தப் பொறுப்புகளை அடைந்திருக்கிறார்கள்.

இரண்டுநாட்களுக்கு முன்னால் நாமக்கல் மாவட்டத்தில், நகர்ப்புற உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மாநாடு நடந்தது. அதில் பெரும்பாலானோர் பெண்கள் கலந்து கொண்டார்கள். இப்படி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் இதை பார்க்க முடியுமா? முடியாது.

இதுதான் திராவிட மாடல் ஆட்சி என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் கல்வி பெற்றவர்களுடையவிழுக்காடுஎன்ன? இன்றையவிழுக்காடு என்ன என்பதைப் பார்த்தால்தான், திராவிட மாடல் என்றால் என்ன என்பது புரியும். இதைச் சொல்வதால், நான் அரசியல் பேசுவதாக யாரும் தயவுசெய்து தவறாகக் கருதிவிடக்கூடாது. எத்தகையஅறிவுச்சூழல்தமிழ்நாட்டில்உருவாக்கப்பட்டுள்ளது என்பதற்காகத்தான் இதைச் சொன்னேனே தவிர வேறு அல்ல.

கடந்த ஓராண்டு காலத்தில் பள்ளிக்கல்வித் துறை துள்ளி எழுந்திருக்கிறது. உயர்கல்வித்துறை புதிய உத்வேகத்தோடு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. கடைக்கோடி மனிதரையும் கல்வி பெற வைத்து, உலகச் சமுதாயத்தின் போட்டிக் களத்தில் அவர்களையும் போட்டியாளர்களாக மாற்றும் ஆட்சிதான் இந்த ஆட்சி. அவர்களை வெற்றியாளர்களாக ஆக்கக்கூடிய ஆட்சி தான் இந்த ஆட்சி. அத்தகைய போட்டியாளர்களாக இருக்கக்கூடிய நீங்கள், வெற்றியாளர்களாகவும் திகழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன். உங்கள் கனவுகளையும், உங்களை உருவாக்கிய பெற்றோரின் கனவுகளையும், இந்த நாட்டின் கனவுகளையும் நிறைவேற்றுங்கள், நிறைவேற்றுங்கள், நிறைவேற்றுங்கள் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
சென்னை, மாநிலக் கல்லூரியில் நடைபெற்ற
பட்டமளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராக
கலந்துகொண்டு ஆற்றிய உரை - 05.07.2022

திருவண்ணாமலையில் ரூ.693 கோடி மதிப்பீட்டில் 1,71,169 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

திருவண்ணாமலை மாவட்டத்திற்கு அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கக்கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு தலைமைப் பொறுப்பு ஏற்றுள்ள மாண்புமிகு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்களே!

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் பொன்முடி அவர்களே!

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அன்பிற்கினிய திரு. கே.எஸ். மஸ்தான் அவர்களே!

இந்த விழாவிற்கு முன்னிலை ஏற்றிருக்கக்கூடிய சட்டப்பேரவையின் துணைத்தலைவர் மாண்புமிகு பிச்சாண்டி அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.அண்ணாத்துரை அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு. மு.பெ. கிரி அவர்களே!

திரு. அம்பேத்குமார் அவர்களே!

திரு. சரவணன் அவர்களே!

திரு. ஜோதி அவர்களே!

தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. முருகேஷ், இ.ஆ.ப., அவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்றயிருக்கக்கூடிய மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் பிரியதர்ஷினி அவர்களே!

மாவட்ட ஊராட்சிக்குழுவின் தலைவர் பார்வதி சீனிவாசன் அவர்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்களே!

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

அரசு உயர் அலுவலர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

மகளிர் சுய உதவிக் குழுவைச் சார்ந்திருக்கக்கூடிய என்னுடைய இனிய சகோதரிகளே!

அன்பிற்கினிய பெரியோர்களே, தாய்மார்களே!

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புகளே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

இங்கு குழுமியிருக்கக்கூடிய உங்களை பார்க்கிற நேரத்தில் உங்கள் எழுச்சியை, உணர்ச்சியை, ஆர்வத்தை, ஆரவாரத்தை காணுகிற நேரத்தில் குறிப்பாக, பெரும் திரளாக திரண்டிருக்கக்கூடிய அருமை தாய்மார்கள், சகோதரிகள், மகளிர் அணியைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள், உங்களை எல்லாம் பார்க்கிற நேரத்தில் எனக்கு என்ன தோன்றுகிறது என்று கேட்டால், கொஞ்ச நேரம் பேசாமல், அப்படியே உங்கள் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு வந்திருக்கிறது. எவ்வளவு கட்டுப்பாடு, அதுவும் பெண்களிடத்தில் காணக்கூடிய கட்டுப்பாட்டைப் பார்க்கிறபோது நான் மெய்சிலிர்த்து நிற்கிறேன். தப்பாக நினைத்துவிடக் கூடாது.நான்கு பெண்கள் இருந்தால்,அங்கே என்ன கூச்சல் இருக்கும், குழப்பம் இருக்கும், சலசலப்பு இருக்கும்,ஒருகலகலப்பு இருக்கும்.ஆனால்ஆயிரக்கணக்கில் திரண்டிருக்கக்கூடிய தாய்மார்கள், பெண்கள் உங்களிடத்தில் காணக்கூடிய இந்தக் கட்டுப்பாட்டை பார்க்கிறபோது இதுதான் திராவிட உணர்வு என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

மாபெரும் வரலாற்றுச் சிறப்புகளையும், ஆன்மீக அடையாளங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கக்கூடிய திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெறும் இந்த இனிய நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, உங்களையெல்லாம் சந்தித்து உரையாற்றக்கூடிய வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொன்னூர் மலை, பர்வதமலை, கவித்திமலை, திருவண்ணாமலை என, இப்படிப் பல மலைகள் சூழ்ந்த மாவட்டம் இந்தத் திருவண்ணாமலை மாவட்டம்!

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே, மனிதர்கள் வாழ்ந்த தடயங்களைக் கொண்ட மாவட்டம் இது. இங்கு, கற்கால மனிதர்கள், அவர்கள் வரைந்த பாறை ஓவியங்கள், அவர்கள் பயன்படுத்திய பல்வேறு கருவிகள் கண்டறியப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, செங்கம் நடுகற்கள் -

பல்லவர் காலக் குடைவரைகள் -

சோழர் காலக் கற்றளிக் கோவில்கள் -

விஜயநகர பெருங்கோவில்கள்

எனப் பண்பாட்டு அடையாளங்களும் பரவிக்கிடக்கும் பெருமைமிகு மாவட்டம் இந்த திருவண்ணாமலை மாவட்டம். இந்த மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஜவ்வாதுமலை சிறந்த சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. இம்மலையை ஒட்டி அமைந்துள்ள அணைகளும், தென்பெண்ணையாற்றின் குறுக்கே அமைந்துள்ள சாத்தனூர் அணையும் புகழ்பெற்ற சுற்றுலா மையமாக அமைந்திருக்கிறது.

217 அடி உயரம் கொண்ட அந்த இராஜகோபுரத்தை உடைய இந்த திருவண்ணாமலைக்குப் புகழ் சேர்க்கும் வகையில் இந்த திருவண்ணாமலையை 1989ஆம் ஆண்டு தனி மாவட்டமாக உருவாக்கியதே நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான்!

நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த காலத்தில், இதே திருவண்ணாமலை மாவட்டத்தில், 16,850 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நான்கரை மணிநேரம் மேடையிலே நின்று, என் கையால் நம்முடைய மகளிர் அணி சகோதரிகளுக்கு

சுழல்நிதி வழங்கிய காட்சிகள் என் நெஞ்சில் இன்றைக்கு நிழலாடிக் கொண்டிருக்கிறது!

இத்தகைய புகழ்மிக்க திருவண்ணாமலை மாவட்டத்தில் எழுச்சியோடு, ஏற்றத்தோடு, அழகோடு இந்த அரசு விழாவை ஏற்பாடு செய்துள்ள மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருக்கக்கூடிய எ.வ.வேலு அவர்களையும், மாண்புமிகு சட்டப்பேரவையின் துணைத் தலைவர் பிச்சாண்டி அவர்களையும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், குறிப்பாக மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் மற்றும் இந்த மாவட்ட அரசு அதிகாரிகள் அத்தனை பேரையும் நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன், ஏன் அவர்களுக்கெல்லாம் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே, 'எதிலும் வல்லவர் வேலு, அதனால்தான் அவர் எ.வ.வேலு' என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

இளைஞர் அணி என்ற அந்த அமைப்புக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இளைஞர் அணிக்கு அறக்கட்டளை அமைக்கப்பட்டபோது ரூ.55 இலட்சம் நிதி வழங்கியதைப் போல, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, முப்பெரும் விழாவை மாபெரும் மாநாட்டைப் போல நடத்தி கலைஞர் அறக்கட்டளைக்கு ஏழை, எளிய நலிந்தோருக்கு வழங்க ரூ.55 இலட்சம் நிதியை அளித்தவர்தான் எ.வ.வேலு அவர்கள்!

நிதியளித்ததைவிட, தன்னைக் கலைஞருக்காகவும், எனக்காகவும் ஒப்படைத்துக் கொண்டவர் எ.வ.வேலு அவர்கள்.

நேற்று மாலை நடைபெற்ற விழாவில், வேலு அவர்களை நான் குறிப்பிட்டுச் சொன்னேன், விழா வேந்தன்' என்று நான் குறிப்பிட்டேன். அந்தளவுக்கு கட்சி நிகழ்ச்சிகளாக இருந்தாலும், அரசு நிகழ்ச்சிகளாக இருந்தாலும் அல்லது வேறு நிகழ்ச்சிகளாக இருந்தாலும், எல்லாவற்றிலும் தனி முத்திரையைப் பதிக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றவர் எ.வ. வேலு அவர்கள்.

இன்றைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெறக்கூடிய பல்வேறு மாபெரும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால்,

❖ மதுரையில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பெயரால் மாபெரும் நூலகம் தயாராகிக் கொண்டிருக்கிறது.

❖ சென்னையில் ரூ.230 கோடி மதிப்பீட்டில் பன்னோக்கு சிறப்பு மருத்துவமனை அமையப் போகின்றது.

❖ இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால், சென்னை வங்கக்கடலோரம் வாஞ்சைமிகு தாலாட்டில், தனது அண்ணனுக்கு அருகில் துயில் கொள்ளும், நம்முடைய தலைவர் கலைஞருக்கு நினைவகம் நிறுவப்பட்டு வருகிறது.

❖ கடந்தகால ஆட்சியாளர்களால் முடக்கி வைக்கப்பட்ட மாபெரும் திட்டமான மதுரவாயல் – துறைமுகம் உயர்மட்டச் சாலை அமையப் போகின்றது.

❖ கிழக்குக் கடற்கரைச் சாலை விரிவாக்கம் செய்யப்பட இருக்கிறது.

இப்படி எண்ணற்ற பெரும் பணிகள்..! இவை அனைத்தையும் செயல்படுத்தும் பணிகளில் தன்னை

ஒப்படைத்துக் கொண்டிருக்கக்கூடியவர் தான் எ.வ. வேலு அவர்கள். கலைஞர் நினைவகமாக இருந்தாலும், மதுரை நூலகமாக இருந்தாலும், கிண்டி மருத்துவமனையாக இருந்தாலும், இவையெல்லாமே வருங்காலத்தில் தமிழ்நாட்டின் அடையாளங்களாக மாறப் போகின்றது!

அதனைச் சிறந்த செயல்வீரருக்கான அடையாளமாக இருக்கின்ற வேலு அவர்கள் அதை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்.தனிப்பட்ட அவருக்குமட்டுமல்ல,எனக்கு மட்டுமல்ல, நம் அரசுக்கு மட்டுமல்ல, நம் மாநிலத்துக்கே பெருமைமிகு அடையாளங்களாக இவை அமையப் போகின்றது.

நேற்று மாலை, திருவண்ணாமலை நகரத்தில் பேரறிஞர் அண்ணா பெயரிலான நுழைவு வாயிலையும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் திருவுருவச் சிலையையும் திறந்து வைத்தேன்.

தீபங்களால் நிறைந்த திருவண்ணாமலையே மின் விளக்குகளால் ஜொலித்து, பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், தலைவர் கலைஞர் அவர்களுக்கும் சிறப்புச் செய்ய இந்தத் திருவண்ணாமலை நகரம் எந்த வகையில் எல்லாம் பொருத்தமானது என்பதை அந்த விழாவில் நான் குறிப்பிட்டுப் பேசினேன்.

1963ஆம் ஆண்டு நடந்த திருவண்ணாமலை இடைத்தேர்தல்தான்,' 1967ஆம் ஆண்டு நடந்த ஆட்சி மாற்றத்துக்கு அடித்தளம் அமைத்தது என்பதையும் நான் குறிப்பிட்டுச் சொன்னேன். அதேபோல், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக 'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' என்ற தலைப்பில் என்னுடைய பயணத்தை நான் தொடங்கினேன்.

கோடிக்கணக்கான மக்களைச் சந்திக்கும் எனது பயணத்தின் தொடக்கம் என்பது இதே திருவண்ணாமலையில் இருந்து தான் நான் தொடங்கினேன்.

திருவண்ணாமலையில் இருந்து தொடங்கிய அந்தப் பயணமானது, முதலில் பயணமாகத் தொடங்கியது. பின்பு, வெற்றிப் பயணமாக மாறியது. இப்பொழுது, ஆட்சிப் பயணமாக தொடர்ந்து நடந்து கொண்டு இருக்கிறது.

அதற்கு அடித்தளம் இட்ட இடம் தான் இந்த திருவண்ணாமலை என்பதை நான் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். இதற்குக் காரணமான இந்த திருவண்ணாமலை மாவட்ட மக்களுக்கு முதலில் என்னுடைய நன்றியை நான் இதயபூர்வமாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

❖ கழக ஆட்சி அமைந்தாலே, திருவண்ணாமலை மாவட்டமானது புத்தெழுச்சி பெறும். அதை இங்கே கூடியிருக்கிற மக்களாகிய உங்கள் முகங்களில் நான் பார்க்கிறேன்.

❖ திருவண்ணாமலை மாவட்டத்தை உருவாக்கியதே தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்று நான் முன்பே சுட்டிக் காட்டினேன்.

❖ மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைத்துக் கொடுத்தவரும் கலைஞர்தான்.

❖ சாத்தனூர் அணையைப் புனரமைப்பு செய்ததும் கழக ஆட்சியில் தான்!

❖ திருவண்ணாமலையை தனிப்போக்குவரத்து மண்டலமாக ஆக்கியதும் கழக ஆட்சியில் தான்!

- ரூ.120 கோடியில் புதிய மருத்துவக் கல்லூரி
- செய்யாறு சிப்காட் தொழிற் பூங்கா
- ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம்
- காரப்பட்டில் அரசு பட்டயக் கல்லூரி
- திருவண்ணாமலை நகருக்கு புதிய பாதாள சாக்கடைத் திட்டம்
- திருவண்ணாமலை நகராட்சிக்கு ரூ.36 கோடியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்
- புதிய விளையாட்டு அரங்கம், புதிய நீச்சல் குளம்
- கலசப்பாக்கம் - மிருகண்டாநதி நீர்த்தேக்கம்
- செங்கம் - குப்பநத்தம் அணை
- போளூர் - செண்பகத்தோப்பு அணை
- தண்டராம்பட்டு தனி தாலுகா
- தண்டராம்பட்டில் நுகர்பொருள் வாணிபக் கிடங்கு
- புதுப்பாளையத்துக்கு சாத்தனூர் அணை கூட்டுக் குடிநீர்த் திட்டம்
- அம்மாபாளையத்தில் ரூ.60 கோடியில் பால்பவுடர் தொழிற்சாலை
- வந்தவாசியில் அரசுக் கல்லூரிக்கு ரூ.8 கோடியில் புதிய கட்டடம்
- ஆரணியில் அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரி

- இப்படி பல்வேறு திட்டங்களைச் செய்து கொடுத்த அரசு தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு.

இதில் மிக முக்கியமானது, 1975ஆம் ஆண்டு அண்ணாமலையார் கோவில் அந்தத் திருப்பணியை முழுமையாக செய்தது கழக அரசுதான். இந்தத் திருப்பணிக்கு தனிக்குழுவை அமைத்து முதலமைச்சர் அவர்கள் அதற்காக அக்கறை எடுத்துக் கொண்டார். அன்றைய நாளில் ஒரு பெரும் தொகையாக, ரூ.7.25 இலட்சம் அதற்காக நிதி ஒதுக்கினார்.

மேலும், ஆணையர் பொதுநல நிதியில் இருந்து ரூ.1.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தார். தமிழகத்தின் பல்வேறு கோவில்களில் இருந்து நன்கொடைகள் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்தார்.

இதைவிட முக்கியமாக இன்னொன்று, அண்ணாமலையார் கோவிலைப் பாதுகாத்ததும் கழக அரசுதான். அண்ணாமலையார் கோவிலானது பழம்பெருமையும், அழகியலும் பிரம்மாண்டமும் கொண்டது.

அதனுடைய தொன்மை, கம்பீரம் காரணமாக அதைத் தொல்பொருள் துறை 2004ஆம் ஆண்டு கையகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

அப்போது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோது பிரச்சாரத்திற்காக தலைவர் கலைஞர் அவர்கள் திருவண்ணாமலைக்கு வந்தார். அவரை ஊர் பொதுமக்களும், பக்தர்களும் வந்து சந்தித்து கோரிக்கை வைத்தார்கள்.

“தொல்பொருள் துறை கட்டுப்பாட்டுக்குள் அது போனால், ஆன்மிகப் பணிகள் தொய்வடையும்” என்று சொன்னார்கள். அப்போது தலைவர் கலைஞர் சொன்னார், “அடுத்து அமையும்

ஆட்சியின் கவனத்துக்கு இதனைக் கொண்டு செல்வேன்" என்று உறுதி தந்தார்.

அன்றைக்கு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 வெற்றிப் பெற்றோம். ஒன்றியத்தில் அமைந்த காங்கிரசு அரசுடன் பேசி, அண்ணாமலையார் கோவிலில் பக்தர்களின் எண்ணத்திற்கேற்ப மீட்டுக் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை மறந்து விடக் கூடாது. இன்றைக்கு, மதத்தின் பேரால் அரசியல் நடத்துபவர்களுக்கு இந்த வரலாறு எல்லாம் தெரியாது.

அண்ணாமலையார் கோவில் என்பது தமிழ்நாட்டின் சொத்து. அதைக் கட்டிக் காத்தது கழக அரசு! இவ்வாறு கழக அரசுக்கும் திருவண்ணாமலைக்கும் நீண்ட உறவு இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும்.

இன்றைய அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பாக, மொத்தம் 1,71,169 பயனாளிகளுக்கு ரூ.693 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கிறது.

ரூ.70.27 கோடி மதிப்பிலான 91 முடிவுற்ற பணிகள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

ரூ.340.21 கோடி மதிப்பீட்டிலான 246 புதிய பணிகளுக்கும் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் பல்வேறு அரசுத் திட்டங்கள் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக, நீர்மேலாண்மைப் பணிகளை மிகச் சிறப்பாக செய்திருக்கக்கூடிய மாவட்டமாக இந்த மாவட்டம் அமைந்திருக்கிறது. வீடியோவில் பார்த்தீர்களே.

நீர் மேலாண்மையை ஒரு பேரியக்கமாகவே நடத்திக் காட்டி இருக்கிறீர்கள். 1,121 பண்ணைக் குட்டைகளை

30 நாட்களில் அமைத்து சாதனை படைத்த மாவட்டம் தான் இந்தத் திருவண்ணாமலை மாவட்டம்.

தற்போது இந்த பண்ணைக் குட்டைகளில் மீன்வளத் துறை மூலமாக, மீன் குஞ்சுகள் இன்றைக்கு வளர்க்கப்பட்டு வருகிறது.

பண்ணைக் குட்டைகளின் கரைகளில் மரம், காய்கறி, பழச்செடிகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம், உழவர்களுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கைகள் காரணமாக, திருவண்ணாமலை மாவட்டத்தின் நிலத்தடி நீர்மட்டம் 6 முதல் 7 அடி வரை உயர்ந்துள்ளதாக ஆய்வில் உறுதி செய்யப்பட்டிருக்கு.

இது மிகப்பெரிய சாதனை.

நீரின்றி அமையாது உலகு!

மனிதரின் மிக முக்கியமான தேவையாக இருப்பது நீர்தான். நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்திக் காட்டுவதன் மூலமாக மக்களின் உயிர்ப் பிரச்சினையான குடிநீர்த் தேவையில், மாபெரும் சாதனையைச் செய்துள்ள திருவண்ணாமலை மாவட்ட நிருவாகத்தை உங்களின் அனைவரின் சார்பிலே, தமிழக அரசின் சார்பிலே நான் மனதார பாராட்டுறேன், வாழ்த்துகிறேன்.

இத்தகைய சாதனையை அனைத்து மாவட்டங்களும் செய்யவேண்டும் என்று முதலமைச்சர் என்கின்ற முறையிலே கேட்டுக் கொள்கிறேன்.

❖ இந்திய அளவில் முதல்முறையாக தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தில், சுய உதவிக் குழுக்களின் வட்டார அளவிலான

கூட்டமைப்பு மூலம் பாரத் பெட்ரோலிய நிறுவனத்துடன் இணைந்து பெட்ரோல் மற்றும் டீசல் சில்லரை விற்பனை மையம் (Petrol Bunk) அமைக்கப்பட்டு நல்ல முறையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்தவிற்பனை மையம்834மகளிர்சுயஉதவிக்குழுக்களின் 11,175 உறுப்பினர்களுடன் சிறப்பாக செயல்பட்டு மாதம் ரூ.1.30 இலட்சம் இலாபம் ஈட்டுகிறது என்பதை அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

❖ இதேபோல் இந்திய அளவில் முதல்முறையாக, ஜவ்வாது மலையில் பழங்குடியின மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 2,500 பேர் சேர்ந்து,உற்பத்தியாளர் நிறுவனத்தை தொடங்கி இருக்கிறார்கள். மலைப் பொருட்களைக் கொண்டதாக, இந்த நிறுவனம் இருக்கிறது. இது மிக நல்ல முயற்சி. பழங்குடியின மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு எனது பாராட்டுக்களைத் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதே போல் பல்வேறு முன் முயற்சிகளை இந்த மாவட்ட நிருவாகம் செய்து வருவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

❖ நிலக்கடலை சாகுபடியில் மாநிலத்தில் முதலிடம் பெற்றிருக்கிறது இந்த திருவண்ணாமலை மாவட்டம்.

❖ நெல் உற்பத்தியில் மூன்றாவது இடம் பெற்றிருக்கிறது.

❖ மலைக்குன்றுகளைப் பசுமையாக்கும் முன்மாதிரி முயற்சியாக, “பசுமைக் குன்றுகள் திட்டம்” என்ற ஒரு அற்புதமானத் திட்டம் இந்த மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ இந்தத் திட்டத்தின்கீழ், 4 மலைக்குன்றுகள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ ஒருங்கிணைந்த பண்ணைப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

❖ ஜமுனாமரத்தூர் மலைப்பகுதியில் தேனீப் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது.

❖ புறக்கடைக் கோழிவளர்ப்பு கொட்டகை அமைக்கும் பணி நடந்து வருகிறது.

❖ தோட்டக்கலை நாற்றங்கால் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய சிறப்புப் பணிகளில் திருவண்ணாமலை மாவட்டத்தைப் போல மற்ற மாவட்டங்களும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வழக்கமான திட்டங்களையும் தாண்டிய, சிறப்புத் திட்டங்களில் ஒவ்வொரு மாவட்டங்களும் தனிக் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு சிறப்பு இருக்கும். அதை மையப்படுத்தி திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏராளமான ஆன்மீகப் பணிகளும் நடந்து வருகிறது.

❖ அருள்மிகு திருஅண்ணாமலையார் வலம் வரும் நான்கு மாடவீதி சாலைகள், கான்கிரீட் சாலைகளாக தரம் உயர்த்தப்பட வேண்டுமென்று நான் ஏற்கெனவே சட்டபேரவையில் அறிவித்திருக்கிறேன்.

அதன் முதல் கட்டமாக, தற்போது காந்தி சிலை முதல் திருவூடல் தெரு சந்திப்பு வரை ரூ.15 கோடி மதிப்பீட்டில் 1 கி.மீ. தூரத்திற்குப் பணிகள் நடந்து கொண்டிருக்கிறது.

❖ அருணாசலேசுவரர் திருக்கோவில் வளாகத்தில் முதலுதவி மையத்தை காணொலி மூலமாக நான் ஏற்கெனவே தொடங்கி வைத்தேன்.

❖ ஓதுவார் பயிற்சிப் பள்ளி தொடங்கப்பட்டு மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

❖ ரூ.1.14 கோடி மதிப்பீட்டில் கோயில் மின்வசதி மேம்படுத்தப்பட்டு வருகிறது.

❖ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் 37 கோவில்களின் திருப்பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

❖ கிராமப்புற பகுதியில் உள்ள 37 கோவில்களில் திருப்பணி செய்யவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

❖ செய்யாறு அருள்மிகு பட்சீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ.5 கோடி மதிப்பீட்டிலான 4.28 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டிருக்கிறது.

❖ திருவண்ணாமலை நகரம் அருள்மிகு வடவீதி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலம் மீட்கப்பட்டிருக்கிறது.

❖ இந்த மாவட்டத்தில் மட்டும், ஓராண்டில் 13 திருக்கோயில்களின் குடமுழுக்கு விழா சிறப்பாக, விமரிசையாக நடந்திருக்கிறது.

❖ 131 திருக்கோயில்களில் ரூ.6,094 இலட்சம் மதிப்பீட்டிலான திருப்பணிகள் நடைபெற்று வருகிறது.

இப்போதும் என்னிடம் ஒரு கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. என்ன கோரிக்கை?

❖ அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் வழிபாடு செய்யவும், கிரிவலம் செல்லவும், தினசரி ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகிறார்கள். ஒவ்வொரு மாதமும் பவுர்ணமி, சித்ரா பவுர்ணமி மற்றும் தீபத்திருவிழாவின் போதும் கிரிவலம் செல்வதற்காக தமிழ்நாடு மட்டுமின்றி நாட்டின் மற்ற மாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் வருகை தருகிறார்கள். அந்த கிரிவலத்திற்கு வருகை தரக்கூடிய பக்தர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் இந்த அரசு நிச்சயமாக சொல்கிறேன், நிறைவேற்றித் தரும்.

திருவண்ணாமலை கிரிவலப்பாதை என்பது திருவண்ணாமலை நகராட்சி, அத்தியந்தல், ஆணாய்ப் பிறந்தான், அடி அண்ணாமலை, வேங்கிக்கால் ஆகிய 4 ஊராட்சிகளை உள்ளடக்கிய 14 கி.மீ தொலைவு கொண்டது. எனவே, கிரிவலப் பாதையில் செல்லும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

நிதிப் பற்றாக்குறை காரணமாக மின் விளக்குகள், கண்காணிப்பு கேமராக்கள், பொது அறிவிப்பு அமைப்பு ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளும் உடனுக்குடன் சரிசெய்ய இயலாத நிலை இருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு, அறநிலையத் துறையும், உள்ளாட்சி அமைப்பையும் இணைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் ஒரு குழு ஏற்படுத்தி, அந்த குழுவிற்கு, இந்தத் தொடர் செலவினங்களை முறைப்படுத்தி கண்காணிக்கவும் ஆவன செய்யப்படும் என்பதை நான் இங்கே அறிவிக்கிறேன்.

அதேபோல், திருவண்ணாமலை மாவட்டத்திலும், வேலூர் மாவட்டத்திலும், இருக்கக்கூடிய ஜவ்வாது மலைப் பகுதியில் சுமார் 75,000 பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் வாழக்கூடிய 20 மலைக் கிராமங்கள் இணைக்கக்கூடிய பரமனந்தல் ஜமுனாமுத்தூர் அமிர்த சாலையை மேம்படுத்த வேண்டுமென்று இந்த வழியாக போதியபேருந்துவசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டுமென்றும் இவர்கள் நீண்ட காலமாக கோரிக்கையை வைத்து வருகிறார்கள். இந்த கோரிக்கையை ஏற்று இதற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து வனத் துறையினுடைய அனுமதியைப் பெற்று ரூ.140 கோடி செலவில் அது அகலப்படுத்தப்படும், மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவையெல்லாம் மதத்தை வைத்து அரசியல் செய்கின்ற கண்களுக்குத் தெரியாது. மதத்தை வைத்து அரசியல் செய்கின்றவர்களுக்கு, அவர்கள் கண்களுக்கெல்லாம் இது தெரியாது. ஏனென்றால் அவர்கள் உண்மையான ஆன்மீகவாதிகள் அல்ல, அவர்கள் உண்மையான ஆன்மீக வியாதிகள்! ஆன்மீகப் போலிகள்! ஆன்மீகத்தைத் தங்களது அரசியலுக்காக மட்டுமே பயன்படுத்தக்கூடிய எண்ணத்தைக் கொண்டவர்கள்!

நாங்கள் மதத்தை வைத்து கட்சி நடத்தவில்லை! கட்சியானாலும், ஆட்சியானாலும் மக்கள் முன் நின்று நாங்கள் ஆட்சி நடத்துகிறோம், கட்சி நடத்துகிறோம்!!

அதுதான் அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி, அனைத்துத் தொழில் வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய திராவிட மாடல் அரசை

இன்றைக்கு நாம் நடத்தி வருகிறோம். அந்த அடிப்படையில்தான் இந்து சமய அறநிலையத் துறை மூலமாகவும் சிறப்பான பணிகளை இந்த அரசு இன்றைக்கு செய்து கொண்டிருக்கிறது.

கோவிலுக்குத் திருப்பணி செய்வது திராவிட மாடலா? என்று சிலர் கேட்கிறார்கள், கேள்வி எழுப்பி வருகிறார்கள். அனைத்துத் துறையையும் சமமாக வளர்ப்பதுதான் 'திராவிட மாடல்' என்று நான் தொடர்ந்து சொல்லி வருகிறேன்!

இன்னும் சொன்னால், திராவிட இயக்கத்தின் தாய்க் கழகமான நீதிக்கட்சி ஆட்சி காலத்தில்தான், இந்துசமய அறநிலையத் துறை, சட்டமே போட்டோம், 1925ஆம் ஆண்டு அந்த சட்டம் உருவாக்கப்பட்டது.

எதற்கு கோவில்களை முறைப்படுத்துவதற்காக, ஒரு சட்டம் வேண்டுமென்று ஆன்மீக எண்ணம் கொண்டவர்கள் கோரிக்கை வைத்தபோது அதனை ஏற்று, சட்டம் போட்ட ஆட்சிதான் நீதிக்கட்சியின் ஆட்சி.

எது திராவிட மாடல்? என்று பிற்போக்குத்தனங்களுக்கும் பொய்களுக்கும் பெருமை எனும் முலாம் பூசி பேசுபவர்கள் இதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆன்மீகத்தின் பெயரால் இன்றைக்கு அவர்கள் அரசியல் நடத்த முயற்சிக்கிறார்கள். ஆன்மீகத்திற்கு நாங்கள் எதிரிகள் அல்ல! ஆன்மீகத்தின் பெயரால் மனிதர்களை சாதியால், மதத்தால் பிளவுபடுத்துபவர்களுக்குத்தான் அவர்களுக்கு நாங்கள் எதிரிகள். மனிதர்களைப் பிளவுபடுத்தும் கருவியாக ஆன்மீகம் இருக்க முடியாது.

மனிதர்களைப் பிளவுபடுத்துவதற்கு ஆன்மீகத்தை பயன்படுத்துபவர்களும் உண்மையான ஆன்மீகவாதிகளாக அவர்கள் நிச்சயமாக இருக்க முடியாது.

❖ ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்பதுதான் எங்கள் அறநெறி!

❖ ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பதுதான் எங்கள் அறநெறி!

❖ பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பதுதான் எங்கள் அறநெறி!

❖ எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் - அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு - என்பதுதான் எங்கள் அறநெறி.

அத்தகைய அறநெறியைக் கொண்ட ஆட்சியை நாங்கள் நடத்தி வருகிறோம்.

அறம் என்றால் என்னவென்றே தெரியாத, அறிவுக்கு ஒவ்வாத மூடக்கருத்துக்களை முதுகில் தூக்கிச் சுமந்துக் கொண்டிருக்கும் சிலருக்கு போலியான பிம்பங்களைக் கட்டமைக்க வேண்டுமானால் உளறல்களும் பொய்களும் தான் தேவை!

மக்களுக்குத் தேவையான கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்பு வசதிகள், வேளாண்மை, தொழிலாளர் நலன், வேலைவாய்ப்புகள், புதிய தொழில்கள், புதிய முயற்சிகள் என்று தமிழ்நாடும் தமிழினமும் முன்னேற சிந்தித்து செயல்படுவதுதான், திராவிட முன்னேற்றக் கழகம்! அதுதான் திராவிட அரசியல் மரபு!

அறிவார்ந்த யாரும், எவரும் இந்த அரசுக்கு ஆலோசனைகள் சொல்லலாம். அதனை நாங்கள் செயல்படுத்துவோம்.

அறிவார்ந்தவர்கள் பேசுவதை மட்டுமே நாம் காதில் கேட்க வேண்டும்!

நமக்கு ஆக்கப்பூர்வமான பணிகள் காத்துக் கிடக்கிறது!

இது தேர்தல் காலம் அல்ல!

மக்களுக்கு நன்மை செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள காலம் இது.

பொய்யும் புரட்டும் மலிவான விளம்பரம் தேடும் வீணர்களைப் பற்றி ஐ டோன்ட் கேர்!

நான் மட்டுமல்ல-

நீங்கள் ஒவ்வொருவரும்-

'ஐ டோண்ட் கேர்' என்று சொல்லி நகர வேண்டும்!

அப்படி பொய்களை அநாதைகளாக விட்டு, உண்மை எனும் வெளிச்சத்தைத் துணையாகக் கொண்டு நடந்தாலே, நாம் முன்னேறலாம்! நம்முடைய இலக்குகளை அடையலாம்!

நான் இங்கே இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகளுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் சொல்ல விரும்புவது, காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது என்பதை யாரும் மறக்க வேண்டாம்!

கலைஞர் அவர்கள் சொல்வார் "கோப்புகள் சிகப்பு நாடாவிலே கட்டப்பட்டு உறங்கிக் கொண்டிருக்கும்போது, ஊழல் எழுந்து உட்கார்ந்து ஊர் சுற்றப் புறப்பட்டு விடுகிறது"

என்று குறிப்பிடுவார். அதை மனதில் கொண்டு மக்கள் பிரதிநிதிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முதல் கடைநிலை ஊழியர்கள் வரை எந்த கோப்பும், எந்தப் பணியும் தேங்க விடக்கூடாது என்ற எண்ணத்தோடு பணியாற்றுங்கள்.

இதனை அனைத்து மட்டத்திலும் உறுதி செய்வதற்காகத் தான், எத்தனை அலுவல்களுக்கு நடுவிலும், நேரம் கிடைக்கும்போதெல்லாம் நான் திடீர் ஆய்வுகளை மேற்கொள்கிறேன் என்றால், இது தான் காரணம்.

ஏனென்றால், மக்கள்தான் நம் எஜமானர்கள்!

இதே திருவண்ணாமலையில், 1957ஆம் ஆண்டு நடந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய பேரறிஞர் அண்ணா அவர்கள், குறிப்பிட்டாரே, நேற்றைக்கு மாலையில் சொன்னேன்.

"எங்களுக்கு இந்த உலகத்தில் இரண்டு எஜமானர்கள்தான் உண்டு. ஒன்று எங்களின் மனச்சாட்சி. மற்றொன்று இந்த நாட்டு மக்கள்" என்று சொன்னார்.

என்னுடைய மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் நாங்கள் மக்கள் பணியாற்றி வருகிறேன். என் மீது நீங்கள் வைத்துள்ள நம்பிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. உங்கள் நம்பிக்கையைத்தான் நான் எல்லாவற்றையும்விட மேலானதாக நினைக்கிறேன்.

என் மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கை என்பது, தனிப்பட்ட என் மீதான நம்பிக்கை மட்டுமல்ல. ஒடுக்கப்பட்டிருந்த இந்தத் தமிழினம் ஒளிபெற, உதயசூரியன் என உதித்த, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது நீங்கள்

வைத்திருக்கும் நம்பிக்கை. அந்த நம்பிக்கையைக் காப்பாற்ற என்றும் உங்களில் ஒருவனாக உழைப்பேன்!

பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞர் காட்டிய கொள்கைகளின் வழி நடப்போம்!

அனைத்து வளங்களும் கொண்ட மாநிலமாக இந்தத் தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டுவோம்!

திராவிட மாடல் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் என்றநிலையைஅடைவோம்!என்றுகூறிவிடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில்,
புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,
முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து,
பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி
ஆற்றிய உரை - 09.07.2022

தமிழ்நாடு என்பது வெறும் வார்த்தை அல்ல ரத்தமும், சதையும் கொண்ட நமது உரிமைச் சொல்

தமிழ்நாடு திருநாள் விழாவில் பங்கேற்று விருதுகளை வழங்கி சிறப்பிக்க இருக்கக்கூடிய நம்முடைய மூத்த அமைச்சர் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் என்னுடைய ஆருயிர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களே!

மற்றும் தமிழகத்தின் அமைச்சர் பெருமக்களே!

இந்த விழாவிற்கு தலைமையேற்றுள்ள மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாடு தொல்லியல் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே!

முன்னிலை வகித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்களே!

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே!

குடியரசுத் தலைவர் தேர்தலில் ஓட்டு அளித்து விட்டு, இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களே!

கருத்தரங்கு நிகழ்ச்சிக்கு தலைமை வகித்திருக்கக்கூடிய மாநிலத் திட்டக் குழுத் துணைத்தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன் அவர்களே!

பல்வேறு தலைப்புகளில் உரையாற்றியுள்ள என்னுடைய மதிப்பிற்குரியவர்கள்-

பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்களே!

ஆழி செந்தில்நாதன் அவர்களே!

வாலாசா வல்லவன் அவர்களே!

முனைவர் ம. ராசேந்திரன் அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் அவர்களே!

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., அவர்களே!

செய்தித்துறை இயக்குநர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., அவர்களே!

மேயர், துணை மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

ஊடகத் துறை, பத்திரிகையாளர் நண்பர்களே!

தமிழ் ஆர்வலர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

ஜூலை 18 என்ற மதிப்புமிக்க நாளில் இத்தகைய சிறப்பான விழாவை ஏற்பாடு செய்திருக்கக்கூடிய அரசுத் துறைகளை நான் மனதாரப் பாராட்டுகிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையிலும் எனது தனிப்பட்ட முறையிலும், பாராட்டுக்களையும்,நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எத்தனையோ விழாக்கள், நிகழ்ச்சிகள் இருந்தாலும், தமிழ்நாடு திருநாள் என்ற நிகழ்ச்சிக்கு இணையானது எதுவுமில்லை. ஏனென்றால், 'தமிழ்நாடு நாள்', 'தமிழ்நாடு திருநாள்' என்று சொல்லும்போதே நமது உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதனைச் சொல்லும்போதே ஒரு ஆற்றல் பிறக்கிறது.

என்னுடைய ஒரே வருத்தம் என்பது, கலைவாணர் அரங்கிற்கே நேரடியாக வந்து கலந்துகொள்ள இயலவில்லையே என்பதுதான்!

கொரோனா என்ற தொற்றால் பாதிக்கப்பட்டு, இரண்டு மூன்று நாட்களாக காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நான், இன்று காலையில்தான் இல்லம் திரும்பினேன்.

தொற்று என்பது முழுமையாக நீங்கிவிட்டது என்றாலும், மருத்துவர்களின் ஆலோசனைப்படி ஓய்வெடுத்து வருகிறேன். சாதாரணமான காய்ச்சலாக இருக்குமானால், அது குணமடைந்ததும் நம்முடைய பணிகளைத் தொடங்கிவிடலாம். கொரோனா தொற்று என்பதால், அது மற்றவர்களுக்கும் பரவாமல் இருப்பதற்காக,நம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். தொற்று நீங்கிவிட்டாலும், சில நாட்களாவது

ஓய்வெடுக்க வேண்டும். அந்த அடிப்படையில், நேரடியாக வந்து விழாவில் பங்கேற்பது இயலாத ஒன்று ஆகிவிட்டது.

மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைப்பது, தள்ளி வைப்பது போல, தமிழ்நாடு திருநாளை தள்ளி வைக்க இயலாது என்பதால், காணொலி மூலமாகவாவது பேசி விடுவது என்று நான் முடிவெடுத்தேன்.

தமிழ்நாடு நாளில் பேசுவது என்பது எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பெருமை! காணொலி மூலமாகப் பேசுவதன் மூலமாக, உடல்சோர்வு நீங்கிவிட்டதாகவே நான் உணர்கிறேன்.

"தமிழ்நாடு வாழ்க!
தமிழ்நாடு வாழ்க!
தமிழ்நாடு வாழ்க!"

என்று பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள், 1967ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் நாள், தமிழ்நாடு சட்டமன்றத்தில் முழங்கிய முழக்கத்தை, மீண்டும் ஒரு முறை முழங்குவதன் மூலமாக, என் உள்ளத்தில் மலர்ச்சி ஏற்படுகிறது.

செந்தமிழ் நாடென்னும் போதினிலே -
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே -
எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே -
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே -

என்று பாடினார் மகாகவி பாரதியார். அத்தகைய உணர்ச்சியை நாம் இன்று பெறுகிறோம். இத்தகைய உணர்ச்சியை ஊட்டும் தமிழ்நாடு என்ற பெயர் சூட்டிய சாதனையானது, சாதாரணமாக நடந்து விடவில்லை.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் மாநிலத்துக்கு, தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதற்கே நாம் பல

பத்தாண்டுகளாகப் போராட வேண்டி வந்தது, வாதாட வேண்டி இருந்தது, பேச வேண்டி இருந்தது, எழுத வேண்டி இருந்தது, உயிரைத் தர வேண்டி இருந்தது, இரத்தம் சிந்த வேண்டி வந்தது, மாநிலங்களவையில் குரல் எழுப்ப வேண்டி வந்தது, சட்டமன்றத்தில் தொடர்ந்து கேட்க வேண்டி வந்தது, தீர்மானங்களைக் கொண்டு வர வேண்டி வந்தது. அத்தனைக்குப் பிறகும் 'தமிழ்நாடு' என்று சொல்வதற்கான அனுமதி கிடைக்கவில்லை.

இறுதியாக, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் அமர்ந்த காரணத்தால்தான், தாய்த் தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்டது.

காஞ்சி தந்த வள்ளுவன் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக வந்ததால்தான் தாய்த் தமிழ்நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்டது.

"தமிழாய்ந்த தமிழ்மகன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆதல் வேண்டும்" என்று பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் குறிப்பிட்டாரே...!

அத்தகைய தலைமகனான பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர், நாவலர் போன்றவர்கள் அமைச்சர்களாக வந்ததால்தான், இந்தத் தாய்த் தமிழ்நாட்டுக்கு, தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கம் உருவாகாமல் போயிருந்தால், தமிழ்நாட்டில் இந்த இயக்கம் ஆட்சிக்கு வராமால் போயிருந்தால், இந்த மாநிலத்திற்கு இன்று வரையில் தமிழ்நாடு என்ற பெயர் சூட்டப்படாமலே இருந்திருக்கும் என்பதை யாரும் மறந்துவிடவேண்டாம்.

உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம் போல இதுவும், 'சென்னைப் பிரதேசம்' என்று

அடையாளமற்ற மாநிலமாகத்தான், இன்று வரை இருந்திருக்கும் என்பதை யாரும் மறந்துவிட வேண்டாம்.

திராவிடம் என்ன கிழித்தது என்று வாய்கிழியப் பேசுபவர்கள் இதனை அறிய வேண்டும்.

தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டியதைவிட, வேறு சாதனை ஏதாவது தேவையா?

மூவாயிரம் ஆண்டு பழமை கொண்ட தமிழ்மொழிக்குச் செம்மொழி என்ற தகுதியைப் பெற்றுத் தந்தது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனை அல்லவா?

இதனைவிட வேறு சாதனை தேவையா? இத்தகைய சாதனைச் சரித்திரத்துக்குச் சொந்தக்காரர்கள் நாம்.

அதனால்தான், தமிழ்நாடு நாளைத் தமிழ்நாடு திருநாளாக நாம் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். உலகம் முழுவதும் பரந்து விரிந்து வாழும் ஓர் இனம் உண்டென்றால் அது தமிழினம்தான்.

நம்முடைய இனம், ஒரு நிலத்தில் ஒரு நாட்டில் மட்டுமே வாழும் இனம் அல்ல, உலகளாவிய இனம். முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் அதிக எண்ணிக்கையிலும், அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் குறைந்த எண்ணிக்கையிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

இவர்கள் அனைவருக்கும் தமிழ்நாடுதான் தாய்வீடு!

இவர்கள் அனைவருக்கும் தமிழ்நாடுதான் தாய்நாடு!

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
முன் தோன்றிய மூத்த குடி - நம்முடைய தமிழ்க்குடி!"

அத்தகைய தமிழ்க்குடியின் தாய்மடி இந்தத் தமிழ்நாடுதான்! தமிழ்நாட்டில், கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே நகரமயமாக்கம்

ஏற்பட்டிருந்தது என்பதை, கீழடி நமக்கு நிரூபித்துக் கொண்டு இருக்கிறது.

அதேபோல், சிவகளை முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட உமி நீங்கிய நெல்மணிகளின் காலம் கி.மு.1155 எனக் கண்டறியப்பட்டுள்ளது.

'தண் பொருநை' என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் மூவாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது. இவை அனைத்தும் உலகப்புகழ்பெற்ற மானுடவியல் ஆராய்ச்சியாளர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மைகள்.

"உலகில் முதலில் பிறந்த குரங்கு - தமிழ்க்குரங்குதான்" என்று நம்மைச் சிலர் அந்தக் காலத்தில் கிண்டல் செய்வார்கள். அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை.

நாம் எதைச் சொன்னாலும் ஆய்வுப்பூர்வமாகத்தான் சொல்கிறோம். சிலர் போலக் கற்பனையாகச் சொல்லவில்லை. அத்தகைய வரலாற்றுப் பெருமை கொண்ட நமது தமிழினம் வாழ்ந்த நிலப்பரப்புக்கு, தமிழ்நாடு என்ற பெயர் இல்லை. அதற்காகவும் போராட வேண்டி இருந்தது என்பது அவமானம் அல்லவா? அந்த அவமானம் துடைக்கப்பட்ட நாள்தான், இந்த ஜூலை 18ஆம் நாள்!

அவமானம் துடைக்கப்பட்ட நாள் மட்டுமல்ல, தமிழ்நாடு என்று பெயர் சூட்டியதன் மூலமாக, தாழ்ந்து கிடந்த தமிழினத்தை, தலைநிமிர வைத்த நாள்தான் இந்த ஜூலை 18ஆம் நாள்!

"தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதால், என்ன இலாபம்?" என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் கேட்கப்பட்டபோது, நம்முடைய இனமானப் பேராசிரியர் அவர்கள், "இழந்த மானம் திரும்பக் கிடைக்கும்" என்று சொன்னார்கள்.

“எங்களுக்கு உணர்ச்சி பிறக்கும்” என்று நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் சொன்னார்கள்.

“தமிழ்நாடு என்று பெயர் வைப்பதற்காக சங்கரலிங்கனாரின் பிணம் வீழ்ந்தது. உங்களுக்கு ஒரு எழுத்துக்கு ஒரு பிணம் வீதம் வேண்டுமென்று சொன்னால் தயாராக இருக்கிறோம்.

ஐந்து பிணங்கள் தருவதற்குத் தயாராக இருக்கிறோம்.

எழுத்துக்கு எத்தனை பிணங்கள் வேண்டுமானாலும் தரத் தயாராக இருக்கிறோம்.

தமிழ்நாடு என்று இந்த நாட்டுக்கு பெயரிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்” என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் 10.08.1960 அன்று கனல் கக்க முழங்கினார் நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

தமிழர்கள் வாழும் மற்ற பகுதிகளை, முழுமையாக நாம் பெறவில்லை என்பதைச் சட்டமன்றத்தில் சுட்டிக்காட்டி 1957ஆம் ஆண்டே கலைஞர் அவர்கள் பேசி இருக்கிறார்கள்.

“கவர்னருடைய உரையைப் பற்றி, இங்கு பேசிய பல நண்பர்கள், ‘கன்னியாகுமரியை வரவேற்கிறோம்’ என்று கூறியிருக்கிறார்கள். அந்தக் கன்னியாகுமரியை நாம் தேவிகுளக் கரையிலோ அல்லது பீர்மேட்டின் மீதோ நின்றுகொண்டு வரவேற்காமல், சிதைந்து போன செங்கோட்டையின் மேல் நின்று கொண்டு வரவேற்கிறோம் என்று எண்ணும்போது தேவிகுளம்,பீர்மேட்டைப் பெறுவதற்கு கவர்னர் உரையில் வழிவகை காணப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்” என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் 04.05.1957 அன்று நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றி உள்ளார்கள்.

தமிழர்கள் வாழும் நிலப்பகுதிகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்க்கவும் அப்படி ஒன்றாக ஆன நிலப்பரப்புக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டவுமான போராட்டம் என்பது தமிழ்நாட்டில் நடந்த மகத்தான போராட்டம் ஆகும்.

இதற்கு அடித்தளம் அமைத்த இயக்கம் திராவிட இயக்கம்! தமிழ் - தமிழன் - தமிழ்நாடு என்ற உணர்ச்சியை உருவாக்கிய இயக்கம் திராவிட இயக்கம்! 1938ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கிளம்பிய இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம்தான், இந்த உணர்ச்சியைதமிழ்நாட்டில்மீண்டும்உருவாக்கியபோராட்டம்.

தந்தை பெரியார் போன்ற தமிழர் தலைவர்களும், மறைமலையடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்ற தமிழறிஞர்களும் ஒன்று சேர்ந்து நடத்திய போராட்டம் ஆகும்.

தந்தை பெரியார் பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார்.

பேரறிஞர் அண்ணா சிறை வைக்கப்பட்டார்.

திருவாரூர் வீதிகளில் 14 வயது சிறுவனாகத் தமிழ்க்கொடி ஏந்தினார் தலைவர் கலைஞர். ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் போராடிச் சிறை சென்றார்கள்.

பெண்கள் மட்டுமல்ல, குழந்தைகளும் சிறைக்குப் போனார்கள். நடராசனையும், தாளமுத்துவையும் நாம் இழந்தோம்.

தமிழுக்காக - தமிழினத்துக்காக - தமிழ்நாட்டுக்காக - போராடவும் - வாதாடவும் - சிறை செல்லவும் - சித்திரவதைகள் அனுபவிக்கவும் - உயிர்த்தியாகம் செய்யவும் தமிழ்நாட்டுக்குப் பயிற்றுவித்த போராட்டம்தான் 1938 இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம்!

தமிழ்நாடு என்பது வெறும் வார்த்தை அல்ல, இரத்தமும் சதையும் கொண்ட நமது உரிமைச் சொல்

என்பதைத் தமிழ்நாட்டுக்கு உணர்த்திய போராட்டம் தான் 1938 போராட்டம்!

1938 முதல் தொடங்கிய அந்தப் போராட்ட உணர்ச்சியின் அடிப்படையாகத்தான்

- ❖ இந்தி எதிர்ப்புப் போராட்டமாக இருந்தாலும் -
- ❖ தமிழ்க்காப்புப் போராட்டமாக இருந்தாலும் -
- ❖ மொழிவாரி மாகாண உருவாக்கமாக இருந்தாலும் -
- ❖ தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதற்கான முயற்சிகளாக இருந்தாலும் - இந்த நாட்டில் தொடங்கியது.

அந்த விதையில் முளைத்தவை இந்தப் போராட்டங்கள்.

- ❖ தமிழ்நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டுங்கள் என்று சொல்லி 72 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து மறைந்தார் விருதுநகர் தியாகி சங்கரலிங்கனார் அவர்கள்!
- ❖ தலைகொடுத்தாவது தலைநகரைக் காப்பேன் என்று முழங்கியவர் தமிழரசு கழகத் தலைவர் ம.பொ.சி. அவர்கள். தனது வாழ்க்கையின் பெரும்பகுதியை மொழிவாரி மாகாணம் உருவாக்க ஒப்படைத்துக் கொண்டவர் சிலம்புச் செல்வர் அவர்கள்.
- ❖ திருத்தணியில் நடந்த தடியடியில் இரண்டு தியாகிகள் இறந்து போனார்கள்.
- ❖ தென் எல்லைப் போராட்டத்தில் 11 பேர் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்து போனார்கள்.
- ❖ தமிழ்நாடு கேட்டு போராடுபவர்களை 'நான்சென்ஸ்' என்று சொன்னதை எதிர்த்து மும்முனைப் போராட்டம் நடத்தியது திராவிட முன்னேற்றக் கழகம்.

நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கானவர்கள், பல மாதங்கள் சிறை வைக்கப்பட்டார்கள். தூத்துக்குடியில் நான்கு பேர் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டார்கள். இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். இப்படி எத்தனையோ தியாகிகள் தங்களது தேகங்களைத் தந்திருக்கிறார்கள்.

எத்தனையோ தலைவர்கள் தங்களது உழைப்பை வழங்கி இருக்கிறார்கள். எத்தனையோ இயக்கங்கள் தங்களை ஒப்படைத்துக் கொண்டு இருக்கின்றன. அத்தனை தியாகிகளையும் இந்தத் தருணத்தில், நான் வணங்குகிறேன். அத்தனை தலைவர்களுக்கும் தலைதாழ்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தனை இயக்கங்களுக்கும் எனது இதயப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் உருவாக்கித் தந்த தமிழ்நாட்டில்தான் நாங்கள் வாழ்கிறோம். நீங்கள் உருவாக்கித் தந்த தமிழ்நாட்டைத்தான் நாங்கள் ஆள்கிறோம்.

உங்களது தியாகத்தை எந்நாளும் காப்போம் என்று நான் உறுதி அளிக்கிறேன். அத்தகைய உறுதிகொண்ட திராவிட மாடல் ஆட்சியைத் தான் நாங்கள் நடத்தி வருகிறோம்.

சமூகநீதி - சமத்துவம் - சகோதரத்துவம் - சமதர்மம் - மொழிப் பற்று - இன உரிமைகள் - மாநில உரிமைகள் - கூட்டாட்சித் தத்துவம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய திராவிட மாடல் ஆட்சியை நாம் நடத்தி வருகிறோம்.

'வடக்கு வாழ்கிறது - தெற்கு தேய்கிறது' என்று ஒரு காலத்தில் முழங்கினோம். அன்று அத்தகைய நிலைமை இருந்தது.

1967ஆம் ஆண்டுக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி மலர்ந்ததற்குப் பின்னால், தமிழ்நாடு என்று பெயர் சூட்டியதற்குப் பின்னால், கடந்த ஐம்பது ஆண்டு காலத்தில் 'தெற்கு சிறக்கிறது' என்று அனைவரும் வியந்து பார்க்கும் பெருமையைப் பெற்றுத் தந்திருக்கிறோம்.

பல தடைகளையும், பாரபட்சங்களையும் மீறி, நம்முடைய சீரிய திட்டமிடுதலாலும் மக்கள் நலனை முன்னிலைப்படுத்தும் நோக்கத்தாலும் இந்தப் பெருமையை நாம் அடைந்திருக்கிறோம்!

- இந்தியாவினுடைய மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பில், பார்த்தீர்கள் என்றால், தமிழ்நாட்டின் பங்கு 9.22 விழுக்காடு!
- ஒன்றிய அரசினுடைய மொத்த வரி வருவாயில் தமிழ்நாட்டின் பங்கு 6 விழுக்காடு!
- இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் தமிழ்நாட்டினுடைய பங்களிப்பு 8.4 விழுக்காடு!
- இந்தியாவின் ஜவுளித் துறை ஏற்றுமதியில் 19.4 விழுக்காடு!
- கார்கள் ஏற்றுமதியில் 32.5 விழுக்காடு!
- தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 33 விழுக்காடு!

இரண்டு நாட்களுக்கு முன்னால் வந்த ஒன்றிய அரசின் அறிவிப்பின்படி, இந்தியாவின் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் பெரும்பாலானவை தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் 100 சிறந்த கல்லூரிகளில், 32 கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகள். இந்தியாவின் மிகச்சிறந்த

பல்கலைக்கழகங்களில், 21 தமிழ்நாட்டில் உள்ளது. 50 சிறந்த மருந்தியல் கல்லூரிகளில், 11 தமிழ்நாட்டில் உள்ளன.

இந்தியாவில் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில், 18 தமிழ்நாட்டில் உள்ளன. இந்தியாவில் தலைசிறந்த பொறியியல் கல்லூரிகளில், 16 கல்லூரிகள் தமிழ்நாட்டைச் சார்ந்தவை என்று புள்ளிவிவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் மூன்றாவது சிறந்த கலைக்கல்லூரி நம்முடைய சென்னை மாநிலக் கல்லூரிதான். சென்னை மாநிலமாக இருந்து தமிழ்நாடாக மாறியதால் தமிழ்நாடாக மாற்றப்பட்டதால் விளைந்த பயன்கள் இவை. திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்ததால் ஏற்பட்ட பயன்கள் இவை. இதுதான் சிலருக்குப் பொறாமையாகவும், வயிற்றெறிச்சலாகவும் இருக்கிறது.

எல்லோருக்கும் எல்லாம் என்ற இலக்கை நோக்கிய ஆட்சியாக உருவாக்க நாம் அனைத்து வகையிலும் முயற்சித்து வரும் இந்த நேரத்தில், அனைவருக்கும் மன வருத்தம் ஏற்படுத்தும் வகையில் கள்ளக்குறிச்சியில் நடந்த சம்பவங்கள் அமைந்துள்ளன.

கல்வி நிலையங்கள் ஒவ்வொரு பிள்ளைகளையும் தங்களது சொந்தப் பிள்ளைகளாக நினைத்து அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். மாறாக, நடக்கும் எந்தச் செயல்களாக இருந்தாலும், அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என எச்சரிக்கிறேன். இந்தச் சோகமான சூழலைப் பயன்படுத்திக் கொண்டு சிலர் சேர்ந்து சட்டவிரோதமாக நடந்து கொண்டுள்ளார்கள்.

வன்முறைகள் என்பது வளர்ச்சிக்கு எதிரானவை என்பதை அவர்கள் உணர வேண்டும். அமைதியான

தமிழகம்தான் அனைவருக்குமான தமிழகமாக அமையும் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

நம்முடையவளர்ச்சிக்கு மிக முக்கியமான காரணம் நமக்கு இருக்கும் மொழிப்பற்றும் - இன உணர்வும் - மாநில சுயாட்சிக் கொள்கையும்தான்.

இன்றைக்கு தமிழ்நாட்டையும் தாண்டி வாழும் பல அறிஞர்களும், இதனை நிரூபிக்கும் வகையில் புத்தகங்களை எழுதி வருகிறார்கள்!

நம்முடைய கல்வி வளர்ச்சியாக இருந்தாலும், தொழில் வளர்ச்சியாக இருந்தாலும், மக்கள் வளர்ச்சியாக இருந்தாலும், சமூக வளர்ச்சியாக இருந்தாலும் இதனை அடிப்படையாகக் கொண்டது.

தமிழ் மொழிப்பற்றையும்,தமிழின உரிமைவேட்கையையும், மாநில சுயாட்சித் தத்துவத்தையும் எந்தச் சூழலிலும் யாருக்காகவும் விட்டுத் தந்துவிடக் கூடாது. தமிழ் என்று சொல்வதால் மற்ற மொழிக்காரர்களுக்கு,நாம் எதிரிகள் அல்ல. தமிழன் என்று சொல்வதால் மற்ற தேசிய இனத்தவர்க்கு,நாம் எதிரிகள் அல்ல.

மாநில சுயாட்சி பேசுவதால் அது இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் ஏற்படுத்துவது அல்ல. இன்னும் சொன்னால், மாநிலத்தில் சுயாட்சி அமைவதுதான், இந்தியாவின் ஒருமைப்பாட்டையே காப்பாற்றும்.

இந்தியா ஒற்றுமையாக விளங்க வேண்டும்.

இந்த ஒற்றுமையை எப்படி உருவாக்க முடியும்?

இங்கு வாழும் பல்வேறு இனங்கள், மொழிகள், மதங்கள், பண்பாடுகள் கொண்ட மக்களை, சமமாக மதிப்பதன் மூலமாகத்தான் இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும்.

செந்தமிழ்நாடு என்று பாடிய பாரதியாரைவிட தேசியக் கவி வேறு யாராவது உண்டா? யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் என்று பாடிய பாரதி குறுகிய எண்ணம் படைத்தவரா? மாநில சுயாட்சிக்காக, மொழிவாரி மாகாணங்களை உருவாக்குவதற்காகப் போராடிய கவிமணி, மார்ஷல் நேசமணி, ம.பொ.சி. போன்றவர்கள் இந்திய தேசியத்தின் அசைக்கமுடியாத தலைவர்கள் அல்லவா.

எனவே, தமிழ், தமிழன், தமிழ்நாடு என்று பேசுவது குறுகிய எண்ணம் கிடையாது. பரந்து விரிந்த இந்த நாட்டில் எனது மொழியும், எனது இனமும், எனது மாநிலமும் மேன்மை அடையவேண்டும்!

இதேபோன்ற மேன்மையை அனைத்து மொழிகளும், அனைத்து இனங்களும், அனைத்து மாநிலங்களும் அடைய வேண்டும்!

இத்தகைய பரந்த பெருந்தன்மையுடன்தான், மொழி, இனம், மாநில சுயாட்சி ஆகிய அனைத்தையும் பேசுகிறோம்.

இந்த மூன்று தத்துவம்தான் நம்மை உயர்த்தும். நம்மை வாழ வைக்கும். நம்மை மேம்படுத்தும்.

மொழிவாழ, இனம் வாழ, மாநில சுயாட்சி வெல்ல, இந்தியா முழுமைக்கும் கூட்டாட்சி உருவாக எந்நாளும் உழைப்போம் என்பதை தமிழர் திருநாளாம் இந்தத் தமிழ்நாடு

திருநாளில் உறுதியேற்போம். தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் மீண்டும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானத்தை முன்மொழிந்தபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் முழங்கியதைப் போல், என்னுடைய முழக்கத்தையும் அனைவரும் எழுந்து நின்று, மீண்டும் முழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

“தமிழ்நாடு வாழ்க! தமிழ்நாடு வாழ்க! தமிழ்நாடு வாழ்க!”

“வாழ்க தமிழ்! வெல்க தமிழ்நாடு!”

நன்றி வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக
சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு
திருநாள் விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை - 18.07.2022

இந்தியாவிலேயே மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு ஏராளமான திட்டங்களை தீட்டி வருவது நமது மாநிலம்தான்

அமர் சேவா சங்கத்தின் 40ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்களே!

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களே!

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு .பி.கே. சேகர்பாபு அவர்களே!

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களே!

தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் என்னுடைய மதிப்பிற்குரிய திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களே!

ஆயிரம் விளக்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எழிலன் அவர்களே!

சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் திரு. அபுபக்கர் அவர்களே!

பள்ளிக் கல்வித் துறையின் முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களே!

மாற்றுத்திறனாளிகள் நலத் துறைச் செயலாளர் டாக்டர் ஆனந்தகுமார், இ.ஆ.ப., அவர்களே!

அமர் சேவா சங்கத்தின் நிறுவனத் தலைவர் திரு. இராமகிருஷ்ணன் அவர்களே!

கவுரவ செயலாளர் மரியாதைக்குரிய சங்கரராமன் அவர்களே!

துணைத்தலைவர் டாக்டர் முருகையா அவர்களே!

செயற்குழு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்களே!

அமர் சேவா சங்கத்தின் நிருவாகிகளே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான காலை வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முதலில் அமர் சேவா சங்கத்தின் நிறுவனத் தலைவராக இருக்கும் நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய பெரியவர் ராமகிருஷ்ணன் அவர்களுக்கு எனது அன்பான

வாழ்த்துக்களை மிகுந்த பெருமையோடு, மகிழ்ச்சியோடு உங்கள் அனைவரின் சார்பில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வுக்காக அவர் ஆற்றி வரும் பணி மிக மகத்தான பணி. அவர் தன்னுடைய வாழ்க்கையில் சந்தித்த சோதனைகளை வேறு ஒரு மனிதனாவது சந்தித்திருந்தால், நிச்சயமாக அவர்கள் வீட்டுக்குள்ளே தான் முடங்கியிருந்திருப்பார்கள்.

ஆனால் ராமகிருஷ்ணன் அவர்கள் இலட்சத்தில் ஒருவராக, கோடியில் ஒருவராக மதிக்கக் கூடிய மனதைரியம் உள்ளவர் என்பதன் காரணத்தால்தான், தனக்கு ஏற்பட்ட சோதனையை சாதனையாக மாற்றிக் காட்டிய பெரியவர் நம்முடைய ராமகிருஷ்ணன் அவர்கள். தன்னைப் போல சோதனைகளை எதிர்கொண்டவர்களையும் வெற்றியாளர்களாக மாற்றிக் காட்டிய பெருமையும் அவருக்கு உண்டு.

உடல்நலனும் உடலுறுதியும் கொண்ட அவர், கடற்படை அதிகாரிக்கான உடற்தேர்வின் போது முதுகுத் தண்டில் அடிபட்டு, கழுத்தில் காயம் ஏற்பட்டு இத்தகைய நிலையை அடைந்தவர் அவர். கழுத்துக்குக் கீழே உணர்வுகள் செயல்படாத தன்மையை எதிர்கொண்டார். மும்பையில் சிகிச்சையும் மேற்கொண்டார். சிகிச்சையோடு தன்னம்பிக்கையையும் உடலுறுதியையும் மன உறுதியையும் பெற்றார்!

1981ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான பள்ளியை ஆயக்குடியில் தொடங்கி இருக்கிறார் அய்யா ராமகிருஷ்ணன் அவர்கள்.

அதேபோல் திரு. சங்கர்ராமன் அவர்களும் தசைநார் சிதைவுநோயால்பாதிக்கப்பட்டவர்.அவர் இந்தநிறுவனத்துடன் 1992இல் சேர்ந்தார். இருவரது கவனிப்பில் இன்று ஏராளமான குழந்தைகள் மறுவாழ்வு பெற்று வருகிறார்கள் என்பதை அறியும்போது நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். அதற்கு ஈடு இணை எதுவும் இருக்க முடியாது.

ஒரு சிறிய இடத்தில் தொடங்கிய இந்த மையம் இன்று 30 ஏக்கர் நிலத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாற்றுத்திறனாளிகளுக்கான மையமாக மட்டுமில்லாமல், மனிதாபிமானத்தோடு செயல்படக்கூடிய ஆயக்குடி நிறுவனத்தை இங்கிருந்தபடியே நான் வணங்குகிறேன், மதிக்கிறேன், போற்றுகிறேன். உங்களது தொண்டு சிறக்க வேண்டுகிறேன்.

இன்றைய நாள் இரண்டு மகத்தான முக்கிய நிகழ்வுகளை நான் தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

- தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டமானது, 'அனைவருக்கும் கல்வி இயக்கம்' என்ற திட்டத்துடன் இணைந்து 3 முதல் 18 வயதுக்கு உட்பட்ட அனைத்து மாற்றுத்திறனாளி பிள்ளைகளுக்கும் சேர்ந்து ஒரு திட்டத்தை தொடங்கியிருக்கிறது.

இதனை அமர் சேவா சங்கத்துடன் இணைந்து செயல்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்ச்சியின் மூலம் நாம் தொடங்கி வைத்திருக்கிறோம்.

தரமான கல்வி -

பெண் கல்வி -

திறன் மேம்பாடு -

விளையாட்டுக் கல்வி -

உடல் கல்வி - ஆகியவற்றில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியரை முழுமையாக ஈடுபடுத்தக்கூடியத் திட்டம் தான் இது.

இந்தியாவிலேயே நமது மாநிலம்தான் மாற்றுத்திறனாளி மாணவ - மாணவியருக்கு ஏராளமான திட்டங்களைத் தீட்டி வருகிறது என்பதை நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள். அந்த வகையில் இப்போது தொடங்கப்பட்டுள்ள திட்டம் மிகமிக ஒரு முன்னோடித் திட்டம்.

இரண்டாவது நிகழ்வாக, அமர் சேவா சங்கத்தின் நாற்பதாம் ஆண்டை முன்னிட்டு ஆண்டு மலர் வெளியிடும் நிகழ்ச்சி.

மரியாதைக்குரிய ராமகிருஷ்ணன் - சங்கர்ராமன் ஆகியோரால் இன்று வளர்த்தெடுக்கப்பட்டு வரும் இந்த அமர்சேவா சங்கமானது 1981ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இன்று நாற்பது ஆண்டுகளைத் தொட்டுள்ளது.

ஏழை, எளிய மக்களின் நலனிற்காக குறிப்பாக, மாற்றுத்திறனாளிகளுக்கு நம்பிக்கை ஒளி பாய்ச்சிடும் ஒரு சிறந்த நிறுவனமாக இது செயல்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகளின் வாழ்வினை மேம்படுத்தி அவர்களின் பொருளாதார நிலையில் சுய சார்புடன் இருப்பதற்குத் தேவையான திறன் மேம்பாட்டுடன் கூடிய வேலைவாய்ப்புக் கல்வி அளித்து வருகிறது. அவர்கள் நம்பிக்கையுடன் சமுதாய நீரோட்டத்தில் சமநிலை மற்றும் சமவாய்ப்புடன் இணைந்திடும் வகையில் செயல்புரிந்து வருகிறது. அமர் சேவா சங்கமானது கிட்டத்தட்ட 900 கிராமங்களில் மாற்றுத்திறனாளிகளின்

வாழ்வு மேம்பட கிராமம் சார்ந்த மறுவாழ்வுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

செயலி மூலம் குழந்தைகளுக்கான ஆரம்பகால குறைபாடுகளைக் கண்டறிந்து பயிற்சி அளிக்கும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறீர்கள். இதுபோன்ற புதுமையான, ஆக்கப்பூர்வமான திட்டங்களோடு சுமார் 16,000 மாற்றுத்திறனாளிகளுக்கு திறன் மேம்பாட்டுப்பயிற்சி மற்றும் ஒருங்கிணைந்த கல்வியினை அளித்து நமது சமுதாயத்தில் அவர்களையும் ஒன்றிணைக்கும் வகையிலே ஆற்றல்மிகு செயல்புரிந்து வருவது மிகவும் பாராட்டுதலுக்குரியது.

கிராமப்புறங்களில் வளர்ச்சிக் குறைபாடு உடைய குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களின் இல்லம் தேடிச் சென்று அந்த குழந்தைகளுக்கான ஆரம்பகாலப் பயிற்சியும், பெற்றோருக்கான வழிகாட்டுதல்களையும் அமர் சேவா சங்கம் வழங்கி வருவதை அறிந்து நான் பாராட்டுகிறேன். அந்த வகையில் 3,000க்கும் மேற்பட்டவர்கள் இப்பயிற்சி பெற்றுள்ளதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். உங்களது தொண்டு மேலும் மேலும் தொடரட்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.

அமர் சேவா சங்கத்தின் இத்தகைய ஆக்கப்பூர்வமான பணிகளுக்கு நமது அரசு தேவையான உதவிகளை நிச்சயமாக, உறுதியாக செய்யும் என்ற உறுதியை நான் தருகிறேன்.

அமர் சேவா சங்கம் நமது அரசின் வழிகாட்டுதலோடும், துணையோடும் தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய நான்கு மாவட்டங்களில் மாற்றுத்திறனாளிகளுடைய மேம்பாட்டிற்காகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தை, எல்லாத் துறைகளிலும் வழிகாட்டிடும் இந்தியாவில் முதன்மை மாநிலமாகச் செய்திட நமது அரசு பல நல்ல திட்டங்களைத் தீட்டி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதில் முக்கிய அங்கமாக குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவியர்களின் முழுமையான வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டு நல்ல தரமான கல்வி அளிப்பது மட்டுமல்லாமல் பொறுப்புள்ள குடிமக்களாகவும் ஆக்கக்கூடிய வகையில், சிறப்பான சூழ்நிலைகளை உருவாக்கி அவற்றைச் செயல்படுத்துவதில் முழுக்கவனத்தைச் செலுத்தி வருகிறது.

அந்த வகையில் மாற்றுத்திறனாளிகளை குழந்தைப் பருவம் முதற்கொண்டு கண்டறிந்து, அவர்களின் மேம்பாட்டிற்கான கட்டமைப்பு வசதிகளை உறுதிப்படுத்தி, அவர்களுக்கு சமநிலை, சமவாய்ப்பு எனும் சமுதாய சமூகநீதியினை நிலைநாட்டிட, நமது அரசு முழுமூச்சுடனும் முனைப்புடனும் செயலாற்றி வருகின்றது.

- ❖ இல்லம் தேடிக் கல்வி
- ❖ மக்களைத் தேடி மருத்துவம்
- ❖ நான் முதல்வன்
- ❖ கல்லூரிக் கனவு

ஆகிய திட்டங்களின் மூலமாக மக்களின் கல்வி, நல்வாழ்வு ஆகிய தேவைகளை முழுமையாகச் செயல்படுத்த எங்களை நாங்கள் ஒப்படைத்துக் கொண்டிருக்கிறோம்.

அரசின் இந்த ஆக்கப்பூர்வமான திட்டங்களுக்கு நீங்களும் உதவி செய்யுங்கள். உங்களைப் போன்ற நிறுவனங்களுக்கு நாங்களும் இயன்ற உதவிகளை உறுதியாகச் செய்வோம்.

தமிழ்நாட்டில் நான்கு மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்ற அமர் சேவா சங்கம், மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக தனது திட்டங்களை தமிழ்நாடு முழுவதும் விரிவாக்கம் செய்திட வேண்டும் என்கின்ற என்னுடைய விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் ஒருமுறை மரியாதைக்குரிய ராமகிருஷ்ணன் அவர்களை வணங்கி விடை பெறுகிறேன்.

மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்.

அனைத்துவிதமான வெற்றிகளையும் நீங்கள் அடைய வேண்டும். உங்களது அனைத்து கனவுகளும் நிறைவேற வேண்டும் என்று சொல்லி என்னுடைய வாழ்த்தைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
சென்னையில் நடைபெற்ற அமர் சேவா சங்கத்தின்
40ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு
ஆற்றிய உரை- 25.07.2022

கல்வி நிறுவனங்களை தொழிலாக நினைக்காமல் தொண்டாக கருத வேண்டும்

குருநானக் கல்லூரியின் பொன்விழா ஆண்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டு இருக்கக்கூடிய மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களே!

தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் என்னுடைய பெருமதிப்பிற்குரிய திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களே!

வேளச்சேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. அசன் மவுலானா அவர்களே!

பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு.மகேஷ் குமார் அவர்களே!

குருநானக் கல்லூரியின் தலைவர் திரு. ராஜேந்திர சிங் பாசின் அவர்களே!

பொதுச் செயலாளர் மற்றும் தாளாளர் திரு. மஞ்ஜித் சிங் நாயர் அவர்களே!

கல்லூரியின் முதல்வர் டாக்டர் எம். ஜி. ரகுநாதன் அவர்களே!

ஆலோசகர் டாக்டர் மெர்லின் மொரோயிஸ் அவர்களே!

பொருளாளர் திரு. குருமித் சிங் கனுஜா அவர்களே!

குருநானக் கல்லூரியை சார்ந்திருக்கக்கூடிய நிருவாகிகளே!

பெருமதிப்பிற்குரிய பேராசிரியப் பெருமக்களே!

முன்னாள் இராணுவப் படை வீரர்களே!

மாணவச் செல்வங்களே!

பத்திரிகைமற்றும்ஊடகத்துறையைச்சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சில நாட்களுக்கு முன்பு கொரோனாவால் பாதிக்கப்பட்டு, அதிலிருந்து முழு அளவிற்கு உடல்நலம் பெற்று வரவில்லை என்று சொன்னாலும், இடையிலே சில நிகழ்ச்சிகளில் நான் பங்கேற்கக்கூடிய வாய்ப்பை பெற்று வருகிறேன். கொரோனா என்ற அந்த தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட காரணத்தால், என்னுடைய தொண்டை சிறிது பாதிக்கப்பட்டிருக்கிறது. தொண்டை பாதிக்கப்பட்டாலும் தொண்டு பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக நான் என்னுடைய பணியைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறேன்.

குருநானக் கல்லூரியின் பொன்விழா ஆண்டு விழாவில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்த விழாவில் கலந்துகொள்ள எனக்கு எல்லா உரிமையும் உண்டு.

சீக்கிய மதத்தைத் தோற்றுவித்த குருநானக் அவர்களின் 500ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, 'அனைவரது நலனுக்காகவும்' என்ற பொதுச் சிந்தனையை மையமாகக் கொண்டு, இங்கே எல்லோரும் குறிப்பிட்டதைப்போல, 1971ஆம் ஆண்டு குருநானக் கல்லூரியின் அறக்கட்டளையானது தொடங்கப்பட்டது.

இந்த அறக்கட்டளை தொடங்கப்பட்ட ஆண்டு 1971. அப்போதும் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி தான் நடந்து கொண்டிருந்தது.

ஐம்பதாவது ஆண்டு பொன்விழாவைக் கொண்டாடுகிற இந்த நேரத்திலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிதான் நடந்து கொண்டிருக்கிறது.

கல்விச் சேவைக்காக இக்கல்லூரி தொடங்கப்பட்டது. முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னிலையில், அன்றைக்கு தமிழகத்தின் ஆளுநராக இருந்த உஜ்ஜல் சிங் அவர்கள் அடிக்கல் நாட்டி இருக்கிறார்கள்.

குருநானக் அவர்களுடைய பெயரால் இந்தக் கல்லூரி தொடங்கப்படுவதால், அரசு சார்பில் 25 ஏக்கர் நிலம் அப்போது கொடையாகத் தரப்பட்டது. அதனை வழங்கியதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிதான். குருநானக் கல்வி அறக்கட்டளைக்கு அன்று வழங்கிய உதவியானது, வீண் போகவில்லை. அதற்கு சாட்சிதான் இந்த 50ஆவது ஆண்டுவிழா, இந்த சிறப்பான பொன்விழாவை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

கலைஞர் தொடங்கியது எதுவும் சோடை போனதாக வரலாறு கிடையாது. அதை நீங்கள் நிரூபிப்பதைப் பார்க்கும்போது நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன். இதன் பொறுப்பாளர்கள், நிருவாகிகள், கல்லூரி முதல்வர், பேராசிரியர் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் நான் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் சென்னை மாநகரத்தின் மேயராக இரண்டு முறை பொறுப்பில் இருந்த நேரத்தில், இந்த குருநானக் கல்லூரியில் நடைபெற்றிருக்கக்கூடிய ஏராளமான நிகழ்ச்சிகளில் பங்கெடுத்திருக்கிறேன். மாநகராட்சியின் சார்பில் நடந்த விழாக்கள் வேண்டுமானால் இங்கு நிறைய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது, அதிலும் நான் கலந்து கொண்டிருக்கிறேன்.

சென்னை மாநகரத்தின் மேயராக இருந்தபோது, இந்தக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவிலும் நான் பங்கேற்று, இளம் பட்டதாரிகளிடையே உரையாற்றிய நிகழ்வை இன்றைக்கும் என் நினைவிலே பசுமையாக, ஆழமாக பதிந்திருக்கிறது. இன்னும் சொன்னால், இந்த குருநானக் கல்லூரி அமைந்திருக்கின்ற இந்த வேளச்சேரி பகுதியில்தான் நான் மேயராக இருந்தபோது குடியிருந்தேன் என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். கிட்டத்தட்ட ஏழு வருடங்கள் மேயராக இருந்தபோது, ஒவ்வொரு நாளும் இந்த குருநானக் கல்லூரியை தாண்டித்தான் நான் போய்க் கொண்டிருந்தேன். அதுமட்டுமல்ல, இந்தக் கல்லூரியில் ஏழாண்டு காலம் நான் நடைப்பயிற்சி செய்திருக்கிறேன், கிரிக்கெட் விளையாடி இருக்கிறேன், ஷட்டில் கார்க் விளையாடியிருக்கிறேன், அதெல்லாம் இப்போது எனக்கு நினைவிற்கு வருகிறது.

இக்கல்வி நிறுவனம், தமிழக அரசுக்குப் பலநிலைகளில் குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், கோவிட் என்று சொல்லக்கூடிய கொரோனா என்ற கொடுமையான தொற்று நோய் ஏற்பட்ட காலத்தில்,பேரிடர் காலங்களில் பெரிதும் உதவி செய்யக்கூடிய, மக்களுக்கு பல வகைகளில் துணை நிற்கக்கூடிய கல்லூரிகளில் முதல் கல்லூரி எது என்று கேட்டால், குருநானக் கல்லூரியாகத் தான் இருக்கும்.

குருநானக் கல்லூரியின் நிறுவனர் லெப்டினன்ட் கர்னல் ஜி.எஸ். கில் அவர்கள் எத்தகைய நோக்கம் கொண்டதாக இக்கல்லூரி வளர வேண்டும் என்று நினைத்தாரோ அத்தகைய கல்லூரியாக குருநானக் கல்லூரியானது இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

சென்னையில் குறைவான எண்ணிக்கையில் வசிக்கக்கூடிய சீக்கிய மக்கள் இங்கு சிறுபான்மை சமூகமாக இருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் ஆற்றிய கல்விப் பணி என்பது பெரும்பான்மையை விட மகத்தானதாக அமைந்திருக்கிறது! அனைவரும் சரிசமம் என்பதை மனதில் வைத்து அனைவரும் படிக்கும் நிறுவனமாக இந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இக்கல்லூரியின் தற்போதைய செயலர் மற்றும் தாளாளர் திரு. மஞ்சித் சிங் நய்யர் அவர்கள் சிறுபான்மையினர் நல ஆணையத்தின் உறுப்பினராக இருக்கிறார். அவருக்கு அந்தப் பொறுப்பை தமிழ்நாடு அரசு வழங்கி உள்ளது.

கல்விப்பணி, சமூகப்பணி, குறிப்பாக பேரிடர் காலங்களில் அயராத நிவாரண உதவிகள் உள்ளிட்ட நற்பணிகளை எந்தவித எதிர்பார்ப்புமின்றி அனைவரும் பயன்பெறக்கூடிய வண்ணம் தொடர்ந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அண்மைக் காலமாக தமிழகத்தில் நிகழ்ந்த சில நிகழ்வுகளை எண்ணிப் பார்க்கிறபோது எனக்கு உள்ளபடியே மனவேதனையாக இருக்கிறது.

கல்வி நிறுவனங்களை நடத்துபவர்கள், அந்தக் கல்வி நிறுவனங்களை தொழிலாக, வர்த்தகமாக நினைக்காமல் தொண்டாக, கல்விச் சேவையாகக் கருத வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாணவச் செல்வங்கள், பட்டங்கள் வாங்குவதற்காக மட்டும் கல்வி நிறுவனங்களுக்கு வரவில்லை. முதலில் தன்னம்பிக்கை, தைரியம், மன உறுதி ஆகியவற்றை அவர்களுக்கு நீங்கள் அளிக்க வேண்டும். எத்தகைய சோதனைகளையும் எதிர்கொள்ளக் கூடிய ஆற்றல் பெற்றவர்களாக தமிழ்நாட்டு மாணவச் செல்வங்கள் வளர வேண்டும். உங்களுக்கு ஏற்படும் தொல்லைகள், அவமானங்கள், இடையூறுகள் ஆகியவற்றை மாணவர்கள் அதிலும் குறிப்பாக மாணவிகள் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும்.

"பாதகம் செய்வோரைக் கண்டால்
பயம் கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா
அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா" - என்று பாடினார் மகாகவி பாரதியார் அவர்கள்.

மாணவியருக்கு பாலியல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ, உடல் ரீதியாகவோ தொல்லை தரும் எத்தகைய இழி செயல் நடந்தாலும் தமிழ்நாடு அரசு நிச்சயமாக சொல்கிறேன், வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது. உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும். குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி உடனடியாக அதற்குரிய தண்டனையைப் பெற்றுத் தரும்.

எந்தச் சூழலிலும் தற்கொலை எண்ணத்துக்கு மாணவிகள் தள்ளப்படக்கூடாது. இந்த இடத்திற்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்றால் எத்தனையோ சோதனைகளைக் கடந்துதான் இங்கே நீங்கள் வந்திருக்கிறீர்கள். சோதனைகளைச் சாதனைகள் ஆக்கி வளர்ந்தாக வேண்டும்.

தமிழ்நாட்டு மாணவ, மாணவியர் அறிவுக் கூர்மை கொண்டவர்களாக மட்டுமல்லாமல், உடலுறுதியும் மனதைரியமும் கொண்டவர்களாக வளர வேண்டும். இதுதான் என்னுடைய ஆசை, என்னுடைய கனவு.

அத்தகைய கல்வியை, அறிவை, ஆற்றலை கல்வி நிறுவனங்கள் வழங்க வேண்டும்.

படிப்போடு கல்வி நிறுவனங்களின் பணி முடிந்துவிடவில்லை.

பாடம் நடத்துவதோடு ஆசிரியர்களின் பணியும் முடிந்து விடுவதில்லை.

குழந்தைகளை பெற்றதோடு பெற்றோரின் பணி எப்படி முடியாததோ அது போல படிப்போடு ஆசிரியர் பணி முடிந்து விடாது.

மாணவச் செல்வங்களே, தற்கொலை எண்ணம் கூடவே கூடாது. தலைநிமிரும் எண்ணம் தான் இருக்கவேண்டும்.

உயிரை மாய்த்துக் கொள்ளும் சிந்தனை கூடாது. உயிர்ப்பிக்கும் சிந்தனையே தேவை.

ஆசிரியர்களாக இருந்தாலும், பெற்றோர்களாக இருந்தாலும் மாணவ, மாணவியரிடம் மனம் விட்டுப் பேசுங்கள். மாணவர்களும், உங்களுடைய பிரச்சினைகளையும், நோக்கங்களையும், கனவுகளையும் பெற்றோரிடமும், ஆசிரியரிடமும் பகிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் விரும்பிய

அரசு இங்கே அமைந்திருக்கிறது. மக்கள் மனப்பூர்வமாக பாராட்டக்கூடிய ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. பல்வேறு நலத்திட்டங்களின் மூலமாக மக்களை இரு கை கொண்டு தூக்கி விடும் ஆட்சியாக இது அமைந்திருக்கிறது. இதைப் பயன்படுத்தி, நம்முடைய மாணவ சமுதாயம் வளரவேண்டும் என்று நான் மனதார கேட்டு, இந்த குருநானக் கல்லூரியில் 50 ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில், நானும் உங்களோடு சேர்ந்து இந்த விழாவில் பங்கேற்று, உங்கள் அனைவரையும் சந்தித்து உரையாற்றக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மீண்டும் ஒரு முறை நன்றி சொல்லி, உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள், பாராட்டுக்கள், நன்றி என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
சென்னை, குருநானக் கல்லூரியின் பொன்விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆற்றிய உரை - 26.07.2022

கல்விக் கூடங்கள் மதிப்பெண் கூடங்களாக இல்லாமல், மதிப்புயர் கூடங்களாக மாற வேண்டும்

பள்ளி மாணவர்களுக்கான மனநலம், உடல்நலம் சார்ந்திருக்கக்கூடியவிழிப்புணர்வுதொடக்கவிழாநிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களே!

மாண்புமிகு இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர் பாபு அவர்களே!

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே!

நிகழ்ச்சிக்கு தலைமையுரை ஆற்றியிருக்கக்கூடிய தலைமைச் செயலாளர் முனைவர் இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே!

பெருநகர சென்னை மாநகராட்சியின் மேயர் திருமதி பிரியா அவர்களே!

துணை மேயர் திரு. மகேஷ் குமார் அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு. ஜெ. கருணாநிதி அவர்களே!

திரு. மயிலை வேலு அவர்களே!

பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களே!

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் செந்தில்குமார், இ.ஆ.ப., அவர்களே!

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநிலத் திட்ட இயக்குநர் திரு. சுதன், இ.ஆ.ப., அவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி கூடுதல் திட்ட இயக்குநர் திரு. ராமேஸ்வரமுருகன் அவர்களே!

மாநகராட்சி மன்ற உறுப்பினர்களே!

மண்டலக் குழுத் தலைவர்களே!

வாரியக் குழுத் தலைவர்களே!

அரசு அதிகாரிகளே!

மாநகராட்சி அதிகாரிகளே!

மருத்துவர்களே!

அரசுத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய உயர் அலுவலர்களே!

பத்திரிகைமற்றும்ஊடகத்துறையைச்சார்ந்திருக்கக்கூடிய தோழர்களே!

அன்புக்குரிய பெற்றோர்களே!

என்னுடைய இனிய மாணவச் செல்வங்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

எத்தனையோ நிகழ்ச்சிகளுக்குச் சென்றாலும் பள்ளிக் கூடங்களுக்குச் செல்வதைப் போன்ற உற்சாகம் வேறு நிகழ்ச்சிகளில் நிச்சயமாக அமைவது இல்லை. நான் நீண்ட நேரம் உங்களிடத்திலே உரையாற்ற முடியாத சூழ்நிலையில் நின்று கொண்டிருக்கிறேன். அதற்கு என்ன காரணம் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அண்மையிலே கொரோனா என்ற தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு அதிலிருந்து ஓரளவுக்கு மீண்டு, இரண்டு மூன்று நாட்களாக சில நிகழ்ச்சிகளுக்கு மாத்திரம் அதிலும் குறிப்பாக சென்னையில் நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளுக்கு மாத்திரம் நான் சென்று கொண்டிருக்கிறேன். நான் பேசுகின்ற பேச்சிலேயே உங்களுக்குத் தெரியும், தொண்டை எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்று. தொண்டை பாதிக்கப்பட்டிருந்தாலும், தொண்டில் பாதிப்பு இருக்கக் கூடாது என்பதற்காகத் தான் நான் என்னுடைய பணியை நிறைவேற்ற முன்வந்திருக்கிறேன் தவிர வேறு அல்ல.

குழந்தையின் புன்சிரிப்பு தரும் புத்துணர்ச்சியும் பிள்ளைச் செல்வங்களின் பேச்சு தரும் உற்சாகமும் - மருந்து மாத்திரைகளை விட வலிமையானவை.

கடந்த வாரம் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற நான் - அதிலிருந்து சிறிது குணமடைந்து

நிகழ்ச்சிகளில் பங்கேற்கக்கூடிய வாய்ப்பை பெற்றிருந்தாலும், உடல் சோர்வு என்பது சற்று இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் உங்களையெல்லாம் பார்க்கும்போது அதெல்லாம் பறந்து போய்விடுகிறது, முழுநலம் பெற்றதாக நான் உணர்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக குறிப்பாக நம்முடைய மாணவச் செல்வங்கள் காலையிலேயே எல்லோரும் சீக்கிரமாகவே புறப்பட்டு இங்கே வந்திருப்பீர்கள். அப்படி வந்திருக்கக்கூடிய மாணவச் செல்வங்களைப் பார்த்து நான் கேட்கிற ஒரே கேள்வி, நீங்கள் எல்லாம் காலை உணவு சாப்பிட்டீர்களா? அங்கிருக்கக்கூடிய மாணவச் செல்வங்களைப் பார்த்து கேட்கிறேன், காலை உணவு சாப்பிடாதவர்கள் யாராவது இருந்தால் கையை உயர்த்திக் காட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், இந்த மேடைக்கு நான் வருவதற்கு முன்னால் ஒரு வகுப்பறைக்குச் சென்று அங்கிருக்கக்கூடிய மாணவச் செல்வங்களோடு கலந்து பேசினேன். ஒரு ஐந்தாறு மாணவியர்களிடத்தில் நான் சில கேள்விகளைக் கேட்டேன். அப்படி கேட்கிறபோது, நீங்கள் எந்தப் பகுதியிலிருந்து வருகிறீர்கள்? எப்படி வருகிறீர்கள், காலையில் உணவு சாப்பிட்டீர்களா? என்று 5 பேர்களிடத்தில் கேட்டேன். 5 பேர்களில் 3 பேர் காலையில் சாப்பிடாமல் வந்தார்கள் என்ற செய்தியை சொன்னார்கள். இது தான் உண்மை. இது தான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நான் பள்ளிக்கூடத்தில் படிக்கின்றபோது, பலமுறை சாப்பிடாமல் பள்ளிக்கு போயிருக்கிறேன். ஏனென்றால், பஸ் பிடிக்க வேண்டுமென்பதால், அது ஒரு சூழ்நிலை. இது நகரப்பகுதி,

ஆனால், கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய மாணவச் செல்வங்களை எண்ணிப் பார்க்கிறபோது, எந்த அளவுக்கு அவர்கள் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளமுடியும்.

ஏன் இந்த கேள்வியை நான் கேட்டேன் என்றால், பெரும்பாலான பிள்ளைகள் காலையில் புறப்படும்போது சாப்பிடாமல் பள்ளிக்கு வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதுவும் நிச்சயமாக சொல்கிறேன், உறுதியாக சொல்கிறேன், காலையில் மட்டும் சாப்பிடாமல் இருக்கவே கூடாது.

டாக்டர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், காலையில்தான் அதிகமாக சாப்பிடவேண்டும். மதியம் அதைவிட கொஞ்சம் குறைவாகவும், இரவில் இன்னும் கொஞ்சம் குறைவாகவும் சாப்பிட வேண்டும் என்று டாக்டருடைய அறிவுரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு எல்லாம் எப்படி நடக்கிறது என்றால், காலையில் குறைவாகவும், இரவு நேரத்தில் அதிகமாகவும், வழக்கமாக சாப்பிடுகின்ற வழக்கத்தை வைத்திருக்கிறார்கள். அதுமாதிரி இருக்கக் கூடாது.அதிலும் கட்டாயமாக,உறுதியாக காலை உணவை யாரும் தவறவிடக் கூடாது.

அதிகாலையில் அவசர அவசரமாக நீங்கள் பள்ளிக் கூடத்துக்கு கிளம்பி வரவேண்டிய சூழல் இருப்பதை மனதில் வைத்து அதிலும் குறிப்பாக, 1ஆவது முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் அரசுப் பள்ளிப் பிள்ளைகளுக்கு காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை நம்முடைய தமிழ்நாடு அரசு தொடங்கப் போகிறது.

அதற்கான அரசாணையில் நேற்று தான் நான் கையெழுத்து போட்டு வந்திருக்கிறேன். அந்த மகிழ்ச்சியான

செய்தியை உங்கள் மூலமாகத் தமிழ்நாட்டு மக்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திராவிட இயக்கத்தின் தாய்க் கட்சியான நீதிக்கட்சித் தலைவராக இருந்த சர். பிட்டி. தியாகராயர் அவர்கள் சென்னை மாநகராட்சி மன்றத் தலைவராக இருந்தபோது ஆயிரம் விளக்கு மாநகராட்சிப் பள்ளியில்தான் முதன்முதலாக மதிய உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தார். அதுவும் ஆயிரம் விளக்கில்தான் தொடங்கப்பட்டிருக்கிறது. என்னை முதன்முதலாக தேர்ந்தெடுத்த தொகுதி ஆயிரம் விளக்குத் தொகுதிதான்.

வெள்ளுடை வேந்தர் தியாகராயர், பெருந்தலைவர் காமராசர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஆகியோரால் வளர்த்தெடுக்கப்பட்ட இந்த திட்டமானது இன்றைய அரசால் அடுத்த வளர்ச்சியை அடையப் போகின்றது. மாணவர்களுக்குக் காலைச் சிற்றுண்டியை நாம் வழங்கப் போகிறோம். மாணவர்களாகிய நீங்கள் தன்னம்பிக்கையை முதலில் பெற்றாக வேண்டும். இந்த தன்னம்பிக்கை மட்டும் வந்துவிட்டால் போதும்! படிப்பு தானாகவே வந்துவிடும். அத்தகைய தன்னம்பிக்கையை ஊட்டுவதற்காகத்தான் இந்த பயிற்சி முகாம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

மன நலன் - உடல் நலன் - ஆகிய இரண்டும் சரியாக இருந்தால் அனைத்து நலன்களும் சிறப்பாக இருக்கும். எப்போதும் நீங்கள் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். சோர்வாக இருக்கக் கூடாது. சோம்பேறித்தனம்தான் வளர்ச்சிக்கு மிகப்பெரிய தடை! எதையும் நாளைக்குப் பார்த்துக்கலாம், நாளைக்கு படிச்சிக்கலாம், நாளைக்கு

எழுதிக்கலாம் என்று தள்ளிப் போடாதீங்க. வாழ்வில் எதையும் சுறுசுறுப்பாக எதிர்கொள்ளக்கூடிய அந்த உணர்வு உங்களுக்கு வந்தாக வேண்டும். அதற்கு உங்கள் உடல் நலத்தை நன்றாக பாதுகாத்துக்கொள்ள வேண்டும், பார்த்துக்கொள்ள வேண்டும்.

நல்ல உடற்பயிற்சியும்,நல்ல எண்ணங்களும்தான் இதற்கு அடிப்படையாக அமையும். மிகச் சிறப்பான பள்ளி உங்களுக்கு அமைந்துள்ளது. இந்தப் பள்ளிக்கு ஒரு பெரிய பாரம்பரியம் இருக்கிறது. இந்தப் பள்ளி என்பது பெருந்தலைவர் காமராசர் அவர்களால் 1962ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பள்ளி என்பது பாராட்டுக்குரிய ஒன்று. அறுபது ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆக, இந்த பள்ளியில் ஏறக்குறைய நாலாயிரம் பிள்ளைகள் படிக்கிறார்கள்.

அட்மிஷன் முதல் நாள் அன்றே ஹவுஸ் புல் போடக்கூடிய பள்ளியாக இந்த பள்ளி விளங்கிக் கொண்டு இருக்கிறது என்பது மிகச் சிறப்புக்குரிய ஒன்று. அப்படிப்பட்ட பெயர் பெற்ற பள்ளிதான் இந்த அசோக்நகர் பள்ளி. திறமையான ஆசிரியர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். இதைவிட உங்களுக்கு என்ன வேண்டும்? என்ன கவலை இருக்கிறது? படிப்பைத் தவிர மற்ற வீண் சிந்தனைகள் எல்லாம் உங்களுக்கு வேண்டாம்.

நன்றாக சாப்பிடுங்கள், நன்றாக உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள், நன்றாக படியுங்கள், இந்த மூன்றும் தான் நான் உங்களுக்கு சொல்வது. இப்படி சொல்கிறேன் என்றால் நான் முதலமைச்சராக என்ற அதிகாரத்தில் இருந்து சொல்கிறேன் என்று நினைக்காதீர்கள். உங்கள் அப்பாவாக, அம்மாவாக உங்களுடைய பெற்றோரில் ஒருவனாக இருந்து இந்த

வேண்டுகோளை இங்கே இருக்கக்கூடிய பிள்ளைகளுக்கு நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பள்ளிக்கூடங்கள், பாடங்கள் நடத்தும் கூடங்களாக மட்டுமில்லாமல் அறிவு - ஆற்றல் - மனம் - உடல் ஆகிய அனைத்தையும் வளப்படுத்த வேண்டும். பாதி பெற்றோர்களாக, ஆசிரியர்களும் - பாதி ஆசிரியர்களாக, பெற்றோர்களும் செயல்படவேண்டும். கல்விக் கூடங்கள் மதிப்பெண் கூடங்களாக இல்லாமல், மதிப்புயர் கூடங்களாக அது மாறவேண்டும். எல்லோருக்கும் எல்லாம் என்ற இலக்கை நோக்கிய திராவிட மாடல் அரசு நடந்து கொண்டிருக்கிறது. எல்லாவற்றையும் எல்லோரும் அடைவதற்கு அனைவரும் அனைத்துத் தகுதிகளையும் பெற்றாகவேண்டும்.

எனது மாணவக் கண்மணிகள் முகத்தில் நான் உற்சாகத்தை பார்க்கிறேன். மகிழ்ச்சியைப் பார்க்கிறேன். மலர்ச்சியைப் பார்க்கிறேன். வானம் தொட்டு விடும் தூரம்தான். உங்களால் முடியும், உங்களால் மட்டுமே முடியும். அதற்கான முயற்சிகளில் ஈடுபடுங்கள்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சென்னை, அசோக் நகர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் "பள்ளி மாணவர்களுக்கான மனநலம், உடல்நலம் சார்ந்த விழிப்புணர்வு" தொடக்க விழாவில் ஆற்றிய உரை - 27.07.2022

இன்றைய மாணவ சமுதாயத்திற்கு கல்வியோடு விளையாட்டையும் கலந்து அளிக்க வேண்டும்

பெருமதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய இந்தியநாட்டின் பிரதமர் மாண்புமிகு திரு. நரேந்திர மோடி அவர்களே!

மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்களே!

மாண்புமிகு ஒன்றிய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. அனுராக் சிங் தாகூர் அவர்களே!

மாண்புமிகு ஒன்றிய இணை அமைச்சர் திரு. எல். முருகன் அவர்களே!

மாண்புமிகு தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்களே!

தமிழக அமைச்சர்களில் மூத்த அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர்

என்னுடைய ஆருயிர் அண்ணன் திரு. துரைமுருகன் உள்ளிட்ட தமிழக அமைச்சர் பெருமக்களே!

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே!

ஃபிடே தலைவர் திரு.அர்க்கடி துவார்கோவிச் அவர்களே!

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, ஐ.ஏ.எஸ்., அவர்களே!

சிறப்புப் பணி அலுவலர் திரு. தாரேஸ் அகமது, ஐ.ஏ.எஸ்., உள்ளிட்ட செஸ் ஒலிம்பியாட் கமிட்டி உறுப்பினர்களே!

AICF கூட்டமைப்பின் நிருவாகிகளே!

இந்தியாவின் முதல் சர்வதேச செஸ் மாஸ்டர் மானுவல் ஆரோன் அவர்களே!

ஐந்து முறை உலக சாம்பியன் ஆன கிராண்ட் மாஸ்டர் திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்களே!

உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்திருக்கக்கூடிய செஸ் விளையாட்டு வீரர்களே, வீராங்கனைகளே!

செஸ் ஆர்வலர்களே! பார்வையாளர்களே!

ஊடகத் துறை, பத்திரிகை உலக நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

Today is a day of great pride for India. International Chess Olympiad has never happened in India before. Hosting the Chess Olympiad for the first time in India is a big honour for us. We are further delighted that Tamil Nadu has got this honour.

இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்த நேரு உள்விளையாட்டு அரங்கத்துக்கு இன்றைய தினம் பன்னாட்டு அங்கீகாரம் கிடைக்கும் வகையில், இந்த அரங்கில் தொடக்கவிழாவானது மிக எழுச்சியோடு, ஏற்றத்தோடு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

Our Hon'ble Prime Minister himself has come to inaugurate this historic event, for he knows this is a proud moment for India.

I welcome him both as the Chief Minister of Tamil Nadu and in my personal capacity.

Hon'ble Prime Minister!

We all know you are very fond of Chess. During your tenure as the Chief Minister of Gujarat, you conducted a Grand Chess Festival with more than 20 thousand players.

When the Bhutan Royal Family visited India, you presented a Chess Set to the Prince of Bhutan.

It is very apt that such a supporter of Chess Game has come today to inaugurate the 44th Chess Olympiad.

இந்த விழாவிற்கான அழைப்பிதழுடன் டெல்லி சென்று நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்து நேரில் அழைக்கலாம் என்று நான் திட்டமிட்டு இருந்தேன். ஆனால் இடையில் எனக்கு ஏற்பட்ட கொரோனா தொற்று காரணமாக நேரில் செல்ல இயலாத ஒரு சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த என்னை நலம் விசாரிப்பதற்காக மாண்புமிகு பிரதமர் அவர்கள் தொடர்பு கொண்டார்கள். என்னை நலம் விசாரித்த அவர்களிடத்தில்,

எனது நிலையை நான் விளக்கினேன். அவர் பெருந்தன்மையோடு சொன்னார் 'நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் - நான் நிச்சயம் கலந்து கொள்வேன் - இந்த விழாவானது இந்தியாவுக்கே பெருமை தரக்கூடிய விழா' என்று பிரதமர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த வகையில் மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இங்கே வருகை புரிந்திருக்கிறார்கள்.

Your presence has enhanced the magnitude of this function and I thank you for making it.

I convey my heart-felt thanks to Hon'ble Union Sports Minister Anurag Thakur and other officials for providing all help and support to conduct this event in Tamil Nadu.

44ஆவது பன்னாட்டு ஒலிம்பியாட் போட்டி என்பது ரஷ்ய நாட்டில்தான் நடப்பதாக முதலில் சொல்லப்பட்டது. கொரோனா மற்றும் சில பிரச்சினைகள் காரணமாக,ரஷ்யாவில் நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. வேறு எந்த நாட்டில் நடைபெறலாம் என்பதற்கான ஆலோசனைகள் நடந்ததை அறிந்து, இந்தியாவில் நடக்கும் வாய்ப்பு வருமானால், தமிழ்நாட்டில் நடத்தும் வாய்ப்பை நாம் பெற வேண்டும் என்று அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் நான் உத்தரவிட்டேன்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், இது பற்றி நமக்கு தகவல்கள் கிடைத்தன. கடந்த மார்ச் 16ஆம் நாள் இதற்கான முறையான அறிவிப்பை நான் வெளியிட்டேன். இந்த விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக 18 துணைக் குழுக்களை தமிழ்நாடு அரசு உருவாக்கியது.

இது போன்ற பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு குறைந்தது

18 மாதங்களாகும் என்பார்கள். ஆனால் நான் பெருமையோடு சொல்கிறேன், நான்கே மாதங்களில் பன்னாட்டுப் போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு அரசு சிறப்பாகச் செய்திருக்கிறது. இதற்குக் காரணமான மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு.மெய்யநாதன் அவர்களையும்,-விளையாட்டுத்துறையைச் சேர்ந்த அனைத்து அதிகாரிகளையும், இதற்குத் துணைநின்ற அனைத்துத் துறை அதிகாரிகளையும் நான் மனதார வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன், நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

44ஆவது பன்னாட்டு சதுரங்க ஒலிம்பியாட் போட்டி என்பது உலக அளவில் தமிழ்நாட்டின் மீது கவனத்தை ஈர்க்கும் நிகழ்ச்சியாக இன்று துவங்கியுள்ளது. இப்போட்டியின் மூலமாக தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறை மட்டுமல்ல - சுற்றுலாத் துறையும் - தொழில் துறையும் மிகப்பெரிய வளர்ச்சியை அடைய இருக்கிறது. இன்னும் சொன்னால், தமிழ்நாட்டினுடைய மதிப்பும், தமிழ்நாடு அரசினுடைய மதிப்பும் பெருமளவு இன்று முதல் மேலும் மேலும் உயர்கிறது. இந்த உயர்வு என்பது மிகச் சாதாரணமாகக் கிடைத்து விடுவது அல்ல. சரியான திட்டமிடல், கடின உழைப்பு, அதனுடைய விளைவே இந்த உயர்வு.

இந்தியத் துணைக் கண்டத்தில் முதல் முறையாகவும், ஆசியா கண்டத்தில் மூன்றாவது முறையாகவும் இந்த செஸ் போட்டிகள் நடக்க இருக்கின்றன.

கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னரே இந்தியத் துணைக்கண்டத்தில் விளையாடப்பட்டு வந்த சதுரங்க விளையாட்டுதான், இன்று உலகம் முழுக்கவும் செஸ் என்ற பெயரால் பரவி இருக்கிறது. சில சில மாறுதல்களுடன் உலகின் பல்வேறு நாடுகளில் சதுரங்கம் விளையாடப்பட்டு வருகிறது.

தொடக்கவிழா இங்கு நடைபெற்றாலும், போட்டிகள் முழுமையாக, இயற்கை எழில் கொஞ்சும் மாமல்லபுரத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாட்டை தமிழ்நாடு அரசு செய்திருக்கிறது.

மாமல்லபுரம் இந்தியக் கட்டடக்கலையின் அருங்காட்சியகம். அதற்குப் பக்கத்தில்தான் சதுரங்கப் பட்டினம் என்ற கடலோரப் பகுதி இருக்கிறது. சென்னைப் பட்டணத்தை மெட்ராஸ் என்று அழைத்ததைப் போல சதுரங்கப்பட்டினத்தை சத்ராஸ் என்று அழைத்தார்கள். மன்னர் காலத்தில் இருந்து புகழ்பெற்ற ஊர் அந்த ஊர். இன்றைக்கு தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் அந்த ஊர் கோட்டை இருக்கிறது. அத்தகைய சதுரங்கப் பட்டினத்துக்கு அருகில்தான் உலகப்புகழ் பெற்ற சதுரங்கப் போட்டி நடக்க இருக்கிறது.

- 1961ஆம் ஆண்டு உலக செஸ் சாம்பியனாகப் புகழ் பெற்ற மானுவல் ஆரோன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்பது நமக்கு கிடைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய பெருமை ஆகும். இந்தியாவில் செஸ் விளையாட்டை முன்னோக்கி நகர்த்தி, பல்வேறு திறமையாளர்களுக்கு ஊக்கமளித்ததும் மானுவல் ஆரோன்தான்.

- 1972ஆம் ஆண்டே சென்னையில் இருந்த சோவியத் கலாச்சார மையத்தில் செஸ் க்ளப் ஒன்றினை உருவாக்கியவர் ஆரோன். செஸ் விளையாட்டில் உலகப்புகழ் பெற்ற வீரர்களை உருவாக்கிய சோவியத் நாடே, ஆரோனின் ஆலோசனையை பெற்றுத்தான் செயல்பட்டது. தமிழ்நாடு செஸ் அசோசியேஷனை உருவாக்கியவரும் இவர்தான்.

- ❖ உலகக்கிராண்ட் மாஸ்டராகப்புகழ் பெற்றவிஸ்வநாதன் ஆனந்த் அவர்களைப் பற்றி உங்களுக்கு நான் அதிகம் சொல்லத் தேவையில்லை.
- ❖ 1988ஆம் ஆண்டு தனது 19ஆவது வயதில் உலகப் புகழைப் பெற்றவர் ஆனந்த் அவர்கள். இன்று வரை உலக சதுரங்க ஆட்டத்தில் வலிமையான வீரராக அவர் விளங்கிக் கொண்டு இருக்கிறார்.
- ❖ 2001ஆம் ஆண்டு பெண் கிராண்ட் மாஸ்டராக பட்டம் வென்றவர் விஜயலட்சுமி சுப்பராமன்.
- ❖ 2018ஆம் ஆண்டு மிக இளம் வயதில் கிராண்ட் மாஸ்டராக உயர்ந்தார் பிரக்ஞானந்தா.
- ❖ Out of 73 Grand Masters in India, 26 are from Tamil Nadu. It means 36% of Indian Grand Masters are from Tamil Nadu. This is a game of intelligence and Strategy. And I am proud that TN excels in this game. Chennai can be rightly called the Chess Capital of India. The Government of Tamil Nadu immediately allotted 102 crore rupees to host this Chess Olympiad event. Also, we are more than happy to bear all the expenses of our Indian players.

பள்ளி மாணவர்களுக்கு செஸ் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்த ரூ.1 கோடி நிதியை பள்ளிக்கல்வித் துறை ஒதுக்கீடு செய்திருக்கிறது.

We also designed the mascot as a knight dressed in the traditional Tamil attire, saying Vanakkam. We named him Thambi. The term Thambi is a symbol of brotherhood. To indicate that we are all one fraternity.

The iconic mass leader of Tamil Nadu "Perarignar Anna" used to fondly call everyone as 'Thambi". This mascot's name is in honour of such an endearing term.

அதற்கான சிறப்புமிகுந்த விளம்பரப் பாடலை தமிழ்நாட்டில் பிறந்து, உலகளாவிய இசை உலகத்தின் புகழை தனது இளமைக் காலத்திலேயே பெற்ற என்னுடைய அருமைச் சகோதரர் திரு. ஏ.ஆர். ரகுமான் அவர்கள் இசை அமைத்துக் கொடுத்தார்.

இப்படி செஸ் ஒலிம்பியாட் என்பது விளையாட்டுப் போட்டியாக மட்டுமல்ல, விளையாட்டு விழாவாக மட்டுமல்ல - இந்தியாவில் நடைபெறும் உலகளாவிய பண்பாட்டுத் திருவிழாவைப் போல் ஒரு சகோதரத்துவ மனப்பான்மையுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இத்தகைய விழாவைத் தொடங்கி வைக்க வருகை தந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்களுக்கு நான் நன்றி சொல்கிறேன், என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது போன்ற வாய்ப்புகளை தொடர்ந்து நீங்கள் தமிழகத்துக்குத் தாருங்கள் என்றும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஓர் அரசன், ஓர் அரசி, இரு அமைச்சர்கள், இரு குதிரைகள், இரு கோட்டைகள், எட்டுச் சிப்பாய்கள் என கருப்பு - வெள்ளை இராணுவ மைதானமாகவே காட்சி அளிப்பது சதுரங்கம்.

கீழடியைப் பற்றி நான் அதிகம் விளக்க வேண்டியது இல்லை. பல்லாயிரம் ஆண்டுப் பழமையைக் கொண்ட தமிழினம் வாழ்ந்த அடையாளம் கொண்ட பகுதியாக கீழடி நமக்கு வரலாறு சொல்லிக் கொண்டு இருக்கிறது.

கீழடியில் ஏராளமான பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அங்கு இரண்டு வகையான ஆட்டக்காய்கள் கிடைத்துள்ளன. தந்தத்தினால் ஆன காய்கள் இவை. இவ்வகையான பொருட்கள், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளை விளையாடப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். இவை அனைத்தும் சுடுமண்ணால் சுடப்பட்டு பெரும்பாலும் கருப்பு நிறம் கொண்டவையாக உள்ளன. குழந்தைகள் விளையாட்டில் பயன்படுத்தப்படும் சில்லுகள் கருப்பு சிவப்பு கொண்டவையாக உள்ளன.

போரில் யானையும் உண்டு, குதிரையும் உண்டு. கோட்டையும் உண்டு வீரர்களும் உண்டு. அரசனும் உண்டு, அரசியும் உண்டு. போர் மரபுக்கும் தமிழர்களுக்கும் தொடர்பு இருப்பதை கீழடி நமக்குச் சொல்கிறது.

'ஆனைக்குப்பு' என்று சதுரங்க விளையாட்டுக்கு தமிழ் இலக்கியத்தில் பெயர் இருந்துள்ளது. 'ஆனைக்குப்பு ஆடுவோரைப் போலவே' என்று நாலாயிர திவ்ய பிரபந்தம் சொல்கிறது.

அந்தளவுக்குப் பல்லாயிரம் ஆண்டு தொடர்பு, சதுரங்க விளையாட்டுக்கும், தமிழ்நாட்டுக்கும் உண்டு. அறிவுக்கூர்மையும் வியூகமும் கொண்ட விளையாட்டு இது. அத்தகைய உலகளாவிய அறிவு விளையாட்டு இன்று தொடங்குகிறது.

அறிவுதான் இறுதிக்காலம் வரைக் காப்பாற்றும் கருவி என்று ஈராயிரம் ஆண்டுக்கு முன்பே சொன்ன வள்ளுவர் மண்ணில் உலகத்தின் அறிவுப்போட்டியானது தொடங்குகிறது.

ஒரு காலத்தில், அரசர்களின் விளையாட்டு என்று சொல்லப்பட்டது. இன்று அது மக்கள் அனைவரின்

விளையாட்டாகமாறிவிட்டது.மூளை சார்ந்த போர்க்கலையாகச் சொல்லப்படும் விளையாட்டு இது.

அதிர்ஷ்டத்தை நம்பிய விளையாட்டு அல்ல, அறிவை நம்பிய விளையாட்டு! இந்த விளையாட்டினை தமிழகத்தில், இந்தியாவில், மேலும் பரவச்செய்ய, இந்தப் போட்டிகள் பெரும் உதவியாக இருக்கும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.

இன்றைய மாணவ சமுதாயத்திற்கு கல்வியோடு விளையாட்டையும் கலந்து அளிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக அறிவுத்திறனைப் பெருக்கும் சதுரங்கத்தின் பங்கும் இடம்பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு இந்த ஒலிம்பியாட் ஒரு சிறப்பான துவக்கப்புள்ளியாக இருக்கும் என நம்புகிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு வருகை புரிந்துள்ள அனைவருக்கும் என் நன்றிகள்! வணக்கங்கள்!

I welcome each and every player from around the world to Tamil Nadu. Thank you all for coming. It is indeed an honour for Tamil Nadu and India to host you all.

I once again thank our Hon'ble Prime Minister and with this few words, I conclude my speech.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற
44ஆவது சர்வதேச சதுரங்கப் போட்டி
தொடக்க விழாவில் ஆற்றிய உரை - 28.07.2022

முதலமைச்சரின் உரைகள்

தமிழ்நாடு இழந்த பெருமைகளை மீட்பது மட்டுமல்ல, இதுவரை அடையாத
பெருமைகளையும் உயரத்தையும் அடையத்தான் நமது ஆட்சியின் குறிக்கோள்.
அந்தக் குறிக்கோளோடு நான் பணியாற்றுகிறேன்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

வெளியீடு:
இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத்துறை